வரு.74 இல. 39 ★

www.vaaramanjari.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2022 செப்டெம்பர் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

September 25 Sunday, 2022

28 பக்கங்கள் 80/-




03 தேசிய அரசாங்கம் காலத்தின் தேவை



05 யுத்தக் குற்றவியல் நீதிமன்றம் உடன் சாத்தியமற்றது



12 புட்டினுக்கு பின்னடைவா?



24 புவிதரனின் பாய்ச்சலும் இலங்கையின் எதிர்காலமும்



**இலங்கைக்கு 03 மில்லியன் பவுண்ஸ்**

## பிரிட்டன் அவசர உணவு மற்றும் விவசாய உதவிகளை வழங்கும்

**தாரிக் அஹமட் பிரபு அமைச்சர் அலி சப்ரியிடம் உறுதி**





பொருளாதார நெருக்கடியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள இலங்கையருக்கு பிரிட்டன் அவசர உணவு மற்றும் விவசாய உதவிகளை வழங்கவுள்ளதாக அந்த நாட்டின் இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹமட் பிரபு தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகளின் 04

**கொழும்பில் சில பகுதிகள்**

## அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக ஜனாதிபதியால் பிரகடனம்

**கட்டளைகளை செயற்படுத்தும் அதிகாரம் பாதுகாப்பு செயலருக்கு**



கொழும்பு மாவட்டத்தில் சில இடங்களை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. அதற்கமைய பாராளுமன்ற கட்டடத்தொகுதியை அண்மித்த பிரதேசம், உயர் நீதிமன்ற வளாகம், மேல் நீதிமன்ற வளாகம், கொழும்பு 04

## வாளுக்காராம விஹாரை பெரஹெராவில் ஜனாதிபதி



கொழும்பு கொள்ளுபிட்டி வாளுக்காராம விஹாரையின் வருடாந்த எசல பெரஹெரவின் பாரம்பரிய சடங்குகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (23) கலந்துகொண்டார். 59ஆவது வருடாந்த எசல பெரஹெரவின் பாரம்பரிய சடங்குகளில் கலந்து கொண்ட ஜனாதிபதி 04

**இந்தியாவிலிருந்து நாடு திரும்பும்**

# தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தீர்வுக்கு குழு

**நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவின் வழிகாட்டலின் கீழ் நியமனம்**

இந்தியாவிலிருந்து நாடு திரும்பும் இலங்கை தமிழ் அகதிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு நிவாரணம் வழங்குவதற்கான பரிந்துரைகளை செய்வதற்கு ஒரு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜேதாச ராஜபக்ஷவின் வழிகாட்டுதலின் கீழ் இழப்பீட்டு அலுவலகத்துடன் இணைந்ததாக இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலிருந்து தற்போது வருகை தரும் மற்றும் எதிர்காலத்தில் வருவதற்கு தீர்மானித்திருக்கும் இலங்கை அகதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அவசர வேலைத்திட்டமாக குழு அமைக்கப்பட்டுள்ளது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் வசந்தா பெரேராவின் தலைமையிலேயே விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

**தகவல்கள் சேகரிப்புக்காக யாழ்.மாவட்ட செயலகத்தில் விசேட பிரிவொன்றும் அமைப்பு**

அத்துடன் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்பும் நபர்களின் தேவையான ஆவணங்களை தாமதமின்றி பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளையும் இக்குழு மேற்கொள்ளும். 04



## இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண தொடர்ந்தும் உதவுவோம்

**அமெரிக்கா தெரிவிப்பு**



அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை (22) நடைபெற்றுள்ள நிலையில், பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு தொடர்ந்து உதவுவதாக அமெரிக்கா உறுதியளித்துள்ளது. 04

**வாரமஞ்சரி எங்கள் கருத்து...**

## உணவுப்பொருள் பாதுகாப்பை அலட்சியப்படுத்த முடியாது!

உணவுப் பாதுகாப்பு குறித்து இலங்கையில் சமீப தினங்களாக அதிகம் பேசப்படுகின்றது. உணவுப் பாதுகாப்பு விடயத்தில் அரசாங்கம் அதிக கரிசனையுடன் செயற்படுமென்று அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்ததையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இவ்வாறான நிலையில், அண்மைய தினங்களாக திரிபோஷ சத்துணவில் நச்சுப்பொருள் அதிகளவில் காணப்படுவதாக சர்ச்சையொன்று உலவி வருகின்றது. குழந்தைகளுக்கும், கர்ப்பிணித் தாய்மாருக்கும் சத்துணவாக வழங்கப்படுகின்ற திரிபோஷவில் நச்சுத்தன்மை காணப்படுவதாக சர்ச்சை பரவியதும், மக்கள் பலர் அச்சத்துக்கு உள்ளாகினர்.

ஆனாலும் அந்தச் சர்ச்சைக்கு இப்போது முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டது. நாட்டில் விநியோகிக்கப்படுகின்ற திரிபோஷ தயாரிப்புகளில் பரிந்துரைக்கப்பட்ட அளவைப் பார்க்கிலும் அதிகளவான 'அஃப்லோடொக்சின்' என்ற இரசாயனப் பொருள் கிடையாதென்பதை திரிபோஷ நிறுவனம் உறுதிப்படுத்தியிருக்கிறது. எனவே இதுபற்றி வீணான சந்தேகம் இனிமேல் அவசியமற்றது.

திரிபோஷவில் அளவுக்கதிகமான இரசாயனப் பதார்த்தம் உள்ளதாக வதந்தி பரவியதும் சமூகஊடகங்களுக்கு சிறந்ததொரு தீனி கிடைத்து விட்டது. 'சமூகஊடகப் போராளிகள்' தங்களது விருப்பத்துக்கேற்றவாறு சர்ச்சைகளைப் பரப்பத் தொடங்கி விட்டனர். அவர்கள் திரிபோஷவை மாத்திரமன்றி, அதற்கு நிகராக கடைகளில் விற்கப்படுகின்ற மற்றைய சத்துணவுகளையும் விட்டுவைக்கவில்லை. 04

## ஜனாதிபதி நாளை ஜப்பான் பயணம்

ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்ஷோ அபேயின் உத்தியோகபூர்வ இறுதிச் சடங்கில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை 26ஆம் திகதி ஜப்பான் பயணமாகிறார்.

ஷின்ஷோ அபேயின் உத்தியோகபூர்வ இறுதிச் சடங்கு டோக்கியோவில் நாளை மறுதினம் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த உத்தியோகபூர்வ இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள 190 வெளிநாட்டு பிரமுகர்கள் மற்றும் அரச தலைவர்களுக்கு அழைப்பு 04

## முட்டைகளுக்கு மேலும் தட்டுப்பாடு ஏற்படலாம்

**கோழிப் பண்ணையாளர் சங்கம் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டிலுள்ள கோழிப் பண்ணைகளில் முட்டையிடும் கோழிகளுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதால் நாட்டில் முட்டைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்படுமென கோழிப்பண்ணைகள் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேக்கர 04

**ரோம் ஐ.நா முகவரமைப்புகளுக்கான**

## அமெரிக்க தூதுவர் மெக்கெய்ன் இன்று இலங்கை வருகை



இத்தாலியின் ரோமிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய முகவரமைப்புகளுக்கான அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியான தூதுவர் சின்டி மெக்கெய்ன் இன்று 25ஆம் திகதி இலங்கை வரவுள்ளார்.

அவர் எதிர்வரும் 28ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பாரென இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கையில் அமெரிக்கா மேற்கொள்ளும் 04

## ருமேனியாவிலிருந்து இத்தாலிக்கு செல்ல முயன்ற 37 இலங்கையர் கைது

ருமேனியாவிலிருந்து இத்தாலி, போலந்து போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு தப்பிச் செல்லும் நோக்குடன் சென்ற 37 இலங்கையர் உட்பட 70க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய நாடொன்றுக்கு பொருட்களை ஏற்றிச்சென்ற மூன்று பாரவூர்திகளுக்குள் மறைந்து பயணித்தபோதே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. 04

**பாதுகாப்பு காரணங்களுக்காக பெற்றுக்கொண்ட**

## அதி சொகுசு 02 வாகனங்கள் மீண்டும் ஒப்படைக்கவில்லை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் அண்மையில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது தமது வாகனங்களை உபயோகிப்பது ஆபத்துக்குரியதென பாதுகாப்பு காரணங்களை தெரிவித்து முன்னாள் ஜனாதிபதியின் ஜனாதிபதி செயலக பிரிவிலுள்ள வாகனங்களை பெற்றுக் கொண்டுள்ளவர்களில் இருவர் இதுவரை அந்த வாகனங்களை மீண்டும் ஒப்படைக்கவில்லை.

**ரூ.05 கோடி பெறுமதியானவையென அரச வட்டாரங்கள் தெரிவிப்பு**

அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட பிரிவினர் 04

**சாம்பல் தீவு, நந்திக்கடல், நாயாறு**

## வன பாதுகாப்பு வலயங்களாக அரசாங்கம் பிரகடனம்

**ஆய்வுக்கு விசேட குழுவும் நியமனம்**
**- அமைச்சர் மஹிந்த அமரவீர**



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கிழக்கில் சாம்பல் தீவு மற்றும் வடக்கில் நாயாறு, நந்திக்கடல் உள்ளிட்ட பகுதிகளை வன பாதுகாப்பு வலயங்களாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

விவசாயத்துறை மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சர் மஹிந்த அமரவீர அது தொடர்பில் தெரிவிக்கையில்: திருகோணமலை மாவட்டத்தி 04

## தம்பதியினரை விருந்துக்கு அழைத்து மனைவி வெட்டிக் கொலை

**ஆபத்தான நிலையில் கணவன் ஆஸ்பத்திரியில் அனுமதி**



கணவனையும் மனைவியையும் விருந்துக்கு அழைத்து பெண்ணை வெட்டிக் கொன்ற சம்பவமொன்று பொரலஸ்கமுவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினமிரவு இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவத்தில் படுகாயமடைந்த கணவன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மரணமான பெண்ணின் நண்பர் ஒருவரினால் தம்பதியை விருந்துக்கு அழைப்பதாக கூறி தொலைபேசி அழைப்பு வந்துள்ளது. பின்னர் பெண்ணும் அவரது கணவரும் மோட்டார் 04



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை
முதலீட்டு முன்மொழிவுகளுக்கான அழைப்பு

## தொடர் மாடி மேம்பாட்டுத் திட்டம் குருநாகல்

## நகர அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து சிறந்த திட்டம் ஒன்றுக்காக உங்களுக்கும் அழைப்பு




குருநாகல் நகர மத்தியில் அரச மற்றும் தனியார் கூட்டிணைவுடன் வடிவமைப்பு - நிர்மாணம் - நிதி - செயற்பாடு மற்றும் ஒப்படைத்தலின் கீழ் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்டிருக்கும்

### தொடர் மாடி மேம்பாட்டுத் திட்டம்

| | |
|---|---|
| நில அளவு | : ஏக்.: 00 ரூட்: 03 பர்.: 24.5 (பர்ச்சஸ்: 144.5) |
| திட்டக் காலம் | : 05 ஆண்டுகள் |
| அடிப்படை விலை | : ரூபா 1,300,000,000.00 |
| பிணை வைப்பு | : ரூபா 15,000,000.00 |
| முன்மொழியப்பட்ட மேம்பாடு | : தொடர் மாடி இல்லம் அல்லது கலப்பு அபிவிருத்தி |

காணிக்காக முற்பணம் செலுத்த **வேண்டியதில்லை.** நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தமது முதலீடாக காணியை முதலீடு செய்வதோடு முதலீட்டாளரினால் முதலீடு செய்ய வேண்டிய குறைந்த முதலீடு ஒட்டுமொத்த திட்ட பெறுமதி அடிப்படையில் **20%** ஆகும்.

- இதற்காக ஆர்வம் காட்டுகின்ற முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள் குறித்த திட்ட விபரம், விண்ணப்பதாரர்களின் தகைமைகள், நிபந்தனைகள் மற்றும் முன்மொழிவுகள் PPP படிவத்தை உள்ளடக்கிய முதலீட்டு முன்மொழிவு அழைப்பு ஆவணத்தை மீளளிக்கப்படாத ரூபா 100,000/- தொகையை (வரி உட்பட) பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் 1, 6ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு கட்டணத்தை செலுத்தி, 8ஆவது மாடியில் அமைந்துள்ள அந்த அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டு பிரிவில் இருந்து 2022 செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் 2022 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022 ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி மு.ப. 10.00 க்கு செத்சிறிபாய, கட்டம் 1, 9 ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.
- அபிவிருத்தி முன்மொழிவுகளை ஏற்பது 2022 டிசம்பர் மாதம் 05 ஆம் திகதி மு.ப. 11.00 க்கு முடிவுறும். அபிவிருத்தி முன்மொழிவுகள் ஏற்பது முடிவுற்ற உடன் கிடைக்கப்பெற்றிருக்கும் தொழில்நுட்ப முன்மொழிவுகள் அந்தத் தருணத்தில் திறப்பது பத்தரமுல்லை, “சுஹுருபாய” 18 ஆவது மாடியில் அமைந்துள்ள, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**
பணிப்பாளர் (ஆதன மேம்பாடு), ஆதன முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டுப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி, செத்சிறிபாய, கட்டம் 1, பத்தரமுல்லை.

தொலைபேசி இலக்கம்: 011-2875921, 076-7661080 அல்லது 011-2875916-20, நீடிப்பு - 2960-2967
தொலைநகல் 011-2875900
மின்னஞ்சல் : directorred@uda.gov.lk
இணையதளம்: www.uda.gov.lk

தலைவர், அமைச்சு மூலம் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழு,
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 17ஆவது மாடி, “சுஹுருபாய” பத்தரமுல்லை.



நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை
முதலீட்டு முன்மொழிவுக்கான அழைப்பு
EXPERT CITY — கட்டம் III,
பழைய ட்ரிபோலி சதுக்கக் காணி, கொழும்பு-10



## EXPERT CITY கட்டம் III

தகவல் தொழில்நுட்ப தள கலப்பு அபிவிருத்தித் திட்டம்
மருதானை வீதி, கொழும்பு-10

**99 ஆண்டுகளுக்கு குத்தகை அடிப்படையில்**
அல்லது
**35 ஆண்டு அரச - தனியார் - கூட்டு (PPP) அடிப்படையில்**

காணி அளவு: ஏக்கர் 01 ரூட்: 01 பர்ச்சஸ்: 12.4 (ஹெக்டயர் 0.5372)

| முதலீட்டு முறை | 99 ஆண்டுகள் குத்தகை அடிப்படையில் | 35 ஆண்டுகள் PPP அடிப்படையில் |
|---|---|---|
| அடிப்படை விலை (ரூபா) | 1,967,500,000/- | முற்பணம் 347,862,500/- |
| பிணை வைப்பு (ரூபா) | 20,000,000/- | 20,000,000/- |
| செலுத்தும் முறை | முழுமையான விலைமனு பெறுமதி (100%) 04 மாதங்களுக்குள் செலுத்த வேண்டும். | முற்பணம் மற்றும் மாதாந்த அடிப்படையில் வருவாயை பகிர்தல் (நிலையான ஒரு தொகை அல்லது மொத்த வருமானம் அடிப்படையில் நிலையான வீதம் ஒன்றாக) |

- இதற்காக ஆர்வம் காட்டுகின்ற முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள் குறித்த விபரங்களை உள்ளடக்கிய முதலீட்டு முன்மொழிவு அழைப்பு ஆவணத்தை மீளளிக்கப்படாத ரூபா 100,000/- தொகையை (வரி உட்பட) பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் 1, 6 ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு கட்டணத்தை செலுத்தி, 8ஆவது மாடியில் அமைந்துள்ள அந்த அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டு பிரிவில் இருந்து 2022 செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி தொடக்கம் 2022 நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
- விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022 நவம்பர் மாதம் 01ஆம் திகதி மு.ப. 10.00 க்கு செத்சிறிபாய, கட்டம் 1, 9 ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.
- அபிவிருத்தி முன்மொழிவுகளை ஏற்பது 2022 டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி மு.ப. 11.00 க்கு முடிவுறும். அபிவிருத்தி முன்மொழிவுகள் ஏற்பது முடிவுற்ற உடன் கிடைக்கப்பெற்றிருக்கும் தொழில்நுட்ப முன்மொழிவுகள் அந்தத் தருணத்தில் திறப்பது பத்தரமுல்லை, “சுஹுருபாய” 18ஆவது மாடியில் அமைந்துள்ள, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

**மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்**
பணிப்பாளர்
(ஆதன மேம்பாடு),
ஆதன முகாமைத்துவ மற்றும்
மேம்பாட்டுப் பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகாரசபை,
8ஆவது மாடி, செத்சிறிபாய,
கட்டம் 1,
பத்தரமுல்லை.

தொலைபேசி இலக்கம்:
011-2875921, 077-1925759 அல்லது 011-2875916-20, நீடிப்பு - 2960-2967
தொலைநகல் 011-2875900
மின்னஞ்சல்
directorred@uda.gov.lk
இணையதளம்:
www.uda.gov.lk

தலைவர், அமைச்சு மூலம் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழு,
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 17ஆவது மாடி, “சுஹுருபாய” பத்தரமுல்லை.



## கொழும்பு 10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை

## தொடர் மாடி கலப்பு அபிவிருத்தித் திட்டத்திற்காக சிறப்பான முதலீட்டு வாய்ப்பு



தலைவர்,
அமைச்சு மூலம் நியமிக்கப்பட்ட நிலையான மீளாய்வுக் குழு,
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு,
17ஆவது மாடி, “சுஹுருபாய” பத்தரமுல்லை.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை
முதலீட்டு முன்மொழிவுக்கான அழைப்பு (RFP)

**வரிப்பணம் இலக்கம் 12, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10 காணி**

| | |
|---|---|
| காணி அளவு | : ஏக். 01 ரூட் 03 பர். 17.52 (ஹெக். 0.7525) |
| முதலீட்டு வாய்ப்பு | : 99 ஆண்டுகள் குத்தகை அடிப்படை |
| அடிப்படை விலை | : ரூபா 3,802,156,000/- |
| பிணை வைப்பு | : ரூபா 40,000,000/- |



**வரிப்பணம் இலக்கம் 38, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, கொழும்பு-10 காணி**

| | |
|---|---|
| காணி அளவு | : ரூட் 02 பர். 34.04 (ஹெக் 0.2884) |
| முதலீட்டு வாய்ப்பு | : 99 ஆண்டுகள் குத்தகை அடிப்படை |
| அடிப்படை விலை | : ரூபா 1,458,285,000/- |
| பிணை வைப்பு | : ரூபா 15,000,000/- |



இதற்காக ஆர்வம் காட்டுகின்ற விலைமனுதாரர்களுக்கு (முதலீட்டாளர்கள்/ மேம்பாட்டாளர்கள்) குறித்த தகவல்கள் உள்ளடங்கிய முதலீட்டு முன்மொழிவு அழைப்பு ஆவணத்தை மீளளிக்கப்படாத ரூபா 100,000/- தொகையை (வரி உட்பட) பத்தரமுல்லை, செத்சிறிபாய - கட்டம் 1, 6ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு கட்டணத்தை செலுத்தி, 8ஆவது மாடியில் அமைந்துள்ள அந்த அதிகாரசபையின் ஆதன முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டு பிரிவில் இருந்து 2022 செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி தொடக்கம் 2022 நவம்பர் மாதம் 16ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரையான காலத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2022 நவம்பர் மாதம் 02 ஆம் திகதி மு.ப. 10.00க்கு செத்சிறிபாய, கட்டம் 1, 9ஆவது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

அபிவிருத்தி முன்மொழிவுகளை ஏற்பது 2022 டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி பி.ப. 02.00க்கு முடிவுறுவதோடு கிடைக்கப்பெறும் தொழில்நுட்ப முன்மொழிவுகள் அந்தத் தருணத்தில் திறப்பது பத்தரமுல்லை, “சுஹுருபாய” 18ஆவது மாடியில் அமைந்துள்ள, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுவதோடு, அதற்காக விலைமனுதாரருக்கு அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும்.

மேலதிக விபரங்களை பணிப்பாளர், ஆதன முகாமைத்துவ மற்றும் மேம்பாட்டு பிரிவு, 8அவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை, செத்சிறிபாய, கட்டம் 1, பத்தரமுல்லை என்ற முகவரியில் அல்லது துரித அழைப்பு இலக்கம்: 011-2875921, 011-2875916-20, நீடிப்பு: 2960-2967, கைபேசி: 071 7225300, தொலைநகல்: 011 2875900, மின்னஞ்சல்: directorred@uda.gov.lk, இணையதளம்: www.uda.gov.lk வழியாக பெற்றுக்கொள்ள முடியும்.




# தேசிய அரசாங்கம் அமைப்பது இன்றைய காலத்தின் தேவை

## தாமதத்துக்குக் காரணம் அரசியல் கட்சிகளின் காய்நகர்த்தல்கள்!

## இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் பேட்டி

**தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. இருந்தபோதும், அரசியல் கட்சிகளின் அடுத்தகட்ட காய்நகர்த்தல்கள் இந்த செயல்முறை காலதாமதமாவதற்குக் காரணமாக இருக்கலாம் என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். நாட்டின் அண்மைக்கால நிலைவரங்கள் குறித்து எமக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: அனைத்துக் கட்சி அரசாங்கத்தை அமைப்பதற்குக் கைகோர்க்குமாறு ஜனாதிபதி அனைத்துக் கட்சிகளுக்கும் பகிரங்க அழைப்பு விடுத்திருந்தார். இருந்தபோதும், எதிர்க்கட்சிகள் இதுவரை பொதுவான இணக்கப்பாட்டை எட்டவில்லை. இதற்குக் காரணம் என்ன?**

பதில்: 'சர்வகட்சி அரசாங்கத்தை நாம் உருவாக்க மாட்டோம்' என்று கூறும் நிலைமை இன்னமும் ஏற்படவில்லையென்றே நான் கருதுகிறேன். இதுபற்றிய கருத்தாடல்கள் இன்னமும் முடிவுக்கு வரவில்லை. சுதந்திரக் கட்சியே சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான முன்மொழிவை முதலில் வைத்தது. இதன் மீது எமக்கு முழுமையான நம்பிக்கை இருப்பதாலேயே கட்சிக்குள் எனது முழு ஆதரவையும் அளித்தேன்.

நாட்டில் நிலையான அரசாங்கமொன்று இருக்க வேண்டும் என்பது சர்வதேச நாணய நிதியத்தின் முக்கிய நிபந்தனைகளில் ஒன்றாகும். பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, நிலையான நிர்வாகம் இருக்க வேண்டும் என்பதே முதன்மையானது. இதற்கான சிறந்த அடித்தளமாக சர்வகட்சி அரசாங்கம் அமையும். மக்களின் எதிர்ப்பலை காரணமாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு பதவி விலக வேண்டிய நிலைமை உருவானது. இந்தத் தருணத்தில் தேர்தலுக்குச் செல்வதற்கான சாத்தியம் இல்லை. எனவே, சர்வகட்சி அரசாங்கத்தின் மூலம் வலுவான மற்றும் நிலையான நிர்வாகம் உருவாக்கப்பட வேண்டும். இதன் மீது காணப்படும் நம்பிக்கையை ஜனாதிபதி கைவிட்டதாகத் தெரியவில்லை.



அரசியல் என்று வரும்போது இந்த வார்த்தைகளை நாம் தொங்கவிடக் கூடாது அல்லது தேவையற்ற மோதல்களை ஏற்படுத்தக் கூடாது. நாம் ஒரு பரந்த கண்ணோட்டத்தில் பிரச்சினையை விவாதிக்க வேண்டும். எனது கட்சித் தலைவரின் கருத்துகளை நான் ஒருபோதும் விமர்சிப்பதில்லை. அரசியலில் சில சமயங்களில், கடந்த வாரம் யாரோ எடுத்த முடிவை, நாட்டில் நிலவும் சூழ்நிலைக்கு ஏற்ப இந்த வாரம் மாற்ற வேண்டியிருக்கும்.

## "நாட்டை இயல்பு நிலைக்கு மாற்றுவதற்கான அடிப்படையை முதலில் உருவாக்க வேண்டும்!

ஒவ்வொரு கட்சியும் அடுத்த கட்ட நகர்வுகள் குறித்து சிந்திக்கின்றன என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. அதனால்தான் இந்த செயல்முறை தாமதமாகிறது என்று நினைக்கிறேன். எவ்வாறாயினும், போட்டியின் வாரிசு யார் என்பதை கருத்தில் கொள்ளாமல் தற்போதைய நெருக்கடி சூழ்நிலையை சமாளிக்கும் முக்கிய பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது.

**கே: ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிதான் ஆரம்பத்தில் சர்வகட்சி அரசாங்கத்துக்கான யோசனையை முன்வைத்தது. இவ்வாறான நிலையில் இக்கட்சி அரசாங்கத்தின் பங்குதாரராக வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

பதில்: கண்டிப்பாக. சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே அரசாங்கத்தின் பங்குதாரர்களாக மாறிவிட்டனர். இந்த விடயம் தொடர்பில் கட்சிக்குள் மிகவும் சுமுகமாக கலந்துரையாடினோம். ஒரு பொறுப்பான கட்சி என்ற வகையில், இந்தச் செயற்பாட்டின் பங்குதாரர்களாக மாறுவதற்கு சுதந்திரக் கட்சிக்குப் பாரிய பொறுப்பு உள்ளது. இப்போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இதை நடைமுறையை உணர்ந்துள்ளது. இந்தக் கட்சியில் உள்ள 14 உறுப்பினர்களில் ஏறக்குறைய 8 எம்.பிக்கள் ஏற்கனவே அரசாங்கத்தின் பங்குதாரர்களாக மாறியுள்ளதுடன், அவர்கள் சுதந்திரக் கட்சிக்கு வலுவான செய்தியையும் வழங்கியுள்ளனர்.

எனவே, பெரும்பான்மையான உறுப்பினர்கள் கூறியுள்ள இந்தச் செய்தியை கட்சி சரியாக உணர வேண்டும். இந்த அமைச்சுக்களை நாங்கள் ஏற்றுக்கொண்ட நாளில், சுதந்திரக் கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் கலந்துரையாடி எமது தீர்மானத்தை அவருக்குத் தெரிவித்தோம். நாங்கள் வெறுப்புடனோ அல்லது கட்சியுடன் எந்த பிரச்சினையுடனோ இந்த முடிவை எடுக்கவில்லை.

**கே: எவ்வாறாயினும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் தீர்மானத்திற்கு மாறாக அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்ட 8 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கட்சித் தலைமை தீர்மானித்துள்ளது. நீங்கள் இதனை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

பதில் : கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்த கருத்தை நான் தவறாகப் பார்க்கவில்லை, ஏனெனில் சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவினால் சர்வகட்சி அரசாங்கத்தில் இணைவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்பட்டிருக்கவில்லை. இருப்பினும், நாட்டின் சார்பாக இன்று எடுக்கும் முடிவை நாளை மாற்ற வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மிகவும் நெகிழ்வான தலைவராக இருந்தார். அவர் தனது ஜனாதிபதி அதிகாரத்தை தானே குறைத்துக் கொண்ட தலைவர். பொதுஜன பெரமுன உருவாக்கப்பட்ட போது, எதிர்க்கட்சியில் அமர அனுமதி வழங்குமாறு எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு அப்போதைய ஜனாதிபதி சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்தது. அந்த நேரத்தில் அவர் மிகவும் சக்திவாய்ந்த ஜனாதிபதியாக இருந்தார். வேறு ஏதாவது தலைவர் ஆட்சியில் இருந்திருந்தால், வேறு முடிவை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால், அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது எம்.பிக்களை எதிர்க்கட்சியில் அமர அனுமதித்தார். மீண்டும், 16 எம்.பிக்கள் குழுவும் தங்களை எதிர்க்கட்சியில் அமர அனுமதிக்குமாறு கோரிக்கை விடுத்தது. அந்தக் கோரிக்கைக்கும் அப்போதைய ஜனாதிபதி அனுமதி வழங்கினார். கட்சிக்குள் விரிசல் ஏற்படாமல் பார்த்துக் கொண்டு நாட்டின் சார்பாகவும் கட்சி சார்பாகவும் அந்த முடிவுகள் அவரால் எடுக்கப்பட்டன.

எங்கள் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கட்சியின் பெரும்பான்மை கருத்துக்கு செவிசாய்ப்பார் என்று நான் நம்புகிறேன்.

**கே: பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் 38 இராஜாங்க அமைச்சர்கள் நியமனம் குறித்து எதிர்க்கட்சிகளும் பல்வேறு தரப்பினரும் கவலை வெளியிட்டுள்ளனர். உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இந்த இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளன. ஆனால் அதுபற்றி யாரும் பேசுவதில்லை. இரண்டாவது உண்மை என்னவென்றால், சீனாவில் உள்ள அதே அரசியல் சூழல், நம் நாட்டில் இல்லை. உண்மையில், இது ஒரு கொந்தளிப்பான அரசியல் சூழ்நிலை. பாராளுமன்றத்தில் ஒரு கட்சியின் தனியான உறுப்பினராக இருந்து இந்நாட்டின் ஜனாதிபதியாக மாறியிருப்பதுடன், ஜனாதிபதியின் கட்சி சார்பில் உறுப்பினர் ஒருவர் மாத்திரமே உள்ளார். எவ்வாறாயினும், சர்வகட்சி அரசாங்கத்துக்கான அழைப்பை ஜனாதிபதி விடுத்துள்ளதுடன், இதில் அவர் தீவிரமாகவும் இருக்கின்றார்.

இருப்பினும், பெரும்பாலான எதிர்க்கட்சிகள் இந்த செயல்முறையை வேண்டுமென்றே புறக்கணிக்கின்றன. அவர்களுக்கு சில பொறுப்புகளை வழங்குவதற்குப் பதிலாக, நாட்டின் எரியும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணப் பாராளுமன்றத்தில் உள்ள 112 எம்.பிக்களின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதியிடம் உள்ள நடைமுறைப் பொறிமுறை என்ன? அமைச்சர்களின் எண்ணிக்கை 10 முதல் 15 வரை மட்டுமே இருக்க வேண்டும் என்று சொல்வது எளிது. நடைமுறையில் பார்க்கும்போது, ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் வேறு வழியில்லை. தீர்வு இல்லை என்றால், கிடைக்கக் கூடிய அடுத்த விருப்பத்திற்கு செல்ல வேண்டும். அதுவே இராஜாங்க அமைச்சர்களை நியமித்து அவர்களின் வசதிகளை குறைக்க நடவடிக்கை எடுத்ததாகும்.

## தேர்தலுக்குச் செல்வதற்கான சூழல் தற்போது இல்லையென்பதே அனைவரினதும் கருத்து

**கே: அரசாங்கத்தை மாற்றுவதற்கு சித்தாந்த ரீதியாக தலையிட்டமைக்காக 3500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், 1200 பேர் வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். அமைதியான போராட்டங்களை ஒடுக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படுவதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன. நீங்கள் கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?**

(21ஆம் பக்கம் பார்க்க)




# நாட்டுக்கு பொருளாதார நன்மை தருகின்ற திட்டங்களில் கவனம் செலுத்த வேண்டும்

மிகவும் மோசமான காலப்பகுதியை கடந்து கொண்டிருக்கும் இலங்கை, உன்னதமான பயணப் பாதையின் செயல்திறன் மிக்க முதலாவது அடியை எடுத்து வைத்துள்ளது. சர்வதேச நிதியத்துடன் உத்தியோகபூர்வ உயர்மட்ட உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. மூன்று வருடத்திற்காக 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் 'பக்கேஜ்' ஒன்று எதிர்பார்க்கப்படுகிறது.

எது எவ்வாறாயினும், இலங்கையின் அந்நிய செலாவணி பற்றாக்குறைக்கு அது போதுமானதல்ல. ஆனால் இந்த வழங்கலுக்கான நடவடிக்கைகளில் ஈடுபடும் போது, இலங்கை கடன் மீளமைப்பை மேற்கொள்ள வேண்டியுள்ளது. நிதியம் தெரிவித்துள்ள யோசனைகள் நாட்டிற்கு அழுத்தத்தை ஏற்படுத்தக் கூடும்.

இலங்கை இருதரப்பு மற்றும் பலதரப்பு வெளிநாட்டுக் கடன்களை மீளமைப்பை செய்யும் பூரண நடவடிக்கையை தற்போது ஆரம்பித்துள்ளது. நாணய நிதியத்தின் திட்டங்களை செயல்படுத்துவதால் முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை, அந்நிய செலாவணி கையிருப்பு உயர்வதற்கான நிலையான தன்மை மற்றும் நிவாரண வேலைத் திட்டங்களுக்கு அது அடிப்படையாக அமையும். இந்தியா இந்தப் பின்னணியை ஏற்படுத்த பெரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதோடு, இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராம் அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை பாராட்டுக்குரியது.

யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து நடுத்தர வருமானத்தில் பெரும் மட்டத்திற்கு வந்திருந்த இலங்கை, தற்போது துர்ப்பாக்கியமான இடத்தை அடைந்துள்ளமைக்கு பல காரணங்கள் உள்ளன. 1977 இல் பொருளாதாரம் திறந்து விடப்பட்டு பாரிய சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டாலும் நிவாரணங்களை வழங்கி மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் கட்டமைப்பு மாற்றப்படவில்லை.

அரச வருமானத்தில் நூற்றுக்கு எண்பது வீதம் அரச வேதனம் மற்றும் ஓய்வூதிய கொடுப்பனவுகளுக்குச் செலவாகிறது. மிகவும் குறைந்த வருமானமுள்ள நாடாகவே இலங்கை வருடத்தை ஆரம்பிக்கின்றது. ஓய்வூதியத்தை வழங்குவது கூட வரவு செலவுத் திட்டத்தில் வரிச் சுமையை அதிகரிப்பதற்கான காரணமாகவுள்ளது. 15 இலட்சம் அரசு ஊழியர்கள் மற்றும் 5 இலட்சம் ஓய்வூதியக்காரர்களுக்கு கொடுப்பனவுகளை செய்ய வேண்டியுள்ளது.

தனியார் துறையில் தொழில் முனைவு காணப்படாமையை அடிப்படையாகக் கொண்டு உயர் கல்வியை பூர்த்தி செய்த பெரும்பாலானோரை அரசாங்க வேலைவாய்ப்புகளுக்கு இணைத்துக் கொள்ள வேண்டியுள்ளது. அதுவே அரச சேவையில் பணியாளர்களின் அதிகரிப்புக்கு காரணமாகும். பொருளாதாரத்தை விரிவாக்க நடவடிக்கை எடுக்கப்படாமையால் செலவுக்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டுக் கடன்களை தொடர்ந்தும் பெற்றுக் கொள்ள வேண்டியதோடு, அந்தக் கடனுக்கு செலுத்த வேண்டிய கடன் வட்டி அரச வருமானத்தில் நூற்றுக்கு 70 வீதமாகும். சம்பளம் மற்றும் வட்டியை செலுத்துவதற்கு மாத்திரம் அரசு மேலும் கடன்களை பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

யுத்தம் இடம்பெற்ற 1983 மற்றும் 2009 ஆம் ஆண்டு காலப் பகுதியில் கடன் பெறுவது இலகுவாக இருக்கவில்லை. பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்த பின்னர் விரைவான அபிவிருத்தித் திட்டங்களுக்காக வர்த்தகக் கடன் பெறவேண்டிய நிலைமை உருவாகியது. அன்று தொடக்கம் பாரியளவில் வர்த்தகக் கடன்களை பெற்றுக் கொண்டதோடு, அந்தக் கடனின் அளவு இலங்கையின் வெளிநாட்டுக் கடன்களில் நூற்றுக்கு 40 அளவிலான பங்காகும். உடனடியாக பலன் கிடைக்காத திட்டங்களுக்கு முதலீடு செய்தமையும் இன்னும் ஒரு பகுதி நுகர்வுக்காக செலவழித்தமையும் பிரச்சினைக்கு ஆரம்பம் எனக் குறிப்பிடலாம்.

ஜனாதிபதி அனைத்துத் தரப்பாரினதும் ஒப்புதலுடன் புதிய யுகம் ஒன்றை உருவாக்க முயற்சி செய்து வருகின்றார். சர்வதேச ரீதியில் பாரிய அழுத்தத்தை ஏற்படுத்தும் டயஸ்போராக்களுக்கும் நட்புக்கரம் நீட்டுகின்றார். பொருளாதார பின்னடைவை தவிர்ப்பதற்கான திட்டங்களுக்கான முயற்சியில் ஈடுபடுகின்றார். நல்லிணக்கத்தை ஏற்படுத்தி சமமான சந்தர்ப்பங்களை வழங்கி இனங்களை எவ்வாறு இணைப்பது என்னும் பாரிய சவால் தொடர்பாக கலந்துரையாடல்களை நாம் மேற்கொள்ள வேண்டும்.

மக்களுக்கு குறைந்த அழுத்தத்தை ஏற்படுத்தும் புதிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடிய நன்மைகளின் முன்னே இந்தியாவுடன் நடத்தப்படும் கலந்துரையாடல் மிகவும் முக்கியமாகும். நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்,வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் எஸ். ஜெய்சங்கர், பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவால் போன்றோர் இலங்கையின் தற்போதைய நிலைமை பற்றி தனிப்பட்ட முறையில் அக்கறை செலுத்தியதோடு, முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் அவசர உதவி, மசகு எண்ணெய் விநியோகம் மற்றும் கொடுப்பனவுக்கான கையிருப்பு ஒத்துழைப்பு என்னும் மூன்று தூண்கள் குறித்தும் கவனம் செலுத்தினார்கள்.

இதன் இன்னொரு நடவடிக்கை நீண்டகால வருமானத்தை பெறக்கூடிய திட்டங்களில் முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்கும் மூலோபாய திட்டமாகும். இந்திய ஒயில் நிறுவனத்துடன் இணைந்து தற்போது மேற்கொள்ளப்படும் எண்ணெய் விநியோகத்தில் இன்னுமொரு கட்டமாக திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளது. எரிபொருள் கையிருப்பு, சுத்திகரித்தல் மற்றும் அதன் மூலம் திருகோணமலை துறைமுகத்தை அண்டிய பிரதேசங்களை மேம்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எண்ணெய் மற்றும் எரிவாயு குழாய்களை அமைப்பது இன்னுமொரு திட்டமாகும். அது எரிபொருளுக்கான போக்குவரத்து செலவை குறைக்கக் கூடியது.

மன்னார் மற்றும் பூநகரி பிரதேசங்களில் காற்றாலை மற்றும் சூரிய அனல்மின் நிலையங்களை அமைப்பதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன. ஆய்வு அறிக்கைகளின்படி 30,000 மெகாவாற் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். தற்போது உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு 4,300 மெகாவாற்றாகும். நாட்டுக்குத் தேவையான அளவைவிட ஆறு மடங்கு உற்பத்தி செய்யப்படும் போது மேலதிக மின்சாரத்தை இந்தியாவுக்கு விற்பனை செய்து அந்நிய செலாவணியை ஈட்ட முடியும். பங்களாதேஷ், பூட்டான்மற்றும் நேபாளம் போன்ற நாடுகள் அவ்வாறான திட்டங்களை ஆரம்பித்துள்ளன. கொழும்பு துறைமுகத்தில் மூன்று இறங்குத்துறைகள் உள்ளன. அவற்றின் மீள ஏற்றுமதி நூற்றுக்கு 80 வீதம் இந்தியாவுக்காகும். நான்காவது முதலீட்டுக்கும் அதானி குழுமம் வர்த்தக ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது. மேலும் துறைமுக இறங்குதுறைகளை மேம்படுத்துவதோடு துறைமுக வசதிகளை வழங்குவதில் ஆசியாவிலேயே உயர்ந்த இடத்திற்கு வர முடியும் . இவ்வாறான துறைகள் தொடர்பில் கவனம் செலுத்தினால் நாட்டிற்கு பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# கல்முனை ஹூதா பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் பாராட்டு



கல்முனை மத்திய தினகரன் நிருபர்

கல்முனை தைக்கா வீதியைச் சேர்ந்த அஷ்ஷெய்க் அப்லல் (ஹாமி)

கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசலில் தனது கன்னி குத்பா பேருரையை (23) நிகழ்த்திய பின்னர், பள்ளிவாசல் நிர்வாகத்தினரால் அவரை பாராட்டி கௌரவித்து நினைவுச் சின்னமும் வழங்கி வைக்கப்பட்டது.

கல்முனையைச் சேர்ந்த கே.எல்.சுபைரின் புதல்வரான அஷ்ஷெய்க் அப்லல் அவர்கள் தனது மௌலவி கற்கையை கல்முனை அல் ஹாமியா அரபிக்கல்லூரியில் நிறைவு செய்து மௌலவி பட்டம் பெற்று வெளியாகியிருந்தார்.

கல்முனை ஹூதா ஜும்ஆ பள்ளிவாசல் தலைவர் ஏ.வி.எம்.இப்றாஹீம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அஷ்ஷெய்க் ஜவ்ஸாத் (ஸலாமி) உட்பட பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் ஊர்ப் பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

# லெப்டினன்ட் கேர்ணல் பிரஜாத் விஜேசிங்கவின் இறுதிக் கிரியைகள் இன்று



இராணுவத்தின் 07ஆவது கஜபா படைப் பிரிவின் லெப்டினன் கேர்ணல் பிரஜாத் விஜேசிங்க சுகயீனம் காரணமாக தனது 54 ஆவது வயதில் வியாழக்கிழமை (22) காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 25 ஆம் திகதி ஹொரண, மில்லேவ பொது மயானத்தில் நடைபெறவுள்ளது.

லெப்டினன்ட் கேர்ணல் பிரஜாத் விஜேசிங்க கலாஓயா இராணுவ தொழிற்பயிற்சி நிலையத்தில் I (கட்டுப்பாட்டு) அதிகாரியாக பணியாற்றி வந்தார்.

தனது இராணுவ பணியின் போது, இராணுவத் தலைமையகத்தில் ஊடக பணியகத்தின் அதிகாரி II (கட்டுப்பாடு), 11ஆவது கஜபா படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மற்றும் சிவில் பாதுகாப்பு திணைக்களம் மற்றும் இராணுவ தொண்டர் படையின் ஊடக அதிகாரி உட்பட பல முக்கிய பதவிகளை வகித்தார்.

வடக்கில் யுத்தம் நடைபெற்ற காலத்தில் கொழும்பிலிருந்து செல்லும் அனைத்து அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் ஒருங்கிணைப்பாளராக செயற்பட்டதுடன் அனைத்து ஊடகவியலாளர்களின் மிக நெருங்கிய நண்பராகவும் அவர் இருந்தார்.

இராணுவத்தின் ஊடகப்பணியில் ஈடுபட்ட நண்பர், லெப்டினன்ட் கேர்ணல் பிரஜாத் விஜேசிங்கவின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தினகரனும் தெரிவித்துக் கொள்கிறது.

## எங்கள் கருத்து

### உணவுப்பொருள் பாதுகாப்பை அலட்சியப்படுத்த முடியாது!

01ஆம் பக்க தொடர்...

அவை அனைத்திலுமே நச்சுப்பதார்த்தங்கள் உள்ளதாக ஆதாரமற்ற வதந்திகளைப் பரப்பத் தொடங்கினர்.

திரிபோஷவுக்கு நிகராக விற்கப்படுகின்ற உணவுப்பொருட்கள் பற்றியும் செய்திகள் பரவியதால், மக்கள் அச்சமடைந்ததில் தவறில்லை. ஆனாலும் உரிய ஆதாரம் எதுவுமின்றி இவ்வாறு சர்ச்சைக்குரிய வதந்திகளைப் பரப்புவது முறையா என்பதுதான் இங்குள்ள வினா! ஆதாரமற்ற கருத்துகளைப் பரப்புவதற்கு சமூகஊடகங்கள் களம் அமைக்கின்றன என்பதுதான் உண்மை.

இவ்வாறான நிலையில், திரிபோஷ மீதான அச்சம் நீங்கியுள்ளது. ஆனாலும் அதற்கு நிகராக கடைகளில் விற்பனை செய்யப்படுகின்ற ஏனைய சத்துணவுப் பொருட்கள் மீதான சந்தேகமும் நீக்கப்பட வேண்டும்.

அந்த உணவுப் பதார்த்தங்கள் மீது உரிய இரசாயனப் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு மக்களுக்கு உண்மை தெளிவுபடுத்தப்பட வேண்டும். அப்போதுதான் மக்கள் நிம்மதியடைவர். இதற்கு அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்வது அவசியம். நாட்டில் மக்கள் மத்தியில் தொற்றாநோய்கள் அதிகரித்துச் செல்வதற்கு உணவுப் பொருட்களில் சேர்ந்துள்ள நச்சு இரசாயனங்களும் காரணமென மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர். எனவே எமது அன்றாட உணவுப்பொருட்களின் பாதுகாப்பில் அலட்சியமாக இருந்துவிட முடியாது!

# இன்று நிறைவடையும் புத்தகக் கண்காட்சி

## தமிழ் புத்தகக் கூடங்கள் இம்முறை இல்லை

அருள் சத்தியநாதன்

இலங்கை நூல் பதிப்பாளர் சங்கம் நடத்தும் வருடாந்த புத்தகத் திருவிழா இன்றுடன் நிறைவடைகிறது. கடந்த 16 ஆம் திகதி பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் ஆரம்பமான 36ஆவது தேசிய புத்தகக் கண்காட்சி இரண்டாண்டுகள் நடைபெறாது இவ்வாண்டே நடத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

கொவிட்19 பெருந்தொற்று மற்றும் நாட்டின் பொருளாதார நலிவு காரணமாக மக்களின் கொள்வனவு சக்தி கேள்விக்குறியானதால் புத்தகங்கள் வாங்க மக்கள் வருவார்களோ என்ற சந்தேகத்துடனேயே ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் சற்றும் எதர்பாரா வகையில் பெருந்திரளான வாசகர்கள் கண்காட்சிக்கு வருகை தந்ததாகவும் ஏற்பாட்டாளர் தரப்பு தெரிவித்துள்ளது.

இப் பத்து நாள் நூல் கண்காட்சிக்கு ஆறு இலட்சத்துக்கும் அதிகமான வாசகர்கள் வருகை தந்ததாகவும், பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நூல் வாசிப்பு மக்கள் மத்தியில் நீடித்து நிலைத்திருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளதென பூபாலசிங்கம் புத்தக சாலையின் அதிபர் ஸ்ரீதர் சிங் தினகரனுக்கு தெரிவித்தார். இம்முறை தமிழ் நூல் விற்பனையாளர்களில் குமரன் பதிப்பகம் மற்றும் ஐயா புத்தக நிலையம் மாத்திரமே புத்தகக் கூடங்களை அமைத்திருந்தன.

வழமையாக புத்தகக் கூடங்களை அமைக்கும் பூபாலசிங்கம் புத்தகசாலை அதிபர், டொலர் பிரச்சினை காரணமாக புதிய நூல்களை இறக்குமதி செய்யமுடியவில்லை என்றும் கைவசம் போதிய நூல்கள் இல்லாமை காரணமாகவும் இப் புத்தகக்காட்சியில் தாம் இடமபெறவில்லை என்றும் தெரிவித்தார்.

## ஜனாதிபதி நாளை...

விடுக்கப்பட்டுள்ளது.

ஜப்பானிய பிரதமர் புமியோ கிஷிடா மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தின் உயர்மட்ட பிரதிநிதிகளையும் ஜனாதிபதி இதன்போது சந்திக்கவுள்ளார்.

ஜப்பான் விஜயத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 29ஆம் திகதி பிலிப்பைன்ஸில் நடைபெறும் ஆசிய அபிவிருத்தி வங்கி ஆளுநர்கள் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக அங்கு சென்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி பொங் பொங் மார்கோஸை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி எதிர்வரும் 30ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார்.

## வாளுக்காராம விஹாரை...

மத வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

பாரம்பரிய சடங்குகளைத் தொடர்ந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சந்தன மரத்தால் செய்யப்பட்ட புத்தர் சிலையை ஊவா மாகாண பிரதம சங்க நாயக்கவும் கொள்ளுபிட்டி வாளுக்காராம விஹாரையின் விஹாராதிபதியுமான மஹரகம நந்தநாயக்க தேரர் மற்றும் உடவெள கோலித தேரர் ஆகியோர் இணைந்து கையளித்தனர்.

## அதி சொகுசு 02 வாகனங்கள்...

நடவடிக்கை எடுத்துள்ளதுடன்இனியும் அவர்கள் அந்த வாகனங்களை ஒப்படைக்காவிட்டால் பொது சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்தலின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இந்த இரண்டு வாகனங்களினதும் சந்தை பெறுமதி சுமார் ஐந்து கோடி என தெரிவிக்கப்படுகிறது.

KT 7233 இலக்க டொயாட்டோ லேண்ட் க்ரூஸர் சூப்பர் வாகனம் மற்றும் PH 4201 இலக்க டொயோட்டா ஹைலக்ஸ் ரக வாகனம் ஆகிய இரண்டுமே மீண்டும் ஒப்படைக்கப்படாமலுள்ளதாக அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. ஆர்ப்பாட்ட காலங்களில் பெருமளவிலான அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக முன்னாள் ஜனாதிபதியிடம் வாகனங்களைப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

அவர்களில் மேற்படி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரைத் தவிர ஏனையவர்கள் தாம் பெற்றுக் கொண்ட வாகனங்களை மீள ஒப்படைத்துள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## முட்டைகளுக்கு மேலும்....

தெரிவித்துள்ளார்.

நாட்டில் கோழிக்குஞ்சுகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் இனப்பெருக்கத்துக்காக அரசாங்கம் ஒவ்வொரு வருடமும் 80,000 முட்டையிடும் கோழிகளை இறக்குமதி செய்வதுடன் இம்முறை 9.000 முட்டையிடும் கோழிகள் மட்டுமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கோழிப்பண்ணை கைத்தொழில் தற்போது பெரும் வீழ்ச்சியடைந்துள்ளதாக தெரிவித்துள்ள அவர், பெரும்பாலான பண்ணையாளர்கள் தமது தொழிலை கைவிட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கால்நடைகளுக்கான தீவனங்கள் விலை அதிகரித்துள்ளதால் முட்டைகளை விற்று வரும் இலாபத்தில் தீவனங்களை கொள்வனவு செய்ய முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ள அவர், கோழிப்பண்ணை உரிமையாளர்கள் தற்போது முட்டையிடும் கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலை தொடருமானால் கோழி முட்டைக்கு மேலும் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## பிரிட்டன் அவசர உணவு மற்றும்....

பொதுச் சபையில் இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரியுடனான சந்திப்பின் போது தமது நாடு இலங்கைக்கு 03 மில்லியன் பவுண்ஸ் பெறுமதியான உயிர்காக்கும் உதவிப்பொதிகளை வழங்கவுள்ளதாக தாரிக் அஹமட் அறிவித்துள்ளார்.

செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகளின் முகவர் நிறுவனங்களூடாக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

உணவு, விதைகள் மற்றும் பயிர்ச் செய்கைக்கு உதவும் கருவிகள் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையிலிருந்து தப்பியவர்கள் உட்பட மனநலப் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக இந்த உதவிகள் வழங்கப்படவுள்ளன.

சவாலான காலத்தை எதிர்கொள்ளும் இலங்கை மக்களுக்கு பிரிட்டன் துணை நிற்பதாக இதன்போது தாரிக் அஹமட் பிரபு குறிப்பிட்டுள்ளார்.

## கணவன், மனைவியை விருந்துக்கு...

சைக்கிளில் சென்று பொருபனபாலத்துக்கருகில் விருந்துக்கு அழைத்த நபருக்காக காத்து நின்றுள்ளனர்.

மற்றொரு மோட்டார் சைக்கிளில் வந்த இருவரில் பின் ஆசனத்தில் நபர் வெட்டுக் கத்தியால் பெண்ணை தாக்கியுள்ளார். அத்துடன் கணவன் மீதும் தாக்கியுள்ளார்.

இதன்போது காயமடைந்த கணவன், மனைவி மற்றும் தாக்குதலை மேற்கொண்ட நபர் மூவரும் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தபோது பலத்த காயமடைந்த பெண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்வெட்டுக்காயங்களுக்குள்ளான 34 வயது பெண் மரணித்துள்ளார். இவர் பொரலஸ்கமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். சந்தேகநபர்கள் இருவரில் ஒருவர் பிரதேசவாசிகளால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் பொரலஸ்கமுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்கள்.

## அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக...

நீதிவான் நீதிமன்றம், சட்ட மாஅதிபர் திணைக்களத்தை அண்மித்த பிரதேசம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, கடற்படை தலைமையகம், பொலிஸ் தலைமையகத்தை அண்மித்த பகுதிகள், அகுரகொட பாதுகாப்பு அமைச்சு, இராணுவ தலைமையகம், விமானப் படை தலைமையகம், பிரதமர் அலுவலகம், அலரி மாளிகை, பாதுகாப்பு செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளின் வீடுகள் அமைந்துள்ள பிரதேசங்கள் என்பன அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக பெயரிடப்பட்டுள்ளன. ஜனாதிபதியால் விடுக்கப்பட்டுள்ள இந்த கட்டளையை செயற்படுத்தும் அதிகாரியாக பாதுகாப்பு செயலாளர் செயற்படுவார்.

அதற்கமைய எந்தவொரு விசேட சந்தர்ப்பத்திலும் அல்லது தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமைகளுக்கமைய, குறிப்பிடப்பட்ட அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் ஏதேனும் நடவடிக்கையைக் கட்டுப்படுத்துவதற்குரிய தகுதி வாய்ந்த அதிகாரியால் ஏற்பாடுகள் மேற்கொள்ள முடியும். இந்த அதிகாரியால் கட்டளைகளை முறையாக செயற்படுத்துவதற்காக காலத்துக்கு காலம் தேவைப்படக் கூடிய கட்டளைகளைப் பிறப்பிக்க முடியும். இவ்வாறு கட்டளைகள் பிறப்பிக்கப்படும் போது அதற்கு இணங்க செயற்பட வேண்டியது அனைவரதும் கடமையாகும் என்று வர்த்தமானி அறிவித்தலில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பொலிஸ் மாஅதிபர் அல்லது மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் மாஅதிபரின் எழுத்து மூலமான முன் அனுமதியைப் பெறாமல் எந்தவொரு நபராலும் அதியுயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஏதேனும் வீதியில் , மைதானத்தில் , கடற்கரையில் அல்லது வேறு திறந்த இடத்தில் எந்தவொரு வகையான ஊர்வலம் அல்லது பொதுக்கூட்டத்தை நடத்தக் கூடாதென்றும் வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிஉயர் பாதுகாப்பு வலயத்தில் உரிய அதிகாரியின் அனுமதியின்றி தற்காலி அல்லது நிரந்தர கட்டுமானங்களையோ, அகழ்வுகளையோ முன்னெடுக்க முடியாது என்றும் வர்த்தமானி அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வன பாதுகாப்பு வலயங்களாக....

ன் சாம்பல் தீவு, வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தில் நாயாறு, நந்திக்கடல் உள்ளிட்ட பிரதேசங்களே வன பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மக்கள் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக நாயாறு மற்றும் நந்திக்கடல் குளங்கள் மாசுபடுவதாகவும் கழிவுகளால் குளங்கள் நிரம்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், அந்த வகையில் சதுப்பு நிலங்கள் மற்றும் குளம் சார்ந்த உயிரினங்கள் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இத்தகைய சூழ்நிலையில் மேற்படி பகுதிகளை பாதுகாக்கும் வகையில் நிலைமையை ஆய்வு செய்வதற்காக விசேட குழு ஒன்றை நியமிக்க வுள்ளதாகவும் தெரிவித்துள்ள அமைச்சர், அக் குழுவிடமிருந்து இரண்டு வாரங்களுக்குள் அறிக்கை பெற்றுக் கொள்ளப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் மக்கள் எதிர்நோக்கும்...

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடமாகாண அனைத்து மாவட்டங்களினதும் செயலாளர்கள் மற்றும் ஜனாதிபதியின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு, பதிவாளர் நாயகத் திணைக்களம், ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம், இழப்பீட்டு அலுவலக பிரதிநிதிகள் இந்த குழுவில் அடங்குவர்.

மோதல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான இழப்பீட்டு அலுவலகம் 2018 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க இழப்பீட்டு அலுவலகச் சட்டத்திற்கமைய நிறுவப்பட்டுள்ளது. இந்த அலுவலகத்திற்கூடாக அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்.

இச்செயற்பாட்டை இலகுபடுத்தும் வகையில் நீதி அமைச்சரின் ஆலோசனைக்கு அமைய அவ்வாறான தகவல்களை சேகரிப்பதற்காக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அலுவலகத்திலும் பிரிவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட குழுவின் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் நடைபெற்றதோடு அதில் இணைந்து கொண்ட இழப்பீடு அலுவலக பணிப்பாளர் நாயகம் நசிமா அஹமட் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் குழுக் கூட்டத்தில், அகதிகள் எதிர்கொள்ளும் முக்கியப்பிரச்சிகளானகுடியுரிமை பெறுவதில் உள்ள தாமதம், பிறப்பு, திருமணச் சான்றிதழ்கள் பெறுவதில் ஏற்படும் தாமதம், நாடு திரும்பும்போது விதிக்கப்படும் அபராதம், மீண்டும் காணிகளை வழங்கல் உள்ளிட்ட பல்வேறு பிரதான விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. வெளிநாட்டுப் பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கான (அகதிகளான பெற்றோரின் குழந்தைகள்) உரிமைகள் மற்றும் போதிய வேலை வாய்ப்புகள் கிடைக்காமை மற்றும் இந்திய நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட அங்கீகாரத் தகுதிகள் தொடர்பான பிரச்சினைகள் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பிற சேவைகளை அணுகக்கூடிய வகையில் செயல்முறையை விரைவுபடுத்துவதற்கும் இலங்கை குடியுரிமையை பெற்றுக்கொள்வதை உறுதிசெய்யக் கூடிய அனைத்து இடங்களிலும் எளிய பொறிமுறையை உருவாக்கவும் இதன்போது இணக்கம் காணப்பட்டது.

ஆவணங்கள் தொடர்பான ஆதரவை வழங்குவதற்காக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் இணைந்து எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வடமாகாணத்தில் நடமாடும் முகாம் ஒன்றையும் ஏற்பாடு செய்வதற்கும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் கொழும்பிலுள்ள பிரதான அலுவலகங்களால் தற்போது கையாளப்படும் குடியுரிமை பெறுவது தொடர்பான ஆவணங்களை மாவட்ட செயலக மட்டத்தில் ஏற்றுக்கொள்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.

இந்தியாவிலிருந்து ஏற்கனவே வருகை தந்துள்ள இலங்கை அகதிகள் தொடர்பான நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து கலந்துரையாடவும் எதிர்காலத்தில் நாட்டுக்கு வருகை தர விரும்பும் அகதிகளை அழைத்து வரும் செயல்முறையை எளிதாக்குவது தொடர்பில் ஆராயவும் இக்குழு தொடர்ந்தும் கூடும் என்பது குறிப்பிடத்தக்கது.

## ருமேனியாவிலிருந்து இத்தாலிக்கு...

எனினும் அவர்கள், இலங்கையின் எந்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்பது தொடர்பாக தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

முதலாவது சம்பவத்தில், இத்தாலிக்கு குளிர்சாதனப் பெட்டிகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தியில் இருந்து 35 பேர் கைதுசெய்யப்பட்டனர். ஹங்கேரி மேற்கு எல்லையில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரம் போலந்துக்கு குளிர்சாதனப் பெட்டிகளை ஏற்றிச்சென்ற இரண்டாவது பாரவூர்தியில் மறைந்திருந்த நிலையில் 20 துருக்கியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மூன்றாவது பாரவூர்தி, வாகன உதிரிபாகங்களை ஏற்றிக்கொண்டு இத்தாலிக்கு பயணித்த போது அதில் இருந்து 15 பங்களாதேஷ் மற்றும் எத்தியோப்பியர்கள் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்க தூதுவர் மெக்கெய்ன்...

உணவு உதவித் திட்டங்களை கவனம் செலுத்துவதற்காகவும், இலங்கையின் நலன்கள் தொடர்பில் அமெரிக்கா கொண்டுள்ள உறுதிப்பாடு மற்றும் இலங்கையுடனான நீடித்த பங்காண்மை ஆகியவற்றை மீளவலியுறுத்துவதற்காகவுமே இவர் இலங்கை வரவுள்ளதாக தூதரகம் அறிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் உதவி நிறுவனங்களைச் சந்திப்பதற்கு மேலதிகமாக, தூதுவர் மெக்கெய்ன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்குடன் இணைந்து மத்திய மாகாணத்திலுள்ள பாடசாலைகள், விவசாய ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் சமூக அமைப்புகளுக்கு விஜயம் செய்து அமெரிக்க அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட மனிதாபிமான உதவித் திட்டங்கள் ஊடாக நிவாரணம் பெற்றவர்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துபவர்களுடன் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

அமெரிக்கா, உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் (IFAD) மற்றும் உலக உணவுத் திட்டம் (WFP) ஆகிய ஐக்கிய நாடுகளின் மூன்று உணவு மற்றும் விவசாய நிறுவனங்களுக்கு நிதியளிக்கும் மிகப்பெரிய தனிநாட்டு நன்கொடையாளராகும். அமெரிக்காவினால் நிதியளிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் செயற்திட்டங்கள், குறிப்பாக உலகளவில் பட்டினி அதிகரித்துள்ள இந்த நெருக்கடியான நேரத்தில், உணவுப் பாதுகாப்பின்மையைக் குறைப்பதற்கும், மனிதாபிமான நிவாரணம், வாழ்வாதாரப் பாதுகாப்பு மற்றும் விவசாயம் சார்ந்த பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை முன்னேற்றுவதற்கும், அமெரிக்க அரசாங்கம், ஐ.நா உணவு மற்றும் விவசாய முகவரமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கம் என்பன எவ்வாறு இணைந்து பணியாற்றுகின்றன.

அமெரிக்கா, இலங்கை மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் 70 வருடங்களுக்கும் மேலாக பங்காண்மையையும் உதவிகளையும் வழங்கியுள்ளது. இலங்கை விவசாயிகளுக்கு உரம் வழங்குவதற்காக மேலதிக 40 மில்லியன் டொலர்கள் மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள உடனடி மனிதாபிமான தேவைகளை பூர்த்தி செய்வதற்காக 20 மில்லியன் டொலர்கள் போன்ற சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரமைப்பின் (USAID) நிர்வாகி சமந்தா பவர் செப்டம்பர் மாதத்தில் மேற்கொண்ட அறிவிப்புக்கள் உட்பட, ஜூன் மாதம் முதல், இலங்கைக்கான அமெரிக்க அரசாங்கத்தின் புதிய உதவிகளாக கிட்டத்தட்ட 240 மில்லியன் டொலர்கள் அறிவிக்கப்படுவதை தூதுவர் சங் கண்காணித்து வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை பொருளாதார நெருக்கடிக்கு...

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 77 ஆவது கூட்டத்தொடர் கடந்த 13 ஆம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆரம்பமான நிலையில், பொதுச்சபை அமர்வின் உயர்மட்ட விவாதம் கடந்த செவ்வாய்க்கிழமை (20) ஆரம்பமானது.

அதில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் சென்றிருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அங்கு பொதுச்சபை அமர்வில் உரையாற்றியதுடன் மேலும் பல முக்கிய உயர்மட்ட சந்திப்புக்களிலும் பங்கேற்றிருக்கின்றார்.

அதற்கமைய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இராப்போசன விருந்துபசார நிகழ்வில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, அங்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் மற்றும் அவரது பாரியார் ஜில் பைடன் ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் இலங்கைக்கு அமெரிக்கா தொடர்ந்து உதவும் என்றும், சுதந்திரமானதும் சுபீட்சமானதுமான பிராந்தியத்தை உறுதிசெய்வதற்குத் தாம் ஒன்றிணைந்து பணியாற்றத்தயாராக இருப்பதாகவும் அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தின் அரசியல் விவகாரங்களுக்கான வெளியுறவுத்துறை செயலர் விக்டோரியா நூலண்ட் அமைச்சர் அலி சப்ரியிடம் உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

# யுத்தக் குற்றவியல் நீதிமன்றம் உடனடிச் சாத்தியமற்றது


சி.வி.கே

**ஜெனிவா மனித உரிமை மாநாடு நடைபெற்று வருகின்ற நிலையில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாடுகள் பற்றி சில பிரதிநிதிகள் இவ்வாறு சொல்கிறார்கள்.....**


சிவாஜிலிங்கம்


சித்தார்த்தன்


க. சுஹாஸ்

புளொட் அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கடந்த கால தீர்மானம் அல்லது இனி வரப்போகும் தீர்மானம் என எந்த தீர்மானமாக இருந்தாலும், எதுவும் நடக்கப்போவதில்லை.

நல்லாட்சி அரசாங்கம் இணை அனுசரணையை ஏற்றுக் கொண்டது. ஆனாலும் ஐ.நா பரிந்துரைகளை நிறைவேற்றவில்லை. முழுமையாக எதிர்த்த அரசாங்கங்களும் அதை செய்யவில்லை. இருந்தாலும், சில வேளைகளில் கடுமையான ஒரு தீர்மானம் வரும் என எதிர்பார்க்காவிட்டாலும், தீர்மானம் கொண்டுவரப்படும். தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் அல்லது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இது ஒரு பேசு பொருளாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். போர்க்குற்றங்களாக இருக்கலாம், இனப்பிரச்சினை தீர்வாக இருக்கலாம், எதுவாக இருந்தாலும், சர்வதேசத்தின் மத்தியிலும், தமிழ் மக்கள் மத்தியிலும் தொடர்ந்தும் பேசு பொருளாக அது இருக்க வேண்டும், சரியான ஒரு சந்தர்ப்பம் வருகின்ற போது, ஒரு நியாயமான தீர்வை பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் தான் இதை பேசு பொருளாக வைத்திருக்கின்றோம்.

அடிப்படையாக பேரினவாத சிந்தனைகள் இருந்தாலும், நாங்கள் பேசாமல் இருக்க முடியாது. நாங்கள் தொடர்ந்தும் எங்கள் அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

நாங்கள் பேசாமல் இருந்திருந்தால், இது என்றைக்கோ மறக்கடிக்கப்பட்ட பிரச்சினையாகப் போயிருக்கும். ஆகையால், தமிழ் தேசிய பரப்பில் உள்ள கட்சிகள் தங்களால் முடிந்த முயற்சிகளை எடுத்து வருக்கின்றன.

அரசாங்கத்தை மறைமுகமாகவோ, நேரடியாகவோ ஆதரிக்கின்ற கட்சிகள் அவ்வாறு பிரச்சினை இல்லையென்று சொல்வார்கள். அது அனைத்து நாடுகளிலும் நடக்கின்ற பிரச்சினை. ஆனால், போர்க்குற்றங்கள் மற்றும் இனப்பிரச்சினை தீர்வு விடயங்கள் தொடர்பாக பேசுவதனால் தான் தமிழ் மக்கள் தமிழ் தேசிய கட்சிகளை ஆதரிக்கின்றனர். இது எமது கடமை, அதற்காகத்தான் அவர்கள் எங்களுக்கு ஆணையைத் தருகின்றார்கள் .

**முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்**

தமிழ் மக்களுக்கெதிரான நடவடிக்கைகள் சுதந்திரம் கிடைத்த காலம் தொட்டே ஆரம்பித்து விட்டன. 10 லட்சம் மலையக மக்களின் குடியுரிமையை பறித்தால் என்ன, எமது நிலங்களை ஆக்கிரமிப்பு செய்த விடயங்களாக இருந்தாலென்ன, சர்வதேச நீதி எங்களுக்கு வேண்டும் என்ற குரல் பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்களாலும், தாயகத்தில் இருந்த எமது புலம்பெயர் அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்டன.

ஆனால், துரதிர்ஷ்டவசமாக இற்றைக்கு 13 ஆண்டுகள் கடந்தும், சர்வதேச பொறிமுறைக்கு கீழான விசாரணை இதுவரை ஆரம்பிக்காத சூழ்நிலையிலும் கூட அதை நோக்கிய பயணத்தில் நாங்கள் வெற்றிகரமாக நடை போடுகின்றோம்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் மற்றும் முன்னாள் முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் இணைந்து அனுப்பிய அறிக்கையின் பின்னரும் வெற்றி பெறவில்லை. நாங்கள் பல்வேறு அழுத்தங்கள் மிரட்டல்களுக்கு மத்தியில் எமது சாட்சியங்களை வழங்கியது மாத்திரமல்ல பலரின் சாட்சியங்களை அனுப்புவதிலும் வெற்றியைக் கண்டோம்.

இந்த சூழ்நிலையில், வடகிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள் கையொப்பமிட்டு விசாரணை அறிக்கை அனுப்பியிருந்தோம். அதுவும் வெற்றியளித்தது. சர்வதேச விசாரணை வர இருந்த நேரத்தில் தான் இலங்கை இணை அனுசரணை செய்வதாக, அதாவது வெளிநாட்டு நீதிபதிகளுடன் உள்நாட்டு விசாரணை என்று ஏற்றுக்கொண்டார்கள்.

அதன் பின்னர், கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த பொழுது முழுமையாக அதிலிருந்து வெளியேறுவதாக சொன்ன இலங்கை அரசு, தற்பொழுது ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக இருக்கின்ற நிலையில் உள்நாட்டு பொறிமுறை என்று பேசத் தொடங்கிவிட்டது.

பாதுகாப்புச் சபையின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற இறுக்கமான நிலைப்பாட்டை அறிவிக்கும் வாய்ப்பு இந்த 51வது கூட்டத்தொடரில் இருந்தாலும் கூட, அடுத்த மார்ச் மாதம் தான், 52வது கூட்டத் தொடரில் தான் ஐ.நா மனித உரிமை பேரவையின் உயர்ஸ்தானிகர் இறுதியான அறிக்கையை வெளியிடுவார்.

தமிழ் கட்சிகள் தமிழ் மக்களை ஏமாற்றவில்லை. பிரதான கட்சிகள் மூன்று இணைந்து, சாட்சியங்களை சேகரிக்கின்ற பொதுச் சபை ஒன்று நிறுவப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தன. அந்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மியான்மார் நாட்டில் நடைபெற்றதைப் போன்று, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையினால் செய்யப்படாவிட்டாலும் கூட, சாட்சியங்களை 20 வருடங்களுக்கு சேகரித்து வைத்து, விசாரணைக்கு வழங்கக்கூடிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன. வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

**தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் க. சுஹாஸ்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு சிபார்சுகளை மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்ற அதிகாரம் இருக்கின்றதே தவிர, விசாரணைகளை நடத்தி தண்டனைகள் வழங்குகின்ற அதிகாரம் கிடையாது. இதனைத் தான் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம். மனித உரிமை பேரவைக்குள் பொறுப்புக்கூறலை முடக்கி, இலங்கை அரசாங்கத்திற்கு கால அவகாசத்தைக் கொடுத்து, இலங்கை அரசையும் படைகளையும் தொடர்ச்சியாக பாதுகாத்து, பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு கிடைக்கக்கூடிய நீதியை இன்னமும் தள்ளிப் போடாமல் உடனடியாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்த வேண்டும் என்பதே எமது கோரிக்கை.

இலங்கை அரசை காப்பாற்றியவர்கள், இலங்கை அரசுடன் இணைந்து நிற்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் கட்சிகளுமே, ஆரம்பத்தில் இருந்து தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைக்கு தீர்வு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, நீதி வழங்க வேண்டும் என கூறிய போது, தமிழ் தேசிய கூட்டமைப்பும் அதன் பங்காளி கட்சிகளும் சொன்ன விடயங்கள் யாதெனில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்ப முடியாது. தமிழ் தேசிய மக்கள் முன்னணி அவ்வாறு சொல்லி தமிழ் மக்களை ஏமாற்றுகின்றது என்றார்கள். அவர்கள் அவ்வாறு மக்களை ஏமாற்றினார்கள். இன்று உண்மைகள் எல்லாம் மக்களுக்கு தெரியத்தொடங்கிய பிற்பாடு, மக்கள் தங்களை முற்றிலும் நிராகரித்துவிடுவார்களோ என்ற அச்சத்தில், தமிழ் தேசிய மக்கள் முன்னணி வலியுறுத்திய விடயத்தை பெயரளவில் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானங்களை வரவேற்று தமிழ் தேசிய கூட்டமைப்பு தான் செயற்பட்டிருக்கின்றது. இலங்கை அரசாங்கத்தை காப்பாற்றியிருக்கின்றது. உள்நாட்டிலே, ஒற்றையாட்சிக்குள்ளும், 13 வது திருத்தத்திற்குள்ளும் தீர்வை ஏற்படுத்த அவர்கள் ஏற்கனவே சம்மதத்தை அரசாங்கத்திற்கும், சர்வதேசத்திற்கும் தெரிவித்துவிட்டார்கள். தமிழ் தேசிய கூட்டமைப்பு இனத்தை அழிப்பதற்கான வேலைகளை செய்துவிட்டு, நாடகமாடுகிறார்கள். இந்த நாடகத்தை தமிழ் மக்கள் இனியும் நம்ப தயாராக இல்லை .

**சீ.வி.கே.சிவஞானம்**

**வடமாகாண சபை அவைத் தலைவர்**

வாய்மூல அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன. அதில் போர்க்குற்றங்கள், பொருளாதார குற்றங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. போர்க்குற்ற விசாரணையை சர்வதேச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லக் கூடாது என்று சொல்லவில்லை. உடனடியாக கொண்டு செல்லலாம் என்று மக்களை ஏமாற்றவும் இல்லை. 41/1 தீர்மானத்தில் இருந்து விலகுவதாக பிரதமர் தினேஷ் குணவர்தன அறிவித்துவிட்டார். அரசாங்கம் சொல்லிக்கொண்டு தான் இருக்கும். நாங்களும் பேசிக்கொண்டு தான் இருப்போம். சர்வதேசமும் அதை விவாதித்துக்கொண்டு தான் இருக்கும். ஆகவே, இலங்கை அரசாங்கத்தின் அமைச்சர்கள் சொல்கிறார்கள் என்பதற்காக அல்ல இந்த விடயம். மாற்றங்கள் ஏற்படும். பல படிமுறைகளில் இந்த விடயங்கள் கையாளப்படும். பல நாடுகளில் உள்ள எமது புலம்பெயர் மக்கள் தமது நாட்டு அரசாங்கங்களும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். 52வது தீர்மானத்தில் இவை நடக்கும் என்று சொல்ல நான் தயாராக இல்லை. 51வது தீர்மானத்தில் மாற்றங்கள் வரும் போது தான், அவை அமையலாம். முன்னேற்றங்கள் ஏற்படலாம். மாற்றங்கள் ஏற்படலாம். எமது கட்சிகளில் பிரச்சினைகள் உள்ளன.. அவை என்றுமே மாறப்போவதில்லை. வேறுபாடுகள் இருந்துகொண்டே இருக்கும். ஆனால் இலக்கை நோக்கிய பயணத்தில் தமிழ் கட்சிகள் ஒற்றுமையாகத் தான் இருக்கின்றன.

**சுமித்தி தங்கராசா ...**

# இம்ரானின் மீட்சி அரியணை ஏற்றுமா?

செல்வாக்குமிக்க அரசியல் தலைவர்களை சூழ்நிலைக் கைதியாக்கும் அரசியல் காய்நகர்த்தல்கள், காலச்சுழற்சியில் ஒவ்வொருவரையும் சிக்க வைப்பதுண்டு. ஆசிய நாடுகளில், பாகிஸ்தானில்தான் இந்தச்சிக்கல்கள் அதிகம். இதுபோன்ற சிக்கலுக்குள் மாட்டிய பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் அதிலிருந்து மீண்டுள்ளார். இந்த மீட்சி அவரை மீண்டும் அரியணை ஏற்றலாம்.

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது அரச தரப்பு சுமத்திய குற்றச்சாட்டை நீதிமன்றம் நிராகரித்துள்ளது. எந்தவொரு பயங்கரவாத நோக்குகளிலும் இம்ரான்கானின் உரை உள்ளடங்கவில்லை என கடந்த திங்கட்கிழமை (19) நீதிமன்றம் தீர்ப்பளித்தது. பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் இம்ரான்கான், ஓகஸ்ட் 20 இல் நடந்த கூட்டத்தில் பொலிஸார், அரச அதிகாரிகள் மற்றும் சட்டத்துறை சார்ந்தோரை கடுமையாக விமர்சித்து உரையாற்றினார்.

அவர், பதவி கவிழ்க்கப்படுவதற்கு மறைமுக உதவியாகச் செயற்பட்ட அதிகாரிகளை குறிவைத்தே அந்த உரையிருந்தது. இந்த உரை, வன்முறையைத் தூண்டி பயங்கரவாதத்தை ஊக்குவிப்பதாக அரசாங்க தரப்பு குற்றம் சுமத்தி இம்ரானுக்கு எதிராக வழக்குத்தொடுத்தது.

நாடு முழுவதும் தனக்கு ஆதரவுகள் அதிகரித்து வரும் நிலையில், நாடளாவிய ரீதியில் கூட்டங்களை நடாத்தி வரும் இம்ரான்கான் பொதுத்தேர்தலை நடாத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தி வருகிறார். இவரது முயற்சிகளை தடுக்கும் நோக்குடனே, பிரதமர் ஷெபாப் ஷெரீப் தலைமையிலான அரசாங்கம் இந்த வழக்கைத் தாக்கல் செய்ததாக இம்ரான்கான் கூறுகிறார். இந்நிலையில்,

நீதிமன்றத்தின் இத்தீர்ப்பு இம்ரானின் அரசியல் செயற்பாடுகளுக்கு உற்சாகமளிக்குமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். இந்து சமுத்திர அரசியலில் சீனா, இந்தியாவுக்கு அடுத்து பாகிஸ்தானின் வகிபாகமும் தவிர்க்க முடியாதது. பொருளாதார மற்றும் இராணுவ ரீதியாக மேற்சொன்னநாடுகளுடன்மோதுவதிலும்பார்க்க, மறைமுக நெருக்குதல் யுக்திகளை கையாண்டுதான் பாகிஸ்தான் முன்னேற முயல்கிறது. இதுதான், பலரது பார்வையும். வெ ளி நாடுகளின் இந்தப்பார்வை களுக்கு பலமூட்டும் வகையில்தான், இம்ரானுக்கு எதிரான வழக்கும் சோடிக்கப்பட்டிருந்தது.

அல்கைதா, தலிபான் மற்றும் லக்ஷர் இதொய்பா போன்ற அமைப்புக்களின் செயற்பாடுகளுக்கு தூபமிடும் கருத்துக்களை வெளியிட்டார் என்பதுதான் குற்றம். எனினும் வெளிநாடுகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாத அரசாங்கமே பாகிஸ்தானில் அமைய வேண்டும் என்ற பொருள்தான் இம்ரானின் உரையிருந்தது. எவ்வாறாயினும் அந்நிய சக்திகளுக்கு அடிபணியும் அரசை இப்பிராந்தியத்திலுள்ள தலிபான்கள், அல்கைதா உள்ளிட்ட எந்த அமைப்புக்களும் ஏற்றுக்கொள்ளாது.

அவ்வாறு அமைந்தாலும், அந்த அரசாங்கத்தை அச்சுறுத்தும் வகையிலான வன்முறைகளில் இந்த அமைப்புக்கள் ஈடுபடும். இதனால்தான், இந்த அமைப்புக்கள் அடிப்படைவாத இயக்கங்களாக முத்திரை குத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு நிகழ்வது பாகிஸ்தானில் உள்நாட்டு யுத்தத்தை ஏற்படுத்துமென பாகிஸ்தான் மக்கள் அஞ்சுவதுண்டு. எனவே, பாகிஸ்தானியரை உளரீதியாக அச்சுறுத்தி ஆதரவு தேடும் அரசியல் யுக்தியை இம்ரான்கான் கையாண் டிருக்கலாம். அதற்காக, இது பயங்கரவாதத்தை தூண்டியதாக பொருள் கொள்ள முடியாது. நீதிமன்றமும் இவ்வாறு தான் கருதியிருக்கும்.

இருப்பினும், தேவையேற்படும்போது இந்த அமைப்புக்களை பாகிஸ்தான் பயன்படுத்துவதாகவே

மேற்குலகம் கருதுகிறது. அயல்நாடுகளின் நிலைப்பாடுகளும் இதுதான்.

இவற்றை நிரூபிக்கும் வகையில் சில செயற்பாடுகள் அங்கு நடந்துமிருக்கின்றன.

இதனால், சர்வதேச அரங்கிலிருந்து தனிமைப்படும் ஆபத்துக்களை பல தடவைகள் எதிர்கொண்டது பாகிஸ்தான். முன்னாள் ஜனாதிபதி முஷர்ரஃப்தான் இந்த ஆபத்திலிருந்து பாகிஸ்தானை காப்பாற்றிய முக்கிய அரசியல்வாதி. அல்கைதா தலைவர் ஒஸாமா பின்லேடன் கொல்லப்பட்டதும் பாகிஸ்தானில்தானே! பத்து வருடங்கள் அங்குள்ள அப்போட்டாபாத் என்ற ஊரில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்தவர் ஒஸாமா. இக்காலத்தில் பாகிஸ்தான் ஜனாதிபதியாக இருந்தவர் முஷர்ரஃப். ஆனாலும் அப்போதைய பாகிஸ்தான் இராணுவத் தளபதி அஷ்பக்கயா னி அல்கைதா தலைவருடன் இரகசிய உறவில் இருந்ததாக பேசப்பட்டதும் உண்டு. இருந்தாலும், இவரையும் மீறித்தான் அமெரிக்க யுத்த விமானங்கள் பின்லேடனை குறிவைத்தன. இதற்கு முஷர்ரஃப் மறைமுக உதவியாகச் செயற்பட்டிருந்தார். தனது இராணுவத் தளபதியை நேரடியாகப் பகைப்பதிலுள்ள ஆபத்துக்களை உணர்ந்த முஷர்ரஃப் இதைக் கச்சிதமாக செய்துள்ளார். இராணுவ தளபதிகளை பகைப்பதிலுள்ள ஆபத்துக்களை பல தடவைகள் நிரூபித்துள்ள நாடும் பாகிஸ்தான்தான். பல பிரதமர்கள் பதவியிறக்கப்பட்டதும் இராணுவ தளபதிகளால்தான். இம்ரானின் பதவி கவிழ்ப்பிலும் ஏதாவதொரு இராணுவ தலையீடு இருந்திருக்கலாம். இதைச்சாடியே இம்ரான் உரையாற்றினார். இந்த உரைகளுக்கு வரவேற்பு இருந்ததால்தான், பஞ்சாப் மாநில தேர்தலில் இம்ரானின் கட்சி அதிக ஆசனங்களை கைப்பற்ற முடிந்தது. இந்த வெற்றிக்கு மேலும் பலம் சேர்க்கும் வகையில் நீதிமன்றத் தீர்ப்பு உள்ளமை கவனிக்கத்தக்கது. இம்ரானின் இம்மீட்சி அரியணை ஏற்றுமா?



**ஏ,ஜீ,எம்,தௌபீக் ...**

# இன்னும் பொழியாதா என எதிர்பார்க்கவைத்த கலைக்கமலின் "கீத்ராத் 56" இசை மழை



அந்த இனிய இசை மாலைப்பொழுது இன்னும் இதயத்தில் இனித்துக்கொண்டிருக்கிறது. ஒரு கல்லில் நான்கு கனிகள் கிடைத்த, சுவைத்த மகிழ்ச்சி எனக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் தான். ஜனரஞ்சக பாடகர் கலைஞர் கலைக்கமலின் 'கீத்ராத் 56'....

இசைமுரசு நாகூர் ஹனிபா, முஹம்மது ராபி, டி.எம்.எஸ்., எஸ்.பி.பி. என உலக பாடகர்கள் மேடையில் உலாவந்தனர். ரசிகர்கள் ஓர் அதிசயத்தை வியந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். நான்கு பாடகர்களின் குரல் வளம் எப்படி 50, 60, 70, 80 வயதுகளில் சற்றும் மாறாமல் மார்க்கண்டேய நிலையில் இருந்ததோ அதேபோல.... சுமார் 60 வயதிலும் பாடகர் கலைக்கமலின் குரலினிமை, 20 வயதுக்காரரைப்போல அருள்மழையில் தொடங்கி 'எங்கே நிம்மதி', 'மனம் என்னும் மேடை' இறுதிப் பாடல் வரை அதே கம்பீரம். உச்சம் ஆச்சரியம் இறையருள் பெற்ற குரல் என்றே என்னால் இங்கு மறைக்காமல் உரைக்க முடியும். இரவு 7.30 மணிக்குத் தொடங்கி 10.30 மணி வரை இடைவேளை இல்லாமல் பாடல் அமுதம் பொழிந்தது. தினகரன்/ தினகரன் வாரமஞ்சரி பிரதம ஆசிரியர் தலைமை தாங்க இரு பெண்மணிகள் முன்னிலை வகித்த ஸைட் சிவாஜி மௌலானா பிரதம அதிதியாயிருக்க பிரபல சட்டத்தரணி ருஷ்தி ஹபீப், முன்னாள் எம். பி. சபீக் ரஜாப்தீன், நுவரெலியா மாவட்ட ஐ.தே.க. இணைப்பாளர் சண்முகம் திருச்செல்வம், கவிஞர் நஜ்முல் ஹுசைன் தம்பதியர், 'பாரம்பரியம்' ஜின்னா தம்பதியர், கவிஞர் ஹஸீர் ரவூப் தம்பதியர், கலைஞர் மஹ்தி ஹஸன் இப்றாஹிம், எழுத்தாளர் மொழிவாணன், உவைஸ் ஷெரீப் எனக் கலைஞர்களும் கலந்துகொண்டனர். இதற்கு முன்னர் இல்லாத அளவு இசை அட்டகாசம். தபேலா கலைஞர் கண்ணாவை விசேடமாக குறிப்பிடலாம் பாராட்டலாம்.

**நித்திரை மறந்து பத்தரை வரை அசையாத ரசிகர்கள்!**

'பாரம்பரியம்' ஜின்னாஹ், தெஹிவளை நகரசபை உறுப்பினர் ஷரீனா, ஸைட் சிவாஜி மௌலானா ஆகியோரை விழா நாயகன் கலைக்கமல் கௌரவித்தார்.

அமீர்கானின் நிகழ்ச்சித் தொகுப்பும், கலா பூஷணம் உடைத் மஹ்தூம் சிங்களப் பாடலும் அருமை. பத்தரை மணியாகியும் நித்திரை மறந்து கலைக்கமல் மொறின் ஜெனட் பாடலில் மெய்மறந்து போனோம்..

**ஏ.ஆர்.எம். முஸம்மில் ...**
(சமாதான நீதிவான்)
ஹுணுப்பிட்டிய

**நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாண அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது. இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு ஸ்திரமான அரசியல் சூழலொன்று காணப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.**



# பாராளுமன்றத்தைப் பலப்படுத்தும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள்!



## பிரதமர் தினேஷ் குணவர்த்தனவால் முன்மொழியப்பட்ட தேசியப் பேரவை அமைக்கும் தீர்மானம் சபையில் எதிர்ப்பின்றி நிறைவேற்றம்!

எதிர்காலத்தில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்படும் போது பாராளுமன்றத்தின் இணக்கப்பாட்டுடனும், அனைத்துக் கட்சிகளின் பங்களிப்புடனும் அது மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதில் தற்பொழுது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன் ஒரு அங்கமாக பிரதமர் தினேஷ் குணவர்த்தனவினால் முன்மொழியப்பட்ட தேசியப் பேரவை அமைக்கும் தீர்மானம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. கடந்த 20 ஆம் திகதி இந்தத் தீர்மானம் பாராளுமன்றத்தில் எதிர்ப்பு இன்றி நிறைவேற்றப்பட்டிருந்தது.

பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாக 35 பேரைக் கொண்ட தேசியப் பேரவையை அமைப்பதற்கு கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்திருந்தனர். பிரதமர் தலைமையில் நடைபெற்ற மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் இதற்கான இணக்கப்பாடு எட்டப்பட்டு இந்தத் தீர்மானம் தற்பொழுது பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டும் உள்ளது.

குறுகிய, நடுத்தர மற்றும் நீண்டகால தேசியக் கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளைத் தீர்மானிப்பது, பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பாக குறுகிய மற்றும் நடுத்தரகால பொதுவான அதிகுறைந்த நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய உடன்பாட்டிற்கு வருவது, அமைச்சரவை அமைச்சர்கள், தேசியப் பேரவை, விசேட குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் இளைஞர் அமைப்புக்களின் இளைஞர் அவதானிப்பாளர்கள் ஆகியோருடன் விசேட கூட்டங்களை ஏற்பாடு செய்வது போன்றவை தேசியப் பேரவையின் முக்கிய நோக்கங்களாக அமையும்.

> **சட்டவாக்கம் எனப்படும் பாராளுமன்றம் தன்னைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வது காலத்தின் தேவை. பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவதற்கு தேசியப் பேரவை மிகவும் உறுதுணையாக அமையும்**

அது மாத்திரமன்றி இந்தச் சபையானது துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், அரசாங்க நிதி பற்றிய குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, வங்கித் தொழில் மற்றும் நிதிச் சேவைகள் பற்றிய குழு, வழிவகைகள் பற்றிய குழு, பொருளாதார உறுதிப்படுத்தல் குழு, அத்துடன் அரசாங்கக் கணக்குகளைக் கட்டுப்படுத்தும் ஏதேனும் குழு ஆகியவற்றிலிருந்து அறிக்கைகளைக் கோருவதற்கான தத்துவங்களைக் கொண்டிருக்கும்.

தேசிய சபையின் தலைவர் பதவி சபாநாயகருக்கு வழங்கப்பட்டிருப்பதுடன், இதன் உறுப்பினர்களாகப் பிரதமர், பாராளுமன்ற சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், ஆளும் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களால் தீர்மானிக்கப்பட்டவாறு இலங்கையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளிலிருந்து ஒன்பதாவது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற முப்பந்தைந்துக்கும் மேற்படாதோர் உறுப்பினர்களாகக் காணப்படுவர்.

ஜனநாயகத்தின் தூண்கள் என வர்ணிக்கப்படும் நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகியன ஒன்றுக்கொன்று இணைப்புடன் செயற்பட வேண்டும். இவற்றுக்கிடையில் இணைப்புக்கள் காணப்பட்டாலும் ஒவ்வொன்றும் தமது தனித்துவத்தை இழக்காமல் இயங்குவதே நாட்டுக்கு ஆரோக்கியமானதாக அமையும்.

நிறைவேற்று அதிகாரம் எடுக்கும் அனைத்துத் தீர்மானங்களுடனும் சட்டவாக்கம் இணங்கிப் போகவேண்டிய கட்டாய தேவை இல்லை. இருந்தபோதும் சட்டவாக்கம் கூடி எடுக்கின்ற தீர்மானத்துடன் இணங்கிச் செல்ல வேண்டிய கடப்பாடு நிறைவேற்று அதிகாரத்துக்கு உள்ளது. இந்த அடிப்படையில் தற்போதைய நாட்டு நிலைமையை நோக்கினால் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பு பாராளுமன்றத்துக்கு உள்ளது.

எனவே, சட்டவாக்கம் எனப்படும் பாராளுமன்றம் தன்னைப் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுப்பது காலத்தின் தேவையாகும். பாராளுமன்றத்தைப் பொறுத்த வரையில் சட்டவாக்கம், நிதி முகாமைத்துவம், மேற்பார்வை போன்றவை பிரதான செயற்பாடுகளாகும். இதில் மேற்பார்வை அல்லது கண்காணிப்புப் பணிகளைப் பாராளுமன்றத்தில் உள்ள பல்வேறு குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வாறான பின்னணியில் தேசிய பேரவை இதனைப் பலப்படுத்துவதற்கான மற்றுமொரு நடைமுறையாகக் கருதப்படுகிறது.

நாட்டின் எதிர்காலத்தை நோக்கி எடுக்கப்படும் தீர்மானங்கள் கடந்த காலங்களில் ஒரு சிலருடைய தனிப்பட்ட முடிவுகளுக்கு இணங்கி எடுக்கப்பட்டமையால் நாடு எதிர்கொண்டுள்ள நிலைமை நாம் அனைவரும் அறிந்ததொன்று. இந்தத் தவறுகளில் பெற்றுக் கொண்டவற்றைப் பாடமாகக் கருதி, எதிர்காலத்திலாவது இவ்வாறான பிழைகளைத் தவிர்த்துக் கொள்வது இன்றியமையாதது.

அது மாத்திரமன்றி பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் உதவியை நாடியிருப்பதால் கொள்கை ரீதியாக எடுக்கப்படும் தீர்மானங்கள் குறித்து இனிமேலும் அக்கறை செலுத்துவது அவசியம். இதற்குப் பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் கூட்டுப்பொறுப்புடன் செயற்படுவதற்குத் தேசியப் பேரவை மிகவும் உறுதுணையாக இருக்கும்.

> **தேசியக் கொள்கைகளை வகுப்பதற்கான வழிகாட்டுதல்கள் தொடர்பான பாராளுமன்றத்தின் பொதுவான முன்னுரிமைகளை தீர்மானிப்பது, பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பாக நிகழ்ச்சித் திட்டங்கள் பற்றிய உடன்பாட்டுக்கு வருவது போன்றவை தேசியப் பேரவையின் முக்கிய நோக்கங்களாகும்**

இது இவ்விதமிருக்க, பாராளுமன்றத்தைப் பலப்படுத்தும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசாங்கம் திட்டங்களை வகுத்துள்ளது. கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கும் போது பாராளுமன்றத்தின் கடமைப் பொறுப்பை மேலும் அதிகரிக்கச் செய்யும் வகையில் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்த போதும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் இவற்றை இடைநிறுத்தியிருந்தது. இந்த நிலையில் மீண்டும் 17 துறைசார் மேற்பார்வைக் குழுக்களை அமைக்க இணக்கம் காணப்பட்டுள்ளது.

அதாவது, குறிப்பிட்ட விடயம் தொடர்பில் எடுக்கப்படக் கூடிய கொள்கை ரீதியான தீர்மானங்கள் குறித்து இந்தக் குழுக்கள் ஆராயும். இந்தக் குழுக்களின் தலைவர்களாக எந்தவொரு பதவியையும் கொண்டிராத சாதாரண பாராளுமன்ற உறுப்பினர்களே நியமிக்கப்படுவார்கள். ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வேறுபாடின்றி உறுப்பினர்கள் கூட்டுப் பொறுப்புடன் இணைந்து செயற்படுவதற்கான சந்தர்ப்பமாக அமையும்.

உதாரணமாகக் கூறுவதாயின் கல்வி அமைச்சு ஏதாவது ஒரு விடயம் குறித்து முடிவொன்றை எடுப்பதாயின் அது பற்றி முதலில் கல்விசார் மேற்பார்வைக் குழுவில் ஆராய வேண்டும். குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட துறைசார் வல்லுனர்கள் உள்ளிட்ட தரப்பினரை அழைத்து ஆராய்ந்து அறிக்கையொன்றை அக்குழு பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கும்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் அப்போதிருந்த பாதுகாப்புப் பற்றிய துறைசார் மேற்பார்வைக்குழு ஆராய்ந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தது. அதில் தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு முன்வைக்கப்பட்டிருந்த யோசனைகள் அனைத்துத் தரப்பினராலும் வரவேற்பைப் பெற்றிருந்தன. எனவே, இதுபோன்ற குழுக்கள் பாராளுமன்றத்தை மேலும் பலுப்படுத்துவதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

**பி.ஹர்ஷன்...**

---

**இந்தியாவில் 5ஜி அலைவரிசை ஏலம் கடந்த ஓகஸ்ட் மாதம் நிறைவடைந்த நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் 1 ஆம் திகதி இந்திய மொபைல் காங்கிரஸ் நிகழ்வில் 5ஜி சேவையை தொடங்கி வைக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.**



## 5ஜி அலைவரிசை சேவையை ஒக்டோபர் 1 ஆம் திகதி ஆரம்பித்து வைக்கின்றார் பிரதமர் நரேந்திர மோடி

# இந்திய தகவல் தொழில்நுட்பத்துறையின் அடுத்த தலைமுறையை நோக்கிய பாய்ச்சல்!

இந்தியாவில் 5ஜிக்கான ஏலத்துக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அமைச்சரவை குழு ஒப்புதல் வழங்கியிருந்தது. உலகம் முழுவதும் கடந்த 20 ஆண்டுகளில் செல்போன் தொழில்நுட்பம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு வளர்ச்சியடைந்து இருக்கிறது.

5ஜி அலைவரிசை மூலம் சேவைகள் கிடைத்தால் தற்போது நடைமுறையில் உள்ள 4ஜி அலைவரிசையை விட 10 மடங்கு அதிக வேகத்தில் இணையதள வசதிகளும் 3ஜியை விட 30 மடங்கு அதிக வேகத்தில் இணைய வசதிகளும் இந்தியாவுக்குக் கிடைக்கும்.

சென்னை உள்ளிட்ட நகரங்களில் 5ஜி வெற்றிகரமாக சோதனை செய்யப்பட்டது. இந்த நிலையில் கடந்த ஜூலை 26 ஆம் திகதி 5ஜி அலைவரிசைக்கான ஏலம் தொடங்கியது. பார்தி எயார்டெல், ரிலையன்ஸ் ஜியோ, வோடபோன் ஐடியா, அதானி குழுமம் ஆகிய 4 நிறுவனங்கள் இந்த ஏலத்தில் பங்குபெற்றன.

முதல் நாளன்று 4 சுற்றுகளாக 5ஜி ஏலம் நடைபெற்று உள்ளது. இதுவரை நடந்து முடிந்த 40 சுற்று ஏலத்தில் 4 நிறுவனங்களுக்கு இடையே கடும் போட்டி நிலவியதாக மத்திய தொழில்நுட்பத்துறை தெரிவித்து இருந்தது. முதல் நாள் ஏலத்தில் இதுவரை இல்லாத அளவுக்கு ரூ.1.45 இலட்சம் கோடி வரை நிறுவனங்கள் ஏலம் கேட்டன என்றும் இது கடந்த 2015 இல் நடைபெற்ற 4ஜி ஏலத்தின் சாதனையை முறியடித்து இருப்பதாகவும் மத்திய அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

40 ஆவது சுற்று ஏலம் முடிந்துள்ள நிலையில் இதுவரை மொத்தம் ரூ.1,50,173 கோடி ஏலத்தை மத்திய அரசு பெற்று இருக்கிறது. இந்த நிலையில் முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் ஜியோ வெளியிட்ட அறிவிப்பில், இந்தியாவின் மேம்படுத்தப்பட்ட 5ஜி சேவையை வழங்குவதாக தெரிவித்து உள்ளது. 22 சுற்றுகளிலும் தங்கள் நிறுவனமே ஆதிக்கம் செலுத்தியதாகவும், 700MHz, 800MHz, 1800MHz, 3300MHz and 26GHz ஆகிய பேண்டுகளை தங்கள் நிறுவனம் வாங்கியுள்ளதாகவும் இதில் 700MHz பேண்ட் சிறப்பான 5ஜி சேவையை வழங்க உதவும் என்றும் அந்த நிறுவனம் அறிவித்து உள்ளது.




## முகேஷ் அம்பானியின் ரிலையன்ஸ் ஜியோ பொறுப்பேற்கும் மற்றொரு சாதனை!



இந்த நிலையில் இன்னும் ஒரு வாரத்தில் இந்தியாவில் 5ஜி சேவை தொடங்கப்பட இருக்கிறது.

(21ஆம் பக்கம் பார்க்க)

**எஸ்.சாரங்கன்...**

**நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதற்கு புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களின் ஒத்துழைப்பு மீண்டும் ஒருமுறை கோரப்பட்டுள்ளது.**



# தாய்நாட்டை மீளக்கட்டியெழுப்ப புலம்பெயர் உறவுகளுக்கு அழைப்பு!

## தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து சென்று மேற்குலகில் தஞ்சமடைந்து வாழும் இலங்கையர்களை அரவணைக்கும் இதயபூர்வமான முயற்சியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

வார இறுதி
## அரசியல் குறிப்பேடு
சம்யுக்தன்

பிரித்தானியாவின் மறைந்த இரண்டாவது எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்வதற்காக அங்கு சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரிட்டனில் உள்ள புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை முன்வைத்திருந்தார்.

நாட்டில் காணப்படும் முதலீட்டு வாய்ப்புக்களைப் பயன்படுத்தி முதலீடுகளை மேற்கொள்ள வருமாறும், நாட்டைக் கட்டியெழுப்ப ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் அழைப்பு விடுத்திருந்தார்.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களிடம் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் இவ்வாறான கோரிக்கையை விடுக்கும் இரண்டாவது ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க காணப்படுகின்றார்.

இதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களின் ஒத்துழைப்பை வேண்டியிருந்தார். தற்பொழுது நாடு எதிர்கொண்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு உதவக் கூடிய தரப்பினராக வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் காணப்படுகின்றனர். அங்கிருந்து அவர்கள் அனுப்பக் கூடிய ஒவ்வொரு அமெரிக்க டொலரும்





நாட்டின் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு ஒத்துழைப்பாக அமையும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

பிரித்தானியாவில் வாழும் இலங்கையர்கள் மத்தியில் உரையாற்றியிருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிடுகையில், 'வெளிநாட்டில் வாழும் இலங்கையர் தம்மைப் புலம்பெயர் மக்களாக அடையாளப்படுத்துகின்றனர். இந்த நிலையில் புலம்பெயர் அலுவலகமொன்றை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் வெளிவிவகார அமைச்சினால் தொடங்கப்பட்டுள்ளன. இந்த அலுவலகம் ஜனாதிபதி அலுவலகத்தின் கீழ் சில காலம் இருக்கும். அதன் பின்னர் வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டு வரப்படும். இந்த அலுவலகம் வெற்றிபெற வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம்' எனக் கூறியிருந்தார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்த இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தில் இந்த புலம்பெயர் அலுவலகம் அமைக்கும் விடயம் தொடர்பில் ஜனாதிபதி பிரஸ்தாபித்திருந்தார். இதற்கு முன்னரும் இது தொடர்பான கருத்தாடல்கள் இடம்பெற்றிருந்தாலும், இம்முறை இதனை நடைமுறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமை வரவேற்கத்தக்கதாகும்.

பிரித்தானியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பில் அங்கு வாழும் இலங்கை வர்த்தகர்கள், முதலீட்டாளர்கள், தொழில் வல்லுநர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு மேலும் உரையாற்றியிருந்த ஜனாதிபதி "வடக்கில் காணப்படும் காணிப்பிரச்சினை, காணாமற் போனவர்கள் தொடர்பான பிரச்சினை, அவர்களுக்கு உரிய நட்டஈடு வழங்குவது தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை என்பவற்றுக்குத் தீர்வு வழங்க வேண்டும். அதிகாரப் பகிர்வின் சில அடிப்படைகளைக் கவனிக்க வேண்டும்.

2018 ஆம் ஆண்டு அரசியலமைப்பை திருத்த நாம் நடவடிக்கை எடுத்த போது வடக்கு, கிழக்குக்கு வெளியில் உள்ள ஏழு முதலமைச்சர்களும் எதிர்க்கட்சித் தலைவரும் யோசனைகளை முன்வைத்தது மகிழ்ச்சியளிக்கிறது. வடக்கு, கிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களும், முதலமைச்சர்களும் அதற்கு உடன்பட்டுள்ளதால் எம்மால் அதனைத் தொடர முடியும். அதனை நிறைவேற்ற முடியும் என்றும் நம்புகிறேன்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து வளமான தேசமாக எமது நாட்டை மாற்ற வேண்டும். இங்கே வாழ்வதால் நீங்கள் வெற்றி அடைந்திருப்பீர்கள். இங்கு வாழும் சுமார் 500,000 இலங்கையர்கள், தங்களை முதல் அல்லது இரண்டாம் தலைமுறை இலங்கையர்களாக அடையாளப்படுத்துகின்றனர். வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் முதலீடு செய்ய முடியும். உங்களில் சிலருக்கு தெற்கு அல்லது கிழக்கில் தொடர்புகள் இருக்கலாம். அவர்களுக்கு உதவியளிக்க விரும்பலாம். அதில் எந்த பிரச்சினையும் இல்லை. உங்களால் முடிந்த விதத்தில் இலங்கைக்கு உதவுங்கள்'' என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களைப் பொறுத்தவரையில் குறிப்பாக தமிழர்கள் நாட்டில் இடம்பெற்ற பல்வேறு குழப்பமான சூழ்நிலைகளால் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றவர்களாவர். விசேடமாக 83 ஆம் ஆண்டு தமிழர்கள் மீதான வன்செயல்களின் பின்னரே பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் இலங்கையை விட்டு வெளிநாடுகளுக்குச் சென்று தஞ்சமடையத் தொடங்கினர். இந்த இனக்கலவரத்தின் போது அவர்களுக்கு ஏற்பட்ட மோசமான அனுபவம் இரண்டாம் மூன்றாம் தலைமுறையின் மீதும் காணப்படுகிறது.

அது மாத்திரமன்றி அதன் பின்னர் இடம்பெற்ற யுத்த சூழல்களால் பல்லாயிரக்கணக்கான இலங்கையர்கள் நாட்டை விட்டுத் தப்பிச் சென்றனர். அருகிலுள்ள இந்தியாவுக்குப் படகு மூலம் சென்று தஞ்சமடைந்தவர்கள் இன்னமும் அகதிகளாக வாழ்ந்து வருகின்ற போதும், வெளிநாடுகளுக்குச் சென்ற பலர் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பலம் பொருந்தியவர்களாகக் காணப்படுகின்றனர்.

பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, நோர்வே, சுவீடன், உள்ளிட்ட பல நாடுகளில் பரந்து விரிந்து வாழும் இலங்கை புலம்பெயர் தமிழர்கள் அந்நாட்டின் அரசியலில் தாக்கம் செலுத்தும் சக்தியினராக விளங்குவதையும் காணக் கூடியதாகவுள்ளது. இலங்கை விவகாரங்களில் அழுத்தம் கொடுக்கக் கூடிய தரப்பினராக அவர்கள் இருப்பதையும் மறுக்க முடியாது.

தமிழர்கள் மாத்திரமன்றி இலங்கையைச் சேர்ந்த சிங்கள, முஸ்லிம் இனத்தவர்கள்





> “வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்து சென்ற இலங்கையர் பலர் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அந்நாடுகளில் பலம் பொருந்தியவர்களாக விளங்குகின்றனர். பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, நோர்வே, சுவீடன், உள்ளிட்ட பல நாடுகளில் பரந்து விரிந்து வாழும் இலங்கைப் புலம்பெயர் தமிழர்கள் அந்நாட்டின் அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் சக்தியினராகவும் விளங்குகின்றனர்”

பலரும் வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ளனர். இத்தாலி, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளில் கணிசமான சிங்கள மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வாறு புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்கள் ஒரு சில தலைமுறைகளைக் கண்டிருந்தாலும் இந்நாட்டில் வழங்கப்பட்ட இலவசக் கல்வி, இலவச மருத்துவம் போன்ற நலன்புரி சேவைகளைப் பெற்றுச் சென்றவர்களே அதிகமாக இருக்கின்றனர். இவ்வாறான சலுகைகளைப் பெற்றவர்கள் என்ற ரீதியிலும், தமது உறவுகள் இன்னமும் இலங்கையில் வாழ்ந்து வருவதாலும் நாடு எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழ்நிலையிலிருந்து மீட்சிபெற உதவுவதில் அவர்களுக்கும் கடமைப்பாடொன்று உள்ளது. தமது கடமைகளை அவர்கள் அவ்வப்போது நிறைவேற்றி வருகின்றமையை மறந்து விடலாகாது.

இது இவ்விதமிருக்க, வடக்கு, கிழக்கு மாத்திரமன்றி நாட்டின் முன்னேற்றத்துக்கு முதலீடுகளை மேற்கொள்ள புலம்பெயர் தமிழர்கள் பலர் ஆர்வமாக இருக்கின்ற போதும், அவ்வப்போது முன்னெடுக்கப்படுகின்ற இனவாதக் கண்ணோட்டத்திலான பிரசாரங்களால் அவர்கள் பெரும் தயக்கம் காட்டி வருகின்றனர்.

பொதுவாகவே வெளிநாட்டு முதலீடுகள் நாட்டுக்குள் கொண்டுவரப்படும் போது பின்பற்றப்படும் சிக்கல் நிறைந்த நடைமுறைகள் பல உள்ளன. இவ்வாறான சூழலில் புலம்பெயர்ந்த தமிழ்த் தரப்பினரால் முதலீடுகள் கொண்டு வரப்படும்போது ஏற்கனவே காணப்படும் கெடுபிடிகள் தீவிரமாக்கப்படுவதும் அவர்கள் ஆர்வம் காட்டாமல் இருப்பதற்கான காரணங்களில் ஒன்றாக உள்ளது.

இருந்தபோதும் யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ளவர்களுக்கு புலம்பெயர்ந்து வாழ் தமிழர்கள் பலர் தம்மாலான உதவிகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். புலம்பெயர்ந்து வாழ் தமிழர்கள் இலங்கையில் இடம்பெறும் முன்னேற்றங்களில் எப்பொழுதும் அக்கறை காண்பித்து வருபவர்கள் என்பதை நாம் மறுக்க முடியாது.

இதற்கு சிறந்த உதாரணமாக 2004 ஆம் ஆண்டு சுனாமிப் பேரலை அனர்த்தத்தின் பின்னர் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு பகுதி உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளைக் கட்டியெழுப்புவதற்கு குறிப்பாக பாதிக்கப்பட்ட மக்களை மீட்சியுறச் செய்வதற்கு புலம்பெயர்ந்த இலங்கையர்கள் பல்வேறு வகையில் உதவிகளைச் செய்திருந்தனர்.

இது தவிரவும் இறுதி யுத்தத்தின் பின்னர், இயற்கை அனர்த்தங்களின் போது எனப் பல்வேறு சந்தர்ப்பங்களில் புலம்பெயர்ந்து வாழ் தமிழர்கள் நாட்டுக்கு உதவி செய்துள்ளனர்.

அது மாத்திரமன்றி புலம்பெயர்ந்து வாழ் தமிழர்களால் மேற்கொள்ளப்படும் உதவிகளை இனவாத ரீதியில் பிரசாரங்களுக்குப் பயன்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும். அதற்கும் அப்பால் இலங்கையில் அதிகரித்துள்ள ஊழல்களால் தாம் வழங்கக் கூடிய உதவிகள் மக்களுக்கு நேரடியாகச் சென்றடையாது இடையிலுள்ள அரசியல்வாதிகளால் சூறையாடப்பட்டு விடும் என்ற சந்தேகமும் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களிடம் காணப்படுகிறது.

இதுபோன்ற சந்தேகங்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கம் வெளிப்படையான பொறிமுறையொன்றை நடைமுறைப்படுத்துவதும் காலத்தின் தேவையாக உள்ளது.

இதுபோன்ற அடிப்படைப் பிரச்சினைகளையும், சந்தேகங்களையும் தீர்க்கும் வகையில் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கும் பட்சத்தில் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் தமது முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக ஏற்படும்.

> **புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களால் வழங்கப்படும் உதவிகளை இலங்கை அரசியல்வாதிகள் பலர் இனவாத ரீதியில் தங்களது பிரசாரங்களுக்குப் பயன்படுத்துவது நிறுத்தப்பட வேண்டும். அதற்கும் அப்பால் தாம் வழங்கக் கூடிய உதவிகள் மக்களை நேரடியாகச் சென்றடையாமல் போய்விடலாமென்ற சந்தேகம் புலம்பெயர்ந்து வாழும் இலங்கையர்களிடம் காணப்படுகிறது**

# கண்டுகொள்ளப்படாத சமூகமாக பெருந்தோட்ட சேவையாளர்கள்

இலங்கைக்கு 200 வருடங்களாக அன்னியச் செலாவணியை ஈட்டித் தரும் பெருந்தோட்டத்துறையில் தோட்டத் தொழிலாளர்களை தவிர்த்து பெருந்தோட்ட சேவையாளர்கள் சமூகம் அதிகம் பேசப்படாதவர்களாகவும் அவர்களின் நன்மை, தீமைகளுக்கு ஊடகங்கள் முக்கியத்தும் வழங்கியதாக மனப்பான்மையில் இருப்பதாலா? அவர்கள் செய்யும் வேலைக்கான ஊதியம் வழங்கப்படுவதில்லை அவர்களும் ஒரு நூற்றாண்டை கடந்து போராடி வருகின்றனர்.

தோட்டங்களை அரசு நிர்வகித்த போதும் பின்னர் தனியார் துறைக்கு கையளிக்கப்பட்டு இன்றுவரை நிர்வாக கட்டமைப்பை கட்டிக் காத்து வருபவர்கள் பெருந்தோட்ட

ஆனால் அவர்களின் ஊதியம் அவர்களின் வாழ்க்கை ஓட்டத்திற்கு போதாமலே இருக்கிறது. அதுவும் இன்றைய பொருளாதார நெருக்கடியில் சாதாரண நிலையில் இருக்கும் மக்களே 'மரத்தில் இருந்து விழுந்தவனை மாடு முட்டிய' நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். தோட்ட சேவையாளர்களும் நாம் குறிப்பிட்ட சாதாரண மக்க

- ★ வரப்பிரசாதங்கள் அற்றவர்களாக 200 வருடங்களை தாண்டி நாட்டுக்காக உழைக்கின்றனர்
- ★ வெளிக்கொணரப்படாத பெருந்தோட்ட சேவையாளர்களின் கூட்டு ஒப்பந்தம்

தெரியவில்லை. இலங்கை பெருந்தோட்ட சேவையாளர்களின் 2022/2025 ஆகிய மூன்று வருடங்களுக்கான கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கான




ஒரு சமூக மட்ட பேச்சுவார்த்தை நடைபெற்றதாக எமக்கு தோன்றவில்லை. தோட்ட தொழிலாளர்களினால் சம்பள பிரச்சினைக்கு முழு நாட்டு மக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஆனால் பெருந்தோட்ட சேவையாளர்களின் பிரச்சினைகள் அநேகம் கண்டு கொள்ளப்படவில்லை அல்லது கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லையா? தோட்ட தொழிலாளர்களை விட அதிகம் சம்பளம் பெறுவதால் அவர்களுக்கு பிரச்சினை ஒன்றும் இருக்காது என்ற

சேவையாளர்களே. தோட்ட நிர்வாகத்தை பற்றி கதைக்கும் போது எமது கண்முன் வருவது பெரியதுரை மற்றும் சின்னதுரை. அதைவிட அலுவலகத்தில் பணிபுரியும் தலைமை லிகிதர் முதல் அலுவலக சிற்றூழியர், சமையல்காரர்கள், வெளிக்கள வேலைகளில் ஈடுபடும் FIELD OFFICER ஆகியோரை எம்மில் பலருக்கு தெரியாது.

பெரியதுரை, சின்னத்துரை இலட்சக்கணக்கில் சம்பளம் எடுப்பவர்கள். ஆனால் தோட்டங்களுக்கு அவர்களின் பங்கு மிகக் குறைவு. தோட்டங்களில் உருவாகும், உருவாக்கப்படும் அனைத்து பிரச்சினைகளும் இறுதியில் தீர்வு பெற்றுக் கொடுப்பவர்கள் தோட்ட சேவையாளர்களே ஆவர்.

ளுள் மத்திய தர வர்க்கத்தில் இருப்பதால் பெரும் பாதிப்புகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

அதேநேரம் தோட்ட சேவையாளர்களும் கூட்டு ஒப்பந்த முறையிலேயே அவர்களின் சம்பள உயர்வு, இதர சேவைகளை பெற்றுக் கொள்கின்றனர். மூன்று வருடத்திற்கான அவர்களின் கூட்டு ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில் முதலாளிமார் சம்மேளனத்துடன் மூன்று சுற்று பேச்சுக்கள் நடந்தும் அது இழுபறி நிலையில் உள்ளது. இன்று நாடு இருக்கும் சூழ்நிலையில் தோட்ட சேவையாளர்களின் சங்கம் 70 சதவீத ஊழிய உயர்வை கோரி நிற்கிறது.

எமது பார்வைக்கு அது ஒரு நியாயமான கோரிக்கையே, முதலாளிமார் சம்மேளனம் எப்போதும் கூறும் ஒரு வார்த்தை தோட்டங்கள் நட்டத்தில் இயங்குகின்றன என்பதாகும். தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினையும் அரசு தலையிட்டு முடிவு கட்ட முடியாமல் நீதிமன்ற தீர்ப்பும் தாமதித்து இன்றைய சூழலில் 1000 ரூபா சம்பளம் வழங்க உத்தரவிட்டுள்ளது. ஆனால் இன்றைய பணவீக்கம், வாழ்க்கை செலவுகள் உச்சம் தொட்டுள்ள சந்தர்ப்பத்தில் 1000 ரூபா 'யானை பசிக்கு சோளப் பொரி' அளித்த கதையாகும்.

ஒரு நூற்றாண்டு மகிமை கொண்ட தோட்ட சேவையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் அண்மையில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் கூறிய கருத்துக்களைக் கொண்டு சில விடயங்களை கூறுகின்றோம்.

மூன்று வருட கூட்ட ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகள் தோட்ட சேவையாளர் சங்கம் மற்றும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் இராஜகிரியவில் அமைந்துள்ள முதலாளிமார் சம்மேளனத்தின் தலைமையகத்தில் மூன்று சுற்று பேச்சுவார்த்தை நடைபெற்றதாகவும், அவற்றில் முதலாளிமார் சம்மேளனம் நட்டத்தை காரணம் காட்டி 25 சதவீத சம்பள உயர்வையே தர முடியும் 70 சதவீதம் சாத்தியப்படாது என்று தெரிவித்ததால் மூன்று பேச்சுவார்த்தைகளும் முடிவின்றி முடிந்துள்ளன. 70 சதவீத சம்பள அதிகரிப்பு தோட்ட சேவையாளர் சங்க உறுப்பினர்களிடம் பல கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு உயர்மட்ட குழுவால் அங்கீகரிக்கப்பட்ட சாதாரண அதிகரிப்பாகும் என சேவையாளர் சங்கம் தெரிவிக்கிறது.

தோட்டத்தில் ஒரு Junior Clarek க்கு அடிப்படை சம்பளம் 28,000 ரூபாவாகும். இன்று புதிதாக சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுக்கும் இந்த அடிப்படை சம்பளமே வழங்கப்படுகிறது. இதை வெளியில் சொல்லவே வெட்கப்படுகின்றனர் சங்கத்தினர். இந்த நிலையில் 25% அதிகரிப்பு எவ்வாறு சாத்தியமாகும்.

தோட்டங்கள் ஏன் நட்டத்தில் இயங்குகின்றன என்பதற்கு சங்கத்தினர் கொடுக்கும் விளக்கம்,

தோட்டங்களின் மீள் நடுகைத் திட்டம் இல்லை, பயிர் பராமரிப்பு செய்வதில்லை, இலாபத்தில் குறியாக செயற்படும் நிறுவனங்கள் இதர செலவுகளை குறைப்பதாக கூறி தோட்டங்களை காடாக்கி வருகின்றன. அத்தோடு அன்று



பெருந்தோட்டங்களில் தேயிலை, இறப்பர் இரண்டையும் பயிரிட்டார்கள் ஏனென்றால் மழை காலங்களில் தேயிலையும் வெயில் காலங்களில் இறப்பர் பால் என்று தோட்டங்கள் நட்டமடையா கட்டமைப்பை கொண்டிருந்தன. ஆனால் இன்று இறப்பர் மரங்கள் பிடுங்கப்பட்ட விற்கப்பட்டு இறப்பர் தோட்டங்கள் அழிக்கப்பட்டு விட்டன குறிப்பிட்டு கூற கூடிய



சில பிரதேசங்களிலேயே இறப்பர் மரங்கள் சிலவற்றுடன் இறப்பர் தோட்டங்கள் காட்சியளிக்கின்றன. மத்துகம மற்றும் தெரணியகல, யட்டியந்தோட்ட, கேகாலை போன்ற பகுதிகளிலே இன்றும் இந்த இறப்பர் தொட்டங்கள் காணப்படுகின்றன.

வெள்ளைக்காரர்கள் பெருந்தோட்ட பயிர் செய்கையை ஆரம்பிக்கும் போதே தூர நோக்கோடு பல திட்டங்களை வருத்திருந்தனர். ஆனால் இன்று அவ்வாறான செயற்பாடுகள் நிறுத்தப்பட்டு தூரநோக்கற்ற சிந்தனைகளின் செயற்பாடுகளால் பெருந்தோட்ட துறையில் இருந்து எமது நாட்டுக்கு கிடைக்கும் அன்னிய செலாவணி அற்றுப் போகும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.எமது நாட்டின் ஏற்றுமதி துறையில் மூலப் பொருட்களே அதிகமாக ஏற்றுமதி செய்யப்படுவதால் தூய இலாபம் எமது நாட்டுக்கு கிடைப்பது குறைவு, ஆனால் முடிவுப் பொருளான தேயிலையில் எமக்கு தூய இலாபம் கிடைப்பதால் இத் துறையை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமதனைவருக்கும் உண்டு.

இவ்வாறான செயற்பாடுகளே தோட்டங்கள் நட்டமடையக் காரணமாகும். அத்தோடு ஊடுபயிர்களான கருவா, ஏலம், சாதிக்காய், மிளகு போன்றவையும் இருந்தன.

ஆனால் இன்று அவை ஒன்றும் இல்லை. இவ்வாறான எதிர்கால நோக்கில்லா செயற்பாடுகளே நட்டத்துக்கு காரணமாகும்.

**கே.வசந்தகுமார்**
(நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்)

---



# பெருந்தோட்ட குடியிருப்புகளில் மின் ஒழுக்குகளால் தீ!

மலையக பெருந்தோட்ட குடியிருப்புகளுக்கு மின் சாரம் வழங்கப்பட்டு 25 வருடங்கள் கடந்து விட்டன. இன்றைய நிலையில் 99 சதவீத தோட்டங்களுக்கு மின்சார வசதி வழங்கப்பட்டுவிட்டது.

மக்கள் மிக ஆர்வத்தோடு மின் சாரத்தை பெற்றுக் கொண்டனர். வசதிகள், பாதுகாப்பு இருக்கின்றதா என்பது பற்றி ஆராயவில்லை.

இதேசமயம் இலங்கையில் அதிகமான மின் ஒழுக்குகள் மற்றும் தீவிபத்துகள் மலையக தோட்டப் பகுதிகளிலேயே இடம்பெற்று வருகின்றன என்பது கவனிக்கத்தக்கது. இந்த மின் ஒழுக்கு தீவிபத்துக்களால் இன்றுவரை நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் எரிந்து சாம்பலாகியுள்ளன.

தமது வீட்டிலும் மின் குமிழ் ஒளிரவேண்டும் ரிவி வேலைசெய்ய வேண்டும் பிள்ளைகள் படிக்க உதவியா இருக்கும் என எண்ணி ஆசையுடன் மின்சாரத்தை பெற்றுக் கொண்டனர். மின்சாரம் வந்த புதிதில் தோட்டங்கள் தோறும் வீடுகளுக்கு வெளியே மின் விளக்குகளை போட்டு திருவிழாகோலமாக இருந்தது. சில வருடங்கள் மின்சாரம் கிடைத்த மகிழ்ச்சியில் வாழ்ந்த இந்த மக்கள் மின்சாரத்தின் மறு பக்கத்தை இப்போது அனுபவிக்க ஆரம்பித்துள்ளனர்.

குருவி சேர்ப்பது போல் சிறிது சிறிதாக சேகரித்து வாங்கிய வீட்டுத் தளபாடங்கள். ரிவி, பிரிஜ் போன்றவற்றை பயன்படுத்தி மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர். இப்போது எப்போ தீ பிடிக்கும் எப்போ எல்லாம் எரிந்து சாம்பலாவோம் என்ற அச்சத்துடன் வாழ்கின்றனர்.

பாட புத்தகங்கள், திருமண, பிறப்பு, மரண சான்றிதழ்கள், கல்வி சான்றிதழ்கள் எல்லாம் திடீர்த் தீக்கு இரையாகி வருகின்றன.

தொடர்வீடுகள், தனிவீடுகள் என்ற பாகுபாடு இன்றி மின் ஒழுக்கில் சிக்கி வீடுகள் தீப்பிடிக்கின்றன.

சரி, ஏன் வீடுகள் தீப்பிடிக்கின்றன? பெருந்தோட்ட குடியிருப்புகளுக்கு வயரிங் செய்தவர்களில் பலர் முறையான பயிற்சி பெற்றவர்களாகவும் முன் அனுபவம் கொண்டவர்களாகவும் இருக்கவில்லை என்பது பிரதான காரணம்.

- ★ தரமற்ற மின் இணைப்பு, பாதுகாப்பு இன்மையால் பாதிக்கப்படும் அப்பாவி மக்கள்
- ★ 25 வருடங்கள் கடந்தும் அவதானிக்கப்படாத விடயம்





விலையும் தரமும் குறைந்த மின் உபகரணங்களே இவ்வீடுகளில் பொருத்தப்பட்டன.

மின்சுற்று அமைக்கப்பட்டு நீண்ட நாட்களாக மின் இணைப்புக்காக பல வீடுகள் காத்துக் கிடந்தன.

அரசியல் தரகர்கள் வீட்டு மின் சுற்றை அமைக்கவும் அதற்கான பொருட்களை வாங்கவும் அதிக வட்டியில் வங்கிகளில் கடன்களை குடியிருப்பாளர் பெயர்களில் பெற்றுக் கொண்டு அந்த பணத்தை தாம்வைத்துக் கொண்டனர்.

பின்னர் ஒப்பந்த அடிப்படையில் அரைகுறை திறன் கொண்டவர்களை அமர்த்தி வீட்டு மின் சுற்றுகளை அமைத்து கொடுத்தனர். இந்த மின் கட்டமைப்புக்கு மேலாக புது புது இணைப்புகளை குடியிருப்பாளர்களே தமது இஷ்டத்துக்கு அமைத்து கொள்கின்றனர். இது அதிக அழுத்தத்தை கொடுக்கிறது.

மழைக் காலங்களில் வீட்டுக் கூரைகள் ஒழுகி மின் இணைப்புகளுக்குள் நீர் புகுந்து விடுகிறது. கடந்த புதன்கிழமை புஸ்ஸல்லாவ, கட்டுகித்துல, எல்பொட, பம்பேகமுவ பகுதியில் 52 வீட்டுதிட்ட பகுதியில் ஏழுபேர்ச் காணியில் அமைக்கப்பட்ட வீடு மின் ஒழுக்கால் தீக்கிரையானது.

தீயை அணைக்க நீர்கூட இல்லை இந்த பம்பேகம தோட்டத்தில். நேர்த்தியற்ற மின் இணைப்பும்,தரமற்ற மின்சார பொருட்களால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு தீர்வு கிடைக்குமா?

இதற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படுவார்களா?

**ஆர் நவராஜா.**
(படங்கள்: தெல்தோட்டை தினகரன் நிருபர்)

# அஷ்ரஃபின் இழப்பு ஏற்படுத்திய அரசியல் இடைவெளி



**முஸ்லிம் தலைமைகளின் இணைவே இடைவெளியை நிரப்பும்**

முஸ்லிம் அரசியலில் அஷ்ரஃபின் இடை வெளிக்குப் பின்னர் பல விடயங்கள் புரியப்படாமலுள்ளன. இருபத்திரண்டு வருட இடைவெளியில் சமூகத்துக்காக சாதிக்கப்பட்டவைகள் என்ன? இனியும் உரிமை அரசியலைப் பேசி முஸ்லிம்களை உசுப்பேற்ற முடியுமா? அஷ்ரஃபின் காலத்தில் எழுந்த அதே உரிமை பிரச்சினைகள் இப்போதும் இருக்கிறதா? அல்லது இந்தப் பிரச்சினைகள் வேறு வடிவமாகி தலையெடுக்கிறதா? இவ்வாறு தலையெடுக்கும் இந்தப் பிரச்சினைகளை தீர்க்கும் தைரியம் அல்லது அரசியல் பலம் இப்போதுள்ள முஸ்லிம் தலைமைகளிடம் உள்ளதா? என்று பல கேள்விகள் இந்த இடை வெளிக் காலங்களில் எழுந்துள்ளன.

வெறுமனே அதுவும் ஏட்டிக்குப் போட்டியாக அஷ்ரஃபை நினைவுகூர்வதால் முஸ்லிம்கள் அடைந்த ஆதாயம்தான் என்ன? ஆகக்குறைந்தது அஷ்ரஃபின் மறைவின் பின்னர் ஏற்பட்ட பிளவுகளையாவது இந்த 22 வருடங்களில் ஒற்றுமைப்படுத்த முடியாத பலவீனத்தில் முஸ்லிம் அரசியல் இருக்கிறது. பல தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டமைப்பாகச் செயற்படுவதையாவது இந்த முஸ்லிம் தலைமைகள் முன்னுதாரணமாகக்கொள்ளவில்லை. கூட்டமைப்பாகச் செயற்பட்டு எதைச் சாதிக்கின்றனர்? எனச் சிலர் கேட்கலாம். இனத்துக்கான குரல் பலப்பட்டிருக்கிறதே! மட்டுமல்ல புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் தயவை நாடும் நிலைக்கு அரசாங்கம் சென்றுமுள்ளதே! இது, தமிழ் சமூகத்துக்கு கிடைத்துள்ள அடையாள அங்கீகாரமாகவே கருதப்பட வேண்டும்.

இதுபோன்று, முஸ்லிம் சமூகத்துக்கும் ஒரு தனி அடையாளத்தைப் பெறவே அஷ்ரஃப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை ஆரம்பித்தார். இதற்காக 12 வருடங்கள் கடுமையாக உழைத்தார். வெவ்வேறு கட்சிகளிலுள்ள முஸ்லிம் பிரதிநிதிகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் உள்வாங்கினார். இந்த உள்வாங்கல் முயற்சிகளுக்காக என்னையும் சிலரிடம் தூதாக அனுப்பினார். மர்ஹூம்களான ரிஸ்வி சின்னலெவ்வை, எம்.ஐ.உதுமாலெவ்வை, நிந்தவூர் முஸ்தபா மற்றும் ஏ.ஆர்.எம்.மன்சூர் ஆகியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இவ்வாறு சமூக ஆளுமைகளை ஒன்றிணைப்பது முஸ்லிம் அரசியலை பலப்படுத்தும், சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கும் என்ற தெளிவு அஷ்ரஃபுக்கு இருந்தது.

சமுதாயத்துக்கான குரல்கள் ஓரணியில் ஒலிக்க வேண்டுமென அஷ்ரஃபிடம் இருந்த அபிலாஷைகள் இன்றைய தலைமைகளிடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஏன்? ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தவிசாளர் எம்.எச்.ஷேகு இஸ்ஸதீனையும் கட்சியில் இணைப்பதுதான் அஷ்

**சுஐப் எம்.காசிம் ...✍**

ரஃபின் கடைசி ஆசையாக இருந்தது. 2000 ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் அஷ்ரஃப் இந்த ஆசையை வெளிப்படுத்தினார். அம்பாறை கச்சேரியில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக வேட்புமனு தாக்கல் செய்ய வந்த ஷேகு இஸ்ஸதீனை ஆரத்தழுவிய அஷ்ரஃப், மீளிணைவுக்கான வாசலைத் திறந்திருந்தார்.

இதுபற்றியெல்லாம், இன்றைய தலைமைகள் சிந்திப்பதுமில்லை. அடையாள அரசியலைப் பலப்படுத்துவதில் பலவீனமடைந்திருப்பதாக உணர்ந்தால், உரிமை அரசியலிலிருந்து முஸ்லிம் தலைமைகள் விடுபடுவதுதான் சிறந்தது. இல்லாத உரிமையைப் பேசப் போய் சகோதர தமிழ் சமூகத்துடன் முரண்படுவதை விட, அபிவிருத்தி அரசியலுக்குள் மாத்திரம் முஸ்லிம் தலைமைகள் சுருங்குவது சிறந்தது. அல்லது, உரிமை அரசியலுக்கான குரலைப் பலப்படுத்த சகல முஸ்லிம் தலைமைகளும் இணைந்து ஒரு கூட்டமைப்பாகச் செயற்படுவது சிறந்தது. அஷ்ரஃபின் 22 வருட இடைவெளிகள் கற்றுத்தந்த பாடங்களே இவை.

22 வருடங்களாக அஷ்ரஃபின் இழப்பு நினைவு கூரப்படுகிறது. இந்நிலையில், அவரது ஆளுமைகளை உயிரூட்டவாவது முஸ்லிம் தலைமைகள் இணைந்திருக்கலாம். அல்லது, இந்த ஆளுமைக்கு நிகரான சாதனைகளை ஏதாவதொரு தலைமை சாதித்திருக்கலாம். இந்த இருபத்திரண்டு வருடங்களில் சாதிக்காத இந்த தலைமைகள் இனிச்சாதிக்கும் என எதிர்பார்க்க முடியாது. எனவே இணைதல்தான் இதற்கு விடிவு. இதைத்தான் முஸ்லிம் கட்சிகள் புரியாதிருக்கின்றன.

தமிழ் பேசும் மக்களின் பெரும்பான்மை பூமியாக கிழக்கு மாகாணம் இருக்கையில், இந்த பூமியைப் பலப்படுத்தும் புரிந்துணர்வுகள் தமிழ் பேசும் தலைமைகளிடம் இல்லை. இதற்கான அடிப்படைக் காரணம் தெரியவுமில்லை. ஆனால், அஷ்ரஃபிடம் இந்த பூமிக்கென தனி மவுசு இருந்ததை மறக்க முடியாது.

இந்த மவுசைப் பலப்படுத்தவே அவரால் தேசிய ஐக்கிய முன்னணி உருவாக்கப்பட்டது.

இன்று, தமிழர்களின் தலைமைகள் இந்த பூமிக்கான உரிமைக் குரலை உயர்த்துமளவுக்கு முஸ்லிம் தலைமைகளின் குரல்கள் உயராமல் இருப்பது ஏன்? அடையாள அரசியலில் நாட்டமின்றி போனதாலா? அல்லது அஷ்ரஃபை நினைவுகூர்வதால் இதை அடைந்துவிடலாம் என்பதாலா? இல்லை, உசுப்பேற்றும் அரசியல் இன்னும் நிலைத்திருக்கிறது என நினைப்பதாலா?

இன்றைய சூழ்நிலையில், அடிப்படை இருப்புக்கான அரசியலை விடவும் அன்றாடம் பிழைப்பதற்கான வாழ்வாதாரத்தை தேடும் வழிகளுக்காவது முஸ்லிம்களுக்கு இந்த தலைமைகள் வழிகாட்டுவது அவசியம். வாழ்வாதாரத்திலும் பார்க்க வாழ்வியல் பிரச்சினைகள் பெரிதாக இருந்தால், உரிமை அரசியலுக்கான வியூகங்களே வகுக்கப்பட வேண்டும். இதன் முதல் வியூகமாக முஸ்லிம் தலைமைகளின் இணைவுகள் இருக்க வேண்டும்..!

# மக்கள் விரோத கட்சிகளிலிருந்து விலகிச் செல்ல வேண்டும்

அரசியல், பொருளாதாரம், பண்பாடு எல்லாவற்றிலும் ஈழத் தமிழர்கள் மிகப் பின்னடைந்து கொண்டே செல்கின்றனர். இது மிக அபாயகரமான ஒரு நிலையாகும். தொடரும் இந்த நிலையானது, எதிர்காலத்தில் மிகப் பெரிய சிக்கல்களையும் நெருக்கடிகளையும் உருவாக்கப் போகிறது. என்பதால்தான் இது மிகப் பெரிய அபாகரமான நிலை என்று எச்சரிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை எப்படித்தான் நாம் எச்சரிக்கை செய்தாலும் உண்மை நிலவரத்தை எப்படித்தான் எடுத்துச் சொன்னாலும் அதைப் புரிந்து கொள்ளக் கூடிய உள நிலையும் அறிதிறனும் தமிழர்களிடம் இல்லை. ஏனென்றால், இதைப் பலர் ஏற்கனவே முன்னுணர்ந்து செய்திருக்கின்றனர். மாற்றுப் பாதையைக் குறித்து, மாற்று அரசியல் வழிமுறையைக் குறித்துச் சிந்திக்க வேண்டும் என்று அவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்திருக்கின்றனர். மிகப் பெறுமதியான கருத்துகளையும் மாற்றுத் தெரிவுகளையும் முன்வைத்துள்ளனர். இருந்தபோதும் அவை ஒன்றும் கவனத்திற் கொள்ளப்படவில்லை. மதிக்கப்படவில்லை. சரியாகச் சொன்னால் பிடிவாதமாக அந்தக் கருத்துகள் – உண்மைகள் – நியாயங்கள் மறுக்கப்பட்டுள்ளன; புறக்கணிக்கப்பட்டுள்ளன. இதனால் தொடர்ந்தும் தமிழ்ச் சமூகம் பலவீனப்படுவதே நிகழ்ந்து கொண்டிருக்கிறது.





நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் மக்கள் கொண்டிருந்த அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டுக் கட்டமைப்பு இன்றில்லை. அன்று எந்த ஊரிலும் இராணுவ முகாம்கள் இருந்ததில்லை. இப்போதுள்ளதைப்போல கணவரைப் போரில் அல்லது படை நடவடிக்கையில் இழந்த குடும்பங்களில்லை. கை, கால்களை இழந்த மனிதர்களில்லை. காணாமலாக்கப்பட்டோரைப் பற்றிய கவலைகள் இருக்கவில்லை. உற்றமும் சுற்றமும் திக்கொன்றாகச் சிதறிக் கிடந்ததில்லை. ஊரை, வாழ்வை, இளமையை இழந்த அலைந்த வாழ்க்கை இருந்ததில்லை. ஆகவே, அன்றிருந்த நெருக்கடிகளை விடவும் அன்றிருந்த பிரச்சினைகளை விடவும் இன்றைய நெருக்கடிகளும் பிரச்சினைகளும் அதிகம். பாதிப்புகளும் அதிகம். சிறிய உதாரணம், அன்று வடக்குக் கிழக்கில் ஐந்து ஆறு இராணுவ முகாம்களே இருந்தன.

அதுவும் ஒதுக்குப் புறமாக. ஆனால், இன்று ஊருக்கு ஒன்று அல்லது அதற்கும் மேல் என்ற அளவில் வடக்குக் கிழக்கு எங்கும் படை முகாம்கள் விளைந்து போயுள்ளன.

இடப்பெயர்வுகள் உண்டாக்கிய சமூகப் பிறழ்வுகள் தொடக்கம் உளவியல், பண்பாட்டுச் சிக்கல்கள் வரை எல்லாவற்றிலும் ஏகப்பட்ட பிரச்சினைகள். இதை விட காணாமலாக்கப்பட்டோர் விவகாரம், சிறைப்படுத்தப்பட்ட அரசியலாளர்களின் பிரச்சினை, உடல் உறுப்புகளை இழந்தோர், உறவுகளைப் போரில் பறிகொடுத்தோர் சிரமங்கள் என பல நூறு துயரச் சங்கிலிகள்.

இப்படிப் பல விதமான பிரச்சினைகளால் சூழப்பட்டிருக்கும்போதும் தாம் முன்னெடுக்கின்ற அரசியல், பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகள் எந்தளவுக்கு தமிழ்ச் சமூகத்தை முன்கொண்டு சென்றது செல்கிறது என்ற ஆய்வோ, மறுபரிசீலனையோ, மதிப்பீடோ இல்லாமலே மந்தைத் தனமாக இருக்கிறது தமிழ்ச்சமூகம்.

உண்மையில் இது மிகப் பெரிய மந்தைத் தனமே.

தாம் ஆதரிக்கின்ற அரசியல் தலைமைகளும் கட்சிகளும் எந்தளவுக்கு நெருக்கடிகளைக் குறைக்கக் கூடிய செயற்றிட்டங்களோடும் சிரத்தையோடும் உள்ளன என்று ஒருத்தர் கூடச் சிந்திப்பதாகக் காணோம். ஏன், இதை நேரடியாகவே கேட்டு விடலாம். தமிழ்த் தேசியக் கட்சிகள் என்ற அடையாளத்தை வலிந்து சூடிக் கொண்டுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த்தேசியக் கூட்டணி, தமிழ்த்தேசிய பசுமை இயக்கம், தமிழ் மக்கள் தேசியக் கட்சி என்று இருக்கின்ற பல கட்சிகளில் ஏதொன்றாவது ஆக்கபூர்வமாக தமிழ் மக்களின் நெருக்கடியைத் தீர்ப்பதற்கு இதுவரையில் பங்களித்துள்ளதா?

அப்படியென்றால் அத்தகைய பங்களிப்பைச் செய்த கட்சி எது? அதனுடைய பங்களிப்பு என்ன? அதன் பெறுபேறு என்ன? என்று யாராவது சொல்ல வேண்டும். அல்லது குறித்த கட்சியினர் இங்கே அவற்றைப் பற்றி அறிக்கை இடலாம்.

என்னுடைய அவதானிப்பில் இவை எவையும் எந்தப் பெறுமதிகளையும் தமிழ் மக்களுக்கு வழங்கவில்லை. இவற்றின் அரசியல் முன்னெடுப்புகளால் எந்தச் சிறிய நன்மைகளையும் தமிழ்ச்சமூகம் பெற்றுக்கொள்ளவும் இல்லை. அனுபவிக்கவும் இல்லை. பதிலாக மேலும் மேலும் நெருக்கடிகளையே இந்தக் கட்சிகளும் இவற்றின் தலைமைகளும் உண்டாக்கியுள்ளன. அதாவது தமிழ் மக்களைப் பலப்படுத்துவதற்குப் பதிலாக இவை மேலும் மேலும் பலவீனப்படுத்தியுள்ளன; பலவீனப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

இதில் முக்கியமான பொறுப்பை ஏற்க வேண்டியது தமிழரசு கட்சியாகும். எஸ்.ஜே.வி. செல்வநாயகம் காலத்திலிருந்தே தமிழரசுக் கட்சி பிரதான கட்சியாக செல்வாக்குச் செலுத்தி வந்திருக்கிறது.

மக்களும் தமிழரசுக் கட்சிக்குத் தொடர்ச்சியாக தமது ஆதரவையும் பங்களிப்பையும் செய்திருக்கிறார்கள். மக்கள் அதை ஆதரித்த அளவுக்கும் அதற்கு பங்களிப்பைச் செலுத்திய அளவுக்கும் மக்களுக்கு தமிழரசுக் கட்சி எந்த நன்மைகளையும் செய்ததே இல்லை. குறைந்த பட்சம், ஒரு நல்ல அரசியல் நெறிமுறையையோ முன்னேற்றகரமான அரசியல் விளைவுகளையோ கூட உண்டாக்கவில்லை. தேர்தல் மேடைகள் தொடக்கம், பாராளுமன்றம் வரையில் மக்கள் அரங்குகள் எங்குமே பிறரை வசைபாடுவதிலும் ஏமாற்றுக் கதைகளைச் சொல்வதிலுமே அதனுடைய வரலாறு கழிந்திருக்கிறது. இன்று பிரதேச சபைகள், நகரசபைகளையே சரியான முறையில் இயக்க முடியாத அளவுக்குத்தான் அதனுடைய நிலைமை உள்ளது. அதன் தலைமைத்துவம் ஏறக்குறைய செயலற்று விட்டது. (இதைப்பற்றி அடுத்த வாரம் விரிவாகப் பார்க்கலாம்).

தமிழரசுக் கட்சிக்கு எந்த வகையிலும் குறையாத அளவில்தான் ஏனைய கட்சிகளும் தலைமைகளும் உள்ளன. முயல் பிடிக்கும் நாயை முகத்தில் தெரியும் என்பார்கள். நம் தமிழ் அரசியல் தலைமைகளைப் பார்த்தாலே தெரியும், அவற்றால் என்ன செய்ய முடியும்? என்று.

ஆக மொத்தத்தில் இங்கே உள்ள துயரமான நிலை என்ன என்றால், இதுவரையில் இந்தத் தலைமைகளும் கட்சிகளும் எத்தகைய நன்மைகளைப் பெற்றுத் தந்துள்ளன? என்பதைக்குறித்தும் யாரும் (மக்கள், ஊடகவியலாளர்கள், புத்திஜீவிகள், மதத்தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள்.) சிந்திக்கவில்லை என்பதேயாகும். இதில் மிகக் கவலையளிப்பது இதைக்குறித்து தமிழ்ப் புத்திஜீவிகளும் பல்கலைக்கழக மாணவர் சமூகத்தினரும் அரசியல் ஆய்வாளப் பெருந்தகைகளும் கேள்வி எழுப்பாமல், சிந்திக்காமல் இருப்பதாகும்.

மேலும் சொல்வதாக இருந்தால் தமிழ் ஊடகங்கள், ஆய்வாளர்கள், கருத்துருவாக்கிகள் போன்றோரும் இதைப்பற்றிய சிரத்தையோ, சிந்தனையோ இல்லாமல் என்னவோ, ஏதோ என்று இருக்கிறார்கள். பழைய பல்லவிகளையே பாடிக்கொண்டிருக்கின்றனர். அல்லது பழைய வாய்பாட்டைக் கையில் எடுத்துக் கொண்டு ஸ்ரீராம ஜெயம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அல்லது தேவன் வருவார் என்கிற மாதிரி தீபாவளிக்கு, தைப்பொங்கலுக்கு, ஆடிப் பிறப்புக்கு, சித்திரா பௌர்ணமிக்குத் தீர்வு கிட்டும், மாற்றம் நிகழும் என்று அல்லேலாயோய பாடுகிறார்கள்.

மக்களின் இத்தகைய மந்தைத் தனமான நிலையானது குறித்த தலைமைகளுக்கும் கட்சிகளுக்கும் வாய்ப்பாகி விடுகிறது. இதனால் அவர்கள் தாராளமாகக் கயிறு விடலாம் என்ற நம்பிக்கையில் பழைய புருடாக் கதைகளையே தொடர்ந்தும் விட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இதற்குக் காரணம், தமிழ் மக்களில் பெரும்பாலானோர் ஒரு விதமான அதீதக் கற்பிதங்களில் வாழ்ந்து பழகியமையாகும். எதையும் கேள்வி கேட்காமல், விமர்சனங்களை எழுப்பாமல் வழிபாட்டு மனநிலையில் கட்டுண்டு கிடப்பதே தமிழ்ச்சமூகத்தின் பண்பாகி விட்டது. போதாக்குறைக்கு எதிரியை முறியடிக்க வேண்டும் என்றால் அரசுக்கு எதிராக போராட வேண்டும்.

**தமிழ் மக்களில் பெரும்பாலானோர் ஒரு விதமான அதீதக் கற்பிதங்களில் வாழ்ந்து பழகியமையாகும். எதையும் கேள்வி கேட்காமல், விமர்சனங்களை எழுப்பாமல் வழிபாட்டு மனநிலையில் கட்டுண்டு கிடப்பதே தமிழ்ச்சமூகத்தின் பண்பாகி விட்டது. போதாக்குறைக்கு எதிரியை முறியடிக்க வேண்டும் என்றால் அரசுக்கு எதிராக போராட வேண்டும்.**

அரசைப் பலவீனப்படுத்த வேண்டும் என்ற விதமாக நடந்து கொள்கிறது. இதற்கு என்ன என்ன செய்ய வேண்டும் என்பதைக் குறித்து அதனிடம் தெளிவான விளக்கமில்லை. வெறும் வாய்ச்சவாடல்களின் மூலமாக அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தவோ, பணிய வைக்கவோ முடியுமா? என்பதைக்குறித்து அது சிந்திக்கவில்லை.

எதிர்ப்புக் கோஷ அரசியல், மிகப் பெரிய ஆயுதப் போராட்ட அரசியல் ஆகியவற்றின் மூலமாக எதையுமே பெற முடிந்ததில்லை என்பது கடந்த கால அனுபவ உண்மை. அதற்குப் பதிலாக இன்னும் நெருக்கடிகளே பெருகிக் கிடக்கிறது. ஆகவே இனிமேல் தமிழ் மக்கள் முற்றிலும் புதிய முறையிலான அரசியலையே முன்னெடுக்க வேண்டும். புதிய தந்திரோபயமும் உச்சமான அர்ப்பணிப்பும் புதிய சிந்தனையும் ஜனநாயக விரிவும் கொண்ட அரசியலை முன்னெடுக்க வேண்டும்.

இதற்கான உள்ளடக்கத்தைக் கொண்ட கட்டமைப்பு அவசியம். எதிர்ப்பரசியல் என்பது அரச எதிர்ப்பு என்பதற்குப் பதிலாக மக்களுக்கு எதிரான அரசியலாக மாறியுள்ளது. அதுவே இப்பொழுது நடந்து கொண்டிருப்பது.

ஆனால் இதைக்குறித்து யாரும் சிந்திப்பதாகத் தெரியவில்லை. எல்லோரும் லாப நட்டக் கணக்கைப் பார்க்காமலே (தனிப்பட்ட வாழ்க்கையில் மிகத் திறமையாக லாப நட்டக்கணக்கை ஒவ்வொருவரும் பார்த்து விடுகிறார்கள்) கண்மூடித்தனமாக இந்தப் பயனற்ற தலைமைகளுக்குத் தங்களின் பலத்தையும் வளத்தையும் தாரை வார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

இதனால், தாங்கள் நம்புகின்ற, தங்களுக்கு விரும்பமானவற்றிலிருந்து (இந்தக் கட்சிகளையும் தலைமைகளையும் விட்டு) இலகுவில் வெளியே வரமுடியாமலிருக்கிறது. இதனால்தான் மக்களுடைய எந்தக் குறைபாடுகளும் தீர்வைப் பெறாமல் தொடர்கின்றன. மக்களுடைய அனைத்துப் பிரச்சினைகளும் அப்படியே உள்ளன.

போதாக்குறைக்கு மேலும் பல பிரச்சினைகளும் குறைபாடுகளும் பெருகிக் கிடக்கின்றன. மிகச் சாதாரணமான சமூகப் பிரச்சினைகளைக் கூடத் தீர்க்க முடியாமல் சீரழிந்து கிடக்கிறது தமிழ்ச்சமூகம். பாடசாலைகளில் கூட பாலியல் துஸ்பிரயோகங்கள் நடக்கின்ற அளவுக்கு எல்லாமே கெட்டு விட்டன.

மணல் அகழ்வு, காடழிப்பு – கள்ள மரம் வெட்டுதல் தொடக்கம் போதைப் பழக்கம், போதைப் பொருள் வியாபாரம் என அனைத்து நிலைகளிலும் சீரழிந்து கிடக்கக் காண்கிறோம்.

ஆனால், தங்களைச் சுற்றிய நெருக்கடிகளிலிருந்து விடுபட வேண்டும். ஒடுக்குமுறையிலிருந்து விடுதலையடைய வேண்டும் என்றே கடந்த ஐம்பது வருடங்களாக தமிழர்கள் பெரும் போராட்டத்தை நடத்தினர். இதற்குப் பதிலாக இன்று பெற்றிருப்பது, ஆளுமையற்ற தலைமைகளும் அக்கறையற்ற கட்சிகளும் சீரழிந்த சமூக நிலையும் நெருக்கடியான வாழ்க்கையுமே.

இதை மாற்றியமைக்க வேண்டும் என்றால்.. அதிகமாகச் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை. முதலில் தமிழ்ச் சமூகத்துக்கு விரோதமாகச் செயற்படுகின்ற தலைமைகளிலிருந்தும் கட்சிகளிடமிருந்தும் விடுதலையாக வேண்டும். அதாவது மக்களை ஏமாற்றும் கூட்டத்திலிருந்து விடுதலையாக வேண்டும். இது 1970 களின் இறுதியில் இளைஞர் இயக்கங்கள் எடுத்த தீர்மானத்துக்கு நிகரானது. ஆனால், வரலாறு அதையே திரும்பவும் நிர்ப்பந்திக்கிறது. அதேவேளை கடந்த கால வரலாற்றுப் படிப்பினைகளிலிருந்து நாம் பாடங்களைப் படித்துக் கொள்ள வேண்டும். மீண்டும் சறுக்கும் அரசியலைத் தெரிவு செய்யாமல், வெற்றியைப் பெறுவதற்கான சமத்துவ அரசியலை, ஜனநாயக அரசியலை, அறிவு பூர்வமான அரசியலை, விடுதலைக்கான அரசியலைச் செய்ய வேண்டும்.

அது ஒன்றே வழி. மக்கள் விரோத கட்சிகளிலிருந்து மக்கள் தூரமாக வேண்டும்

**கருணாகரன் ...✍**






# கண்டி அரசன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் அடைக்கப்பட்டிருந்த கோட்டை சிறை

இலங்கையின் இறுதி அரசர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கைது செய்யப்பட்டு இறுதியாக வைக்கப்பட்டிருந்த சிறைக்கூடம் இன்றும் அதன் நினைவாக கோட்டையில் இருப்பதை அறிவீர்கள். கொழும்பு கோட்டையில் ஜனாதிபதி மாவத்தையில் செலிங்கோ கட்டிட "ஆகாச கடே" யோடு சேர்ந்தாற்போல் (மத்திய வங்கி கட்டிடத்துக்கு முன்னால்) அதன் வாசலில் சிறு அறை இன்றும் அப்படியே காட்சிக்கு உள்ளது. பெரிதாக எவரினதும் கவனத்தை ஈர்க்காத அந்த நினைவுச் சின்னம் கொழும்பில் உள்ள முக்கிய நினைவுச் சின்னங்களில் ஒன்று எனலாம்.

இலங்கையில் அரச ஆட்சியானது அனுராதபுர யுகத்தில் இருந்து ஆரம்பிக்கிறது. அது கண்டி அரசாட்சியில் வந்து முடிந்தது. 2298 வருடகால அரசாட்சி அத்துடன் முடிவுக்கு வந்தது. அதன்படி, ஸ்ரீ விக்கிரம ராஜசிங்க மன்னன் இலங்கையின் கடைசி அரசனாகக் கருதப்படுகிறார். அவர், கி.பி. 1798 இலிருந்து 1815 வரையான 17 ஆண்டுகாலம் மட்டுமே ஆண்டார். அவரின் ஆட்சி இயற்கையாக நிறைவுக்கு வரவில்லை.

இறுதியாக கண்டியை மாத்திரம் போர் புரிந்து கைப்பற்ற முடியாமல் தொடர் தோல்வியை சந்தித்து வந்த ஆங்கிலேயர் கண்டியை மிகவும் தந்திரமாக கைப்பற்றினார்கள். ஆண்டுக்கணக்காக உளவு வேலை பார்த்து, அரசவைக்குள்



உட்பூசலை ஏற்படுத்தி அரசர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனுக்கு எதிராக சதி செய்து அந்த ஆட்சியைக் கைப்பற்றினர். குறிப்பாக தமிழ் அரசன் என்றும், தெலுங்கு நாயக்கன் என்றும் சிங்கள அரச பிரதானிகளிடம் வன்மமான இனப் பிரிவினைவாதத்தைத் தூண்டி வெறுக்கச் செய்து இறுதியில் கண்டி பலவீனமாகிவிட்டதை உறுதி செய்துகொண்டு தான் கண்டியை இறுதியாக ஆக்கிரமித்தனர். அப்போது கண்டி அரசர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் பின் வாங்கி தலைமறைவானார். அதற்கு முன்னரும் அரசர் இப்படி பின்வாங்கியிருக்கிறார். அந்த சந்தர்ப்பங்களில் ஆங்கிலேயருக்கு கண்டியில் கைப்பற்றுவதற்கு சில உடைமைகள் மட்டுமே இருந்தன. நிலத்தைக் கைப்பற்றியவர்களால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை. கைப்பற்றிய கண்டியைத் தக்கவைத்துக் கொள்ள படைபலமும் இருக்கவில்லை. ஆனால் இம்முறை அப்படியல்ல அரசருக்கு அவருடன் கூட இருந்த மந்திரிகளே துரோகம் இழைத்திருந்தனர். ஆங்கிலேயர்களுக்கு அரசரைத் தவிர அனைத்தும் இருந்தது. அரசர் தனிமைப்பட்டார்.

18, பெப்ரவரி 1815 கண்டியை ஆக்கிரமித்த அன்றைய பிரிட்டிஷ் தேசாதிபதி சேர் ரொபர்ட் பிரவுன்ரிக் கண்டியின் மீது படையெடுத்து கைப்பற்றினார். இந்தப் போரில் "தமிழரிடமிருந்து சிங்களவர்களை மீட்கும் யுத்தம்" என்கிற தோரணையில் தான் ஆங்கிலேய பிரச்சாரங்கள் அமைந்தன. பெப்ரவரி 19ம் திகதி அரசர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் கண்டி உடப்பிட்டிய போமுறேயில் ஒரு சிறு வீட்டில் குடும்பத்துடன் தலைமறைவாக இருந்த போது சுற்றி வளைக்கப்பட்டு கைது செய்யப்பட்டார்.

கண்டியைக் கைப்பற்றும் நீண்டகால முயற்சியின் பிரதான சூத்திரதாரியான ஜோன் டொயிலி பெப்ரவரி 19ஆம் திகதி எழுதிய நாட்குறிப்பில்;

"சிங்கள தேசத்தின் மன்னன் தற்போது எமது கைதி. நேற்று பின்னேரப் பொழுதில் துப்பாக்கிகள் சகிதம் அங்கு சென்ற எமது படை தும்பறையில் மன்னரைக் கைது செய்தது. அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. சிலர் துப்பாக்கிச் சூடுகளுக்கு இலக்காகினர். ஏனையோர் தப்பியோடினர். மன்னனின் தாயாரும், இரண்டு மனைவியரும் ஹங்வெல்லையில் இருந்ததனால் அவர்களையும் பிடித்து வருமாறும், சகல நாயக்கர் உறவினர்களையும் சரணடையுமாறும் தகவல் அனுப்பியுள்ளேன்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு கண்டி ராஜ்ஜியம் முடிவுக்கு வந்துவிட்டதை உறுதி செய்துகொண்டு கண்டி ராஜ்ஜியத்தைக் காட்டிக்கொடுத்த பிரதானிகளுடன் ஆங்கிலேயர்கள் மார்ச் 2 அன்று ஒப்பந்தம் செய்துகொண்டனர். இதைத் தான் கண்டி ஒப்பந்தம் என்கிறோம். இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கண்டி சிங்கள மந்திரிகளும் ஆங்கிலேயர்களும் மீண்டும் அரசரோ அவரின் பரம்பரையைச் சேர்ந்த எவரையுமோ நாட்டில் விட்டுவைக்கக்கூடாது என்றும் அவர்கள் அனைவரும் நாடுகடத்தப்படவேண்டும் என்றும் ஒப்பந்தம் செய்துகொண்டனர். தமிழ் நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த அனைவரும் வேட்டையாடப்பட்டனர்.

அந்த உடன்படிக்கை 12 பிரமாணங்களைக் கொண்டது. ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் அரச போகத்தை இழப்பதுடன், இனி அந்த வம்சாவளியை சேர்ந்த எவருக்கும் ஆளும் உரிமை இல்லை என்றும், அவர்களில் எவரும் கண்டி பிரதேசத்துக்குள் நுழைந்தால் மரண தண்டனை நிறைவேற்றுவது குறித்தே முதல் மூன்று பிரமாணங்களும் பேசுகின்றன.

சொந்த தேசத்து மன்னரை விரட்டிவிட்டு அந்நிய ஆக்கிரமிப்பு பேய்களிடம் மொத்தமாக தம்மை ஒப்படைத்த கதை விசித்திரமானது. சொந்த மன்னனை அந்நியன் என்று தூற்றி அவரை விரட்ட செய்த சதி இறுதியில் உண்மையான அந்நியனிடம் தேசத்தை காவு கொடுக்கச் செய்தது. அந்த வகையில் கண்டி ஒப்பந்தம் இலங்கையின் மரண சாசனம் தான். மொத்த இலங்கையையும் 150 ஆண்டுகள் தாரைவார்த்தது இப்படித்தான்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு கொழும்பு கொண்டுவரப்பட்ட அரசர் தற்காலிகமாக வீட்டுக் காவலில் அடைக்கப்பட்டார். அந்த இடத்தில் தான் தற்போது ஆகாச கடே அமைந்திருக்கிறது. இலங்கையின் இறுதி மன்னர் நாடுகடத்தப்படுவதற்கு முன்னர் இறுதியாக இருந்த இடம் என்பதால் இந்த இடம் ஒரு தொல்லியல் முக்கியத்துவத்தைக் கொண்ட இடம் எனலாம். தற்போதுகாணப்படும் சிறைக்கூடம் சுமார் 8 x 8 அடிகளைக் கொண்ட சிறு கூடம் தான். கம்பிகளைக் கொண்ட கதவுடனும், கம்பி ஜன்னல்களுடனும் அது காணப்படுகிறது. உள்ளே அரசர் ராஜசிங்கன், இராணி ரெங்கம்மாள் ஆகியோரின் படங்கள் உள்ளன. அவர்கள் நாடுகடத்தப்பட்ட கப்பலின் படமும், அன்றைய ஆங்கிலேய ஆளுநர் பிரவுன்றிக், தலதா மாளிகை என்பவற்றின் ஓவியங்களும், வேலூரில் அவரின் கல்லறையைக் குறிக்கின்ற ஓவியமும் இருக்கின்றன. வெளியில் அரசரின் பாதி உடலைக் கொண்ட சிலை உள்ளது.

அந்த சுவரில் ஒரு கல்வெட்டும் உள்ளது அதில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் தான் எழுதப்பட்டிருக்கிறது. அதில் இப்படி எழுதப்பட்டிருக்கிறது.

"சிங்கள அரசவம்சத்தில் இறுதியாக கண்டி இராஜதானியை 1796 – 1815 வரை ஆண்ட மன்னர் ஸ்ரீ விக்கிரமசிங்கனும் அவரின் துணைவிகளும் 1815 பெப்ரவரி 19ஆம் திகதி ஆங்கிலேயர்களால் கைது செய்யப்பட்டு இந்தக் காணியில் உள்ள கட்டிடத்தில் சிறைவைக்கப்பட்டிருந்ததன் நினைவாக" என்று அதில் எழுதப்பட்டிருக்கிறது.

அரசர் இங்கே 11 மாதங்கள் சிறை வைக்கப்பட்டிருந்தார் என்று இதற்குப் பொறுப்பாக இருந்த கப்டன் ஓ.பிரையன் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த சிறையில் தான் அக்காலம் முழுவதும் இருந்தார் என்கிற ஒரு மாயை இன்று வரை நம்பவைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் இந்த சிறிய சிறைக் கட்டிடம்.

இந்த நிகழ்வுகளின் போது சாட்சியமாக இருந்தவர் டொக்டர் ஹென்றி மார்ஷல். அவர் பிரிட்டிஷ் படையில் ஒரு சத்திரசிகிச்சை வைத்தியராக கடமையாற்றியவர். அவர் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் இராணுவ வைத்தியசாலைக்கு பிரதிப் பொலிஸ் மா அதிபராக (Deputy Inspector General of Army Hospitals) இருந்தவர். அவர் எழுதிய "Ceylon: a general description of the island and its inhabitants, with a historical sketch of the conquest of the colony" என்கிற நூல் ஆங்கிலேயர்கள் இலங்கையைக் கைப்பற்றிய தொடக்கக் காலத்தின் பல துல்லியமான விபரங்களைப் பதிவு செய்கிறது. அரசரோடு அவருக்கு ஏற்பட்ட சம்பாசணைகள் பற்றியெல்லாம் அந்நூலில் குறிப்பிட்டுள்ளார். அரசர் தன்னிடம் இலங்கை அனுபவம் பற்றியும், இங்கிலாந்தில் அவரின் வீடு, குடும்பம் பற்றியெல்லாம் கேட்டறிந்தார் என்றும் அந்நூலில் குறிப்பிடுகிறார்.

அவரின் நூலில் தரும் விளக்கங்களின் படி அரச குடும்பத்தினர் சிறிய சிறைக்கூடத்தில் அடைத்து வைக்கப்படவில்லை என்று தெரிகிறது. அவர்கள் கொழும்பில் வீட்டுக் காவலில் தான் வைக்கப்பட்டிருந்தார்கள் என்கிறார் அவர்.

உள்ளே நுழையும் போதே அரசர் அதைப் பார்த்துவிட்டு ""நான் இனி அரசராக இல்லாதபோதும் என்னிடம் காட்டப்படுகிற கருணைக்காகவும் அக்கறைக்காகவும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றாராம்.

அப்படியென்றால் அவர்கள் வைக்கப்பட்டிருந்த வீடு எது? எங்கே அது இருந்தது? பிரபல வரலாற்று ஆசிரியர் ஆர்.எல்.புரோஹியர் இதைப் பற்றி சில மேலதிக விபரங்களைத் அவரின் "Changing Face of Colombo" என்கிற நூலில் தருகிறார். அப்போது கோட்டைப் பகுதியில் ஒல்லாந்தர்களின் டச்சு வீடொன்று இருந்தது. பின்னர் அந்த வீட்டை டார்லி பட்லர் கட்டிடக்காரர்கள் (Darley Butler building) தமதாக்கிக்கொண்டார்கள். அது தான் அதற்குப் பின்னர் செலிங்கோ கட்டிடமாக ஆனது என்கிறார் அவர். இந்த நிகழ்வு நடப்பதற்கு 19 ஆண்டுகளுக்கு முன்னர் வரை டச்சுக்காரர்கள் தான் ஆண்டார்கள். எனவே இந்த வீடும் டச்சு வீடு என்று கூறுவதை நம்பமுடிகிறது.

1860 களில் கட்டப்பட்டிருந்த டார்லி பட்லர் கட்டிடம் 1960களில் இடிக்கப்பட்டு செலிங்கோ கட்டிடம் அங்கே கட்டப்பட்டது.

தற்போது நினைவிடமாகக் கூறப்படும் சிறைக்கூடம் உண்மையில் அவர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாக சொல்லப்படும் சிறைக்கூடம் அல்ல. இதற்கு சான்றாக இரு புகைப்படங்களை ஆய்வாளர்கள் முன்வைக்கிறார்கள். 1920இல் இராணி வீதியின் புகைப்படத்தில் இந்தக் கட்டிடத்தின் வாயிலில் மதிலுக்கு உள்ளே ஒரு காவல் அறை ஒன்று இருக்கிறது. 1950களில் செலிங்கோ கட்டப்பட்டபோது அந்த காவலரண் தான் அரசர் சிறை வைக்கப்பட்டிருந்ததன் நினைவாக கட்டப்பட்டிருக்கிறது.

1950கள் என்பதானது சுதந்திரம் அடைந்த புதிய தசாப்தம். சுதந்திரத்தின் அடையாளமாக அந்நிய அடையாளங்களை நிராகரித்து சுதேசிய அடையாளங்கள் பிரதியீடு செய்யப்பட்டு வந்த காலம். உதாரணத்திற்கு 1958இல் விக்டோரியா பூங்கா; "விகாரமகாதேவி பூங்கா" என்று பெயர் மாற்றம் கண்டது. இராணி வீதி; "ஜனாதிபதி மாவத்தை என்றும் இராணி மாளிகை; ஜனாதிபதி மாளிகை என்றும், கோர்டன் பூங்கா "குடியரசு சதுக்கம்" என்றும் பெயர் மாற்றப்பட்டன. காலனித்துவ அராஜகத்தின் நினைவாக இப்படித்தான்


இப்புகைப்படம் எடுக்கப்பட்ட போது பழைய பாராளுமன்றக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கவில்லை.

அரசர் சிறைப்படுத்தப்பட்டிருந்ததன் அடையாளமாக அந்தக் கட்டிடத்தின் அருகில் சிறிய சிறைக் கூடம் வடிவில் இது அமைக்கப்பட்டது. ஆனால் இன்றும் அந்த சிறிய சிறையறையைக் கண்டதும் இந்த சிறிய கொட்டிலில் தான் ஆரசர் வைக்கப்பட்டிருந்தார் என்று நம்பி பரிதாபத்தையும், ஆத்திரத்தையும் கொட்டிவிட்டு போகும் போக்கு இருக்கிறது.

1756இல் வரையைபட்ட கொழும்பு கோட்டையின் வரைபடத்தில் இந்த இடம் டச்சு குடியிருப்புகளைக் கொண்ட இடமென துல்லியமாகத் தெரிகிறது. இக்கட்டிடத்தோடு அருகில் "டச்சு ஹொஸ்பிட்டல்" அமைந்திருக்கிறது. 1904இல் வரையப்பட்டுள்ள இந்தப் பகுதியின் வரைபடத்தில் அங்கே டார்லி பட்லர் கட்டிடம் இருந்ததைக் காட்டுகிறது. இந்த விபரத்தின் உண்மைத்தன்மையை ஆராய்ந்த புரோஹியர் இது அன்றைய காவலரண் (guardhouse) தான் என்று உறுதியாகக் கூறுகிறார்.

அரசரும் அவரின் குடும்பமும் மார்ச் 4ஆம் திகதி கைதிகளாக கொழும்புக்கு கொண்டு வரப்பட்டார்கள். 24.01.1816 அன்று அவர்கள் HMS Cornwallis என்கிற கப்பலின் மூலம் தமிழகத்திலுள்ள வேலூருக்கு நாடு கடத்தப்பட்டார்கள். ஆங்கிலேயர்களால் கௌரவமாக நடத்தப்பட்டார்கள் என்பதற்கான பதிவுகள் நிறையவே உள்ளன.


ராஜசிங்கன் அடைத்து வைக்கப்பட்ட இடம்

எழுபத்து நான்கு பீரங்கிகளையும் நான்கு படகுகளையும் தன்னகத்தே கொண்டிருந்த கோன்வொலிஸ் யுத்தக் கப்பலின் படகுகள் கரையை நோக்கி வந்தன. நங்கூரமிடப்பட்டுருந்த கப்பலை நோக்கி அரசனும் துணைவியாரும், தாயாரும், மன்னனின் மாமியாரும் செல்வதற்காக இப்படகுகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன. அரச குடும்பத்திற்கு பிரிட்டிஷ் கடற்படையின் அதியுயர்ந்த மரியாதை நிமித்தம் தலைமை கேப்டனின் படகு நீலவண்ணத்தினாலும் மாலைகளினாலும் அலங்கரிக்கப்பட்டு இருந்தன. படகை ஓட்டும் கடற்படைச் சிப்பாய் விசேடமாக அலங்கரிக்கப்பட்ட உடைகளுடன் காட்சி தந்தான். அரசரும் மிக அமைதியாகவும், மகிழ்ச்சியோ, கவலையோ வெளியில் தெரியாத சாந்தமூர்த்தியாக படகில் ஏறலானார். ஆனால் அரசரின் துணைவியர் உட்பட பெண்கள் அனைவரும் துயரம் நிறைந்த முகத்துடனும் இனந்தெரியாத ஒரு பீதிக்கு ஆட்பட்டவர்களாகவும் காணப்பட்டனர்.

மன்னனும் ஏனையோரும் படகில் அமரும் போது திடீரென அரசனின் முகத்தில் இனம்புரியாத துக்கம் வெளிப்பட்டதாக ஹென்றி மார்ஷல் குறிப்பிடுகிறார். சிறுவயது முதல் இம்மரகதத் தீவின் மத்திய மலை நாட்டின் இதமான சுவாத்தியமும் மலைகளும் குன்றுகளும் ஆறுகளும் அருவிகளும், மலர்ச்சோலைகளும் வயல்வெளிகளும் கனிதரும் மரங்களும் அடர்ந்த வனங்களும் குரங்கு யானை முதல் அனைத்து சீவராசிகளும், இரத்தினம் விளையும் பூமியும் தன்னை நேசித்த பரந்து விரிந்த கண்டி இராசதானிக்குள் வாழும் சகல இனத்தவர்களும் அமைச்சர்கள், பிரதானிகள், திசாவைகள், மாவட்ட, வட்ட ஆட்சியாளர்கள், போர்ப்படைவீரர்கள் இலக்கியவாதிகள், வைத்தியர்கள், அரண்மனை ஊழியர்கள் என அனைவரையும், அனைத்தையும் அவன் ஒரு கணம் நினைத்துப் பார்த்தபோது அவன் மனம் நெகிழ்ந்தது. கண்கள் கலங்கின.

தனக்கே உரித்தான தைரியத்தினாலும் மன உறுதியினாலும் பீறிட்டு வந்த அழுகையை மனதுக்குள்ளேயே அடக்கிக்கொண்டும் இரண்டுகைகளையும் மார்பின் மீது வைத்துக்கொண்டும் தலையை அலங்கரித்து தலைக்கவசத்தை அப்புறப்படுத்தியவனாக விண்வெளியை உற்று நோக்கியவாறு சில நிமிடங்கள் தியானம் புரிவது போன்று தன்னை மறந்தவனாய் எழுந்து நிற்கலானான். இக்காட்சியைக் கண்ட ஆங்கிலேய உயர் அதிகாரிகள் உட்பட, அனைவருமே தமது தொப்பிகளைக் கழற்றிவிட்டு நிமிர்ந்து நின்று இராஜசிங்கனின் அந்த மெய்மறந்த நிலைக்கு கைகொடுத்தனர் என்கிறார் ஹென்றி மார்ஷல்.

அதன்பின்னர் அனைத்தையும் மறந்தவனாய் சிரித்த முகத்துடன் இருக்கையில் அமர்ந்தார் மன்னர். சரியாக மாலை 4.15க்கு படகு தன் பயணத்தை ஆரம்பித்தது.

மன்னர் இராஜசிங்கனை கடல்வழியே அழைத்துச் செல்லும் பொறுப்பை ஏற்றிருந்த வில்லியம் கிரென்வில், அரச குடும்பத்தின் பொருட்களுடனும் ஊழியர்களுடனும் ஏனைய படகுகள் மூலம் அங்கே நக்கூரமிடப்பட்டிருந்த கப்பலை நோக்கி பயணமானார்கள். செல்லும் வழியில் கப்பலிலேயே ஒரு மனைவி இறந்து போனார். வேலூரில் திப்புசுல்தானின் மைந்தன் இருந்த அரண்மனையில் இருத்தப்பட்டனர். அங்கேயே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். மனைவி ரெங்கம்மாள் மூலம் மன்னருக்கு மூன்று குழந்தைகள் பிறந்தன. ஆங்கிலேய அரசு வழங்கிவந்த சிறிய தொகை பணத்தில் வாழ்க்கை நடத்தி வந்தார். இறுதியில் 16ஆண்டு கால சிறைவாசத்தின் பின் நீர்வீக்க நோயால் 30.01.1832 அன்று தனது 52வது வயதில் இறந்தார் மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன். அவருக்காக ஒரு கல்லறையையும் வேலூரில் அமைத்திருக்கிறார்கள்.

இலங்கை முழுமையாக அந்நியர் கைகளுக்கு போய்ச்சேர காரணமாக இருந்த கெப்பட்டிபொல, எஹெலபொல போன்றவர்கள் தேச பக்தர்களாகவும், தேசிய மாவீரர்களாகவும் ஆக்கப்பட்டார்கள்.

ஆனால் நான்கு பரம்பரைகளாக அந்நியர்களுடன் போரிட்டு நாட்டைப் பாதுகாத்து, சிங்கள பௌத்தத்துக்கு விசுவாசமாக இருந்த மன்னர் அந்நியரிடம் பிடித்துக் கொடுக்கப்பட்டார். குற்றவாளியாக்கப்பட்டார். மன்னரும் அவர் குடும்பத்தினரும் குற்றவாளிகளாகவே சாகும்வரை சிறையில் இருந்து செத்தே போனார்கள். சுதந்திரத்தின் பின்னர் எஞ்சியிருந்தவர்களும் வேலூரில் வறுமையில் வாடி அழிந்தே போனார்கள்.

கண்டியின் அடையாளமாக இருக்கும் தலதா மாளிகையின் "பத்திருப்பு", கண்டி வாவி என்பவற்றையெல்லாம் குறுகிய காலத்தில் கட்டியவர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் தான். கண்டி தலதா மாளிகையில் புத்தரின் தாதுப்பல் அடங்கிய கலசத்தை புனிதப்படுத்தி வைப்பதற்கான தனி தங்கக் கோபுரத்தை அவர் தான் கட்டினார். இவ்வாறு இலங்கையில் பௌத்தர்களால் உச்ச அளவில் கொண்டாடும் அந்தப் புனித பெரஹரவுக்கு முக்கிய காரணமாக இருந்தவர் மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன்.

சக சகோதர இனத்தவர்களுக்கு அரசாட்சி போய்விடக்கூடாது என்பதற்காக தாம் செய்த சதியில் தாமே விழுந்த கதை தான் 1815 இல் நிகழ்ந்தது. சொந்தச் செலவில் தமக்கே செய்த இந்த சூனியத்தில் நாடிழந்து, அதிகாரமிழந்து, இறைமை இழந்து இறுதியில் உயிரையும் இழந்தனர்.

மன்னர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் நினைவிடமாக இன்று நமக்கு எஞ்சியிருப்பது இந்த சிறு சிறைக்கூட சின்னம். அதில் தான் அவர் வைக்கப்பட்டிருக்காவிட்டாலும் கூட அதனருகில் இருந்த கட்டிடத்தில் வைக்கப்பட்டிருந்ததற்கான அடையாளமாக நாம் அதனைப் பார்க்கலாம். கொழும்பில் நாம் நினைவுகொள்ளவேண்டிய முக்கிய இடங்களில் ஒன்று இது.

# உள்ளது உள்ளபடி...சிற்றிதழ் ஒன்றில் சீமேந்து

சிற்றிதழ் ஒன்றில் 'சீமேந்து' எப்படி வந்தது என்பதை உள்ளதை உள்ளபடி விபரிக்க முன், பின் காணப்படும் ஆங்கிலப் பதங்கள் 32யும் பார்த்துப் பதித்துக் கொள்ளுங்கள்.

Traffic block, Route, Head Baas, Mason, Bag, School, Current, Pension, Arrears, Slab, Fund, Hardware, Container, Town, Baas, Dollar, Serious, Leave, Gas, Cylinder, Loan, Potty, Wiring, Bathroom, Kitchen, Room, Season, Try, Paper, Permit, Road, Motorcycle.

தமிழ் வாசக அபிமானிகள் என் பேனையை நம் பித்தானாக வேண்டும்.

32 ஆங்கில பதங்களும் ஒரு தமிழ்ச் சிறுகதையில் இடம் பெற்றுள்ளன. பெயர்: "சீமேந்து".

'சீமேந்தா' சீமெந்தா' அல்லது 'சீமெந்தி'யா சரி என்ற ஆய்வில் நுழையப் பொழுதின்றி, தமிழ்ச்சிறுகதை ஒன்றில் அவசியத்தேவை எதுவுமின்றி ஆங்கிலம் நுழைந்து வதைப்பது ஏன் என்ற இந்த மூத்த பேனையின் புலம்பலே இது

புனைகதை 'சீமேந்து'வின் ஆரம்ப இரண்டாம், மூன்றாம், நான்காம் பந்திகளை வாசிக்கத் தருகின்றேன். அது கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் வழியில் மலைநாட்டின் தொட்டிலென அழைக்கப்படும் பிரதேசம். வீடு அமைந்துள்ள இடத்திலிருந்து கண்டி வீதிக்கு ஒரு கிலோமீற்றர் இருக்கும்.

அத்தனகல பகுதியிலிருந்து கண்டிப் பக்கம் போகும் வாகனங்கள் "டிராபிக் புலொக்"கைத் தவிர்ப்பதற்காக, பஸ்யால வழியாகப் போகாமல் அல்கம ஊடாகப் போவதும் இந்த 'ரூட்'டில் தான். நேரே போனால் ஹொர்கஸ்மங்கட சந்தியில் விழும். அவன் இயற்கை அழகை ரசித்துப் பருகிக் கொண்டிருந்தான். கவிதைப் பிரியனான அவனுள்ளத்தில் கவிதையடிகள் பிறந்தன.

"இயற்கையின் விருந்து
கவலைகளுக்கு மருந்து
அதை நீ
அனுபவித்து அருந்து"

இயற்கைக் காட்சிகளில் தன்னை மறந்திருந்தவன் ஹெட்பாஸின் குரல் கேட்டுத் திரும்பினான்.

மேலே வாசித்த வரிகளின் வழி, கதைக் கதாநாயகன் கவிதைப்பிரியன், கவிதையும் அவனுக்கு வரும் என்று புரிய முடியும்.

புரிய முடியாதது, ஏன் அவன் ஆங்கில மோகியாகவும் இருக்கிறான் என்பது.

மூன்றரைப் பக்கத்தில் வெகு தாராளமாக 32 ஆங்கில வார்த்தைகள் அரங்கேற்றம்!

அதுவும், பேக் (Bag) ஸ்கூல், கரெண்ட், பண்ட், சீரியஸ், லீவு, வயரிங், பாத்றூம், கிச்சன், பர்மிட், மோட்டார் சைக்கிள், போன், டிராபிக் புளக், ரூட், பென்சன், எரியர்ஸ், டவுன், லோன், கண்டெய்னர், கேஸ் (Gas) போன்றவற்றுக்கு அருமையான தமிழ் வழக்கிலிருக்க, ஆங்கிலத்தை அள்ளி வீசுகிறான் வாசிப்பவர் நெஞ்சில்!?

மற்றுமொரு பேரதிர்ச்சி, கதையை நமக்கு வழங்கியிருக்கும் எழுத்தாளரும் ஒரு கவிஞனே! கலாபூஷணமே!

நல்லது. அவரை ஒருபுறம் ஓரமாக நிற்க வைத்து விட்டு, கதையைப் பிரசுரித்துள்ள இதழ் எதுவென பார்த்தால் அதுவும் அதிர்வலைகளே!

புராதனத் தலைநகர் ஒன்றின் பக்கம் உள்ள ஊரொன்றிலிருந்து, தமிழ் இலக்கியம், தமிழ் ஆர்வம் மேலிட்ட இளைஞர்கள் சிலரால் (2003) வெளியிடப்பட்டு வரும் இருமாத இலக்கிய இதழ் அது. சில மாதங்களுக்கு முன்பு மற்றொரு பிரபல இலக்கிய சஞ்சிகை நிறுவனரின் பிறந்த தினத்தில் விருது வழங்கியும் பாராட்டுப் பெற்றது.எழுத்தாளர்தான் அப்படி ஆங்கிலத்தை அவசியமின்றி திணித்தார் என்றால், தமிழ் ஆர்வம் மிகுந்த இலக்கிய இளைஞர்கள் இடம் கொடுத்திருக்கலாமா?

உள்ளது உள்ளபடியே உள்ளம் நொந்து மூத்த பேனை உழுது களைத்துப் போகிறது. ஓய்வெடுக்க அனுமதியுங்கள்.

தமிழ்மணி மானா மக்கீன் ...

# நம்மிலிருந்து உலகிற்கு

# காலநிலை நெருக்கடியிலிருந்து உலகைக் காப்பாற்ற உலகிற்கு இலங்கை வழங்கும் பங்களிப்பு

**இதன்படி காலநிலை நெருக்கடியை வெற்றிகொள்வதற்கான உலகளாவிய முயற்சியின் ஒரு பகுதியான தேசிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகளை அவ்வாறே செயற்படுத்துவது ஒவ்வொரு நாட்டினாலும் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கு இலங்கையினால் வழங்கப்படும் பங்களிப்பானது எமது நாட்டிற்கு மட்டுமல்லாது முழு உலகினதும் உயிர்வாழ்க்கை நிலைப்பிற்காக நாம் வழங்கும் பங்களிப்பாகும். இங்குதான் 'நம்மிலிருந்து உலகிற்கு' எனும் தொனிப்பொருள் உருவாகின்றது. நம் குழந்தைகளுக்கு நாம் எவ்வாறானதொரு எதிர்காலத்தை வழங்குகின்றோம் என்பதை இது தீர்மானிக்கின்றது.**

**எனவே, இதற்காக நாம் என்ன செய்துகொண்டிருக்கின்றோம் என்பதும் என்ன செய்யவேண்டும் என்பதும் ஆராய்ந்து பார்க்க வேண்டிய விடயங்களாகும். இலங்கையின் பல்வேறு துறைகள் மற்றும் விடயங்களில் தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் நீண்ட செயல்முறைக்கு பிறகு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இரண்டு வகையான பங்களிப்புகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று பச்சை வீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கானதாகும். மற்றொன்று காலநிலை மாற்றத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளுக்கு எவ்வாறு இசைவாக்கப்படுதற்கான பங்களிப்பு.**



### ஒரு புதிய யதார்த்தம்

காபனீரொட்சைட்டு, மீதேன், நைதரசன் ஒட்சைட்டு மற்றும் ஓசோன் போன்ற பச்சைவீட்டு வாயுக்களின் செறிவு அதிகரித்துக்கொண்டு செல்வதால், உலகின் சராசரி வெப்பநிலை படிப்படியாக அதிகரித்துச் செல்கின்றது. இந் நிலைமை காரணமாக உலகின் பொதுவான வானிலை நிலைமைகளில் ஏற்படும் நீண்டகால மாற்றம் 'காலநிலை மாற்றம்' என அழைக்கப்படுகின்றது.

இந்த நிலைக்கு பிரதான காரணமாக அமைவது மனிதனால் வெளியிடப்பட்ட பச்சைவீட்டு வாயுக்களே என்பதால் அது 'மனிதனால் உருவாக்கப்பட்ட' (anthropogenic) நெருக்கடியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. உலகில் கைத்தொழில் மயமாக்கல் ஆரம்பித்த 19ம் நூற்றாண்டின் மத்திய காலப்பகுதியிலிருந்து மனிதன் அதிகளவில் பச்சை வீட்டு வாயுக்களை வெளியேற்ற தொடங்கினான். பூமியின் மேற்பரப்பின் சராசரி வெப்பநிலையானது 1850-1900 க்கு இடைப்பட்ட காலத்தில் நிலவிய சராசரி வெப்பநிலையை விட 2011-2020 காலத்தில் 1.09 பாகை செல்சியஸினால் அதிகரித்துக் காணப்படுகின்றது. தற்போதைய நிலைப்படி எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வெப்பநிலை தொடர்பாக அறிவியல் ரீதியான எதிர்வுகூறல்கள் வெளியிடப்பட்டுள்ளன. காலநிலை மாற்றம் தொடர்பான நாடுகளுக்கிடையிலான கூட்டமைப்பின் (IPCC) கணிப்பு மதிப்பீட்டின்படி, பச்சை வீட்டு வாயுக்களின் வெளியீடு மிகவும் அதிகமாக காணப்படுமானால் 21ம் நூற்றாண்டின் இறுதியில் உலகின் வெப்பநிலை 3.3 பாகை தொடக்கம் 5.7 பாகை செல்சியஸ் வரையான அளவில் அதிகரிக்கும் சந்தர்ப்பம் உள்ளது. எவ்வாறாயினும், 2050ம் வருடம் அளவில் வளிமண்டலத்தில் சேர்க்கப்படும் பச்சை வீட்டு வாயுக்களின் அளவு மற்றும் வளிமண்டலத்திலிருந்து அகற்றப்படும் அளவு என்பவற்றை சமநிலையில் கொண்டுவந்து 'காபன் நிகர பூச்சியம்' மட்டத்திற்கு கொண்டுவர முடியுமாயின், 21ம் நூற்றாண்டின் முடிவில் உலகின் வெப்பநிலை உயர்வினை 1 பாகை மற்றும் 1.8 பாகை செல்சியஸ் அளவிற்குள் மட்டுப்படுத்தலாம்.

தற்போது ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் உலகின் பல்வேறு துறைகளில் தனது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளப்பெருக்கு, வறட்சி, வெப்ப அலைகள் போன்ற தீவிர நிலைமைகள் ஏற்பட்டுள்ளதுடன் அவற்றின் தாக்கமும் அதிகரித்திருக்கின்றது. உணவுப்பயிர்கள் பலவற்றின் உற்பத்தியில் வெப்பநிலை தாக்கம் செலுத்துகின்றது. கடல் மட்டம் உயர்வதன் காரணமாக கடற்கரை வலயங்களில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அத்துடன் உயிரினங்கள் அழிவடைவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்திருப்பதுடன் தாவரங்கள் மற்றும் விலங்குகளின் பரம்பல் மற்றும் வாழ்க்கை முறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டும் காணப்படுகின்றன. அதனால், இன்றைய காலகட்டத்தில் உலகின் மிக மோசமான சுற்றுச்சூழல் பிரச்சினையாக காணப்படுவது காலநிலை மாற்றமே என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.






மன்னாரில் இலங்கையின் முதலாவது மற்றும் மிகப்பெரிய அரசுக்கு சொந்தமான காற்றாலை மின் நிலையம்: தம்பபவனி மின் நிலையம்

### இலங்கைக்கும் பாதிப்பு

காலநிலை மாற்றத்திற்கு அனைத்து நாடுகளும் ஒரே விதத்தில் பங்களிப்பு செய்யவில்லை எனலாம். பெரும்பாலான வளர்ந்துவரும் நாடுகளைப் போன்றே இலங்கையும் குறைந்தளவான பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தையே கொண்டுள்ளது. இலங்கையில் 2010ம் ஆண்டில் ஒரு வருடத்தில் தனிநபர் ஒருவரினால் வெளியிடப்படும் முழுமையான பச்சை வீட்டு வாயுக்களின் அளவு பொதுவாக 1.02 தொன் அளவிலான மிகச்சிறிய அளவாகும். அவ்வாறே பச்சை வீட்டு வாயுக்களின் இலங்கையின் உலகளாவிய பங்களிப்பு 0.03% அளவில் மிகச்சிறியதாகும்.

காலநிலை மாற்றத்தினால் எமது நாட்டிற்கும் பல்வேறு பாதிப்பு ஏற்பட்டுவருகின்றன. வெப்பநிலை உயர்வு, மழைவீழ்ச்சி பாங்கில் ஏற்படும் வேறுபாடு, தீவிர காலநிலை நிலைமைகள் அடிக்கடி ஏற்படல், கடல் மட்டம் உயர்தல், பவளப்பாறைகள் வெளிறுதல் போன்றன இவற்றுள் சிலவாகும். இவை பல துறைகளில் பாதிப்பினை ஏற்படுத்தலாம். எமது நாட்டிலும் தீவிர காலநிலை நிலைமைகள் அண்மைக்காலமாக அதிகரித்து காணப்படுகின்றன. குறுகிய காலத்தில் கிடைக்கப்பெறுகின்ற அதிகளவான மழைவீழ்ச்சி மற்றும் அதனால் அடிக்கடி வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்ற நிலைமை மற்றும் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்படல் என்பன இதற்கு உதாரணமாக அமைவதுடன், நீடித்த வறட்சி என்பன கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். அதிகளவு வெப்பநிலை மற்றும் வறட்சி காரணமாக தேயிலை போன்ற பெருந்தோட்டப் பயிர்செய்கைக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அவ்வாறே நாட்டின் பிரதான வாழ்வாதார பயிரான நெற்பயிர்ச்செய்கை வெள்ளப்பெருக்கு மற்றும் வறட்சியினாலும் பாதிக்கப்பட்டிருக்கின்றது. உலகளாவிய இடர் சுட்டெண்ணில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய முதல் பத்து நாடுகளுக்குள் அண்மைக்காலத்தில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டிருப்பது இந்த தீவிர காலநிலை மாற்றத்தினாலேயே ஆகும். மேலும், பிற பயிர்கள், சுற்றுலாத் தொழிற்துறை, மீன்பிடித் தொழில், சுகாதாரம், உயிர்ப்பல்வகைமை போன்ற துறைகளும் காலநிலை மாற்றத்தினால் பாதிக்கப்படுகின்றன. மேலும் எதிர்காலத்தில் இந்த நிலைமை இன்னும் தீவிரமடையலாம்.

இந்த வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது 1850-1900 வரையான காலப்பகுதியில் காணப்பட்ட சராசரி வெப்பநிலையை விட அந்தந்த ஆண்டுகளில் உலகின் பொதுவான வெப்பநிலை எவ்வளவு உயர்ந்திருந்தது என்பதனையாகும். நிறுவனங்கள் பலவற்றின் தரவு நிரல்களில் காட்டப்பட்டுள்ளது.

### உலகளாவிய தீர்வு

பூகோள வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாக உலகின் கவனம் திரும்பியதன் பின்னர் 1992ம் ஆண்டில் இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சர்வதேச ரீதியில் ஏற்படுத்தப்பட்ட உடன்பாடு காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கட்டமைக்கப்பட்ட மாநாடு (UNFCCC) என பெயரிடப்பட்டது. அதன் கீழ் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தை குறைப்பதற்காக கியோட்டோ பிரகடனம் 1997ம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. எவ்வாறெனினும் அதன் வெற்றிகரமான நடைமுறைப்படுத்தலில் ஏற்பட்ட சிக்கல்களினை அடுத்து, சர்வதேச ரீதியில் இணைக்கப்பட்ட ஒரு புதிய ஒப்பந்தத்தின் தேவை அங்கீகரிக்கப்பட்டது. அதன் பிரதிபலனாக, 2015ம் ஆண்டில் பாரிஸ் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

பாரிஸ் உடன்படிக்கையின் கீழ் ஒப்புக்கொள்ளப்பட்ட முக்கிய அம்சம் யாதெனில், 2100ம் வருடத்திற்குள் உலகின் சராசரி வெப்பநிலை அதிகரிப்பினை 2 பாகை செல்சியஸ்க்குள் அல்லது முடியுமாயின் 1.5 பாகை செல்சியஸ்க்குள் கட்டுப்படுத்துவதாகும். இது 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் நிலவிய வெப்பநிலையுடன் ஒப்பீட்டளவிலானதாகும். தற்போது உலகின் வெப்பநிலை ஒரு பாகைக்கும் மேலதிகமாக அதிகரித்திருக்கின்றது. அதன்படி பாரிஸ் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை அடையவேண்டுமாயின், பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தை கடுமையான அளவில் குறைப்பது மிகவும் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டியதாகும். அது நடைமுறைப்படுத்துவதற்கு கடினமாக இருப்பினும் செயற்படுத்தக்கூடியதாகும். காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்த்துக் கொள்வதுடன் சுத்தமான காற்று, புதுப்பிக்கத்தக்க சக்திவலு துறைகளில் தொழில்வாய்ப்புகள் அதிகரித்தல் போன்ற பெரும்பாலான பல நன்மைகளை இது பெற்றுக்கொடுக்கும்.

எனவே, பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தை கட்டுப்படுத்த முன்மொழியப்பட்ட பிரதான முறைமை 'தேசிய ரீதியில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு (NDC) செயன்முறையாகும். இதன் கீழ், ஒவ்வொரு நாடும் தன்னிச்சையாக முன்வந்து பச்சைவீட்டு வாயுக்களின் வெளியேறலை குறைப்பதற்கு தங்களால் எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விவரிக்கும் உறுதிமொழியை வழங்கியுள்ளன. எவ்வாறாயினும் ஆரம்பத்தில் கூறப்பட்ட பங்களிப்புகள் பலனளிக்கவில்லை என்பது தெரியவந்ததையடுத்து, ஒவ்வொரு நாடும் மேலதிகமான பங்களிப்பினையும் அர்ப்பணிப்பையும் வழங்கி 2021 ஆண்டில் புதுப்பிக்கப்பட்ட பங்களிப்பை வழங்கியுள்ளன.

உலகிலுள்ள நாடுகள் 2021 இல் வழங்கியுள்ள பங்களிப்பு உறுதிமொழிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி 2022 ஏப்ரல் மாதத்தில் வெளியிடப்பட்ட கணிப்பீட்டின்படி அவை அனைத்தையும் அதே முறைமைகளில் செய்து முடிக்கப்பட்டால் உலகின் சராசரி வெப்பநிலை உயர்வடைவது 2 பாகை செல்சியஸுக்குள் கட்டுப்படுத்தப்படலாம். எவ்வாறாயினும், மிகவும் பொருத்தமான இலக்கான 1.5 பாகை செல்சியஸ் எல்லையை பேணுவது இன்னும் முடியாமலிருக்கின்றது.

### பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைத்தல்

பச்சை வீட்டு வாயுக்களை பெரிய அளவில் வெளியேற்றும் நாடு இல்லை என்பதால், அவற்றைக் குறைக்கும் விஷயத்தில் நம் நாடு செய்யக்கூடிய வேலைகள் குறைவு. எவ்வாறாயினும், ஆறு முக்கிய பகுதிகளில் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.



#### போக்குவரத்து துறை

இந்த நாட்டில் அதிக அளவு பசுமை இல்ல வாயு வெளியேற்றத்திற்கு போக்குவரத்து துறை பங்களிக்கிறது. மக்களின் போக்குவரத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், துறையின் மாசுவைக் குறைப்பது சவாலாக உள்ளது. அந்த நோக்கத்திற்காக, போக்குவரத்துத் தேவைகளைக் குறைத்தல், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதை பிரபலப்படுத்துதல், குறைந்த அல்லது உமிழ்வு இல்லாத போக்குவரத்து வழிமுறைகளை மேம்படுத்துதல் மற்றும் சாலை அமைப்புகளை மேம்படுத்துதல் ஆகியவை இந்த நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் உத்திகளில் அடங்கும்.



#### சக்திவலு துறை

பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தில் சக்திவலு முக்கிய பங்களிப்பாகவும் உள்ளது. இத்துறையில் உமிழ்வைக் குறைப்பதற்காக, உயிர்ச்சுவட்டு எரிபொருட்களுக்குப் பதிலாக சூரிய சக்தி, காற்றாலை மற்றும் நீர் மின்சாரம் போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலை அதிகரிக்கவும், உபகரணங்கள் மற்றும் அமைப்புகளின் ஆற்றல் திறனை மேம்படுத்தவும், மின் உற்பத்தி நிலையங்களை மாற்றக்கூடிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கலாம்.



#### தொழில்துறை

நாட்டின் பொருளாதாரத்தின் முக்கிய அங்கமான தொழில்துறை துறையில் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்க பல நடவடிக்கைகள் எடுக்கப்படலாம். உயிர்ச்சுவட்டு எரிபொருட்களுக்குப் பதிலாக நிலையான புதுப்பிக்கத்தக்க ஆற்றலைப் பயன்படுத்துதல், சுத்தமான உற்பத்தி முறைகளைப் பயன்படுத்துதல், வட்ட பொருளாதாரக் கருத்துகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழல் நட்பு பூங்காக்கள் மற்றும் தொழில் கிராமங்களை நிறுவுதல் ஆகியவை அவற்றின் தேவைகளில் அடங்கும்.



#### கழிவகற்றல்

கழிவுகளின் உற்பத்தியைக் குறைப்பது, கழிவு மேலாண்மையில் உமிழ்வைக் கட்டுப்படுத்துவதில் முதன்மையான ஒரு சாத்தியமான பணியாகும். மேலும், எடுக்கக்கூடிய நடவடிக்கைகளில் கழிவுகளின் வகைப்பாட்டை அதிகரிப்பது மற்றும் மறுசுழற்சி மற்றும் உரம் உற்பத்திக்கு அதன் பயன்பாடு ஆகியவை அடங்கும். தற்போது மின்சாரம் தயாரிக்க கழிவுகள் பயன்படுத்தப்படுகின்றன.



#### வனப் பிரிவு

காடுகள் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைப்பதற்கும் பங்களிக்கக்கூடிய ஒரு துறையாகும். 2030 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் வனப் பரப்பை 32% ஆக உயர்த்துவது இதற்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்காகும். நகரங்கள், நெடுஞ்சாலைகள், அரச நிலம் அல்லது வீட்டுத்தோட்டம் போன்ற காடுகளுக்கு வெளியே மரம் வளர்ப்பது பசுமை இல்ல வாயு வெளியேற்றத்தைக் குறைக்க உதவும்.



#### விவசாயத் துறை

விவசாயத் துறையில் கிரீன்ஹவுஸ் வாயு உமிழ்வைக் குறைக்கப் பயன்படும் நடவடிக்கைகளில் பயிர்களுக்கு அறுவடைக்குப் பிந்தைய சேதத்தைக் குறைத்தல், பயிர் உற்பத்தித்திறனை அதிகரிப்பது மற்றும் விவசாயத்தில் புதுப்பிக்கத்தக்க ஆற்றலை (சூரிய மற்றும் காற்று) ஊக்குவித்தல் ஆகியவை அடங்கும்.

### காலநிலை மாற்றத்திற்கு ஏற்ப இசைவாக்கமடைதல்

இசைவாக்கமடையும் போது கவனம் செலுத்த வேண்டிய மூன்று முக்கிய பகுதிகள் உள்ளன. அதாவது உணவுப் பாதுகாப்பு, நெகிழ்ச்சியான சுற்றுச்சூழல் அமைப்புகள் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கை. அவர்களுக்கு, அடையாளம் காணப்பட்ட ஒன்பது துறைகளில் இசைவாக்க நடவடிக்கைகள் பின்பற்றப்படும்.



#### உணவுப் பாதுகாப்பு

விவசாயம், கால்நடைகள் மற்றும் மீன்பிடி மற்றும் நீர்ப்பாசனத் துறைகளின் கலவையானது இலங்கை மக்களின் உணவுப் பாதுகாப்பில் பெரும் பங்கு வகிக்கிறது. எதிர்பார்க்கப்படும் வெப்பநிலை உயர்வு, சீரற்ற மற்றும் அகால மழை மற்றும் பருவமழையின் கணிக்க முடியாத தன்மை மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகியவை சம்பந்தப்பட்ட துறைகளில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தும். இந்தத் துறைகளில் தகுந்த இசைவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படாவிட்டால், அது நாட்டின் உணவுப் பாதுகாப்பிற்கு சவாலாக இருக்கும்.



#### தாங்கக்கூடிய சுற்றுச்சூழல் அமைப்புகள்

பல்லுயிர், கடலோர மற்றும் கடல்சார் துறைகளில் சுற்றுச்சூழல் அமைப்புகள், வாழ்விடங்கள் மற்றும் அவற்றுக்கான தனித்துவமான இனங்கள் ஆகியவை அடங்கும். அவர்கள் வழங்கும் சுற்றுசூழல் அமைப்பு சேவைகள் மூலம் அவை மனித நல்வாழ்வுக்கு பங்களிக்கின்றன. சுற்றுச்சூழல் மண்டலங்களில் ஏற்படும் மாற்றங்கள், கடல் மேற்பரப்பு வெப்பநிலை அதிகரிப்பு, மழைப்பொழிவில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் காலநிலை மாற்றத்தால் கடல் மட்ட உயர்வு போன்ற விளைவுகளால் உயிரினங்கள் மற்றும் வாழ்விடங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மாற்றங்களை இனங்கள் மற்றும் வாழ்விடங்கள் தாங்கும் வகையில், இந்த மாற்றங்களை அடையாளம் கண்டு, இந்த மாற்றங்களைக் கட்டுப்படுத்த போதுமான நடவடிக்கைகளை எடுப்பது முக்கியம். இல்லையெனில், ஒட்டுமொத்த இலங்கையின் சுற்றுச்சூழல் அமைப்புகளிலும் எதிர்மறையான தாக்கம் ஏற்படலாம். இந்த வளங்களைச் சார்ந்து இயங்கும் அடிப்படை சேவைத் துறையாக சுற்றுலாத் துறையைக் குறிப்பிடலாம்.



#### ஆரோக்கியமான வாழ்க்கை

அதிக வெப்பநிலை மற்றும் வானிலை பேரழிவுகளின் அதிகரித்த அதிர்வெண், வெள்ளம், வறட்சி மற்றும் நிலச்சரிவுகளின் அதிகரித்த ஆபத்து ஆகியவை நோய் வெடிப்புகள் மற்றும் இறப்புகளுக்கு வழிவகுக்கும். மேலும், வாகனங்களால் பரவும் நோய்களின் அதிகரிப்பு நாட்டின் நகர்ப்புற மற்றும் அரை நகர்ப்புற பகுதிகளில் வாழ்வதற்கு கடினமான சூழ்நிலைகளை உருவாக்கலாம். மேலும், பருவநிலை பிரச்சனைகளால் அதிகரிக்கக்கூடிய ஊட்டச்சத்து குறைபாடு போன்ற நிலைமைகள் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.



### இழப்பு மற்றும் சேதம்

மற்றொரு முக்கியமான அம்சம் காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்பு மற்றும் சேதம். காலநிலை இழப்புகள் மற்றும் சேதங்கள், தீவிர நிலைமைகள், மெதுவாகத் தொடங்கும் பேரழிவுகள் பற்றிய அறிவில் உள்ள இடைவெளிகள் மற்றும் குறைபாடுகளைக் கண்டறிவது முக்கியம்.

மேலும், இடர்நிலைக் கையாள்வதில், தற்போதுள்ள வானிலை முன்னறிவிப்பு அமைப்புகளை மேம்படுத்தி, காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இழப்புகள் மற்றும் சேதங்களை தீர்மானிக்க எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் இழப்பு மற்றும் சேத அறிக்கை தேவை.

இழப்பு மற்றும் சேதத்திற்கான அனைத்து துறைகளையும் உள்ளடக்கிய ஒரு செயல்பாட்டு நிறுவன கட்டமைப்பு நிறுவ முன்மொழியப்பட்டுள்ளது.

### இந்த பங்களிப்பு போதுமா?

இந்நிலையை மாற்றும் வகையில் இலங்கை அரச நிறுவனங்கள் பல சுற்றாடல் அமைச்சின் முயற்சியின் கீழ் பல்வேறு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. அதற்கு பங்களிக்கும் வகையில், ஒவ்வொரு குடிமகனும் தங்கள் சொந்த வாழ்க்கையிலும் வாழ்க்கை முறையிலும் சில மாற்றங்களைச் செய்ய வேண்டும்.

இந்த பிரச்சினையில் பங்குதாரர்களாக, இந்த நாட்டின் குடிமக்களாகிய நாம் அனைவரும் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் உள்ளன. மேலும் சில நடவடிக்கைகள் பின்வருமாறு.

- மிதிவண்டியைப் பயன்படுத்துதல் அல்லது குறுகிய தூரத்திற்கு நடப்பது (படம் - சைக்கிள் மற்றும் நடந்து செல்லும் நபர்)
- தனியார் வாகனங்களுக்குப் பதிலாக ரயில்கள் மற்றும் பேருந்துகள் போன்ற பொதுப் போக்குவரத்து சேவைகளைப் பயன்படுத்துதல் (படம் - ஒரு பேருந்து மற்றும் ரயில்)
- வீடு மற்றும் அலுவலக அளவில் சூரிய சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்தல் (படம் - ஒரு சோலார் பேனல்)
- வீட்டிலும் அலுவலகத்திலும் ஆற்றலின் திறமையான பயன்பாடு (படம் - சுழலும் மின்விசிறி)
- திறமையான மின் சாதனங்களைப் பயன்படுத்துதல் (படங்கள் - டங்ஸ்டன் பல்பில் ஒரு குறுக்கு கோடும், CFL LED பல்புகளில் சரி அடையாளம் வைக்கவும்)
- உருவாக்கப்படும் கழிவுகளின் அளவைக் குறைத்தல் மற்றும் தடுப்பது (படம் - புத்திசிய கழிவு சின்னமா?)
- கழிவுகளை முறையாக அகற்றுதல், மறுசுழற்சி செய்தல் மற்றும் கூட்டு உரமாக்குதல் (படங்கள் - மறுசுழற்சி சின்னம், கூட்டு உரம் தொட்டி)
- நாம் உட்கொள்ளும் பொருட்களின் சுற்றுச்சூழலின் தாக்கம் பற்றி அறிந்திருத்தல் (படங்கள் - தயாரிப்புகளில் சூழல் நட்பு லேபிள்கள்)
- உணவு மற்றும் தண்ணீர் உள்ளிட்ட பொருட்களின் நுகர்வில் நமக்கு போதுமான அளவு செய்தல் (படம் - அதிகப்படியான நுகர்வு காட்டும் உணவு அட்டவணை)
- வனப் பாதுகாப்பு மற்றும் காடுகளுக்கு வெளியே மரம் நடும் நடவடிக்கைகளுக்கு பங்களிக்கவும் (படம் - ஒரு மரம் நடும் சின்னத்தில்)

இந்த வழியில், தனிநபர் எடுக்கும் நடவடிக்கைகளால் உருவாக்கப்பட்ட கூட்டு தாக்கம், காலநிலை போரில் வெற்றிபெற தேசிய அளவிலும், உலக அளவிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த தனிப்பட்ட படிகள் புவி வெப்பமடைதலை 1.5 டிகிரி செல்சியஸ் இலக்காகக் கட்டுப்படுத்த உதவும், குறிப்பாக உமிழ்வைக் குறைப்பதற்காக உலகம் செய்துள்ள தற்போதைய உறுதிமொழிகளின் அடிப்படையில். இவை நம் குழந்தைகளின் எதிர்காலத்திற்காகவும், நமது உலக நலனுக்காகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்.




**மேலதிக விபரங்களுக்கு சுற்றாடல் அமைச்சின் காலநிலை மாற்ற செயலாளர் அலுவலகம்**

காலநிலை மாற்றம் தொடர்பான செயலாளர் அலுவலகம்,
'சொபாதம் பியச', 416/C/1, றொபர்ட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்லை.

தொலைபேசி: 011 203 4198
மின்னஞ்சல்: climatesec@gmail.com
இணையத்தளம்: www.climatechange.lk
முகப்புத்தகம்: www.fb.com/ClimateChangeSecretariatSL
Campaign Facebook - https://www.dayenlowata

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

# பொருளாதார அடியாட்கள் எப்படியெல்லாம் நாடுகளை உருட்டிப் பிரட்டி எடுக்கிறார்கள்?

**வளர்ந்த மற்றும் வளம் கொண்ட நாடுகள் ஏனைய நாடுகளின் விவகாரங்களில் எவ்வாறெல்லாம் தலையீடு செய்து தம்வசப்படுத்திக் கொள்ள, தமது பொருளாதார அடியாட்களை பயன்படுத்துகின்றன என்பதை ஒருநூலின் ஆதாரத்தோடு விளக்குகிறார் கட்டுரையாசிரியர்.**

ஒரு பொருளாதார அடியாளின் ஒப்புதல் வாக்குமூலம் (Confessions of an Economic Hitman)) என்ற தலைப்பில் 2006இல் வெளியாகிய ஒரு நூல் வாசகர்கள் மத்தியில் மாபெரும் வரவேற்பைப் பெற்றது 2016இல் இதன் புதிய வடிவம் வெளியாகி பெரும் எண்ணிக்கையில் விற்றுத் தீர்ந்தது. ஜோன் பேர்கின்ஸ் என்பவரால் எழுதப்பட்ட இந்த நூல் அமெரிக்காவின் நவீன முதலாளித்துவத்தின் உள் பக்கங்களை வெளிப்படையாக விமர்சித்தது.

ஒரு பொருளாதார அடியாள் என்பதன் கருத்து யாதெனில் ஒரு எஜமானருக்காக ஒரு அடியாள் எவ்வாறு செயற்படுவாரோ அதேபோல் பொருளாதாரம் முகாமைத்துவம் சர்வதேச உறவுகள் மற்றும் பாதுகாப்பு துறைகளில் நன்கு பயிற்றப்பட்டு, பல்கட்ட பரிசோதனைகள் ஊடாக விசுவாசிகளாகவும் அரசாங்கத்தின் நம்பிக்கைக்கு உரியவர்களாக தேர்ச்சிபெற்றவர்கள் பொருளாதார அடியாள்களாக செயற்படுவர் என்பதாகும். திரைப்படங்களில் வரும் அடியாள்கள் முதலாளிக்காக முதலில் பேரம் பேசிப்பார்ப்பார்கள் ஒத்துப்போக மறுத்தால் அடிப்பார்கள் பிறகு துப்பாக்கியைத் தூக்குவார்கள் அதேபோலவே பொருளாதார அடியாட்களும் வெளிநாட்டு அரச தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் அவர்கள் செயற்படுத்த எத்தனிக்கும் அபிவிருத்தித்திட்டங்களின் மூலம் நாட்டுக்கு கிடைக்கும் நன்மைகள் பற்றி விரிவாகச் சொல்லுவார்கள் அத்துடன் மிக முக்கியமாக நாட்டின் தலைவரது இதனையொத்த கடந்தகால செயற்பாடுகள் பற்றிய கணிப்பீடுகளின் அடிப்படையில் தலைவருக்கும் அவரது குடும்பம் மற்றும் நெருங்கிய உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்க கிடைக்கும் தனிப்பட்ட நன்மைகள் பற்றியெல்லாம் விரிவாகப் பேசுவார்கள். உதாரணமாக ஒரு எரிசக்திவலு நிர்மாணத்திட்டம் வருகிறதென்றால் அதன் உப ஒப்பந்தங்களை எவ்வாறு அரச தலைவருக்கு நெருக்கமானவர்களுக்கு வழங்கலாம் என்பது பற்றி பேசலாம். இதன் மூலம் நாட்டின் தலைவரதும் குடும்பத்தினதும் அவர்தம் தொண்டர் அடிப்பொடிவருடிகளினதும் பொருளாதார ரீதியிலான நன்மைகள் என்னவாறு பெறப்படும் என்பது பற்றி அப்பொருளாதார அடியாள்கள் பேசுவார்கள் ஆனால் சாதாரண அடியாள்களைப் போல இவர்கள் கைகளில் ஆயுதங்கள் இருக்காது. மிரட்டல் தொனியிலும் பேச்சு இருக்காது. மிகவும் மென்மையாக மரியாதையாக இராஜதந்திர ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட வரைமுறைகளுடன் ஒத்துப்போவதாக அது இருக்கும்.

ஆனால் அரச தலைவர் காட்டும் எதிர்வினை சாதகமானதாக இல்லாத பட்சத்தில் அத்தகைய திட்டங்களை ஏற்றுக்கொள்ளாத தலைவர்களுக்கும் அவர்களின் நாடுகளின் பொருளாதாரங்களுக்கும் ஏற்பட்ட எதிர்மறையான விளைவுகள் குறித்து பரிவுடன் கூறுவார்கள். அது சாதாரண அடியாட்கள் ஒத்துழைக்க மறுப்பவர்களை அடித்துத் துவைத்து உடல் ரீதியாகத் தன்புறுத்துறுத்தி பணிய வைக்க எத்தனிப்பதைப் போல இல்லாவிட்டாலும் உளவியல் ரீதியாக மோசமான தாக்குதலாக அது இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் சாம தான பேத தண்டம் ஆகியவற்றில் முதல் மூன்றையும் பொருளாதார அடியாள்கள் செய்வார்கள் எனலாம். அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு முகவரகம் எவ்வாறு இத்தகைய பொருளாதார அடியாள்களை உருவாக்குகிறது. இவ்வாறு பயிற்றப்படும் பொருளாதார அடியாள்களின் வேலை என்ன அவர்கள் சர்வதேச ரீதியில் செயற்படும் நிறுவனங்கள் ஊடாக பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள் மீது எவர்கள் எவ்வாறு அழுத்தங்களைப் பிரயோகிக்கிறார்கள் என்பது பற்றி மிகவும் தெளிவாக வாசகர்களுக்கு அந்நூல் வெளிப்படுத்தியது. நூலாசிரியரான ஜோன் பேர்க்கின்ஸ் அவ்வாறு பயிற்றப்பட்ட ஒரு பொருளாதார அடியாள் என்பதால் தனது சொந்த அனுபவங்களையே அந்த நூலில் பகிர்ந்து கொள்கிறார். குறிப்பாக எரிசக்தி வளத்துறையில் தான் என்வாறு பொருளாதார அடியாளாகச் செயற்பட்டார் என்பதை விரிவாகக் கூறியுள்ளார்.



விமான விபத்தில் கொல்லப்பட்ட பனாமா மற்றும் ஈக்குவடோர் தலைவர்கள்

**இன்றைய நவீன உலகில் முதலாளித்துவம் ஒரு ஆக்கிரமிப்பு முதலாளித்துவமாக மாறியுள்ளதுடன் முதலீடுகள் நிதிஉதவிகள் அபிவிருத்திட்டங்கள் ஊடாக அதன் செல்வாக்கு மென்மேலும் அதிகரித்து வருவதுடன் இப்போது புதுவருகையாக சீனாவும் இதில் இணைந்து கொண்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது.**

ஈரானின் மன்னர் ஷா, சவூதி அரேபியாவின் அரச குடும்பம், இந்தோனேசியாவின் சுகார்ட்டோவின் அரசாங்கம் அதேபோல தென்னமெரிக்காவின் ஈக்குவடோர், பனாமா போன்ற நாடுகளின் தலைமைத்துவங்களுடனான தமது கலந்துரையாடல்கள் குறித்த விரிவான விளக்கங்கள் அந்நூலில் காணப்படுகின்றன. அதில் குறிப்பாக தான் கொண்டு சென்ற முன்மொழிவுகளுக்கு நேரடியாக மறுப்புத் தெரிவித்த ஈக்குவடோர் மற்றும் பனாமா நாடுகளின் அரச தலைவர்கள் இருவரும் இரு வேறு தனிப்பட்ட சம்பவங்களில் தனியார் விமானங்களில் பறந்த வேளை விமான விபத்துகளுக்கு உள்ளாகி இறந்து போன சம்பவங்கள் குறித்து பேர்க்கின்ஸ் கூறுகையில் விமான விபத்துகளே எதிராளிகளை சாட்சிகள் இன்றி ஒழிப்பதற்கான சிறந்த வழி என்கிறார்.

அதேபோல சவூதி அரேபியா, ஈரான், இந்தோனேசியா போன்ற நாடுகள் அமெரிக்காவின் திட்டங்கள் ஊடாக எவ்வாறு மாற்றங்களுக்குள்ளாகின என்றும் எரிசக்தி வளத்துறையில் அமெரிக்கக் கம்பனிகள் எவ்வாறு இலாபமீட்டின என்பது குறித்து நூலாசிரியர் குறிப்பிடுகிறார். இன்றைய நவீன உலகில் முதலாளித்துவம் ஒரு ஆக்கிரமிப்பு முதலாளித்துவமாக மாறியுள்ளதுடன் முதலீடுகள் நிதிஉதவிகள் அபிவிருத்திட்டங்கள் ஊடாக அதன் செல்வாக்கு மென்மேலும் அதிகரித்துவருவதுடன் இப்போது புதுவருகையாக சீனாவும் இதில் இணைந்து கொண்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது. சீனாவைப் பொறுத்தவரை அதன் தூதரகங்களில் உள்ளவர்கள் பெரும்பாலானோர் பொருளாதார அடியாட்களாகவும் செயற்படக்கூடியவர்கள். சீனாவும் தான் செல்வாக்குக்குட்படுத்த நினைக்கும் நாடுகளின் உட்கட்டமைப்பு விரிவாக்கத்துக்காக வேண்டியளவு கடன் வழங்கத் தயாராக இருக்கும்.

அத்துடன் அந்தந்த நாடுகளின் அரச தலைவர்களையும் அவர்தம் குடும்பங்களையும் நன்கு உபசரிக்கும். மனித உரிமை பொறுப்புக் கூறல் வெளிப்படைத்தன்மை போன்ற விவகாரங்களில் மோசமான நடத்தை கொண்ட நாடுகளுக்கு ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை மனித உரிமைக்கவுன்ஸில் போன்றவற்றில் சிக்கிக் கொள்ளும் போது பேராதரவு வழங்கி அவற்றிலிருந்து காப்பாற்றும். அதன் மூலம் குறித்த நாடுகளின் தலைவர்களையும் முக்கிய புள்ளிகளையும் சொன்னதைக் கேட்கும் கிளிப்பிள்ளைகளாக மாற்றமுடியும்.

ஒரு காலத்தில் அமெரிக்காவின் ஆதரவு பெற்றிருந்த ஈரான் போன்ற நாடுகள் அதற்கெதிராகத் திரும்பினாலும் தொடர்ச்சியான அமெரிக்காவை எதிர்த்துவந்த லிபியத் தலைவர் கடாபி ஈராக்கியத் தலைவர் சதாம் உசைன் போன்றவர்கள் தம் சொந்த நாட்டு மக்களாலேயே மோசமான முறையில் கொல்லப்பட்டார்கள் என்பதையும் வரலாறு பேசுகிறது. இவற்றின் பின்னணியில் எவர் இருந்திருப்பார்கள் என்பது இரகசியமான ஒன்றல்ல. இன்றைய உலகில் ஒரு அரச தலைவரோ அரசாங்கமோ பெரிய பலசாலியாக இருப்பதாக உள்நாட்டு மக்களுக்கு வேண்டுமானால் பாச்சா காட்டலாம். நாட்டின் ஒருமைத் தன்மை இறைமை பற்றியெல்லாம் தொண்டை கிழியக் கத்தலாம் ஆனால் சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளின் முன் இவர்கள் வெறும் சுண்டைக் காய்கள் மட்டுமே.



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

ரஷ்யா-உக்ரைன் போர்;

# தோற்கடிக்கப்படுகிறாரா விளாடிமிர் புடின்?



**சர்வதேச அரசியலில் அதிகம் உரையாடப்படும் கோட்பாடாக புவிசார் அரசியல் விளங்குகிறது. இது உலகளாவிய அதிகாரத்திற்கான போட்டியை தவிர்க்க முடியாது ஏற்படுத்தியது. அத்தகைய போட்டியும் அதற்கான எதிர்வினையும் சமகாலத்திலும் நிகழ்ந்து கொண்டே இருகிறது. ரஷ்யா_உக்ரைன் போர் ஒரு புவிசார் அரசியலுக்கான போராகவே அமைந்துள்ளது. உக்ரைன் நிலப்பரப்பில் ரஷ்யா கைப்பற்றிய இடங்களை விட்டு வெளியேறியமை மீண்டும் அணுவாயுதப் போர் பற்றிய பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இருதரப்பும் சமாதானத்திற்கு போகவேண்டும் எனக் கூறிக் கொண்டாலும் அதற்கான வாய்ப்பு இல்லாது போர் ஏழுமாதங்களை எட்டியுள்ளது. ஆனால் மேற்குலகம் ரஷ்ய ஜனாதிபதி புடினை தோற்கடிக்க உக்ரைனை பயன்படுத்திக் கொள்வதில் வெற்றிகண்டுள்ளதாகவும் புடின் மீதான விமர்சனம் அதிகரித்துள்ளதாகவும் அதனால் ரஷ்யா அணுவாயுதம் பற்றிய உரையாடலை தொடக்கியுள்ளதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளது. இக்கட்டுரையும் ரஷ்யாவுக்கு எதிரான மேற்குலகின் நகர்வுகளும் புடினின் பதில் நடவடிக்கையையும் தேடுவதாக உள்ளது.**

ஐக்கிய நாடுகள் பொதுசபையின் கூட்டத்தொடரில் பெரும்பாலான மேற்கு நாடுகளின் உரைகளிலும் உக்ரைன்-ரஷ்ய போர் முதன்மை பெற்றதுடன் ரஷ்யா மீதான கண்டனமே பிரதான அரசியலாக காணப்பட்டது. உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பின் மூலம் ரஷ்யா ஐரோப்பாவில் காலனித்துவ மற்றும் ஏகாதிபத்திய யுகம் ஒன்றை மீளத் தொடங்கியுள்ளது என பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் ஐ.நா.சபையில் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடும் போது அதனை அனுமதிக்க முடியாது. இப்போரை நிறுத்துவதில் நம் அனைவருக்கும் பங்குள்ளது. ஏனெனில் நாம் அனைவரும் அதற்கான விலையைச் செலுத்திக் கொண்டிருக்கிறோம் என்றார். பசுபிக் மற்றும் ஆபிரிக்கப் பிராந்தியத்தில் இன்றும் காலனித்துவ கொள்கையை பின்பற்றும் பிரான்ஸ் ஜனாதிபதியின் உரை அவ்வாறு அமைந்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஐ.நா. பொதுச் சபையில் உரையாற்றும் போது, ஐ.நா.பொதுச்சபையிலுள்ள அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போரை கண்டிக்கின்றன. அணுவாயுத பரவல் தடை ஒப்பந்தத்தின் பொறுப்புக்களை பொறுப்பற்ற முறையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் புறக்கணிக்கிறார். ஐரோப்பாவுக்கு எதிராக அச்சுறுத்தும் வகையில் அணுவாயுத அச்சுறுத்தலை விடுத்துள்ளார். அனைத்து நாடுகளும் ஒன்றிணைந்து உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போரை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றார். உக்ரைனுக்கூடாக போருக்கான ஆயுதத ளபாடங்களையும் படைகளையும் வழங்கிக் கொண்டு எவ்வாறு போரை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்பது தவிர்க்க வியலாத கேள்வியாகும். இதுவரை 1500 கோடி டொலருக்கு அமெரிக்கா மட்டும் உக்ரைனுக்கு ஆயுததளபாடங்களை வழங்கியுள்ளது. தற்போதும் 60 கோடி டொலரை உக்ரைன் ஆயுததளபடங்களுக்கு அமெரிக்கா வழங்குவதாக அறிவித்துள்ளது.

இது மட்டுமல்லாது ரஷ்யாவுடன் நெருக்கமான உறவுள்ள இந்தியாவின் நிலைப்பாடும் போரை கைவிடுவதற்கானதாகவே உள்ளது. ரஷ்ய ஜனாதிபதியை நேரில் சந்தித்த இந்தியப் பிரதமா நரேந்திர மோடி இது போருக்கான காலமல்ல. நான் உங்களுடன் தொலைபேசியில் பலமுறை பேசியிருக்கிறேன். ஜனநாயகம், இராஜதந்திரம் மற்றும் பேச்சுவார்த்தை ஆகியவை உலகை ஒன்றாக வைத்திருக்கும் என ஷங்காய் மகாநாட்டில் புடினை சந்தித்த போது தெரிவித்துள்ளார்.

ஆனாலும் புடின் இத்தகைய உரையாடலுக்கு எதிர்வினை ஆற்றுவது போல் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார். குறிப்பாக மேற்கு கூட்டணிக்கு எதிராக அணிதிரள்வு என்ற தொனிப் பொருளில் புடின் தனது உரையை காணொளிவாயிலாக தெரிவித்துள்ளார். மேற்கு நாடுகள் கூட்டணியின் அச்சுறுத்தலுக்கு எதிராக ரஷ்யா அணுவாயுதங்களை பயன்படுத்துவதற்கு தயங்கமாட்டாது என புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும் தெரிவிக்கும் போது மேற்கு நாடுகள் அணுவாயுத அச்சுறுத்தலில் ஈடுபட்டு வருவதாகவும் மொஸ்கோவிடம் அதற்கு பதிலளிக்க நிறைய ஆயுததளபாடங்கள் உண்டு எனவும் தெரிவித்தார். ரஷ்யாவின் பிராந்திய ஒருமைப்பாட்டுக்கு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் போது ரஷ்யாவையும் ரஷ்ய மக்களையும் பாதுகாக்க நாங்கள் நிச்சயமாக எங்கள் வசமுள்ள அனைத்து வழிவகைகளையும் கையாளுவோம். அது எமது முட்டாள்தனமல்ல எனச் சுட்டிக்காட்டியுள்ளார். இதே நேரம் இராணுவத்திற்கு படை திரட்டவும் கட்டாய இராணுவ சேவையை அமுல்படுத்தவும் புடின் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவரது அறிவிப்புகள் தெரிவிக்கின்றன.

எனவே இருதரப்பும் போரை தீவிரப்படுத்தும் நடைமுறையில் கவனம் கொண்டுள்ளன. மேற்குலகம் ஐ.நா.சபையை ரஷ்யாவுக்கு எதிரான களமாக பயன்படுத்துவதையும் அதற்கு பதிலளிக்கும் விதத்தில் ரஷ்யாவின் நகர்வுகள் அமைவதனையும் அவதானிக்க முடிகிறது. இவற்றை புரிந்து கொள்வது அவசியமானது.

முதலாவது, ரஷ்ய ஜனாதிபதி புடினது அறிவிப்புகளில் ரஷ்யர்கள் அதிகம் வாழும் டொனெட்ஸ் மற்றும் லுஹான்ஸ் பகுதிகளை ரஷ்யாவுடன் இணைப்பதற்கே இப்போரை நிகழ்த்துவதாக குறிப்பிட்டிருந்தார். தற்போது இப்பிராந்தியங்களை ரஷ்யாவுடன் இணைப்பதற்கான வாக்கெடுப்பினை நடாத்த ரஷ்யா திட்டமிட்டுள்ளதாகவும் அதற்கான அறிவிப்பினை ஆரம்பித்திருப்பதாகவும் தெரியவருகிறது. இவ்வாறே கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக் கொண்டது என்பது நினைவு கொள்ளத் தக்கதாகும். அதுமட்டுமன்றி புடின் ரஷ்ய மக்களுக்கு உரையாற்றும் போது மேற்கு நாடுகள் கூட்டணி ரஷ்யாவை துண்டாட முயல்வதாகவும் அவ்வாறே 1991 இல் மேற்குலகம் ரஷ்யாவை பிரிவினைக்கு உட்படுத்தியதாகவும் தெரிவித்தார். இது போருக்கான நியாயப்பாடாகவும் அண்மைய காலப்பகுதியில் ரஷ்யாவின் நடவடிக்கைக்கு எதிராக எழுச்சி பெற்ற ரஷ்ய மக்களுக்கும் தீவிர தேசியவாதிகளுக்கும் பதிலளிப்பதாகவே தெரிகிறது. எதுவாயினும் அமெரிக்காவுக்கும் மேற்குலகத்திற்கும் எதிராக ரஷ்யாவின் நகர்வுகளை ரஷ்ய மக்கள் அங்கீகரிப்பார்கள் என்பது புடினுக்கு நன்கு தெரிந்த விடயமாகும்.

இரண்டாவது, மேற்குலகம் ரஷ்யாவை இராஜதந்திர ரீதியில் தோற்கடிக்கும் உத்தியை ஐ.நா. சபையில் பிரயோகிப்பதில் கவனம் கொண்டிருந்தது. உக்ரைன் மண்ணில் இராணுவத் தோல்வியையும் ஐ.நா.பரப்பில் இராஜதந்திரத் தோல்வியையும் மேற்குலகம் ரஷ்யாவுக்கு ஏற்படுத்த முயலுகிறது. அணுவாயுதப் போர் என்பது மிக நீண்டகாலமாக உச்சரிக்கப்படும் விடயமாகவே தெரிகிறது. இது ரஷ்யர்களுக்கும் ஆபத்தானதாக அமைவதுடன் அத்தகைய போரை உக்ரைனில் பயன்படுத்துவதென்பது ரஷ்யாவையும் ரஷ்ய மக்களையும் ஆபத்துக்குள் தள்ளும் என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. எனவே இருதரப்பினதும் எச்சரிக்கையே அன்றி யதார்த்தமானதாக அமைவதில் கடினப் போக்குள்ளது. வேண்டுமாயின் ரஷ்யாவோ உக்ரைனோ இரசாயன ஆயுதங்களை பயன்படுத்த முயலலாம். அதற்கான வாய்ப்புகள் அதிகமானவை. ஆனால் அவையும் மனித குலத்திற்கு எதிரான குற்றமாகவும் பாரிய அழிவுகளைத் தரக்கூடியதாகவும் அமைய வாய்ப்புள்ளது.

மூன்றாவது, ரஷ்ய ஜனாதிபதி புடின் ரஷ்யாவிலும் மேற்குலகத்தாலும் தோற்கடிக்கப்படும் நிலை அதிகரித்து வருகிறது. ரஷ்யாவுக்குள் போர் ரஷ்யாவுக்கான தோல்வியை நோக்கியுள்ளதாகவும் அதனை ஏற்றுக் கொள்ள முடியாது என்ற வகையிலும் ரஷ்யத் தேசியவாதிகள் புடினுக்கு எதிராக எழுச்சி பெற்றுவருகின்றனர். இது போரை வெல்ல வேண்டிய கட்டாயத்தை புடினுக்கு ஏற்படுத்தியுள்ளது. ஆனால் போர் இலகுவில் வெற்றிபெறக் கூடியதொன்றாகத் தெரியவில்லை. அதனாலேயே கட்டாய இராணுவச் சேவையையும் அணுவாயுதம் பற்றிய உரையாடலையும் புடின் முதன்மைப்படுத்தி வருகின்றார். மறுபக்கத்தில் புடினுக்கு எதிரான ரஷ்ய மக்களின் எழுச்சியும் அதிகரித்துவருகிறது. மேற்குலகம் அதனை ஊக்குவித்து வருகிறது. அது மட்டுமல்ல ஆறுதடவைக்கு மேல் புடினை கொலை செய்வதற்கு முயற்சிகள் நிகழ்ந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளது. ரஷ்யாவுக்குள் நிலவும் எதிர்ப்புகளைவிட மேற்குலகத்தில் ரஷ்யாவுக்கும் புடினுக்கும் எதிரான அலை அதிகமாகவே உள்ளது. மேற்கின் பொருளாதார நெருக்கடிக்கு புடினே காரணம் என உச்சரிக்கும் மேற்குலக அரசியல் தலைவர்கள் அதனை உலகளாவிய ரீதியில் மாற்ற முயலுகிறார்கள். உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ரஷ்யாவே காரணம் என்பதை வெற்றிகரமாக தமது பிரச்சாரத்தின் வாயிலாக மேற்கு நிறுவ முயலுகிறது. டொலருக்கான பெறுமான வீழ்ச்சியே இத்தகைய எதிர்ப்புவாதத்திற்கான அடிப்படையாகும்.

எனவே பொருளாதார தடைகளும், இராஜதந்திர நகர்வுகளும் இராணுவ நடவடிக்கைகளும் என ஒரே நேரத்தில் பலமுனைத் தாக்குதலை புடின் எதிர்கொண்டுவருகிறார். ஆனால் அவரது அணுகுமுறை டொனெஸ்ட் மற்றும் லுஹான்ஸ் பகுதியை ரஷ்யாவுடன் இணைப்பதேயாகும். அதற்கான அனைத்து நகர்வுகளையும் நெருக்கடியைத் தாண்டி கையாளும் போக்கினைக் காணமுடிகிறது. அமெரிக்காவுக்கு எதிரான அணுகுமுறைகள் புடினை உள்நாட்டில் மட்டுமல்ல மேற்கு அல்லாத நாடுகளாலும் பாதுகாக்க வாய்ப்புள்ளது. ஆனாலும் மேற்குலகத்தின் கூட்டு இராஜதந்திரமும் அரசியலும் ரஷ்யாவை தோற்கடிக்க தொடர்ந்து முயன்றுகொண்டே இருக்கும் அதன் விளைவுகள் முழு உலகத்திற்குமானதாக அமைய வாய்ப்புள்ளது.

## வாழ்வாதாரமா சேதாரமா 237



தமிழ்க் கவி பேசுகின்றார்

# அடுத்த தலைமுறைக்கு பணம் மட்டுமிருந்தால் போதும் என நினைப்பவர்கள் நாம்

ஒரு தொலை தூரத் தொலைபேசி அழைப்பு. யாராவது இருக்கலாம் ஆனால் அது வெளிநாட்டிலிருந்து வருகிறதானால் ஒரு பதற்றம். உறவுக்காரர் களா? நண்பர்களா? ஏன் அழைக்கிறார்கள். என்பதைவிட அப்படியெல்லாம் அழைத்து அவர்களுக்கு நம்மால் என்ன செய்துவிட முடியும். என்பதான துடிப்பு. சாதாரணமாக

ளின் ஆதிக்கம் மேலோங்கி நிற்கிறது. இவற்றை பாதுகாக்க வேண்டிய அரச அதிகாரிகள் எதுவித கவனமுமில்லாமல் முடிந்தால் அனுமதிப்பத்திரத்தை வழங்கி தமது பங்கை நிலை நாட்டவும் தயாராக மௌனம் சாதிப்பது வேடிக்கை. இந்த அரசகாடுகளிலும் குளங்களுக்குள்ளும். காணிகளை வளைத்துப் போட்டு றியல் எஸ்டேட் முதலாளிகள் பெருமளவு சம்பாதிப்பதில் எந்த இடையூறும் கிடையாது. மணலை ஏற்றிச் சென்றால் குற்றம் மரத்தை தறித்தால் குற்றம். அவற்றை அப்படியே அபகரித்தால் எதுவும் கிடையாது.

இந்த நிலப்பட்டுவாடாக்களின் பின்னணியில் மன ஒற்றுமை, சிநேகபூர்வ ஒப்பந்தம் என்பவை பேணப்படுவதாக சொல்லிக் கொண்டாலும், குற்றவியல் பிணக்குகள் ஏற்படத்தான் செய்கின்றன. இப்போது காவற்றுறையும் தனது கடமைகளை இந்த இடங்களில் செய்து தன் பங்குக்கும் அரச நிதியை செலவிடும். அப்படியே மின்சார சபையும் சில இணக்கப்பாடுகளை மேற்கொள்வதும் தவிர்க்க முடியாததுதானே.

இந்த இணக்கப்பாடுகள் போர்நடந்த காலத்தில் மிக அதிகமாக நடந்ததுதான். அந்தக்காலத்தில் காணிகளுக்கு சொந்தக் காரர்கள் போருக்குத் தப்பி போர் நடக்காத பிரதேசங்களில் வாழப் போய்விட்டனர். அவற்றில் முகாம்கள் அமைக்கப்பட்ட நிலங்களை அடுத்து முன்னரே வந்து குடியிருந்தோர், பின்னர் வந்தவர்களுக்கு அந்த நிலம் தமது பொறுப்பில்தான் இருக்கிறது என நிறுவி, விலைபேசி விற்றார்கள். இப்போடும் மனிதனைப் பார்த்து இயற்கை சிரிக்கிறது. வாழும்வரை அயலானை நேசித்து வாழ்பவர்கள் எத்தனைபேர். நிலத்துக்காகவும் நீரெல்லைகளுக்காகவும் உலகில் பெரும் போர்கள் நடந்தன. நடந்து கொண்டிருக்கின்றன. இன்னும் நடக்கும். மகாபாரதம், ராமாயணம் இரண்டுமே போர்க் காவியங்கள்தான் அவைபற்றிய கேள்வி இரண்டு கதைகளும் எப்படி நடந்தன ஏன் நடந்தன என்றால் இரண்டு கதைகளுக்கும் ஒரு எழுத்து மட்டுமே வித்தியாசம் எனக் காணலாம். ஒன்று மண் மற்றது பெண். தற்காலத்தில் பெண்களுக்காக போர் நடக்க சாத்தியமில்லை. இருபது அக்குறோணி சேனையைப் பலியிட்டு தனது பிள்ளைகளையும் பலி கொடுத்து மண்ணைக் கைப்பற்றிய பாண்டவர்கள் எத்தனை வருடம் வாழ்ந்தார்கள். மாவீரர்கள் நெப்போலியன் அலெக்ஸாண்டர் அசோகன் போன்றோர் அது இதென்று எத்தனை நாடுகளை கபளீகரம் செய்தனர். அந்தப்போர்கள் அவர்களுக்கு வாழும்காலத்தை நீடித்ததா?

மண்ணை கைப்பற்றி பொன்னை நிறைத்தாலும் விட்டுவிடப் போகுதுயிர் என்பதை யாரும் நினைப்பதில்லை. இப்படி பொது இடங்களை ஆக்கிரமித்து வைத்திருப்போரால் எத்தனை மக்கள் தமது நியாயமான வசதிகளை இழக்கின்றனர் என்பதை யாரும் கவனத்தில் கொள்வதில்லை. எங்கள் அயலில் பசுமாடுகளை சீவாதாரமாக வளர்க்கும் ஒரு ஏழைப்பெண் தனது மாடுகளுக்கு குளத்தில் சென்று தண்ணீர்குடிக்க முடியவில்லை அவைகளுக்கான மேச்சற்றரவைகளை மூடி அடைத்துவிட்டார்கள. எந்த அரச அதிகாரியும் இதை கவனிக்கிறார்களில்லை என்று கண்ணீர் விட்டு அழுதாள். சில இடங்களில்



எல்லோருக்கும் வருவதுதான்.

ஆனால் சிலர் இங்கிருந்து எதிர்பார்ப்பதெல்லாம் தகவல்களாகவே இருக்கிறது. அதாவது நீங்கள் நலமா? என்ற சம்பிரதாயக் கேள்விகளுக்கு அப்பால், உங்கை மழை எப்பிடி ? பரந்தன் பக்கம் போனீங்களா? வெள்ளாமை வெட்டு துவங்கீட்டுதா? ராசாண்ணையின்ர வெள்ளாமை என்ன மாதிரி? சுலோசனாட புரியன் வந்திட்டாரா? கனகம் காணி விக்கிறனெண்டாளாம் விலை பேசியாச்சா? இன்னும் இல்லையெண்டா ஒருக்கா தட்டிப்பார் இப்படி அங்க சுத்தி இஞ்ச சுத்தி கதை காணிவாங்குவதில் வந்து நிற்கும்.

நாங்கள் என்னவோ இந்த மண்ணில்தான் குடியிருக்கிறோம். எனது தந்தையால் எனக்கு வழங்கப்பட்ட நிலத்தை நான் பெற்ற பிள்ளைக்கு மாற்றிக் கொடுக்க முப்பது வருடங்களாக முயன்றும் இன்னும் முடியவில்லை. வெளிநாடுகளிலிருந்து தொலைபேசிக்கூடாகப் பேசியே காணிகளை விலைக்கு வாங்கி, அதையும் தமது பெயருக்கு பட்டா போட்டெடுக்கும் வல்லமையை என்ன சொல்ல. கிளிநொச்சிப் பகுதியில் மட்டும் அநேக நிலங்கள் வெளிநாட்டிலுள்ளவர்களால் கொள்வனவு செய்யப்பட்டு விட்டது.

அப்படியே அவர்கள் வீட்டுத்திட்டத்தில் வீடுகட்டி பூட்டி வைத்துவிட்டு போயிருக்கிறார்கள்.

அரசாங்க நிலங்களை தமது சொந்தத் தேவைகளுக்காக வளைத்துப் போட்டவர்கள் இரண்டு மூன்று வருடங்களின் பின் அவற்றை விற்பனை செய்து பல லட்சம் ரூபாக்களை லாபமாக அடைகிறார். இவற்றுக்கு அனுமதிப் பத்திரங்களும் இல்லை. 'ஆத்தில போறதண்ணி அண்ணை குடி தம்பி குடி' என்பது போல பணம்படைத்தவர்களுள்ள அரச அதிகாரிகளுக்கு அவர்கள் என்ன சளைத்தவர்களா? அப்படி மாறும் நிலங்களுக்கு எழுதப்படும் ஒப்பந்தங்களுக்கு வரி விதித்து ஒரு பெமிட் பத்திரமும் வழங்கி அங்கீகரித்தது போராளிகளின் நிர்வாகசேவை. காணியின் விலைப்பெறுமதிக்கு வரிகட்ட வேண்டியிருந்தது. (ஒரு லட்சத்துக்கு இருபத்தையாயிரம் ரூபாய்) அதெல்லாம் அரசாங்கப்பத்திரத்துக்கு நிகரானது என நினைத்து பல்லாயிரக்கணக்கான ரூபாக்களை வழங்கி காணிகளை வாங்கி பின்னரும் செலவு செய்து வீடும்கட்டி வசித்தவர்கள் போர் முடிந்து வனவாசம் போய் மீளக்குடியேற வந்தபோது அந்த நிலங்களில் யார்யாரோ குடியிருக்கக் கண்டு கண்ணீர்விட்டனர்.

காணிக்கான காசை பெற்றுக் கொண்டவர்கள் காணி மாறவில்லை என்பதால் மீண்டும் தாம் விற்ற காணிகளை பிடித்துக் கொண்டனர். காசைக்கொடுத்து வீடும்கட்டி போரில் உயிர்களையும் இழந்து நொந்து போயிருக்கும் மக்கள் மிக அதிகம். அதிலும் கணிசமான அளவு போராளிக் குடும்பங்களும் அடக்கம். தாம் கொடுத்த பணத்தையாவது வட்டியில்லாமல் பெற்றுக் கொள்ள கோட்டுக்கு போயிருக்கிற மக்களும் இதில் அடக்கம்.

நிலம், நீர், காற்று. இவற்றையெல்லாம் என்னுடையது என்று உரிமை கொண்டாடும் இதுபற்றி பொது அமைப்புகளான கிராம அபிவிருத்தி சங்கம் சன சமூக நிலையங்கள் போன்றவை பேசினாலும் அது தொடர்பான அதிகாரிகள் காணாதது போல இருக்கிறார்கள். வீதிகளை பெரும் பொருட் செலவில் அமைத்துவிட்டு வடிகால் இல்லாமல் மூடிவிட்டால் அது வீதியை பாதிக்காதா?

பொது சொத்துக்களை பேணுவது தொடர்பாக மக்கள் கவனம் செலுத்துவது குறைந்துள்ளது. சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் கிராமங்களில் வீதி அமைத்தாலும், குளம் திருத்தினாலும் கிராம மக்களே கூலிகளாக வேலை செய்தனர் காரணம் வேலை தம்முடையது என்பதால் போலித்தனமிருக்காது என்பதுதான். கிராமத்தின் பெரியவர்கள் வேலைகளை சீராக செய்விப்பதில் முன்நிற்பர். இன்றைய மக்களைப்போல குளங்களை அல்லது அரச நிலங்களை ஆக்கிரமிக்க அஞ்சினார்கள். சந்ததியை பாதிக்கும் எதையும் அவர்கள் செய்யவில்லை. இன்று தமக்குப் பின்னுள்ள சந்ததிக்கு பணம் மட்டுமிருந்தால் போதும் என நினைப்பவர்களே வாழ்கிறார்கள். எங்கள் சந்ததி இனிமேல் சொந்த நாட்டில் வாழாது என தெரிந்தும் சொந்த நாட்டில் நிலங்களை வாங்கி வேலி போட்டு வைப்பதும், பொது இடங்களை ஆக்கிரமிப்பதும் அயலானை நேசிக்க வழி செய்யாது அது நிச்சயம் துன்பம்தான்.

# 'மைச்சுடர் மாமணி சக்ரா' விருது பெற்றார் மர்லின் மரிக்கார்




இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் 72 வது பிறந்த தினத்தை முன்னிட்டு தமிழகத்தின் ஐந்து அமைப்புகள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பல்துறை சாதனையாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிக்கும் திட்டத்தின் கீழ் தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி இணையாசிரியர் மர்லின் மரிக்கார் 'மைச்சுடர் மாமணி சக்ரா விருது' வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் 72 வது பிறந்த தினம் செப்டம்பர் மாதம்



17 ஆம் திகதியாகும். அதனையொட்டி தமிழ் நாட்டின் கோவை மாவட்ட உலக செம்மொழி பயிலரங்க மன்றம், தெய்வீகத் தமிழ் அறக்கட்டளை, திண்டுக்கல் மாவட்ட பசுமை வாசல் பவுண்டேசன், சேலம் மாவட்ட ஸ்ரீ சக்ஸஸ் அகடமி, ஈரோடு ஸ்ரீ ஹயக்ரீவர் கலை மற்றும் கலாசார அகடமி ஆகிய அமைப்புகள் இணைந்து பல்துறைச் சாதனையாளர்களுக்கு விருது சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கவென சாதனையாளர்களிடம் இருந்து கடந்த மாதம் விண்ணப்பங்களைக் கோரி இருந்தன.

ஆசிரியர்கள், இளம் படைப்பாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கவிஞர்கள், கலைஞர்கள், சமூக சேவகர்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள் என ஒன்பது பிரிவுகளின் கீழ் சாதனையாளர்களிடம் இருந்து இணையதளம் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன. அதற்கேற்ப 777 பேர் விண்ணப்பித்திருந்தனர்.

அந்த வகையில் நான்கு ஊடகவியலாளர்கள் மைச்சுடர் மாமணி சக்ரா விருது சான்றிதழ் வழங்கி இத்திட்டத்தின் கீழ் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் இவ்விருதைப் பெற்றுக் கொண்டுள்ளஒரேஇலங்கைஊடகவியலாளர் மர்லின் மரிக்கார் ஆவார். ஏனைய மூன்று ஊடகவியலாளர்களும் தமிழகத்தின் தர்மபுரி, திருப்பூர் உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

அதேநேரம் இலங்கை மருத்துவர்கள் சங்கம், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம், சுகாதார கல்வி பணியகம், அனர்த்த முகாமைத்துவ அமைச்சு உள்ளிட்ட பல நிறுவனங்களின் விருதுகளையும் சான்றிதழ்களையும் இவரது கட்டுரைகள் ஏற்கனவே வென்றுள்ளமை தெரிந்ததே.

# சமையற்கலை கண்காட்சி

அக்கரைப்பற்றில் இளம் பெண்கள் மத்தியில் சமையற்கலையை ஊக்குவிக்குமுகமாக அக்கரைப்பற்று எய்ம்ஸ் இன்டர்நேஷனல் பாடசாலை (AIMS INTERNATIONAL SCHOOL) நிர்வாகத்தினரால் முதன்முதலாக ஒழுங்கு செய்யப்பட்ட சமையற்கலைக் கண்காட்சி பாடசாலை வளாகத்தில் மிகவிமரிசையாக நடைபெற்றது.



நிறுவனத்தின் கற்கைகள் பணிப்பாளர் எம்.எ, தஷ்ரீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பெருந்தொகையான பெண்கள் குறிப்பாக பாடசாலைக்கல்வியை முடித்துக் கொண்டஅதிகளவிலானஇளம்யுவதிகள்பங்கு கொண்டு தமக்கு வழங்கப்பட்ட காட்சிக் கூடங்களில் தமது ஆக்கங்களை தயார் செய்து காட்சிப்படுத்தினர். பாரம்பரிய உணவுகள் தொடக்கம் மேலைத்தேய உணவுகள் வரை இங்கு வகைப்படுத்தப் பட்டிப் பட்டிருந்தன.

இதேவேளை கஞ்சி வகைகளும் வைக்கப்பட்டிருந்தன. ஐஸ்கிரீம் வகைகளும் பார்வையாளர்களைக் கவரும் அம்சங்களாக இருந்தன. "எய்ம்ஸ் இன்டர்நேஷனல்"





பாடசாலை கல்வியோடு மாத்திரம் தமது நடவடிக்கைகளை நிறுத்திவிடாது சமூக, பொருளாதார, விளையாட்டு மேம்பாட்டிற்காகவும் உழைத்து வருவதை இந்நிகழ்வு காட்டுகின்றது. இந்நிகழ்வினை நிதிதுறைப்பணிப்பாளர் எஸ்.எம். அகமத் சக்கி தலைமையிலான குழுவினர் ஒழுங்குசெய்ததோடு நிலையத்துக்கு வருகைதந்த அ னைத்து விருந்தினர்களையும் வரவேற்று சகல கூடாரங்களையும் பார்வையிட வசதிகளையும் செய்தனர்.

# மகாராணிக்கு அஞ்சலி









லண்டன் ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற மகாராணிக்கான அஞ்சலி நிகழ்வில், சவுத்கோல் பாராளுமன்ற உறுப்பினர் விரேந்திரசர்மா மற்றும் ஈலிங் ஆலயத்தின் அறங்காவலர் தேவசகாயம் ஆகியோர் உரை நிகழ்த்தினர். ஆலய செயலாளர் கருணைலிங்கமும் நிகழ்வில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினார்.

# அகவை எழுபத்தேழில் நீடித்து வாழ்க நிலாம்

"ஈழத்து நூன்" எம்.ஏ
எம் நிலாம்! பாவாணர்!
ஆழத்து நட்புக்
ககவை நாள் ஞாலத்
திசையெட்டு மெச்சுந்
திறமையார்க் கெந்தன்
இசைவான வாழ்த்து
இது!
ஊடக மேதமை;



உள்ளன்பர்! "நம்நிலாம்!"
நாடறிந்த மேன்மகனார்!
நெஞ்சாறப் பாடியான்
ஆசித்தேன்! நீடு நலம்
வாழ்க!" எழு பத்தேழில்.."
நீடித்து வாழ்க
நிலாம்!

கிண்ணியா அமீர் அலி




## வெற்றிச் சிங்கங்கள்

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்

கிண்ணத்தை வெல்வதே மன
எண்ணத்தின் இலக்கு என எழில்
வண்ணத்தின் முயற்சியது
விண்ணைத்தான் தொட்டதோ

தீராத முயற்சியும்
திகட்டாத பயிற்சியும்
மகிழ்ச்சியாய் நிறைந்திடும் இனி
புகழ்ச்சியாய் ஓங்கிடும் இனி

சரிக்கட்டிய கிரிக்கெற்றினால்
சரிந்திடாத இலங்கை அணி
சரித்திரம் படைத்ததோ நூதனமாய்
சறுக்காமலிருந்ததோ சீதனமாய்

ஆசியாக் கிண்ணமதை
ஆசீர்வாதமாய் வென்ற கதை
ஆறாவதாய் தொடருது
ஆனந்தமாய் படருது

விளையாட்டில் சிங்கங்களாய்
விதைப்பதில் தங்கங்களாய்
விசுவாசம் கொண்டே வெற்றியை
வினைத்திறனாக்கியதால் சித்தியே

இலங்கைக்கு கிரீடமாய்
இலங்கிடும் ஒளியதில்
இலங்கிடும் எம் அணி
இறங்கிடும் எதிரணி

## விசித்திர வாழ்க்கை

ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

இந்த வாழ்வின் மீது
விசித்திரமானதொரு
பற்றுதல் உள்ளது என்னில்

ஒருவர் சிரிக்க வைத்தால்
இன்னும் சிலர் அழ வைக்கிறார்கள்

யாரேனும் புரிந்து கொண்டால்
இன்னும் சிலர் புரிதலுக்கே
எதிரியாக இருக்கிறார்கள்

ஒருவர் வாழ்த்தினால்
பலர் தூற்றி விடுகின்றனர்

ஒருவர் விரும்பினால்
பலர் விரும்பாமலிருக்கின்றனர்

ஒருவர் ஏற்றுக் கொண்டால்
பலர் ஏற்க மறுக்கின்றனர்

ஒருவர் தோள் கொடுத்தால்
பலர் தேள் கொட்டுகின்றனர்

ஒருவர் தாங்கிப் பிடித்தால்
பலர் தள்ளி விட்டு செல்கின்றனர்

இருந்தும் நம்மை எதிர்க்கும்
பலருக்கிடையில்
நமக்கென யாரேனும் இருப்பதாய்
உணர வைக்கும்
இந்த விசித்திரமான வாழ்க்கை மீது
காதல் தவிர
வேறொன்றுமில்லை என்னிடத்தில்..



## மெய்ப்பொருளே

ரதிதேவி, மானிப்பாய்

ஆயிரம் கதிர்கள் உள்ளே உயிராய்
உருகி உலவும் மெய்ப்பொருளே
தேனிலும் இனிய குரலுடையாள்
எடுத்து இயம்பும் அற்புதமே

சொற்கள் தோற்கும் உனை வர்ணிக்க
எனினும் சொல்லித் தீருமோ உன் அழகு
வில்கள் ஆயிரம் அம்பேய்தும்
நாண் நடனம் தொடரும் புவிமீது

நினைப்பதற்கு வேறேதும் இல்லை
நிஜமாகி நிழலாய்த் தொடர்பவனே
கடப்பதற்கு உன் மேலேறி
இங்கு கடந்தும் முடிவது உன்னிடமே

## இருளகற்றும் தீபங்கள்

Dr ஜலீலா முஸம்மில், ஏறாவூர்

அவனியில் இருள் அகற்றும் தீபங்கள்
அருங்கல்வி புகட்டும் அவதார புருஷர்கள்
நந்தவனம் உருவாக்கும் நாட்டின் மேதைகள்
நம்பிக்கை உரம் தருகின்ற நாயகர்கள்
ஏணியில் ஏற்றிவிடப் பாடுபடும் பண்டிதர்கள்
ஏற்றத்திலே மகிழ்வுறும் தியாகத்தின் சின்னங்கள்
கோபுரக் கலசமெனப் போற்றிடுவோம் ஆசான்கள்
குவலயத்தின் சோதிதனைச் சூழட்டும் வாழ்த்துக்கள்



## உன்னைப்போல் யாருமில்லை

சுரேந்தர் தர்மலிங்கம்

மண் காட்டினாய்
பின்
மொழி ஊட்டினாய்
நீ கவசமாகினாய்
கல்வி கொடுத்தாய்
கொடும் வறுமையிலும்
முயற்சி செய்தாய்
காணவில்லை என்றால்
கண்ணீர் சொட்டுவாய்
கண்ணதாசனின்
பாட்டனாய்
விண் தொடும்வரை
விபரங்கள்
சேகரிப்பாய்
அம்மா............
உன்னைப்போல்
யாருமில்லை
எனக்கு!
புவியினில்
முட்டி மோதும்
மனிதர்களோடு!



## கல்லூரிக் காலம்!

காத்தான்குடி கலைமதி றபாய்தீன்

பள்ளிசென்று படிக்கும் காலம்
துள்ளும் உணர்வு துடிக்கும் காலம்
அல்லும் பகலும் அலையும் காலம்
ஆற்றல் அறிவு விளையும் காலம்
எல்லாவற்றையும் எடுக்கும் காலம்
ஏற்றம் இன்பம் கொடுக்கும் காலம்
உல்லாச உறவு கொள்ளும் காலம்
உள்ளத்து உணர்வு அள்ளும் காலம்

புத்தகத்தை சுமந்து கொண்டு
புத்தியை தீட்டி நிற்கும்!
தத்துவத்தை பேசுவதற்கு
தவறாது பார்த்திருக்கும்!
வித்தியாலயங்களில் அறிவு
விதைகளை விதைத்திருக்கும்
சித்திபெற்று வாழ்வு
சிறப்பாக அமைந்திருக்கும்!

கல்லூரிக்குள் நுழைந்தாலே
கல்விவாசம் வீசும்!
கல்வியை கற்றாலே
கல்வியாளர்களாக பேசும்!
கல்வி கற்போருக்கு
கல்விஆசான்களின் நேசம்!
கல்லூரி காலத்தில்
இருந்திடும் பாசம் !

காலத்தால் அழியாதது
கல்வியே ஆகும்!
கல்வி உயர்வுக்கு
வழிவகுத்தே ஆகும்!
கல்லூரிநினைவு
மாறுவதே இல்லை!
கல்லூரிக்காலம்
மீண்டும் வருவதேயில்லை!



## கண்ணிமை

அன்புடன் நதுநசி

வெண்மை கொண்டு
முகம் மலர்ந்த பெண்மை
கருமையில் கண்ணிமை
கண்டேன் உன்னிடத்தில்

நீண்டு வளர்ந்த தோகை
காரிருள் மழை முகில்
போல விரிந்து கிடைக்கையில்
உன்னழகு மெருகேற்றி நின்றது

அடி கண்ணிமை பெண்ணே!
கள்ளடி கிள்ளி கொள்ளை
இல்லடி நாடி வந்த என்னை
ஏறெடுத்து நோக்கடி கூடி

வாயாடி நீயாகி நீர் வாத்து
தலை தோய்த்து பூச்சூடி
பட்டாடை போட்டு நீ வாடி
மெல்லென ஒரு அன்னநடை

வண்ணமை கலந்திங்கு நான்
வரைந்திடவோ உன்னை என்
மனதினில் பெரும் ஓவியமாக
என் எண்ணக் கோவிலினில்

## விழித்தெழு

நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

விடியாத இரவென்று
எதுவுமில்லை...
விடையில்லா விடுகதையென்றும்
எதுவுமில்லை....

விழி மூடித் திறப்பதற்குள்
விடைகள் கிடைத்துவிடாது...
விடா முயற்சிகளே
விடிவுகள் கொண்டுவரும்..

விடியலை எதிர்பார்த்திருக்கும்
விடிவெள்ளிகள் போல்
விடிய விடிய காத்திருந்து
விடிவிற்கு விடை தேடிடனும்...

இல்லாமைகள் என்றுமே
இருந்துகொண்டிருப்பதுமில்லை
இயலாமைகள் என்றுமே
இருப்புக் கொள்ளத் தேவையுமில்லை....

அஞ்ஞானத்தை வென்ற
விஞ்ஞானம் போல்
உன் ஞானம்
அகில ஞானத்தையும் ஆளட்டும்...

உனக்கென தனிப்பாதை
உருவாக்கிடு...
உன் பாதையில்
உறுதியாய் இருந்துவிடு...

உள்ளவைகள் இல்லாதவைகள்
உனதானவைகளல்ல...
உள உறுதி மட்டுமே
உனதானது....

விழி மூடும் நேரமும்
விழித்திருக்கப்பார்...
விடிவுகள் கைதொடுதூரம்
கையசைக்கும்...

விளக்கொளி நோக்கி விரையும்
விட்டில் பூச்சி வேகம் கொள்...
விடியல்கள் விடிந்தேதான்
இருக்கின்றன...

விழுந்தால் எழவேண்டும்...
விழ விழ எழ வேண்டும்....
விடிவுகள் விடையாய் கிடைக்க
விழித்தெழ வேண்டும்....



## வீறு கொண்டெழு மனமே

வி.அபிவர்ணா
முல்லைத்தீவு.

வாட்டும் வறுமையால்
வதைபடும் ஏழைகள்
மேட்டுக் குடியாக
மிளிரும் பணக்காரர்!
வீட்டின் செலவெண்ணி
பெண்சிசு கொல்வோர்
ஆட்டும் திமிரினால்
அழகிகள் சிதைப்பவர்!

கூட்டத்தில் பெண்களை
மாடாய் இடிப்பவர்!
நோட்டமிட்டு தாலி
சங்கிலிகள் அறுப்போர்!
தீட்டென்று சொல்லி
மனிதரை ஒதுக்குவோர்!
பூட்டிய வீட்டினுள்
புகுந்து திருடுவோர்!

காட்டின் வளங்களைக்
கண்டபடி சுரண்டுவோர்!
போட்டியின் தேர்தலில்
பொருள்கள் கொடுப்பவர்!
நாட்டின் அவலங்கள்
நாளும் வரும் செய்தி
கேட்டவுடன் "வீறு கொண்டு எழு
மனமே" எழுக...!

## விதைகளின் விருட்சங்கள்

ஏரூர் எம்.ரி.எம்.அன்ஸார்



கனமில்லா இதயத்தில்
மகிழ்வை நிறைப்பவர்கள்
கனவை உயிராக்கி
வெற்றியில் திளைப்பவர்கள்
இனமதம் மறந்தே
நட்பில் முளைப்பவர்கள்
குணத்தில் உயர்ந்தே
அனைத்திலும் சிறப்பவர்கள்

இலக்கை நோக்கியே
இமயம் தொடுபவர்கள்
விளக்காய் எரிந்தே
இருளை விரட்டுபவர்கள்
சோலைப் பூக்களாய்
மலர்ந்திடும் சிறுவர்கள்
நாளைய விடியலை
வெற்றியாக்கும் நம்பிக்கைகள்

நேற்றைய இளைஞர்களே
இன்றைய முதியோர்கள்
நாட்டின் முன்னேற்றத்தில்
பங்கெடுத்து ஓய்ந்தவர்கள்
காற்றோடு சேர்ந்தே
காலத்தை வென்றவர்கள்
சீற்றம் கொள்ளாது
அறிவுரை தந்தவர்கள்

நரையின் எண்ணிக்கையில்
அனுபவம் கண்டவர்கள்
குறையும் அகற்றியே
சுருக்கம் கொண்டவர்கள்
நிறையும் வியர்வையில்
வறுமையைக் களைந்தவர்கள்
தரையும் செழித்திட
தியாகத்தில் உயர்ந்தவர்கள்..!

## இறுதிப் புதிர்கள்

ஆ. லெ. மு. இர்ஷாத்,
வாழைச்சேனை.

குருட்டு விளக்கை
நெருங்கிக் கொண்டிருக்கின்றன
விட்டிலும் மின்மினியும்

கடலில் பாதை செய்த
இறைத்தூதர் மூஸாவின் தடியில்
முளைத்திருக்கின்றன
முட்கள்

சிம்மாசனத்தில் ஓணான்கள்
துச்சாதன இம்சைகள்
அரங்கேற்றம்

விலக்கப்பட்ட கனிமரங்களை
ஏதேன் தோட்டத்தில் சாத்தான்
தறித்துக் கொண்டிருக்கிறான்

சூரியத் தேர்களை
இழுக்க முயன்று
ஏழைகள் தோற்கின்றனர்

தீமைகள் ஆள...
நன்மைகள் சிலுவை சுமந்து
மாய்கின்றன

## காலம் உண்டு நம்பிக்கை கொள்!

ஐ.எம். அஸ்கி
அட்டாளைச்சேனை 08



கனவுகள் கடலளவு
கற்பனை வானளவு கொண்டும்
வறுமையோ வெறுமையாக்கி விடுகிறது
வாழ்க்கையை !

வறுமையில் இருந்த போதும்
பொறுமை கொள் மகளே
பேரிருள் நீங்கி திருநாள் ஒருநாள் வரும்
தீக்குச்சியே போதும் தீப்பந்தம் உருவாக்கிட!

ஆசைகள் அதிகம் கொள்ளும் மனமிது
பேராசைகள் வேண்டாம்
வெறும் ஆசைகொள் நீ நேசம் கொள்ளும்
உன் வாழ்க்கையை நீ வாழ்ந்திட!

வறுமையாய் இருந்தாலும்
வாழ்க்கை வெறுமனே கடந்தாலும்
வயிறிங்கு வைக்கோலில் நிறைந்தாலும்
நீ கொண்ட லட்சியம் ஒருநாள் நிறைவேறும்
நம்பிக்கை கொள் மகளே!

## சீதனம்

வரக்காமுறையூர் ராசிக்

ஏழை குமரிகளின்
இளமைகளை சிதைக்கும்
அசுரப் புயல்
முதிர்க் கன்னிகளின்
முகங்களை ரணமாக்கும்
விஷக்கல்
வறிய அப்பாக்களின்
வயோதிப இதயங்களை
கீறிக் கிழிக்கும்
கூராயுதம்
இயலாதவர்களின்

இதயத் துடிப்பை
பலவீனப்படுத்தும்
கொரோனா வைரஸ்
கல்யாண வெளியீட்டுக்காய்
ஏழை கவிதாயினிகள்
கண்ணீரால் எழுதிய
கவிதைத் துளிகள்
முதுகெலும்புகள்
முறிக்கப்பட்ட
ஊன ஆண்களின்
ஊன்றுகோல்
பணக்கார வண்டுகளால்
சிதைக்கப்பட்ட



செவ்வந்திப் பூக்களின்
சவக்குளி
ஏழை பெண்ணையும்
கோழை ஆணையும்
பிரித்தாளும்
செல்வ ராஜாக்களின்
ராஜதந்திரம்
வாழ்வுக்கும்

சாவுக்கமிடையிலான
மரண யுத்தம்
பவுன்கள் இல்லாத
பாவையரின்
பால்ய பருவத்தில்
கொட்டப்படும்
தீக்குழம்பு
கல்யாண தேசத்தில்
கழன்று விழுந்த
கறுப்புச் சூரியன்
திருமண சோலைக்குள்
வீசி எறியப்பட்ட
நெருப்புக் குண்டம்

# மகளிர் தொழில் முயற்சியாளர்களுக்கு 'WCIC ப்ரதிபாபிஷேக'-விருது

## தங்கம், வெள்ளி, வெண்கலம் வழங்கி கௌரவிக்கிறது மகளிர் கைத்தொழில் மற்றும் வணிக சபை




படம்: சுலோச்சன கமகே

உயர்மட்ட தொழில் முயற்சியாளர்களைக் கொண்ட இலங்கை மற்றும் சார்க் வலய மகளிர் தொழில் முயற்சியாளர்கள் நாட்டின் பொருளாதாரத்திற்கு வழங்கியுள்ள ஒத்துழைப்பை பாராட்டும் வகையிலும் அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும் சிறப்பு விருது வழங்கி அவர்களை கௌரவிப்பதற்கு மகளிர் கைத்தொழில் மற்றும் வணிக சபை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

மகளிர் தொழில் முயற்சியாளர்கள் மத்தியில் சிறந்த தொழில் முயற்சியாளர்களை இனம் கண்டு அவர்களின் திறமைகளை பாராட்டும் வகையில் 'WCIC ப்ரதிபாபிஷேக' என்ற பெயரில் விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்கு DFCC வங்கி அனுசரணை வழங்க வுள்ளது.

அந்த வகையில் எதிர்வரும் 2023 ஜனவரி மாதத்தில் 'WCIC ப்ரதிபாபிஷேக' மகளிர் தொழில் முயற்சியாலர்களுக்கான விருது வழங்கும் விழாவை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த நெருக்கடியான காலகட்டத்திலும் சாத்தியமாக அதனை எதிர்கொண்டு தமது வர்த்தக முயற்சிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் சென்ற மகளிர் தொழில் முயற்சியளர்களுக்கு இந்த விருதுக்கான வாய்ப்பு வழங்கப் படவுள்ளது.

இந்த விருது விழாவுக்காக மகளிர் தொழில் முயற்சியாளர்களுக்கு மகளிர் கைத்தொழில் மற்றும் வணிக சபை அழைப்பு விடுத்துள்ளதுடன் DFCC ஆலோக்கா விருது மூலம் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு நாட்டின் பொருளாதாரத்திற்கு உயர் மட்ட பங்களிப்பை வழங்கியுள்ள மகளிர் தொழில் முயற்சியாளர்கள் கௌரவிக்கப்பட உள்ளனர். பல பிரிவுகளாக அதற்கான விண்ணப்பங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் புதிய வர்த்தகத் துறை, சிறு அளவிலான வர்த்தக முயற்சிகள், நடுத்தர வர்த்தக முயற்சிகள், பாரிய அளவிலான வர்த்தக முயற்சிகள் என இந்த பிரிவுகள் அமையவுள்ளன.

**இலங்கையிலும் சார்க் நாடுகளிலும் இருந்து விண்ணப்பங்கள் கோரல்**

அனைத்து பிரிவுகளுக்கும் தங்கம், வெள்ளி, மற்றும் வெண்கலப் பதக்கங்கள் விருதுகளாக வழங்கப்பட உள்ளதுடன் இந்த வர்த்தக குழுக்களில் விருதுகளுக்காக குறிப்பிடப்பட்டுள்ள வருடங்களான 2020 / 2021 க்காக இந்த விருதுகள் வழங்கப்பட வுள்ளன.

பிரதேச ரீதியிலான மகளிர் தொழில் முயற்சியாளர்களை இனம் கண்டு அவர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில் விண்ணப்பங்களை கோருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் ஒவ்வொரு மாகாணங்களிலும் இருந்து திறமையான மகளிர் தொழில் முயற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அனைத்து விண்ணப்பதாரர்களும் விஷேட விருதுக்காக கவனத்தில் கொள்ளப்படுவதுடன் வருடத்தின் இளைய தொழில் முயற்சியாளர், வருடத்தின் சிறந்த குறிப்பிடத்தக்க ஆரம்ப தொழில் முயற்சியாளர், வருடத்தின் குறிப்பிடத்தக்க திறமை மிக்க தொழில் முயற்சியாளர், வருடத்தின் குறிப்பிடத்தக்க ஏற்றுமதி தொழில் முயற்சியாளர், சார்க் வலய திறமை படைத்த தொழில் முயற்சியாளர்கள் என இதற்குள் உள்ளடங்குகின்றனர்.

எவ்வாறாயினும் இந்த விருது விழாவில் வருடத்தின் சிறந்த தொழில் முயற்சியாளர் விருது 2022 முதன்மையானதும் சிறப்பானதுமாகும்.

இந்த விருதுகளுக்காக விண்ணப்பிப்பவர்கள் www.wcicsl.lk இணையதளத்தில் விபரங்களை பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு விண்ணப்பிக்கும் அனைவரும் ஒக்டோபர் 31ஆம் திகதிக்கு முன்பதாக தமது விண்ணப்பங்களை மகளிர் கைத்தொழில் மற்றும் வணிக சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேற்படி விருது வழங்கும் விழா தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்று அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின்போது மகளிர் கைத்தொழில் மற்றும் வணிக சபையின் தலைவி அனோஜி டி சில்வா விருது விழா தொடர்பிலும் அதன் பிரதானநோக்கம் தொடர்பிலும் விரிவாக விளக்கமளித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் உள்நாட்டில் உள்ள மகளிர் தொழில் முயற்சியாலர்களை இலக்காகக் கொண்டு இந்த விருது விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் சார்க் வலய நாடுகளின் மகளிர் தொழில் முயற்சியாளர்களும் இதற்காக விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மகளிர் கைத்தொழில் மற்றும் வணிக சபையானது மகளிர் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் மகளிர் முயற்சிகளுக்கு சேவை வழங்கும் பிரதான தேசிய நிறுவனமாக செயற்பட்டு வருகிறது. இதன் அங்கத்தினர்கள் நாட்டிற்கும் சமூகத்திற்கும் முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

இந்த சபையின் ஊடான வழிகாட்டலை பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் எந்த தயக்கமும் இன்றி எப்போதும் எம்மை நாடலாம் என்றும் அதற்கான கதவு எப்போதும் திறந்தே உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

மேற்படி சபையின் உறுப்பினர்கள் உள்ளிட்ட தொழில் முயற்சியோடு சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் முக்கியஸ்தர்கள் பலரும் இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

லோரன்ஸ் செல்வநாயகம்...




## வாகன சாரதி தேவை

கொழும்பில் அமைந்துள்ள நிறுவனத்திற்கு நன்கு அனுபவம் உள்ள வாகன சாரதி தேவை. வயது 35 - 45 வரை போதைப் பழக்கம் அற்றவராக இருத்தல் வேண்டும். சம்பளம் 50000/- முதல் வழங்கப்படும். உணவுக்கு 15000/- ரூபா வழங்கப்படும். ஒரு மாதத்திற்கு தேநீருக்கு தேவையான பொருட்கள் வழங்கப்படும்.

உங்கள் தேர்வுக்கு அடையாள அட்டை, கிராம சேவகர் உறுதிப்பத்திரம் அவசியம் தேவை. பொலிஸ் சான்றிதழ் இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

**தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்**
**ரொஷான் 076 5743935**

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், இலங்கை

### வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கை நெறி பிரிவு

## வெளிவாரி பட்டக் கற்கை நெறிக்காக பதிவு செய்தல் - 2022

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தினால் வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைநெறிப் பிரிவினால் நடாத்தப்படும் பின்வரும் வெளிவாரி கற்கை நெறிகளுக்காக மாணவர்களைப் பதிவு செய்வதற்கு தெரிவு செய்யும் பொருட்டு தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து 2022-10-30ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தினால் முன்வைக்கப்படும் வெளிவாரி பட்டக் கற்கைநெறி**

1. கலை இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி
2. சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி கற்கையில் சமூக விஞ்ஞான இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி
3. ஆங்கில கலை இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி

**வர்த்தகம் மற்றும் முகாமைத்துவக் கல்வி பீடத்தினால் முன்வைக்கப்படும் வெளிவாரி பட்டக் கற்கைநெறி**

1. வர்த்தக இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி
2. முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (அரச) (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி
3. வியாபாரக் கற்கையில் விஞ்ஞான இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி

ஒவ்வொரு கற்கை நெறிக்கும் இயைபான தகவல்கள் www.external.sjp.lk எனும் இணையதளத்தில் தரப்பட்டுள்ளன.

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய முறை:**

1. விண்ணப்பங்களை நிகழ்நிலை (online) மூலம் மட்டுமே அனுப்புதல் வேண்டும். அதன் பிரகாரம் www.external.sjp.lk எனும் இணையதளத்திற்குள் பிரவேசித்து முறையாகப் பூர்த்தி செய்து விண்ணப்பங்களை அனுப்புதல் (Submit) வேண்டும்.
2. விண்ணப்பப் படிவங்களை அனுப்பும்போது பின்வரும் ஆவணங்களை ஸ்கேன் செய்து (Scan) செய்து தரவேற்றம் செய்தல் வேண்டும்.
   i. சான்றுபடுத்தப்பட்ட பிறப்பத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி
   ii. கல்விச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி
   iii. தேசிய அடையாள அட்டையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி
   iv. வங்கிக்குப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் மூலப் பிரதி
3. மேற்படி 02ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் பிரதிகள் சகிதம் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் வன்பிரதியொன்றை (Hard copy) பின்வரும் முகவரிக்கு 2022-10-30ஆம் திகதி அல்லது அதற்கு முன் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். (கவனிக்கவும்: கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் பட்டக் கற்கை நெறியின் பெயரை குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்).
4. நீங்கள் விண்ணப்பிப்பதற்கு உத்தேசிக்கும் பட்டக் கற்கை நெறிக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கை நெறிப் பிரிவினால், கங்கொடவில மக்கள் வங்கியின் கீழே தரப்பட்டுள்ள கணக்கிலக்கங்களுக்கு வரவாகும் வகையில் நாட்டின் எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் 3000.00 கட்டணத்தைச் (மீளளிக்கப்படும்) செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணபத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு உத்தேசிக்கும் பட்டக் கற்கை நெறிக்கு இயைபாக பின்வரும் கணக்கிலக்கத்திற்கு மட்டும் பணம் செலுத்துதல் கட்டாயமாகும். (வங்கி பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருத்தல் வேண்டும்.)

| | பட்டக் கற்கைநெறி | கணக்கிலக்கம் |
|---|---|---|
| 1 | கலை இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி | 072010007119 |
| 2 | சுற்றாடல் மற்றும் அபிவிருத்தி கற்கையில் சமூக விஞ்ஞான இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி | 072010007069 |
| 3 | ஆங்கில கலை இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி | 072010007028 |
| 4 | வர்த்தக இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி | 072010007036 |
| 5 | முகாமைத்துவத்தில் விஞ்ஞான இளமாணி (அரச) (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி | 072010007051 |
| 6 | வியாபாரக் கற்கையில் விஞ்ஞான இளமாணி (பொது) வெளிவாரி பட்டக் கற்கை நெறி | 072010007127 |

**விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்:**

- ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கை நெறிப் பிரிவிற்கு இணையான எந்தவொரு முகவர் நிறுவனமும் இல்லை. அதனால் விண்ணப்பப் படிவங்களைச் சமர்ப்பிப்பதற்கு www.external.sjp.lk எனும் இணையதளத்திற்குள் பிரவேசித்து மேற்குறிப்பிடப்பட்ட முறையை மட்டும் பின்பற்றுதல் வேண்டும். வேறு முகவர் நிறுவனங்களின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பில் பல்கலைக்கழகம் பொறுப்புகூற மாட்டாது.
- தாமதமாகக் கிடைக்கப்பெறும் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- ஒரு விண்ணப்பதாரர் பல பட்டக் கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கலாம். அதன்பொருட்டு வெவ்வேறான விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

**விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி :** **பிரதிப் பதிவாளர்,**
**வெளிவாரி பட்டம் மற்றும் விரிவாக்கல் கற்கைநெறிப் பிரிவு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்,**
**த.பெ. இல. 10, கங்கொடவில,**
**நுகேகொட.**

**பதிவாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**
**2022-09-25.**

# அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயல்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளரர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயல்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

## தகவல் தொழில்நுட்ப வலையமைப்பு மற்றும் தொடர்பாடல் பகுப்பாய்வாளர்/ நிர்வாகி (IT Network & Communication Analyst/ Administrator)

**முக்கிய பொறுப்புகள்:**

- நம்பகமான மற்றும் பாதுகாப்பான செயல்பாடுகளை வழங்க வங்கியின் LAN/WAN மற்றும் இணைய அமைப்பின் திறமையான மற்றும் பயனுள்ள முகாமைத்துவம்
- அடுக்கு பாதுகாப்பு கட்டமைப்பின் பிரகாரம் வலையமைப்பு உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், வடிவமைத்தல் மற்றும் செயல்படுத்துதல்
- அதிகமாகக் கிடைக்கும் தன்மை மற்றும் பேரிடர் மீட்பு திறனை உருவாக்குதல்
- முன்னெச்சரிக்கை கண்காணிப்பு மற்றும் தொழில் தரநிலைகளுக்கு இணங்குவதன் மூலம் வலையமைப்பு பாதுகாப்பை உறுதி செய்தல்
- வலையமைப்பு தகவல் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை நிர்வகித்தல்
- சேவைகளின் விற்பனையாளர் முகாமைத்துவம், செயல்படுத்தல், பராமரிப்பு மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் / சேவை நிலை ஒப்பந்தங்கள்.
- திறன் திட்டமிடல், சுகாதார சோதனை கண்காணிப்பு மற்றும் தரவு / குரல் வலையமைப்பிற்கான முகாமைத்துவ அறிக்கைகள்
- அனர்த்த சூழ்நிலைகளின் தாக்கத்தை குறைக்க கணினி மீட்பு செயல்முறைகளை உருவாக்குதல்.
- வங்கியின் நிறுவப்பட்ட தகவல் பாதுகாப்புக் கொள்கையை கடைபிடித்தல்
- தொழில்நுட்ப உதவி மற்றும் ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்திற்காக பல்வேறு ஒத்துழைப்புகளிலிருந்தான (உ-ம்: கட்டுப்பாட்டாளர்கள், கணக்காய்வாளர்கள், முகாமைத்துவம், விற்பனையாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் போன்றவை) விசாரணைகளுக்கு பதிலளித்தல்
- IBM, Unix, Linux, Solaris, Windows 2008, Windows 2012 Server நிர்வாகம் என்பவற்றில் அறிவு.
- வலையமைப்பு நெரிசல் பகுப்பாய்வை நடாத்துதல் மற்றும் சாத்தியமான சிக்கல்களை முன்கூட்டியே அறிக்கையிடுதல்.

**தகைமைகள் மற்றும் அனுபவம்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட கணனி விஞ்ஞானப் பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட எண்கணிதம், புள்ளிவிபரவியல் பட்டம் அல்லது கணனி முறைமை வடிவமைப்பில் இலத்திரனியல் சகிதமான டிப்போளா (குறைந்தபட்சம் ஒரு வருடம்) அல்லது வியாபார முகாமைத்துவ தேசிய நிறுவனம் (NIMB) அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் இதற்குச் சமமான தகைமை.

**அனுபவம்**

அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையில் ஒட்டுமொத்தமாக 4 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும். இதில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் வலையமைப்பு/ முறைமை நிர்வாகியாகவிருத்தல் வேண்டும். வங்கி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் உள்ள அனுபவத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். அபேட்சகர்கள் சிறந்த தொடர்பாடல் பிரத்தியேக திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**

சம்பள அளவு: ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம் ரூபா **62,060 – 980 x 20 - 81,660**. (10% கொடுப்பனவு, வாழ்க்கைச் செலவுப் படி மற்றும் வாடகைக் கொடுப்பனவு) இதன் பிரகாரம் மாதாந்த மொத்தச் சம்பளம் அண்ணளவாக இருக்கும்.

வயது: 40 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே ஒரு அரச துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**பொது நிபந்தனைகள்**

**தேர்வு முறை -** வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்படுவர்.

**பிற நன்மைகள்**

- ஊழியர் சேமலாப நிதியத்திற்கு 15% தொழில் வழங்குநரால் பங்களிப்புச் செய்யப்படும் மற்றும் பணியாளரால் 10% பங்களிப்புச் செய்தல் வேண்டும். வங்கி ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு (ETF) பங்களிப்புச் செய்யும்.
- வருடாந்த போனஸாக இரண்டு மாத சம்பளம்.
- சேவையில் உறுதிப்படுத்தப்பட்ட பிறகு சலுகை விகிதத்தில் வீடமைப்புக் கடன்கள்
- வங்கியின் மருத்துவத் திட்டத்தின் கீழ் நன்மைகள்
- பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைக்கான கொடுப்பனவுகள்

**விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 10/10/2022**

**விண்ணப்பிக்கும் முறை**

ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் கல்வி/தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண்களை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு மூலப் பிரமாணங்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

விண்ணப்பங்களை Careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.




# சைக்கிள் கடை

பழைய இரும்புச் சாமான்கள் நிரம்பிய முஸம்மிலின் லொறியை வீட்டுக்கு முன்னால் நிறுத்தி வைத்து. இரண்டு மாதங்களாகின்றன. முஸம்மிலின் கவலையை அவனது முகமே காட்டிக் கொடுத்தது. அது அவனுக்கு தெரியாமல் இல்லை. அவனது லாறியின்

நிலையோ பரிதாபம். காய்ந்த தென்னை ஓலைகள் லொறியின் கூரையின் மீது சாய்ந்து கிடந்தன. நோயுற்றிருந்த மனைவி பரீதாவை தனியாக வீட்டில் வைத்து விட்டு முழுநாளும் பெட்றோல் நிலையத்தில் கழிக்கும் மனநிலையில் முஸம்மில் இல்லை. அதற்கு அவனது உள்ளமும் இடம் கொடுக்கவில்லை. முஸம்மிலின் மூன்று குழந்தைகளும் தாய் பரீதாவின் அரவணைப்பிலேயே இருந்தனர்.

அவனது மூன்று மகள்மாரும் பாடசாலைக்குச் சென்று வரவும் வேண்டும்.

தொழிலுக்கு செல்ல முடியாததால் கடந்த சில வாரங்களாக வீட்டுச் செலவுகளுக்கு கூட அவனிடம் கையில் பணம் இல்லை. ஆங்காங்கே பெற்றுக் கொண்ட கடன்களை முஸம்மில் இதுவரையில் அடைக்கவே இல்லை.

அன்றொரு நாள் வீட்டில் இருக்கும் போது அவனது மச்சான் அஷ்ரப் அலி வந்து கொண்டிருப்பதை முஸம்மில் அவதானிக்கத் தவறவில்லை. அஷ்ரப் அலியின் நடை மிகவும் பரபரப்பாக இருந்தது. அவனது முகமும் சூரியனைக் கண்ட தாமரையைப் போல் மலர்ந்திருந்தது. வாசல் படியிலேயே, 'என்ன மச்சான் அஷ்ரப், காலையிலேயே வீட்டுப் பக்கம்?' என்று கேட்டான். அஷ்ரப் அலியோ நான் இங்கு வரும் போது, கரீமீன் ஹாட்வெயாரில் சைக்கிள்கள் வாங்குவதற்கு சரியான கூட்டம்

முழு கடையையுமே சனக்கூட்டம் நிறைந்து கிடந்தது"

'அப்படியா மச்சான்?'!

"மச்சான் பழைய இரும்புக்கு சலீம் ஹாஜியாரின் மனைவி கொடுத்த 15 பழைய சைக்கிள்கள் என்னுடைய லாறியில் அப்படியே கிடக்குது மச்சான்!"

"அடடா, அப்படியா சங்கதி! நான் சைக்கிள் பாஸ் அப்புஹாமியை உடனே கூட்டிக்கிட்டு வாரேன் . அவனை வைத்து வீட்டுக்கு முன்னால் சைக்கிள் ரெப்பயார் கடையொன்றையே சின்னதாக போடலாமே" என்ற யோசனையை முன்வைத்தான் அஷ்ரப்.

இது முஸம்மிலின் மனதில் பாலை வார்த்த மாதிரி இருந்தது. ஒருசாண் வயிற்றுக்கு சாப்பாடு கிடைக்குதே என்ற சந்தோஷம் முஸம்மிலுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தியது இன்றைக்கே தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என முஸம்மில் எண்ணினான் . முஸம்மிலின் எண்ணம் பின்னோக்கியே பயணித்தது. இரண்டு மாத காலமாக வருமானமே இல்லை. பக்கத்து தெருவிலுள்ள அபுசாலி காக்காவின் மளிகைக் கடையில் கடனுக்குச் சாமான்கள் வாங்கியே அவன் காலத்தை ஓட்டிக் கொண்டிருந்தான். வாங்கிய சாமான்களுக்கான கடன் தொகை நாளாந்தம் அதிகரித்து வருவது, அவனுக்கு பெரும் சுமையாக உள்ளது. வறுமையிலும் கௌரவமாக வாழ வேண்டும் என நினைப்பவன். "என்ன மச்சான் யோசனை?" என முஸம்மிலின் தொடையில் தட்டினான் அஷ்ரப் அலி.

"சரி சரி மச்சான்"

அப்புஹாமியை உடனே அவனது வீட்டுக்கு போய் கூட்டிக்கொண்டு வாங்களேன்."

மணித்தியாலங்களில் திறந்த மேனியும் வாயில் பீடிப் புகையுடனும்

மட்கார்ட் இல்லாத தனது பழைய சைக்கிளில் வரி போட்ட சாரத்தில் வந்து சேர்ந்தான். முஸம்மில் மச்சான் லொறியை திறங்களேன் என்றான்.

லொறிக் கதவைத் திறந்தான் முஸம்மில். சலீம் ஹாஜியாரின் மனைவி கொடுத்த பழைய சைக்கிள்கள் பழைய இரும்புச் சாமான்களுடன் கிடந்தன. அருகில் வந்த மனைவி பரீதா கொடுத்த தேநீரை மூவரும் அருந்தி விட்டு தமது வேலைகளில் மிகவும் ஆர்வமாக ஈடுபட ஆரம்பித்தனர். பழைய லொறியிலிருந்து சைக்கிள்களை இறக்கி வைப்பதில் அஷ்ரப் ஈடுபட்டான். சைக்கிள்களை அவதானித்த அப்புஹாமி

"எல்லா சைக்கிள்களும் பழையவை அல்ல. தேவையான உதிரிப்பாகங்களை அவற்றுக்கு உரிய முறையில் பொருத்தினால் நியாயமான விலைக்கு விற்கலாம்" என்றான். அப்போது அஷ்ரப் குறுக்கிட்டு "முஸம்மில் மச்சான். உங்களுடைய குசினிக்கு பின்னாலுள்ள பழைய ஆட்டு கொட்டிலிலும் பத்துப் பன்னிரண்டு பழைய சைக்கிள்களை நான் ஏற்கனவே போட்டு வைத்தேன் . அவற்றையும் எடுத்து திருத்திச் செய்தால் அவற்றையும் விற்கலாம் தானே" என்றான் .

முஸம்மில்; "நல்ல யோசனை தான் அஷ்ரப் அலி. நீங்க போய் பாருங்களேன். நான் இங்கு அப்புஹாமியுடன் வேலைகளை கவனிக்கிறேன்" என்றான். அங்கேயும் இங்கேயும் கிடந்த சைக்கிள்களின் பாகங்களை ஒருங்கிணைத்து சைக்கிள்களாக உருவாகின. காலத்துக்கு ஏற்ற முடிவு முஸம்மிலின் வாழ்க்கைக்கு மீண்டும் புத்துயிர் அளித்தது. இப்போது முஸம்மில் பிஸியான சைக்கிள் கடையொன்றின் உரிமையாளன்!

**நீர்கொழும்பு ருஸ்மான் ...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 40



திரு/திருமதி.செல்வி ....................................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ....................................................
....................................................
....................................................

.............................. ..............................
திகதி கைியொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 40
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 40

**இடமிருந்து வலம்**

*01. சிறிதும் விட்டுக்கொடுக்காத மனநிலை*
*04. அமைதியான இயல்புடையவர்*
*06. வார நாட்களில் ஒன்று*
*07. ஓர் இனிப்புப் பண்டம்*
*08. குதிரை குழம்பிவிட்டது*
*09. இடையூறு*
*11. புராண வரலாற்றில் வரும் மலை*
*12. சம்மதம் அல்லது உடன்படுவதை தெரிவிக்கும் சொல் (திரும்பியுள்ளது)*
*13. ஒரு நீர்நிலை*
*15. திருமணம் செய்யாத பெண்*
*16. ஒன்றுக்கு மேற்பட்டது (திரும்பியுள்ளது)*
*18. சொற்பம் (திரும்பியுள்ளது)*
*19. உஷ்ணத் தன்மையை இப்படியும் சொல்லலாம்.*
*20. அடிப்பதற்கு பயன்படுத்தப்படுவது (குழம்பியுள்ளது)*
*21. நெருப்பு இல்லாமல் இது வராது.*

**மேலிருந்து கீழ்**

*01. சிறப்பித்துப் பாராட்டி அல்லது உயர்வாகச் சொல்வது*
*02. வீடு அல்லது கட்டடத்திற்கு நுழையும் வழி*
*03. எதனுடனும் இணைந்து இல்லாத நிலை*
*04. நிறைந்த பண்பு, மேன்மை*
*05. துளை*
*07. நீர்வீழ்ச்சி (குழம்பியுள்ளது)*
*10. உடலில் அணியும் அங்கி (தலைகீழ்)*
*11. உலகம்*
*13. பணம் அல்லது பொருளை உவந்து வழங்குவது*
*14. முற்காலப் பெண்களில் சிலர் இதனை காலில் அணிவார்கள்.*
*15. இதுவும் ஒரு போதைப் பொருள்*
*17. விரோத உணர்வு (குழம்பியுள்ளது)*
*18. தன்மை இடத்து பன்மைச் சொல் (தலைகீழ்)*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 39

### விடைகள்

**இடமிருந்து வலம்**

*01. சூட்சுமம் 04. மாசி 06. வலை*
*07. உலர் 08. கடுப்பு 10 களி*
*11. புத்தகம் 14. வறுமை 15. தட்டம்*
*16.உளவு 17. மாவட்டம் 18. ஒளி*
*19. கவலை*

**மேலிருந்து கீழ்**

*01. சூடு 02. சுவடு 03. மலைப்பு*
*04. மார்க்கம் 05. சில 08. களிறு*
*09. புத்தளம் 10. கவரிமான் 12. தடவு*
*13. ஒட்டகம் 16. உடல் 18. வளி*

### பரிசு பெறுவோர் விபரம்

**முதல்பரிசு (ரூ 500/)**
*ஏ.சந்தியாகோ*
*34/12 செமினறிவத்தை,*
*தென்னக்கும்புற, கண்டி*

**இரண்டாம்பரிசு (ரூ 350/)**
*பாத்திமா நிப்ளா*
*இல. 273 , பொல்கஹயாய,*
*நாரம்மல*

**மூன்றாம் பரிசு (ரூ 150/)**
*கே. சகுந்தலா தேவி*
*975, அன்புவழிபுறம்*
*திருகோணமலை*

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 39

### பாராட்டு பெறுவோர்

**1. சி. அருந்ததி**
*ரொக்ஹில் பதுளை*

**2. எம்.எச்.எம் பாஸி**
*கும்புக்கந்துறை, ரஜவெல*

**3. வி.பழனியாண்டி**
*கம்பளை*

**4.மிஹாத் அஹமட்**
*துல்ஹிரிய*

**5. எப்.ஆர்.ஏ. ஷக்கூர்**
*மடவளை பஸார்*

**6. சி. அருந்ததி**
*பதுளை*

**7. கே. புண்ணியநேசன்**
*காரைதீவு*

**9. கே. நித்யா**
*மட்டக்களப்பு*

**10. ஆர். ஷப்னா**
*குருநாகல்*

**11. றிஹானா**
*கண்டி*

**12. எம். ஏ. சப்னா**
*சாய்ந்தமருது*

**13. எம்.ஐ. வஹீத்**
*சம்மாந்துறை*


## கல்வி அமைச்சு

### தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகம் (NIFS)

### இலங்கை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

01. கண்டி, ஹந்தானை வீதி, தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகத்தின் திணைக்கப் பெறுகைக் குழுவின் (DPC) தலைவரினால் கீழ்க்குறிப்பிடப்பட்டவைக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | விபரம் | தகவுத்திறன் தகுதி | விலைக்கோரல் பிணை முறி | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | தேசிய அடிப்படை கல்வி நிறுவக பழைய கட்டிடத்தின் கூரை திருத்தவேலைகள் | CIDA C6 அல்லது அதற்கு மேல் | ரூபா 95,000.00 | ரூபா 2,200.00 |

02. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.

03. 2022-06-26ஆம் திகதி முதல் 2022-11-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் மேலே தரப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தி மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட அலுவலகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் பேரில் நிர்வாகப் பிரிவிலிருந்து முழுமையான விலைக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம்.

04. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-10-17ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகம் எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது கூட்ட அறையில் வைக்கப்பட்டுள்ள 2ம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கண்டி, ஹந்தானை வீதி, தேஅகநி, கூட்ட அறையில் 2022-10-17ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம். விலைமனுக்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.

05. விலைமனுக்களுடன் மேற்குறிப்பிடப்பட்ட வகையில் விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் கண்டி, ஹந்தானை வீதி, தேஅகநி, பணிப்பாளரின் பெயரில் பெறப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

**தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு (DPC),**
**தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகம்,**
**ஹந்தானை வீதி,**
**கண்டி.**

**தொலைபேசி இல. : 081-2232002**
**தொலைநகல் இல. : 081-2232131**



ஈழத்து நவீன இலக்கிய முன்னோடிகள் 22

மூத்த எழுத்தாளர் தி. ஞானசேகரன்

# ஈழத்து பா நாடக முன்னோடி முருகையன்

1950ஆம் ஆண்டுகளில் ஈழத்து நவீன கவிஞர்கள் நாடகத்துறையில் ஈடுபடத் தொடங்கிய பின்னரே இங்கு பா நாடகம் குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய ஒரு நாடக வகையாக வளர்ச்சியடைந்தது. ஆகவே ஈழத்துப் பா நாடக வளர்ச்சி 50ஆம் ஆண்டுகளிலிருந்து தொடங்குவதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

திருச்சிக் கவிஞர் கலைவாணனின் மணல் வீடு என்ற கவிதை நாடகத்தைக் கேட்ட சூட்டோடு சூடாக 1953இல், தான் எழுதிய நித்திலக்கோபுரம் என்பதே இலங்கையில் முதல் முதலில் எழுந்த பாநாடகம் என்று முருகையன் கூறுவதற்கும் இதுவே காரணம் ஆகலாம்.

இவ்வகையில் பார்த்தால் முருகையனே ஈழத்துப் பா நாடகத் துறையின் முன்னோடி எனலாம்" எனக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் எம்.ஏ.நுஃமான், ஞானம் சஞ்சிகை நூறாவது இதழில் எழுதிய ஈழத்துப் பா நாடகங்கள் என்ற கட்டுரையில்.

முருகையனின் நித்திலக்கோபுரம் வானொலியில் ஒலிபரப்பாகியது. மேடையை விட, பா நாடகங்களுக்கு வானொலி மிக வாய்ப்பான ஒரு சாதனம் எனலாம். வானொலி நாடகத்துக்கு மேடைக்குரிய காட்சிப்படிமங்கள் அவசியமில்லை. ஒலிப்படிமங்களையே அது அடிப்படையாகக் கொண்டது. மேடைச் சிக்கலிலிருந்து அது கவிஞர்களுக்கு விடுதலை வழங்குகிறது.

1936ஆம் ஆண்டிலே சோமசுந்தரப்புலவர் இயற்றிய உயிர் இளங்குமரன் நாடகம் வெளிவந்தது. இடையிடையே வசன நடையில் உரையாடல்கள் இடம் பெற்றிருப்பினும் பிரதானமாக இது ஒரு பா நாடகமே. சைவசமயக் கருத்தை விளக்குவதற்கு எழுந்த இந்நாடகமே ஈழத்தில் மேடையேற்றப் பட்ட முதலாவது பா நாடகமாகும்.

1960களில் ஈழத்துப்பா நாடக உலகில் ஒரு புதிய பண்பைப் காண்கிறோம். மேடைக்காகத் திட்டமிட்டு நாடகம் எழுதும் முயற்சியே அது.

உயிரிளங்குமரனுக்குப் பிறகு ஈழத்திலே மேடையேறிய பா நாடகம் முருகையனின் குற்றம் குற்றமே என்பதாகும். கொழும்பு சாஹிறாக் கல்லூரியில் இடம்பெற்ற முற்போக்கு எழுத்தாளர் சங்க மகாநாட்டில் இறுதி நிகழ்ச்சியாக இந்நாடகம் மேடையேற்றப்பட்டது.

கல்வயல் கிராமத்தில் 23.04.1935இல் முருகையன் பிறந்தார். இவரது தந்தையார் இராமுப்பிள்ளை ஒரு புகழ்பெற்ற தமிழாசிரியர். தாயார் பெயர் செல்லம்மா. இவருடன் கூடப்பிறந்தவர் நாடக வல்லுனரும் கவிஞருமான சிவானந்தன்.

முருகையன் தனது ஆரம்பக் கல்வியை கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி ஆகியவற்றிலும் பெற்றார்.

உயர்கல்வியை கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பெற்று 1956இல் விஞ்ஞானப் பட்டதாரி ஆனார்.

1961இல் லண்டனில் கலைமாணிப் பட்டத்தைப் பெற்றார். 1985இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதுமாணிப் பட்டத்தைப் பெற்றார்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் 1956முதல் விஞ்ஞான ஆசிரியராகப் பணியாற்றிய முருகையன் பின்னர் அரச மொழித் திணைக்களத்தில் அறிவியல் பாடநூல் மொழிபெயர்ப்பாளராகவும், தமிழ்மொழிப் பாடநூல் திணைக்களத்தில் முதன்மைப் பணிப்பாள ராகவும், 1978 முதல் 1983 காலப்பகுதியில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராகவும் 1984 முதல் முல்லைத் தீவு, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கல்விப் பணிப்பாளராகவும் கடமையாற்றி இறுதியாக 1986இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் முது துணைப் பதிவாளராகப் பணியாற்றினார்.

1995இல் ஓய்வு பெற்றார். அதன்பின்னர் 2002வரை பல்கலைக்கழக தமிழ்த்துறையில் வருகைதரு விரிவுரையாளராகவும் பணியாற்றினார்.

கவிதையின் மூலம் இலக்கியப் பிரவேசம் செய்த முருகையன் மேடைப் பா நாடகங்கள், வானொலிப் பா நாடகங்கள், மொழி பெயர்ப்பு, காவியங்கள், விமர்சனம், கட்டுரை, பாடலாக்கம் எனப் பல்வேறு துறைகளில் தடம் பதித்தவர்.

முருகையன் ஆங்கிலக் கவிதைகள் சிலவற்றைத் தமிழிலும் தமிழ்க்கவிதைகள் சிலவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்.

1950முதல் எழுதத் தொடங்கிய முருகையன் ஆரம்பத்தில் தமிழ்த் தேசியவாதம், மொழிஉணர்வு சார்ந்த கவிதைகளை எழுதினார். அறுபதுகளில் இருந்து சோஷலிசக் கருத்து நிலையில் தனது படைப்புக்களை வெளிக் கொணர்ந்தார். இக்காலகட்டத்தில் இவர் படைத்த அநேகமான படைப்புக்களில் முற்போக்குக் கருத்து



நிலையின் செல்வாக்குப் பொதிந்திருந்தது. எண்பதுகளுக்குப் பின்னர் அவரது அநேகமான கவிதைகள் யுத்தகால இராணுவ ஒடுக்கு முறைகள் பற்றியதாக அமைந்தன. முருகையன் ஒரு மரபுவழிக் கவிஞர்.

இவரது முதலாவது நூல் 'ஒரு வரம்" (1964) பன்னிரண்டு ஆங்கிலக் கவிஞர்களின் மொழிபெயர்ப்புத் தொகுப்பாகும். நெடும் பகல் காவியம் (1967), ஆதி பகவன் காவியம் (1978), அது அவர்கள் நீண்ட கவிதை (1986), மாடும் கயிறு அறுக்கும் (1990), நாங்கள் மனிதர் (1992), ஒவ்வொரு புல்லும் பூவும் பிள்ளையும் (2001) என்பன அவரது கவிதை நூல்களாகும். இவருடைய கவிதைகள் தனிக்கவிதை, நெடும்பாட்டு, பாநாடகம் என்ற மூன்று வகையாகக் காணப்படுகின்றன. புதுக்கவிதையை வெறுத்து மரபுக் கவிதையை விரும்பும் இக் கவிஞரின் ஒவ்வொரு கவிதையிலும் ஒலி நயமும், கலையம்சமும், சமுதாயப் பயன்பாடும் இருக்கும். பேராசிரியர் க. கைலாசபதி இவருடைய பாடசாலை நண்பன்.

இருவரும் சேர்ந்து 'கவிதைநயம்" என்னும் நூலை எழுதி வெளியிட்டனர். நண்பர் மஹாகவியுடன் (உருத்திர மூர்த்தி) இணைந்து 'தகனம்" என்ற காவிய நூலையும் எழுதினார். 'தகனம்" நூலுருப் பெறவில்லை.

மேடைக் கவிஞருக்குத் களமமைத்து தலைமைக் கவிஞராகக் கவிதை படிப்பதுடன் இளங்கவிஞர்களுக்கும் களமமைத்துக் கொடுத்தார். இதனால் பல இளங்கவிஞர்கள் உருவாக்கப்பட்டனர்.

முருகையன் எழுதிய முதல்நாடகம் சிந்தனைப்புயல் என்பதாகும். இந்நாடகம் இந்துக்கல்லூரில் இவர் படித்துக் கொண்டிருந்த காலத்தில் எழுதியது. அதிலே இவரே கதாநாயகியாக நடித்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பின்னர் இவர் ஒரு கவிதை நாடகத்தை வானொலிக்காக எழுதினார். முதன்முதலில் இவர் எழுதிய நித்திலக் கோபுரம் (1953) நாடகத்தை தயாரித்தவர்கள் வானொலிக்காரர்கள்தான். அந்த ஊக்கத்தில் இவர் தொடர்ந்து சில வானொலி



நாடகங்களை எழுதினார். பின்பு காலப் போக்கில் மேடை நாடகங்களை எழுதும் நாட்டம் இவருக்கு ஏற்பட்டது.

இலங்கையில் அதிகமான பா நாடகங்களை எழுதியவர் முருகையனே.

இவரது கடூழியம், அப்பரும் சுப்பரும் (1971) ஆகிய மேடைநாடகங்கள் மிக முக்கியமான அரசியல் நாடகங்கள் எனக் கருதப்படுகின்றன. கடூழியம் மார்க்சிய கருத்து நிலையில் எழுதப்பட்ட நாடகமாகும். இந்த இரண்டு நாடகங்களும் முற்போக்கு எழுத்துக்கு உதாரணமாக விளங்கும் மேடை நாடகங்களாகும். இவைதவிர பொய்க்கால், குற்றம் குற்றமே ஆகிய மேடை நாடகங்களையும் இவர் படைத்துள்ளார்.

இவர் எழுதிய பா நாடக நூல்களாக, வந்து சேர்ந்தன,(1965) தரிசனம், உண்மை, (மொழிபெயர்ப்பு 2002) கோபுர வாசல், (1969) மேற்பூச்சு, (1995) வெறியாட்டு, (1989) சங்கடங்கள்(2000) ஆகியன வெளிவந்துள்ளன. மேடைநாடக நூல்களாக கடூழியம், அப்பரும் சுப்பரும் (1971) ஆகியன வெளிவந்துள்ளன.

முருகையன் எல்லாமாக 24 நாடகங்களை எழுதியுள்ளார். அவையாவன நித்திலக்கோபுரம், அந்தகனே ஆனாலும், வந்து சேர்ந்தன, தரிசனம், கோபுரவாசல், கடூழியம், செங்கோல், கலைக் கடல், கொண்டுவா தீயை கொளுத்து விறகை எல்லாம், சுமசும மகாதேவா, அப்பரும் சுப்பரும், கந்தப்ப மூர்த்தியர், வழமை, அந்தகனே ஆனாலும், இடைத்திரை, குனிந்ததலை, வெறியாட்டு, பொய்க்கால், குற்றம் குற்றமே, தந்தையின் கூற்றுவன், இரு துயரங்கள், கலிலியோ, உயிர்த்த மனிதர் கூத்து, எல்லாம் சரிவரும், என்பனவாம்.

கவிஞர் முருகையனின் ஆங்கிலப் புலமை அசாத்தியமானது. ஷேக்ஸ்பியர் என்னும் சிறப்பிதழை இவர் வெளியிட்டுள்ளார். யாழ். பட்டதாரி மாணவர்களுக்கு 'மொழிபெயர்ப்பு நுட்பம்" பற்றி விரிவுரைகள் ஆற்றியுள்ளார். அவ்விரிவுரைகள் அனைத்தும் அதே பெயரில் நூலுருப் பெற்றுள்ளன.

இலங்கை அரச மொழிகள் திணைக்களத்தில் பணியாற்றிய முருகையன் தமிழ் கலைச்சொல்லாக்கத்திற்குக் கணிசமான பங்ளிப்புச் செய்துள்ளார்.

ஒருசில விதி செய்வோம், இன்றைய உலகில் இலக்கியம் ஆகிய திறனாய்வு நூல்களையும் முருகையன் எழுதியுள்ளார். 'திருவெம்பாவையர்" இவர் எழுதிய உரை நடைச் சித்திர நூலாகவும், இளநலம் (வடமொழி குமார சம்பவத்தை ஒட்டியது), மொழிபெயர்ப்பு நுட்பம் ஆகிய கட்டுரை நூல்களையும் இவர் வெளியிட்டுள்ளார்.

இவற்றைவிட முந்நூறுக்கும் மேற்பட்ட பல்வேறு துறைசார்ந்த கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகம் இவரது இலக்கியப் பணியினைப் பாராட்டி கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கியது.

அரச உயர் விருதான சாஹித்யரத்னா விருது இவருக்கு 2007ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

முருகையன் தனது 74ஆவது வயதில் 27.06.2009 அன்று அமரரானார்.

---



இளமை ஊஞ்சலாடும் விறுவிறுப்பான தொடர்

## இனியவனே என்று பாடி வந்தேன்!



ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

## 06 மறை முகமாக நடக்கும் விசயங்கள் சிலருக்கு புரியாது இறைவனின் விளையாட்டு அவர்களுக்கு தெரியாது!

இருவரும், தோட்டத்திற்குள் நுழைந்ததைப் பார்த்து விட்டு,

அவர்களைப் பார்க்காதவளைப் போல், முற்றத்தைக் கூட்டிக் கொண்டிருந்தாள் பார்வதி.

"சரியான டயட்டா இருக்கு அம்மா!"

அவள் அருகில் வந்து சொன்னான் பிரேம்.

அப்போதும்,

பார்வதி அவர்களைப் பார்க்காமல், தனது வேலையில் ஈடுபட்டிருந்தாள்.

"அம்மா... பசி வயித்த கிள்ளுதம்மா?"

பரிதாபமாகச் சொன்னான் பிரேம்.

"ம்...அந்த பஸ் ஓல்ட காத்துக் கொண்டிருக்கக்குள்ள இந்த பசி எல்லாம் வராலியோ...?"

பார்வதி இப்படி சொன்னதும்,

பிரேமும், ஜீவகனும்,

ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னடா ஒருவர் முகத்த ஒருவர் பார்க்குறீங்க...?"

"இ... இல்லம்மா உங்களுக்கு யார் சொன்னது,,,?"

"ஏன்டா ... நீ செய்ற நெறைய விஷயங்கள் எனக்கு தெரியாதுன்னுதான் நீ நெனைச்சிக்கிட்டிருக்கிற... இல்லயா...அடேய் நான் ஒண்ட அம்மாடா...!"

அம்மா இப்படி சொன்னதும்,

பிரேம் சிரித்தான்.

அவன் ஏதோ பொய் சொல்லப் போகிறான் என்பது!

ஜீவகனுக்குப் புரிந்து விட்டது.

"என்னடா சிரிக்கிற" அதட்டினாள் பார்வதி.

அவள் அருகில் வந்து,

அவள் கையைப் பிடித்துக் கொண்டு, "ஐயோ... அம்மா எங்களுக்கு சரியான வேல இல்லியா நடந்திச்சி.... எங்களய அந்த பார்ட்டிக்கு கூட்டிக் கொண்டு போறேண்டு சென்னவன் எங்களுக்கு பொல்லாய போட்டுட்டு எங்கேயோ மாறிட்டான்!"

பச்சைப் பொய்யை

பதறாமல் சொன்னான் பிரேம்"

"எனக்குத்தான் தெரியுமே நீ பார்ட்டிக்கு போற சங்கதி யெல்லாம் இதபாரு நீ எங்கேயும் போய்த் தொல ஆனா இவன் மட்டும் நீ எங்கேயும் கூட்டிக் கிட்டுப் போவதா உனக்கு புண்ணியம் கிடைக்கும்!"

"என்னம்மா இது நீங்கதானே அவனையும் கூட்டி கிட்டுப் போகச் சொன்னீங்க...! இப்ப எதுக்கு சும்மா பயப்படுறீங்க...?"

"ம்... சரி... சரி... உனக்கு பசிக்குதின்னு சொன்ன இல்ல... அங்க பாணும் சொதியும் வெச்சிருக்கேன்... போய் சாப்பாடு.. போ...!"

பிரேம் ஏதோ சொல்ல போனோது,

அவன் தோளில் தட்டி, அங்கிருந்து நகர்ந்து செல்லும்படி சைகை செய்து விட்டு,

முன்னால் நடந்தான் ஜீவகன்.

அடுத்து, மெல்ல ஊர்ந்து அவன் பின்னால் நடந்தான் பிரேம்.

"ஏன்டா பிரேம் இந்த விசயத்த அம்மாகிட்ட யார் டா சொல்லியிருப்பாங்க...!" வீட்டுக்குள் நடந்தபடி கேட்டான் ஜீவகன் .

"யாருக்குடா தெரியும்... நான் எது செஞ்சாலும் எவனாவது வந்து அத அம்மாகிட்ட சொல்லிடுராங்கடா...!"

சொல்லி படியே,

வீட்டுக்குள் நுழைந்தான் பிரேம்.

அவன் பின்னால்

ஜீவகனும் நுழைந்தான்.

★★★

காலையில் இருந்து தனது தினசரி கடமையில் ஈடுபட்டிருந்த கதிரவன.

தனது கடமையை முடித்துக் கொண்டு,

கீழ்வானில் மறைந்து கொண்டிருந்தான்.

இரவு மகள்,

கொஞ்சம் கொஞ்சமாக எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தாள்.

கட்டிலில்,

சாய்ந்து அன்று நடந்த சம்பவங்களை பல தடவைகள்

நினைத்துப் பார்த்து விட்டான் ஜீவகன்.

அந்த அழகிய முகம், அவன் முன்னால் வந்து நின்று நர்த்தனமாடிக் கொண்டிருந்தது!

அந்த முகத்தில் கோபம் கொப்பளித்துக் கொண்டிருந்தாலும்,

அதில் ஒரு மென்மையும்,

அப்பாவித்தனமும் குடிகொண்டிருந்தது.

பரந்து விரிந்த இந்த உலகில்,

அந்த முகத்தை இதற்கு முன்பு எங்கேயோ பார்த்திருப்பதைப் போன்ற ஓர் உணர்வு அவனுக்கு ஏற்பட்டிருந்தது.

வெண்பா!

அந்தப் பெயர் எவ்வளவு அழகானது!

எவ்வளவு மென்மையானது!

அதற்கு பின்னால் மறைந்திருக்கும் பொருள்தான் எவ்வளவு சுவையானது.

இவை எல்லாவற்றையும் விட அந்தப் பெயர் எவ்வளவு பொருத்தமானது!

சிலருக்கு பெயர் வைத்திருப்பார்கள்!

ஆனால்,

அந்தப் பெயருக்கும் அவருக்கும் சம்பந்தமே இருக்காது!

பெயரில் கருணை இருக்கும். ஆனால், அவர்கள் எப்போதும் கடுகடுப்பாகவே இருப்பார்கள்.

ஆனாலும்,

வெண்பா என்ற பெயரைப் பார்த்தால், அது அப்பாவித் தனமாகவே இருக்கும் ஒரு பெயராகவே அவனுக்குத் தோன்றியது.

அதுமட்டுமல்ல,

அந்த அறைக்குள் எங்கு பார்த்தாலும், அவள் முகம் சுற்றி சுற்றி வந்து கொண்டிருந்தது!

இதுவரையில் நானும் எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கிறேன். அப்போதெல்லாம்,

என் மனம் இப்படிச் சஞ்சலப்பட்டதில்லையே...!"

ஆனாலும், இவள் அழகிய முகம் மட்டும் என்னை இப்படி வதைக்கிறதே!

இது ஏன்?

வெண்பா...? வெண்பா?

இந்தப் பெயர்,

எனது ஆழ்மனதை ஏன் வதைக்கிறது?

இதற்கான காரணத்தை அவனால் புரிந்து கொள்ள முடிய வில்லை!

ஜீவகன் இப்படி வெண்பாவின் நினைவுகளில் மூழ்கியிருந்தபோது தான்,

முகத்தைக் கழுவிக் கொண்டு,

டவலால் துடைத்தபடியே அவன் அருகில் வந்தான் பிரேம்!

சுவரையே பார்த்தபடியே, புன்னகையுடன் அமர்ந்திருந்த ஜீவகனைப் பார்த்ததும்,

அவனுக்கு வியப்பாக இருந்தது!

"டேய் என்னடா இது தனியா சிரிச்சிகிட்டிருக்கிற... உனக்கு பைத்தியம் கியித்தியம் புடிச்சிடுச்சா...!"

பதறிப்போய் எழுந்து நின்றான் ஜீவகன்.

"என்ன கேட்டே...?"

"என்னடா நடக்குது இங்க!"

"இல்லடா அந்தப் பெண்ணோட முகத்த நீ பார்த்தியாடா?"

"ஆமாடா ... அந்த பெண்ணோட முகத்த பார்த்ததில்ல தானேடா... இன்டைக்கு முழுக்க அந்த பஸ் ஓல்ட் ரஸ்தியாது அடிச்சிட்டு வந்திருக்கிறோம்!"

"ஐயோ... அந்தப் பொண்ணு இல்லடா... நான் படம் புடிச்சேனே... அந்தப் பெண்ணுடா...!"

"அங்க மூனு பொண்ணுங்க இருந்தாங்களேடா...?'"

அந்த நடுவுல வந்தாளே...!"

"ஓ... அந்த குதிர மாதிரி உயரமா செவப்பா இருந்தாளே... அவளா?"

"ம்..."

"அவ உனக்கு செட்டாக மாட்டாளேடா..."

"டேய்... என்ன கிண்டலாடா...!"

"என்னடா வலிக்கிறதா?"

"உனக்கெல்லாமே கேலி தான்டா?"

"சரி... சரி... இப்ப நான் என்ன செய்யனும் அத சொல்லுடா?"

(இனியவன் வருவான்)





முத்தமிழ் கவசம் ஆசிரியை சித்தி வஃபீரா "தமிழ் நெஞ்சம்"ஆளுமை புரவலர் அறிமுகம் எனும் சிறப்பிதழை புரவலர் ஹாஸிம் ஒமருக்கு வழங்கிய போது... அருகில் கவிஞர் மேமன் கவியும் காணப்படுகிறார்.



யாழ்.நகரை அண்மித்துள்ள பாடசாலைகளுக்கு பூமணி அம்மாள் அரக்கட்டளையால் இதுவரை வழங்கப்பட்டுள்ள உதவிகளுக்காக மேற்படி பாடசாலை அதிபர்கள் அரக்கட்டளையின் சர்வதேச அமைப்பாளர் விசுவாசம் செல்வராசாவுக்கு பாராட்டு விழாவொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். யாழ்ப்பாணம், கலட்டி மெதடிஸ்ட் மிசன் பாடசாலையின் அதிபர் தலைமையில் நடைபெற்ற பாராட்டுவிழாவின் பின்னர் பிடிக்கப்பட்ட படம். படம்: வேலணை குறூப் நிருபர்











கிராமிய இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கான சந்தையின் கதவுகளை திறக்கும் வகையில் பயன்பாட்டு தகவல் தொழில்நுட்ப பட்ட கற்கைநெறியை ஆரம்பிக்கும் வகையிலான ஒப்பந்தத்தில் போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன கைச்சாத்திட்டார். மருதானை டிரேட் சிட்டி கேட்போர் கூடத்தில் இந்நிகழ்வு நடைபெற்றது. விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, தொழில்நுட்ப ராஜாங்க அமைச்சர் கனக ஹேரத், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர், இலங்கை தொழில்நுட்ப பல்கலைக்கழக தலைவர் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து கொண்டார்கள்.





எழுத்தாளர் கோவிலூர் செல்வராஜனின் 70 வது பிறந்த நாள் அண்மையில் ஜேர்மனி ஹம் காமாட்சி அன்னை ஆலயத்தில் ஆதின கர்த்தா சிவஸ்ரீ பாஸ்கர குருக்கள் ஆசியுடன் மதிவாணன் குருக்கள் தலைமையில் இடம்பெற்றது. ஈழத்துக்கலையுலகில் கவிஞராய், எழுத்தாளராய், பாடலாசிரியராய், பாடகராய், நடிகராய், அறிவிப்பாளராய் பல்வேறு ஆற்றல்களுடன் திகழும் கலைஞர் கோவிலூர் செல்வராஜனுக்கு இந்தியாவில் கிடைத்த சிறப்பு வாழ்நாள் சாதனையாளர் விருதை தமிழநாடு கிராமிய கலைகள் வளர்ச்சி மற்றும் நல அமைப்பு அறக்கட்டளையினர் ஜெர்மனிக்கு அனுப்பியிருந்தார்கள். அந்த விருது அவரது அகவை எழுபது கொண்டாட்ட நிகழ்வில் வழங்கப்பட்டது.
(மீனா உதயா. ஜெர்மனி)





# உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரியான அறுகம்பே

## உலக சுற்றாடல்தினத்தை இங்கு விமரிசையாக கொண்டாட ஏற்பாடு





### வெளிநாட்டவர்கள் வரத்தொடங்கியுகியுள்ளனர்



கடல் நீரலைச்சறுக்கலுக்கு (சேர்பிங்) கிழக்கு ஆசியாவிலே மிகவும் பிரசித்திபெற்ற தளமாக வர்ணிக்கப்படும் அறுகம்பே உல்லே சுற்றுலா பிரதேசத்துக்கு தற்போது வெளிநாட்டு உல்லாச பயணிகள் வருகை தர ஆரம்பித்துள்ளனர்.

கடந்த சில வருடங்களாக கொரோனா, சஹ்ரான் தாக்குதல், மற்றும் அரசியல், பொருளாதார பிரச்சினை போன்றவைகளால் முற்றாகவே அறுகம்பே முடங்கிக் கிடந்தது. இதனால் சுற்றுலா தொழிலை தமது ஜீவனோபாயமாக நம்பி இருந்த பெருவாரியானோர் முற்றாகவே பாதிக்கப்பட்டிருந்தனர்.

தற்போது படிப்படியாக நிலைமை சீரடைந்து வருவதால் உலகின் பல்வேறு பிரதேசங்களிலிருந்தும் உல்லாசப் பயணிகள் இங்கு வரத் தொடங்கியுள்ளனர். இதற்கு முன்னோடியாக இங்கு கடமையிலுள்ள முப்படையினர் “கிளீன் ஸ்ரீ லங்கா”, பிரதேச சபை, பிரதேச செயலகம் மற்றும் சமூக சேவை அமைப்புகள் போன்றனவற்றின் ஒத்துழைப்புடன் கடற்கரைப் பிரதேசத்தை குறிப்பாக “சேர்ப்பிங்” பிரதேசங்களை துப்புரவு செய்யும் பணிகளில் ஈடுபட்டு கழிவுகளற்ற பிரதேசமாக மாற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

உல்லாசப் பயணிகளாக வருகை தந்த அநேக வெளிநாட்டுப் பயணிகள் கூட அசுத்தமாக இருந்த கடற்கரைப் பிரதேசங்ககளை மிக உற்சாகமாக துப்புறவு செய்யும் பணிகளில் உதவியும் ஒத்தாசைகளையும் வழங்கி வருகின்றனர்.

சில வெளிநாட்டவர்கள் “சேர்பிங்” கிற்கான ஆரம்ப பயிற்சிகளில் ஈடுபடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் அறுகம்பே பிரதேசம் உயிரோட்டமுள்ள பிரதேசமாக மாறிவருகின்றது. இங்கு வரும் உல்லாசப்பயணிகள் எழில்மிகு பறவைகளையும்,



மிருகங்களையும் நேரடியாகவே பார்த்து ரசிக்கும் கூமுனை வன விலங்குகள் சரணாலயத்துக்கு குழுவினராக “சபாரி” வாகனங்களிலும் மோட்டார் மற்றும் துவிச்சக்கர வண்டிகளிலும் செல்கின்றனர். சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முகுது மகா விகாரை, மகுல் மகா விகாரை, குடும்பிகல, எலிபன்ட் ராக், விஸ்கி பாயிண்ட், போன்ற இடங்களுக்கும் விஜயம் செய்வது அவர்களது நிகழ்வுகளில் மிகவும் முக்கியமானவையாகும்.

இதேவேளை, கடல்நீரலைச் சறுக்கலில் (சேர்பிங்) பெருந்தொகையான வெளிநாட்டு ஆண்களும் பெண்களும் சேர்பிங் ‘பகுதியில்’ கடல் அலையோடு சங்கமித்து தம்மை மறப்பதை தற்போது இங்கு காணக்கூடியதாக இருக்கின்றது. இதேவேளை நீண்டகாலம் முடங்கிப்போயிருந்த “சேர்பிங்” போட்ஸ் வியாபாரிகளும் தமது வியாபாரத்தை ஆரம்பித்துள்ளனர்.

இதனால் அவர்கள் தமக்குப் பிடித்தமான சேர்பிங்க் போட் களை கொள்வனவு செய்யத் தொடங்கியுள்ளனர். இங்குள்ள “சேர்பிங்க்” பயிற்றுனர்கள் ‘சேர்பின்க்’ கில் ஆர்வம் காட்டுவோருக்கு பயிற்சிகளியும் நுட்பங்களையும் கற்றுக்கொடுக்கின்றனர். வெளிநாட்டு சிறுவர்கள் இளைஞர்கள் கூட “சேர்பிங்க்’ கற்றுக்கொள்வதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கியுள்ளனர்.

இதேவேளை, இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி பணியகம் மற்றும் அம்பாறை மாவட்ட செயலகம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் உலக சுற்றுலா தினத்தை எதிர்வரும் 29ம் திகதி அறுகம்பேயில் மிக விமரிசையாக கொண்டாடவுள்ளனர். இது தொடர்பான எல்லா ஒழுங்குகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் முன்னேற்றம் தொடர்பாக ஆராயும் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. பொத்துவில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் அரசாங்க அதிபர் ஜே.எம்.எஸ்.டக்ளஸ் தலைமையில் அண்மையில் ஒரு கூட்டம் நடைபெற்றது.

இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் எ.எம் ஜவ்பர், பொத்துவில் பிரதேச தலைவர் எம்.எச்.எ.ரகீம் உட்பட பல்வேறு திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்ட இந்தக்கூட்டத்தில் அறுகம்பேயில் நடைபெறவுள்ள இந்நிகழ்வை மிக விமரிசையாக நடாத் துவதற்கான எல்லா ஒழுங்குகளையும் தாம் மேற்கொண்டு வருவதாக ஜவ்பர் கூறினர். தற்போது கடற்கரையை துப்புரவு செய்யும் பணிகள் தொடர்ச்சியாக முப்படையினராலும் பல்வேறு அமைப்புகளினாலும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

அன்றைய தினம் (29) ந்திகதி கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் கடற்கரைப் பிரதேச்தை காலை 7.30 மணிக்கு துப்புரவு செய்யும் பணியோடு உலக சுற்றுலா தின நிகழ்வுகள் ஆரம்பமாகின்றன. இதனையடுத்து அறுகம்பே களப்பில் மரநடுகையும் கரையோரங்களில் குப்பை தொட்டிகள் வைக்கும் நிகழ்வும் நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் எ.எம் ஜவ்பர், தலைமையில் பிரதான நிகழ்வுகள் நடைபெறும். சுற்றுலாத் துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரதம அதிதியாக கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். முஷாரப் கௌரவ அதிதியாக வும் கலந்துகொள்கின்றார்.

காலை நிகழ்வாக முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு சுற்றுலா அதிகார சபை அடையாள அட்டை வழக்குதல், இருநூறு குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கல், இருபத்துஐந்து நெற்காணி உரிமையாளர்களுக்கு விதைநெல் வழங்கல், வயது குறைந்த போசாகின்மையால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பால்மா வழங்கல், வீட்டுத்தோட்ட ம் மேற்கொள்ளும் குடும்பங்களுக்கு மரக்கறி விதைப் பைக்கற்றுகள் வழங்கல், வெளிநாட்டு உல்லாச பயணிகளுக்கு நினைவு பரிசுகள் வழங்கல் என்பன நடைபெறும்.

மாலை நிகழ்வாக இங்குள்ள உல்லாசப் பயணிகளுக்கு உதவும் வகையில் பொத்துவில் ஆதார வைத்திய சாலையில் “தகவல் மையம்” ஒன்றும் பிரதம அதியால் திறந்து வைக்கப்படவுள்ளது. இதனையடு த்து ஊறணி களப்பில் மரநடுகையும் அதனைத் தொடர்ந்து விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட படகு சவாரியில் சர்வதேச ஊடகவியலாளர்களும் பிரதம விருந்தினர்களும் கலந்து கொள்வர்.

இறுதி நிகழ்வாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ள வெளி நாட்டவர் உள்ளூர் வீரர்களுக்கிடையிலான கண்காட்சி கரப்பந்தாட்ட ப் போட்டியிலும் இசைக் கச்சேரியைப் பார்த்து ரசிப்பதிலும் பெருவாரியான மக்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது

எம்.ஏ. பகுர்தீன் அட்டாளைச்சேனை குறூப் நிருபர்




# படித்ததும் பகர்வதும் 112



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### மூத்தோரை மதித்தல்

இன்றைய காலத்தில் மூத்தவர்களை மதித்து நடப்பது எல்லாவிதத்திலும் மிக, மிக குறைந்து வருவது கவலைக் குரியதாகும். மேற்கத்தைய பண்பாடுகளின் ஆதிக்கத்தில் நாம் வாழ்ந்தாலும், எமது மக்களும் கலந்து, கரைந்து வாழ்வதால் இந்நிலை மேலும் மோசமடைந்துள்ளது எனலாம்.

முன்னைய காலத்தில் பெற்றோர், பெரியோர், பாட்டன், பாட்டிகள் வயதில் மூத்தோர், முதியோர் போன்றவர்களுக்கு வயதில் குறைந்தவர்கள் மிகுந்த கண்ணியம் அளித்து நடந்து கொண்டதை நாம் அறிவோம், மூத்தவர்கள் வந்தால் அமர்ந்திருப்பவர்கள் உடனே எழுந்து மரியாதை செய்தல், அவர்கள் அமர இடமளித்தல், அவர்களுக்கு முன் காலுக்கு மேல் கால் போட்டு அமராதிருத்தல், அவர்களுடன் உரத்த குரலில் உரையாடுவதை தவிர்த்தல், மரியாதையை குறைக்கும் வகையிலான சொற்பிரயோகங்களை பிரயோகிக்காதிருத்தல், அவர்களுடன் எப்போதும் குரலை தாழ்த்திப் பேசுதல், போன்ற நல்ல பழக்க வழக்கங்கள் நடைமுறையில் இருந்தன. அதனால் இவை இப்போது மிகவும் குறைந்து காணப்படுவது கவலையளிக்கும் விடயமாகும். பெற்றோர், பெரியோர் முன்னிலையில் வயதில் குறைந்தவர்கள் ஒழுக்கம் மீறி நடந்து கொள்வதை பரவலாக காண முடிகிறது. பஸ்களில் பயணம் செய்யும் போது கூட வயதில் கூடியவர்கள் நின்றுகொண்டிருக்க வயதில் குறைந்த இளைஞர்களும் மற்றவர்களும் அவர்களைப் பற்றி அக்கறையோ கவலையோ இல்லாமல் அமர்ந்திருக்கின்றனர்.



இத்தகைய நிலைமை மாறுதல் வேண்டும். மாணவர் பருவத்திலேயே சிறார்களுக்கும், இளைஞர்களுக்கும் மூத்தவர்களை மதிக்கின்ற பண்புகளை சரியாகவும் முறையாகவும் போதித்து பயிற்றுவிக்க வேண்டும். அதன் முக்கியத்துவத்தையும் சிறப்பையும் அவசியத்தையும் சரியாக உணர்த்த வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் இன்றைய நாகரீக அல்லது மேற்கத்திய செயற்பாடுகளின் வளர்ச்சியினால் இவ்வாறு முறையற்று செயற்படுவது சாதாரணமானவை போல் தோன்றலாம், ஆனால் மேற்கத்தைய பண்பாடுகளின் ஆதிக்கத்தில் நாம் கரைந்து இந்நிலை மேலும் மோசமடைவதை தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மூத்தோரை மதிக்காத செயற்பாடுகளினால் எமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்கள் சிதைவடைவதை சிறியவர்களுக்கு எடுத்துரைத்து, நல்லொழுக்கம் சிதைவடையாமல், பெரியோரை மதித்து, உரிய கௌரவமளித்து வாழும் நற் பழக்கத்தை நடைமுறைப்படுத்த, சிறியோர் முதல் பெரியோர் வரை ஆக்க பூர்வமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

பெற்றோரை மதிப்பது பிள்ளைகளின் கடமையன்றோ
பெருமைகளை அவர்க்களிப்பது சாலவும் சிறப்பன்றோ
உற்றார்களை உவப்பதும் உலகத்திலுயர் பண்பன்றோ
உணர்ந்தாலே இறையருளும் நிறைவாக வருமன்றோ

## பிரிந்தார் பெருமை

### ‘சாஹித்ய ரத்னா’ கே. எஸ். சிவகுமாரன்

இலங்கையின் பிரபல, மூத்த தமிழ் ஆளுமை, ‘சாஹித்ய ரத்னா’ கே. எஸ். சிவகுமாரன், கடந்த செப்டம்பர் 15ம் திகதி (15.09.2022) இம்மண்ணுலகிலிருந்து விடைபெற்றார். எதிர்வரும் அக்டோபர் 1ம் திகதி 87வது அகவையை அடைய இருந்தவர் அதற்கு முன்னரே எம்மைப் பிரிந்தது தமிழ் நெஞ்சங்களை கவலையில் ஆழ்த்தியுள்ளது..



எழுத்தாளர், ஒலிபரப்பாளர், ஆசிரியர், விரிவுரையாளர், பேச்சாளர், கலை, இலக்கிய, அறிவியல், அரசியல், செய்தித் துறைகளின் திறனாய்வாளர், இசை, நடனம், ஓவியம், மொழிபெயர்ப்புத் துறைப் பங்களிப்பாளர், என பல்வேறு ஆளுமைகளால் தமிழ் மக்களின் அபிமானம் பெற்றவர் கே. எஸ். சிவகுமாரன்.

என்னோடு நல்லபிமானமும், நெருங்கிய நட்பும் கொண்டிருந்த சிறந்த அன்பர். ‘படித்ததும் பகிர்வதும்’ பத்தியை தொடர்ந்து வாசித்து நல்ல கருத்துக்களை தொடர்ச்சியாக கலந்துரையாடியவர். அவர் என்னோடு பகிர்ந்து கொண்ட விடயங்கள் ஏராளம்.

இவர் உள்ளூராட்சி சேவை அதிகார சபையிலும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன செய்திப் பிரிவிலும் தமிழ் மொழி பெயர்ப்பாளராகப் பணிபுரிந்துள்ளார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் செய்தி உதவி ஆசிரியர், கடமை செய்தி ஆசிரியர் பதவிகளிலும், அமெரிக்க தகவல் நிலையம், நவமணி, வீரகேசரி, டெயிலி நியூஸ் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரிய பீடங்களிலும் இவர் கடமையாற்றியுள்ளார். ஓமான், மாலைதீவு நாடுகளில் ஆங்கில ஆசிரியராகவும் சேவையாற்றியிருக்கிறார்.

முப்பது தமிழ் நூல்களையும், இரண்டு ஆங்கில நூல்களையும், இரண்டு ஆங்கில மொழிக் கலைக் களஞ்சியங்களையும் கே. எஸ். சிவகுமாரன் எழுதி வெளியிட்டுள்ளமை இன்றைய இளைய தலைமுறையினர் அறியாத விடயமாகும். இவர் மிகச் சிறந்த தமிழ், ஆங்கில பத்தி எழுத்தாளருமாவார்.

தமிழ்நாடு சென்னை பல்கலைக்கழக இதழியல் துறை 2016ஆம் ஆண்டு இவருக்கு சிறப்பு விருது வழங்கி கௌரவித்தது. 2020ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆறாவது சர்வதேச திரைப்பட விழாவில் வாழ்நாள் சாதனையாளர் விருது இவருக்கு வழங்கப்பட்டது. பல நாடுகளின் இயக்கங்களும் இவரை அழைத்து விசேட கௌரவங்களை வழங்கயுள்ளன. ‘சாஹித்ய ரத்னா’ உட்பட பல்வேறு பட்டங்களும், உயர் விருதுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். அண்மைக் காலத்திலும் கூட இவர் சிறப்பு கௌரவங்களைப் பெற்றார்.

தனது அந்திம காலத்தில் முக நூலில் அதிக ஈடுபாடு கொண்டிருந்ததோடு இளைய தலைமுறையினரோடும் உறவுகளை நெருக்கமாக்கிக் கொண்டிருந்தமை விசேடமாக குறிப்பிடத்தக்கது. இவரது இழப்பால் ஏற்பட்டுள்ள இடைவெளி இலகுவில் நிரப்ப முடியாத ஒன்றாகும்.

## சிந்தனை செய் மனமே

### யார் மனவளர்ச்சி குன்றியவர்?

ஒரு ஓட்டப் பந்தயத்திற்காக எட்டு சிறுவர்கள் ஆரம்ப இடத்தில் தயாராக நின்று கொண்டிருந்தனர். ஆரம்பிப்பாளர், “ரெடி.., ஸ்டெடி., கோ.” என்று கூறியதோடு “டுமீல்” என கைத்துப்பாக்கி சத்தம் ஒலிக்கிறது.

சிறுவர்கள் அனைவரும் ஓடத் தொடங்கினர். அவர்கள் சிறிது தூரம் கூட செல்லவில்லை, ஒரு சிறுவன் தவறி விழுந்து விட்டான். அடிபட்ட வலியால் அழத் தொடங்கினான். அதைக் கேட்டதும், மற்ற ஏழு சிறுவர்களும் ஓடுவதை நிறுத்தினர்.



சிறிது நேரம் நின்று, அவதானித்துவிட்டு அச்சிறுவனை நோக்கி திரும்பி ஓடினர். அனைவரும் ஒன்று சேர்ந்து அச்சிறுவனை தூக்கினர். அவனை சமாதானப்படுத்தி, அவனோடு கைகோர்த்து, ஒன்றாக நடந்தனர். ஒன்றாகவே வெற்றிக் கம்பத்தைத் தொட்டனர்.

அதிகாரிகளுக்கு அதிர்ச்சி! உணர்ச்சிவசப்பட்ட பார்வையாளர்களின் கண்களில் கண்ணீர்!!

இது மனவளர்ச்சி குன்றியவர்களுக்காக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியொன்றின் போது இடம்பெற்ற சம்பவம். இந்தியாவின் புனேயில், மன ஆரோக்கியத்துக்கான தேசிய நிறுவனம் நடத்தியது. இப்போட்டியில் பங்கேற்றவர்கள் அனைவரும் மனவளர்ச்சி குன்றியவர்கள்.

அவர்களது இந்த செயல் எமக்கு போதிப்பது என்ன?

குழுப்பணி, மனிதநேயம் போன்றன விளையாட்டின் நோக்கங்கள், அதன் சாரம், பரிவு, அனுதாபம், அன்பு, ஆதரவு, அரவணைப்பு, பராமரிப்பு, சமத்துவம்..... இன்னும் பல.

இதை எம்மால் கண்டிப்பாக செய்ய முடியாது, ஏனெனில், நமக்கு சிந்தனை இருக்கிறது; நமக்குள் ‘ஈகோ’ இருக்கிறது; நம்மிடம் சுயநலம் இருக்கிறது; எங்களிடம் உயர்வு, தாழ்வு, வெற்றி மனப்பாங்குகள் நிறைந்திருக்கின்றன. இதனால் அவர்களது நற்பண்புகளுக்கு எம்மில் சிறிதும் இடம் இல்லை!

நாங்கள் அவர்களை, ‘மனவளர்ச்சி குன்றியவர்கள்’ என்கிறோம்.....???

## நலமே வாழ்வோம்

### எச்சரிக்கும் விசர்நாய்க்கடி நோய்!

இலங்கையில், இவ்வருடத்தின் முதல் ஆறு மாதங்களில் 12 பேர் நீர்வெறுப்பு அல்லது ரேபீஸ் (Rabies) எனும் விசர்நாய்க்கடி நோயினால் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது சுகாதார கால்நடை சேவை பணிப்பாளர் கலாநிதி எல். டி. கித்சிரி இது தொடர்பாக கூறுகையில், □95 வீதமான நோய்த்தொற்றுகள் நாய் கடிப்பதனால் ஏற்பட்டுவதாகவும், நாய்கள் மூலம் குறித்த நோய் பரவி அதிக ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவித்துள்ள அவர், ‘ஆறு மாதங்களில் ஐந்து இலட்சம் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. 30 ஆயிரம் தெரு நாய்களுக்கு கருத்தடை செய்து அவற்றின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தி உள்ளோம்.’அத்துடன் நாட்டில் 20 முதல் 30 மில்லியன் நாய்கள் உள்ளன. ஆயினும் ஆண்டுக்கு சுமார் 1.1 மில்லியன் நாய்களுக்கு மட்டுமே தடுப்பூசி போடப்படுகின்றன’ என்றும் அவர் கூறியுள்ளார். எழுபது வீதமான நாய்க்குட்டிகளுக்கு தடுப்பூசி போடப்படுவதன் மூலம் குறித்த நோய் பரவுவதை குறைக்க முடியும். நீர்வெறுப்பு நோயினால் வருடாந்தம் 20 தொடக்கம் 30 வரையான மரணங்கள் ஏற்படுவதாகவும், வருடம் தோறும் ஆறு வாரங்களைவிட கூடிய வயதுள்ள அனைத்து நாய்களுக்கும் தடுப்பூசி போடுமாறு அமைச்சு பரிந்துரைத்துள்ளதாகவும் கித்சிறி தெரிவித்துள்ளார்.



விசர்நாய் கடிக்கு எதிராக நாய்களுக்கு தடுப்பூசி போடாததும், நாய் கடித்த பின்னர் உரிய நேரத்தில் சிகிச்சை பெறாததும் இலங்கையில் இதன் மூலமான இறப்புகளுக்கான முக்கிய காரணங்களாகும்

1975 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் விசர் நாய்க்கடி தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாகவும், 1973 ஆம் ஆண்டு நீர்வெறுப்பு நோய் மூலம் 377 இறப்புகள் ஏற்பட்டதாகவும், 2014 ஆம் ஆண்டு அது 19 ஆக குறைந்ததாகவும், 2025 ஆம் ஆண்டுக்குள் இலங்கையை நீர்வெறுப்பு நோய் அற்ற நாடாக மாற்ற திட்டமிட்டுள்ளதாகவும், அதற்காக பயனுள்ள பல உத்திகள் மற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், இந்த நோய் குறித்த விழிப்புணர்வு குறைவாக இருப்பவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

‘விலங்கு கடித்த உடன் சிகிச்சை அளிக்கப்பட்டால் 100% குறித்த நோயில் இருந்து முழுமையாக குணமடைய முடியும். விசர் நாய் கடிக்கான (நீர்வெறுப்பு நோய்) தடுப்பூசிகள் அரசாங்க மருத்துவமனைகளில் இலவசமாக பெற முடியும்’ என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருப்பது அவசியம்.

## கைவண்ணம் காணீர்



பழங்களில் பறவைகள்...!

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், “படித்ததும் பகர்வதும்” பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207

# ஏனையோருக்கு ஊக்கமளிப்பது நிபுணத்துவம்



## திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர் 23



கே. பத்மானந்தன்

தலைமை என்பது எப்போதுமே விவாதத்திற்கும் சவாலுக்கும் உட்பட்டது. எனவே, ஒரு முகாமையாளர் தனது முறையான கல்வி மூலம் கற்றுக்கொண்டதைத் தாண்டி, தான் கையாளும் விசயத்தைப் பற்றிய ஆழமான நுண்ணறிவைக் கொண்டிருக்க வேண்டும். இதனையே நிபுணத்துவம் (Mastery) என்று கூறுகிறார்கள். மேலும் நிபுணத்துவம் என்ற வார்த்தை அவரது அறிவின் நம்பகத்தன்மையையும் குறிப்பதாகக் கொள்ளலாம். மேலும் முகாமையாளரின் அறிவும் திறமையும் என்பது அல்லது நிபுணத்துவம் என்பது ஏனையோருக்கு ஊக்கமளிப்பதாகவும் நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்க வேண்டும். இவற்றினை வெறும் சான்றிதழ்களால் பெற்றுக்கொள்ள முடியாது என்பதை முகாமையாளர் புரிந்து கொள்ள வேண்டும். இக்கருத்தினை திருவள்ளுவர் கீழ்வரும் ஈரடியில் விளக்குகின்றார் .

**“நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்**
**உண்மை அறிவே மிகும்”.** *(குறள் 373)*

ஒரு முகாமையாளர் ஒருவர் நுட்பமான மேம்பட்ட நூல்கள் பலவற்றையும் கற்றாலும் எஞ்சியிருப்பது அவரின் உண்மையான அறிவாகவே இருக்கும் என்பது இதன் பொருள். அறிவு பெறுதற்குரிய ஒருவழி நூல்கள் பலவற்றைக் கற்றல் என்றாலும் நூலறிவை விட நுண்ணறிவு சிறந்தது. நுண்ணறிவு என்பது எதையும் நுணுகிப் பார்த்து உண்மையை அறிவது. மிகுந்த கல்வியறிவு பெறுவதற்காய் ஒருவன் நுண்ணிய நூல்கள் பலவற்றைக் கற்றாலும் சில வேளைகளில் அவ்வளவு கற்றதற்கேற்ப அவன் அறிவு மிகுந்து காணப்படாமல் தோன்றுகிறான். எனவே முகாமையாளர் என்பவர் வெறுமனே கற்ற அறிவை மட்டும் கொண்டிருக்காமல் அனுபவத்தினூடாக அறிவைத்தேடிப் பெறுவதுடன் (பெற்ற அறிவு) கற்ற அறிவினையும் பெற்ற அறிவினையும் கொண்டு தன்னைச் சுற்றி நடப்பவற்றை நுணுகி ஆய்ந்து உற்ற அறிவினையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். இதனைக் கீழ்வரும் ஈரடியிலும் திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார்

**“தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச்**
**சொல்லலும் வல்லது அமைச்சு”.** *(குறள் 634)*

செய்யத்தக்க செயலை எதுவென்று ஆராய்தலும், அச்செயலைச் செய்வதற்குரிய வழிகளை ஆராய்ந்து செய்தலும், அதுதொடர்பான கருத்துக்களைத் துணிவாகச் சொல்லுதலும் ஒரு முகாமையாளரிடம் இருக்க வேண்டிய தலைமைப்பண்பாகும் என்கிறார் திருவள்ளுவர். அதாவது தலைமைப்பண்பைக் கொண்ட ஒரு முகாமையாளரின் கடமை அறிவதும், பகுப்பாய்வு செய்வதும், வழிகாட்டுவதும், தைரியமாகப் பேசுவதும் ஆகும். உண்மையான தலைமைப்பண்புத் தேர்ச்சியைக் கொண்ட முகமையாளர்களால் மட்டுமே உண்மையான அறிவைத் தேடிச் செல்ல முடிவதுடன் அடுத்தவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதுடன் தைரியமாகப் பேசவும் முடியும்.

தன்னோடு தொடர்புடைய தான் செயல்படும் துறையில் முகாமையாளர் போதுமான அறிவினைக் கொண்டிருப்பதானது அவர் எந்த திசையில் நகர வேண்டும் அல்லது செயல்பட வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் உதவி செய்கிறது. இவ்வாறு தீர்மானித்த பின் முகாமையாளர் தான் செல்ல வேண்டிய திசையை நோக்கி முதல் அடி எடுத்து வைக்கும் வரை அவருக்குப் பின்னால் உள்ளவர்கள் தமது அடிகளை எடுத்து வைக்க மாட்டார்கள் என்பதை அவர் உணர வேண்டும்.

இப்படியான ஆரம்ப அடிகளை எடுத்து வைப்பதற்கு ஏற்ற திறமையும் தைரியமும் தன்னம்பிக்கையும் முகாமையாளருக்கு இருக்க வேண்டும். இவ்வாறு தனது முதல் அடியை எடுத்து வைக்கும் போது தன்னார்வத்துடனும் தன்னம்பிக்கையுடனும் எடுத்து வைக்க வேண்டும்.

அந்த அடியானது வேறு எந்த நபரின் ஆலோசனையின் விளைவாகவோ அல்லது அவர்களைப் பாதுகாக்கவோ அல்லது மகிழ்விப்பதாகவோ இருக்கக்கூடாது. அது அவர்களின் சொந்த தைரியத்தில் உறுதியான நம்பிக்கையில் இருந்து பிறக்க வேண்டும்.

ஒரு முகாமையாளரிடம் ஒரு தலைவனுக்கு உரிய உறுதியான தைரியம் தேவை என்பதைத் திருவள்ளுவர் கீழ்வரும் அடிகளில் விளக்கமாகக் கூறுகிறார்.

**“வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்**
**மற்றய எல்லாம் பிற”.** *(குறள் 661)*

ஒரு தொழிலில் திண்மை என்பது முகாமையாளர் ஒருவரின் உள்ளத்தின் உறுதியேயாகும். கருவி, காலம், இடம், தந்திரோபாயங்கள், ஆள்பலம், பணபலம் , அரச உதவி, போன்ற மற்றவையெல்லாம் இதற்கு அடுத்தவையாகவே கொள்ளுதல் வேண்டும் என்கிற திருவள்ளுவர் முகாமையாளரின் இந்த உறுதியினையே வினைத்திட்பம் என்கிறார். உண்மையில் முகாமையாளரிடம் இத்தகைய மன உறுதி இல்லாதுவிடில் ஏனைய அனைத்தும் இருந்தும் அவரால் வெற்றிகரமாகக் கருமங்களை ஆற்றமுடியாது.

மேலும் உள்ளத்து உறுதி என்பது தொடங்கிய செயல் ஒன்று முடியும் வரைக்கும் உள்ளத்தின் உரத்தோடு நிற்றலாகும். எண்ணம் ஒன்று செயலுருவாக்கம் பெற்று அதனைச் செம்மையாக முடிக்க வேண்டுமாயின் உள்ளத் திண்மை வேண்டும். உள்ளம் உறுதியாக இருந்தால் செயற்திண்மை தானாக வரும். ஒரு செயலைச் செய்து முடிக்க உறுதி என்ற ஒன்று மிகத் தேவை.

மேற்கொண்ட செயலில் மனவுறுதியும் விட்டகலாப் பற்றும் ஒரு முகாமையாளரிடம் இருக்குமானால் தளர்ச்சியடையாமல் இருக்கும் இயல்பும் வரும். இடையூறுகளைத் தாங்கும் திறன்களும் அவருக்கு எளிதில் கைவரப்பெறும். மன உறுதி இருக்குமாயின் எதையும் சாதிக்கலாம். மனத்திட்பமும், மெய்முயற்சியும் உடையவர்களுக்கு வாய்க்காதது என்று எதுவுமில்லை. எனவே மனத்திட்பம் இல்லாமல் வினைத்திட்பம் இல்லை.

இந்தத் தன்னம்பிக்கை மற்றும் தைரியம் ஒரு முகாமையாளருக்கு அனைத்து சோதனைகளையும் நேர் மறையான விதத்தில் வலிமையுடன் எதிர்கொள்ளத் தேவையான ஆற்றலை வழங்குகிறது. அவர் தனது இலக்கை நோக்கி செல்லும் வழியில் சந்திக்கும் சிரமங்களால் அல்லது பிரச்சினைகளால் கடைசிவரையும் தோற்கடிக்கப்படமாட்டார் . அதாவது கொடுக்கப்பட்ட இலக்கை நோக்கி முன்னேறும் பாதையில் ஒரு முகாமையாளர் எத்தகைய சவால்கள் மற்றும் சிரமங்களை எதிர்கொண்டாலும், அவர் எதைச் செய்தாலும் தைரியமாக விடாமுயற்சியுடன் செய்தால் அவர் தனது இலக்கினை அடைவார் என்று கூறுகின்ற திருவள்ளுவர் கீழ்வரும் அடியிலும் அதனை வலியுறுத்துகின்றார்.

**“துன்பம் வரினும் செய்க துணிவாற்றி**
**இன்பம் பயக்கும் வினை”.** *(குறள் 669)*

ஒரு செயல் முடிவில் தனது நிறுவனத்திற்குத் தனது பணியாளர்களுக்கு நன்மையினைத் தருமென்று ஒரு முகாமையாளருக்குத் தெளிவாகத் தெரியுமாயின் அவர் அந்தச் செயலைச் செய்யும்போது எத்தகைய இடையூறுகள் துன்பங்கள் வந்தாலும் அவற்றைத் தைரியத்துடன் எதிர்கொண்டு பின் வாங்காமல் உறுதியோடு செய்து முடிக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர் . அதாவது முகாமையாளர் ஒரு செயல் நன்மையளிக்கும் என்றால் பல்வேறு வழிகளில் துன்பங்கள் வந்தாலும் உள உறுதியுடன் அவற்றை எதிர்கொண்டு எடுத்த செயலை உள்ளம் தளராது துணிவுடனும் விடாமுயற்சியுடனும் செய்து முடிக்க வேண்டும். இத்தகைய துணிவுடனும் விடாமுயற்சியுடனும் உறுதியுடனும் செயற்படுகின்ற தலைமைப்பண்பு இல்லாத முகாமையாளர்களின் தலைமையினை அடுத்தவர்கள் சந்தேகத்துடனேயே பார்ப்பார்கள் என்ற உண்மையினை அவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். முகாமையாளர்களுக்கு இருக்க வேண்டிய இந்தத் துணிவினை, தைரியத்தை, வைராக்கியத்தை, உறுதியினை, மனத்திண்மையினைத்தான் திருவள்ளுவர் 'துணிவாற்றி' என்ற சொல்லின் மூலம் சொல்ல விழைகிறார் .

**(தொடரும்)**



தினகரன் வாரமஞ்சரி

BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

BARE LAND FOR SALE
MALABE
14 PERCHES CLOSER TO DR NEVILL FERNANDO'S HOSPITAL, ALL NECESSARY GROUND APPROVALS ARE AVAILABLE FOR CONSTRUCTION FROM THE RELEVANT AUTHORITIES.
IF REQUIRED 1/2 THE PROPERTY COULD BE CONSIDERD TO SELL, IDEAL FUTURE INVESTMENT.
CONTACT: 077 771 5114
E-MAIL: presidentge@gmail.com

Prime Grand Colombo - 07
Apartments
SALE
4 Bedrooms
28th Floor (2800Sq.Ft)
240 Million (Negotiable)
Owner Migration
Contact - 0761 485 514 | 0777 829 223

Victorian Guest
- Bandarawela
077 3 711 196
070 2 536 896
victorianbungalow.lk

SATURDAY /SUNDAY BUFFET LUNCH
SPECIALLY FOR COVID - 19
SPECIAL HEALTH SECURITY
MEASURES ARE IN PLACE
DAY OUTING
SPECIAL OFFERS
SPEND YOUR DAY JUST FOR
Rs 2950/-
Sea Shine Beach Hotel
* Welcome Drink
* Well Spread Buffet Lunch & Dessert
* Evening Tea with Piece of Cake
* One Rest Room Complimentary for Over 25 Pax
* Swimming Pool with Kids Play Area
* No Corkage for Hard Liquor & Beer
Comfortable 51 Rooms, Reception Hall, Conference Rooms, with modern facilities, Eastern/ Western & Chinese Cuisine, Swimming Pool
WE UNDERTAKE WEDDINGS, PARTIES, SEMINARS & DAY OUTINGS
10 min. to Colombo Airport
15 min. to Colombo City
Overlookong Colombo Harbour City
212, BOPITIYA ROAD, USWETAKEIYAWA, WATTALA.
Tel: + 94 112 985 555, 0114 328 422 Fax: 2 793 060
HOTLINE : 0773 404 975, 0773 633 979
Email: info@seashinebeach.com Web: www.seashinebeach.com

Fuel Pumps & Fuel Dispensers
Tel: 011-7397777
Rs. 6900/= Upwards
IN STOCK
Submersible Pump
Barrel Pump
Fuel Transfer Pump
12V/24V OIL PUMP SET
ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD
SINCE 1930
# 301 OLD MOOR STREET, COLOMBO 12
0778446666 WhatsApp alliedint@eureka.lk

SOLAR MINI STREET LIGHT
SOLAR INDOOR WORK LIGHT
Rs. 5750/-
Rs. 3,750/-
SOLAR INDOOR OUTDOOR WALL LIGHT
SOLAR STREET LIGHT
Rs. 5750/-
Rs. 3,750/-
0777 80 65 42
95 New Moor Street, Colombo 12.
SOLARX

Advertise Here
வாரமஞ்சரி
BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com


# சிறு விளம்பரங்கள்

தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 117 வேன்கள் விற்பனைக்கு

டொயோட்டா டவுன்ஏஸ் லொட்டே வேன் ஃபுல் சீட், AC பவர், பவர் சட்டர்ஸ் அலோவீல் 1997 ஆண்டு இரண்டாம் உரிமையாளர். விற்பனைக்கு. 0779826617, 0777882418. 055387

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

0777438169 கண்டி நகரிற்கு அருகில் ஹொடேல் F/ L/ 11 லைசன் உள்ள 10 அறை க்கு மேல் தற்போது நடத்திச் செல்ல ப்படும் A/ C, கராஜ், பொருட்களுடன் வீடு கு ண்டசாலை திகன வீதிக்கு முகப்பாக தற்போது சில கட்டிடங்கள் உள்ளன. மிகப் பெ றுமதியான 80 பேர்ச் இடைக்கால பயிருடன் காணி உண்டு. 1 பேர்ச் 12 இலட்சம், தனியார் வைத்தியசாலை, வயோதிபர், இல்லம், டியூஷன் இ ற்கு, களஞ்சியத்திற்கு, மொன்டிசூரிக்கு பொ ருத்தமானது. விற்ப னைக்கு அல்லது கு த்தகைக்கு வங்கிக் கடன் உண்டு/ இல்லை. 077 728214 7 050902

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

வாடகைக்கு கொழும்பு மருதானை, டீன்ஸ் வீதியில் சகல வசதிகளும் உள்ள 2ம் மாடி ஒபீஸ் வாட கைக்கு உண்டு. தொடர்பு கொள்ள 0776 5 24227. 055719

## வேலைவாய்ப்பு

### 310 வெற்றிடங்கள் எழுது வினைஞர்/ செயலாளர்கள்

இந்திய உணவு சமையற்காரர் (Cook) வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றிற்கு தங்கி வேலை செய்யக்கூடிய (10 நபர்களுக்கு) இந்திய உணவு வகைகள் சமைக்கக்கூடிய சமையற்காரர் (Cook) உடனடியாகத் தேவை. மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும். க்ளிப்டெக்ஸ் இன்டஸ்டிரீஸ், இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்பு களுக்கு 0766 2 0 0 300 . 056213

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

வெலிமடையில் உள்ள ஊவா மொறகொல்ல தேயிலை தொழிற்சாலைக்கு தொழில்நுட்ப அதிகாரி ஒருவர் தேவைப்படுகின்றார். அழையுங்கள் 0770543230. 055757

### 313 வெற்றிடங்கள் அச்சடித்தல்

கொழும்பு, புறக்கோட்டையி லுள்ள அச்சுத்தாள் விற்ப னைச்சாலை ஒன்றிற்கு திருமணமாகாத இளைஞர்கள் தேவை . கடதாசி தொட ர்பான அறிவுடைய மற்றும் அறிவில்லாத இருசாராரும் சேர்த்துக் கொள்ளப்படுவர். 0777313478. 055984

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கொழும்பு, கிருளபன மாடி வீடொன்றில் தங்கி சிறிய குடும்பமொன்றிற்கு உணவு மற்றும் ச மைத்தல் மற்றும் வீட்டு வேலைகளிற்கு இயலுமையுள்ள பெண் ஒருவர் தேவை. 0777313478. 055985

பெண் உதவியாளர்கள், வீட்டுப் பணி ப்பெண்கள் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 18 முதல் 30. அனுபவம் தேவையில்லை. சிறந்த சம்பளம். தொடர்பு 75/ 1, W.A. சில்வா மாவத்த, வெள்ளவத்தை, கொழும்பு6. அழையுங்கள் 0112591169, 0777452 447, 0755091 379. (வட்ஸ் அப் 07609 09458), 056258

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

மாலபேயில் வாகனங்களைக் கழுவும் நிறுவனமொன்றிற்கு ஊழியர்கள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு . அழைக்கவும். 0753200500. 056036

### 325 தொழில்துறை பொது

பாணந்துறையிலுள்ள மலிகைச்சாமான்களை உற்பத்தி செய்யும் கம்பனியொன்றிற்கு ப்ளேட் மெசின் மற்றும் கட்டர் மெசின் பயிற்றப்பட்ட ஊழியர்கள் தேவை. கவர்ச்சிகரமான சம்பளம். தொ.பே. 071 2084003, 0777 063229. 055822

மிகவும் நியாய விலையில் மேசன் வேலை செய்து தரப்படும். வீடமைப்பு நிர்மா ணம் மற்றும் கட்டிட நிர்மா ணம். மூலப் பொருள் இன்றி. 0750604856. 056535

## பொது

### 428 டியூஷன் தேவை

தமிழ் பேச்சு. நுகேகொடை சிங்கள வர்த்தகர் ஒருவருக்கு உங்கள் வீட்டுக்கு வந்து தமிழ் பேச்சு கற்றுக்கொள்ளத் தேவை. 0772819425. 055922

## சொந்த விடயம்

### 520 உணவு/ உணவு வழங்கல்

பகல் சாப்பாடு ஓடர் ஏற்றுக் கொள்ளப்படும். பகல் சாப்பாடு பார்சல் ஒன்றின் விலை கோழி சாப்பாடு 275/ =, மீன் சாப்பா டு 2 50/ = பிரியாணி பார்சல் 800/= ஏனைய ஓடர்களும் ஏ ற்றுக் கொள்ள ப்படும். கொழும்பின் பு றச்சூழலில் மாத்திரம். 0756836835. 0 55608

### 528 தங்குமிட வசதிகள்

கொழும்பு2, கொம்பனித் தெரு சிறிய மூன்று மாடி வீடு அங்கீகரிக்க ப்ப ட்ட ஓர் நிறுவனத்தின் தங்குபவர்களுக்கு (கூடியது 10 பேர்) வாடகைக்கு. 2 அறைகள்/ 3 குளியலறைகள், சிறிய வாகனத்திற்கு நிறுத்துமிட வசதிகள் உண்டு. (நவலோக்க வைத்தியசாலை, ரயில் நிலையம், பொது வைத்தியசாலை, லேக் ஹவுஸ், பிரதான வங்கி அலு வ ல கம் உட்பட சக ல இடங்களுக்கும் அ ரு கி ல் ) அழையுங்கள் 0755212290. 056005

## காணி/தோட்டம்

### 607 எஸ்டேட் விற்பனைக்கு

வீரகெட்டிய, மித்தெனிய வீதிக்கு முகப்பாக 07 அறைக ள், 03 மாடி வீட்டுடன் 06 ஏக்கர் 65 பேர்ச் தென்னக் காணி விற்ப னைக்கு. 0779825517, 0777882418, 0710638794. 055386

### 615 வீடு சொத்து சேவைகள்

கொழும்பு பங்களா ஒன்றிற்கு வயது 55 65 தமிழ், முஸ்லிம் காவலாளி, தோட்டவேலையாள் தேவை. சம்பளம் 45,000/ மற்றும் உணவு த ங்குமி டம், போனஸ் வழங்கப்படும். 07 7 3480490 056536

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

அத்துருகிரிய அபயபுரவில் வீடொன்றுடன் 15 பேர்ச் காணி விற்பனைக்கு உண்டு. 0712974869. 055348

ராஜகிரிய கோட்டே வீ"டு நான்கு படுக்கையறை, 9 பேர்ச். கார் நிறுத்துமிடம், தோட்டம், நீர்த்தாங்கி, சுடுநீர், சுற்றுமதில் உட்பட காணிப் பெறுமதிக்கு 36 மில்லியன். 0775315122, 0112867025. 056420

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

கொட்டாவ, ஹொரஹேன வீதியில் மேல் மாடியொன்று வாடகைக்கு விடப்படும். மாதமொன்றிற்கு 25, 000/ =. 077 0499271. 055345


தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343


## மதுர கீதங்கள் இசை நிகழ்ச்சி







இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன ஆனந்த சமரக்கோன் கலையரங்கில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற மதுர கீதங்கள் இசை நிகழ்வில் மூத்த அறிவிப்பாளர்களான கே. ஜெயகிருஷ்ணாவுக்கு "அமுதக்குரல்" எனும் பட்டத்தையும் நாகபூஷணி கருப்பையாவுக்கு "செந்தமிழ் அரசி" எனும் பட்டத்தையும் கூட்டுத்தாபனத் தலைவர் ஹட்சன் சமர சிங்க வழங்குவதையும் நிகழ்ச்சி அனுசரணையாளர் கலாபூஷணம் முல்லை நிஸார் றஹீம் எழுதிய 'புரிதல்' சிந்தனைச் சிறல்கள் நூலின் முதற்பிரதியை புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொள்வதையும் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு: ஏ.கே. விஜயபாலன்)







கேரளாவில் மிக விமரிசையாக ஓணம் பண்டிகை ஆவணி மாதத்தில் நடைபெறுவது வழக்கம். தமிழர்களின் பொங்கல் பண்டிகையுடன் இதை ஒப்பிடலாம். மலையாளிகளின் தேசிய விழாவாகவும் இது கருதப்படுகிறது. இலங்கை வாழ் மலையாள சமூகம் இப் பண்டிகையை கொழும்பில் ஒரு நாள் விழாவாகக் கொண்டாடியது. இலங்கை மலையாள சங்கத்தின் ஏற்பாட்டில் வத்தளை அவ்மாஸ் ஹோட்டல் கலையரங்கில் நடைபெற்ற ஓணம் பண்டிகையில் இந்திய தூதுவராலயத்தின் உயர் அதிகாரி கல்டோஸ் மெத்தியூ புனூஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். (ஏ.கே. விஜயபாலன்)

## இந்திய தகவல் தொழில்நுட்பத்துறையின்... (06ஆம் பக்கத் தொடர்)

எதிர்வரும் ஒக்டோபர் 1 ஆம் திகதி நடைபெற இருக்கும் இந்திய மொபைல் காங்கிரஸ் நிகழ்வில் பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவில் 5ஜி அலைவரிசையை சேவையை தொடக்கி வைப்பார்.

புதுடெல்லியில் ஒக்டோபர் 1 ஆம் திதி முதல் 4 ஆம் திகதி வரை மொபைல் காங்கிரஸ் மாநாடு நடைபெறுகிறது. இதில் பிரதமர் மோடி 5 ஜி சேவையை தொடக்கி வைக்கிறார்.

5ஜி சேவையைப் பொறுத்த வரையில் அலைவரிசை ஏலம் அனைத்தும் முடிந்து விட்டது. பெரும்பாலான அலைவரிசையை வாங்கிய ஜியோ நிறுவனம் முதலிடத்தில் உள்ளது. எயார்டெல் இரண்டாம் இடத்தில் உள்ளது. மேலும், குறைந்த விலையில் 5ஜி ஸ்மார்ட் போனை கொண்டு வருவதற்கு முழுமுயற்சியில் ஜியோ நிறுவனம் களம் இறங்கியுள்ளது. எதிர்வரும் தீபாவளி முதல் 5 ஜி சேவை அறிமுகப்படுத்தப்படும் என்று ரிலையன்ஸ் தலைவர் முகேஷ் அம்பானி அறிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ஜியோ நிறுவனம் அதிகபட்சமாக ரூ.88 ஆயிரம் கோடிக்கு ஏலம் எடுத்தது. பிரீமியம் 700 MHz அலைவரிசையை ஜியோ ஏலம் எடுத்துள்ளது. குறைந்தபட்சமாக அதானி குழும நிறுவனம் 212 கோடிக்கு ஏலம் எடுத்தது. மத்திய தகவல் தொலைத்தொடர்பு துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் கூறுகையில், ரூ.1 இலட்சம் கோடிக்கு ஏலம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ரூ.1.50ஈலட்சம் கோடிக்கு 5G அலைக்கற்றை ஏலம் எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

அடுத்த இரண்டுமூன்று ஆண்டுகளில் 5G சேவை எல்லா பகுதிகளிலும் நல்ல கவரேஜ் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து பகுதிகளுக்கும் சேவை வழங்கும்படி அலைக்கற்றை ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. ஏலத்தில் பங்கேற்ற நிறுவனங்களிடமிருந்து முதலாம் ஆண்டு தவணையாக ரூ.13,365 கோடி அரசு பெறும் என அவர் தெரிவித்தார்.

700 மெகா ஹெர்ட்ஸ் அலைவரிசையை வாங்கிய ஒரே நிறுவனம் ஜியோ மட்டுமே. ஜியோவின் நேரடி போட்டியாளரான எயார்டெல், 700 மெகா ஹெர்ட்ஸ் அலைவரிசையில் எதுவும் வாங்கவில்லை. எயார்டெல் 900 மெகா ஹெர்ட்ஸ், 1800 மெகா ஹெர்ட்ஸ், 2100 மெகா ஹெர்ட்ஸ், 3300 மெகா ஹெர்ட்ஸ் 26 ஜிகாஹெர்ட்ஸ் என ரூ.43,084 கோடி ஏலம் எடுத்தது.

## தேசிய அரசாங்கம் அமைப்பது... (03ஆம் பக்கத் தொடர்)

பதில் : தற்போதுள்ள சட்டத்தை மீறி யாராவது கைது செய்யப்பட்டால் அது தவறு. அதேபோல், ஜனநாயகத்துக்கு எதிராக யாராவது செயல்பட்டால் அதுவும் தவறு. அதன்பின், அரசு இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்குள் நுழைந்து பாராளுமன்றத்திற்குள் நுழைய முயற்சித்ததையும் நாம் காண முடிந்தது. பாராளுமன்றம் ஒரு குறிப்பிட்ட குழுவினரால் பலவந்தமாக கைப்பற்றப்பட்டால், அதற்கு பொறுப்பேற்க அவர்களில் ஒரு தலைவர் அல்லது அரசியல் கட்சி இருந்ததா? அடுத்த நாள் முதல் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல அவர்களின் அடுத்த படி என்னவாக இருந்திருக்க வேண்டும்?

**கே: அமைப்பு மாற்றமொன்றுக்காகவே போராட்டக்காரர்கள் குரல் எழுப்பியிருந்தனர். தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு அமைப்பு மாற்றம் வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?**

பதில்: நிச்சயமாக. இருப்பினும், அந்த அமைப்பு மாற்றம் சட்டப்பூர்வமாக செய்யப்பட வேண்டும். இல்லையேல் சில குழுக்கள் அரசு நிறுவனங்களுக்குள் புகுந்து அவற்றை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு சென்றால், அது மறுநாள் முதல் பேரழிவை ஏற்படுத்தும். நமது நாட்டில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த தேர்தல் மட்டுமே ஒரே வழி. எவ்வாறாயினும், இத்தருணத்தில் தேர்தலுக்குச் செல்வதற்கான சூழல் இல்லை என்பதை அனைவரும் ஒப்புக் கொள்கின்றனர். தற்போது பணவீக்கம் சுமார் 60 சதவீதத்தை எட்டியுள்ளது.

அடுத்த காலாண்டில் இது குறையும் என்று நம்புகிறோம். உணவுப் பணவீக்கம் 90 சதவீதமாக உள்ளது. எனவே, நாங்கள் மிகவும் நெருக்கடியான பொருளாதார நிலையை எதிர்கொண்டுள்ளோம். 2021 இல், அரசாங்கத்தின் வருவாய் ரூ.1464 பில்லியனாக இருந்தது, ஆனால் செலவு ரூ.3522 பில்லியனாக இருந்தது. இந்தச் சூழ்நிலையில், முறைமையை மாற்றுவதற்காக தேர்தலுக்குச் செல்வதற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

முதலில் நாட்டை இயல்பு நிலைக்கு மாற்றுவதற்கான அடிப்படையை உருவாக்க வேண்டும். தற்போது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த விரும்புபவர்கள் அரசியல் வேறுபாடுகளை களைந்து இலாகாக்களை ஏற்று அரசாங்கத்துடன் கைகோர்க்க வேண்டும். அப்போது தான் முதல் கட்ட முறை மாற்றத்தை தொடங்க முடியும் என்று நம்புகிறேன்.


## இலங்கை கடற்படை

## கொள்வனவு அறிவித்தல்

### இலங்கை கடற்படைக்கு 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி 01 ஆம் திகதி முதல் ஜூலை 31 திகதி வரைக்குமான களஞ்சியப் பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் கேள்வி கோருதல்

01. இலங்கை கடற்படைத் திணைக்களத்தின் கொள்வனவு குழுத் தலைவரினால் இலங்கை கடற்படைக்கு **2023 பெப்ரவரி 01 ஆம்** திகதி முதல் **2023 ஜூலை 31** திகதி வரைக்குமான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் வேறு வேறு களஞ்யப் பொருட்கள் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களையோ ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் விநியோகிப்பதை உறுதி செய்யக்கூடிய இலங்கையின் வர்த்தக நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் **2023 பெப்ரவரி 01 ஆம்** திகதி முதல் **ஜூலை 31 திகதி** வரையிலாகும்.

(அ) தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் குறித்த களஞ்யப் பொருட்கள் ராகம, வெலிசரையிலுள்ள இலங்கை கடற்படை கப்பல் மஹசென் நிருவனத்தில் உள்ள இடைநிலை களஞ்சியச் சாலைக்கு ஒப்படைக்க வேண்டும்.

(ஆ) இது தொடர்பாக கரிசனை காட்டுபவர்கள் ஒவ்வொரு வகையறாவுக்குமான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான **ரூபா 5000.00** ஐ காசாக நிதிப் பணிப்பாளர். இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01. என்பவரிடம் செலுத்தவும். விண்ணப்ப படிவங்கள் **2022 செப்டம்பர் மாதம் 26** திகதி முதல் **2022 அக்டோபர் மாதம் 17** ஆம் திகதி வரை வாராந்த வேலை நாட்களில் **1000** மணி தொடக்கம் **1400** மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். உறிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பொது களஞ்சிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

02. 2023 ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு நிறுவனத்துக்குமான தேவைகளின் அளவுகள் மற்றும் விபரங்கள் ஒவ்வொரு வகையறாவின் கீழும் தேவைப்படும் அளவுகள் விண்ணப்படிவத்துடன் வழங்கப்படும்.

**கேள்விப்பத்திர இலக்கங்களும் ஒவ்வொரு வகையறாவும்**

| விடயங்களின் வகைப படுத்தல் இலக்கம் | விடயங்களின் வகைப படுத்தல் விடய விபரம் | முடிவுத் திகதி, பத்திரங்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| எஸ்எல்என்/எல்ஓஜி/01/ஆர்சி/2023 | அனைத்து வகையான பேட்டரிகள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/02/ஆர்சி/2023 | சுற்றுக்கம்பிகள் (Winding wires) | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/03/ஆர்சி/2023 | வீட்டினுள் பாவிக்கும் மின் வயர்கள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/04/ஆர்சி/2023 | பொறுத்திகள் - Switch (MCB, MCCB, RCCB) | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/05/ஆர்சி/2023 | குளியலறை உபகரணங்கள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/07/ஆர்சி/2023 | டயர் டியுப் வகைகள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/08/ஆர்சி/2023 | கொன்டியுட் மற்றும் உதிரிப்பாகங்கள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/09/ஆர்சி/2023 | உருக்குக்கம்பி (கட்டிட நிர்மாணம்) | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/10/ஆர்சி/2023 | கைதொழிலுக்கு பாவிக்கப்படும் வாயு (Industrial gases) | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2023 (கோப்பு எண் 01) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் - மென்மையான இரும்பு மற்றும் கால்வனேற்றப்பட்ட பொருட்கள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2023 (கோப்பு எண் 02) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொது பொருட்கள் - கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் பாகங்கள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2023 (கோப்பு எண் 03) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொது பொருட்கள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/12/ஆர்சி/2023 | சுத்தம் செய்யும் உற்பத்திப் பொருட்கள் | 2022 அக்டோபர் 18, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/13/ஆர்சி/2023 | தொலைப்பேசி கம்பி வகைகள், ட்ரொப்வயர், தொலைபேசி உதிரிப்பாகங்கள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/14/ஆர்சி/2023 | காரியாலய காகிதாதிகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/15/ஆர்சி/2023 | அச்சுக்கடதாசி மற்றும் கொப்பிகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/16/ஆர்சி/2023 | உள்நாட்டு பலகை வகைகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆர்சி/2023 (கோப்பு எண் 01) | பொது பொறியில் உடமைகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆர்சி/2023 (கோப்பு எண் 02) | பொது பொறியில் உடமைகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |

| விடயங்களின் வகைப படுத்தல் இலக்கம் | விடயங்களின் வகைப படுத்தல் விடய விபரம் | முடிவுத் திகதி, பத்திரங்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆர்சி/2023 (கோப்பு எண் 03) | பொது பொறியில் உடமைகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/18/ஆர்சி/2023 | ஒட்டும் உருளைக் கம்பிகள் (Welding electrodes) | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/19/ஆர்சி/2023 | பிவிசி குழாய் உதிரிப்பாகங்கள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/20/ஆர்சி.'.2023 | உள்நாட்டு வெளிநாட்டு ஒட்டுப்பலகை வகைகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/21/ஆர்சி/2023 | பொதுவான பூச்சுவகைகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/22/ஆர்சி/2023 | தார் வகைகள் | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/23/ஆர்சி/2023 | பெயாரிங்ஸ் (Bearings) | 2022 அக்டோபர் 19, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/24/ஆர்சி/2023 | மின் குமிழ்கள் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/25/ஆர்சி/2023 | சிவிலின் (Roofing Sheets) | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/26/ஆர்சி/2023 | வாகன பூச்சுகள் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/27/ஆர்சி/2023 | அச்சிடும் பொருட்கள் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/28/ஆர்சி/2023 | வெளிநாட்டு பலகை வகைகள் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/29/ஆர்சி/2023 | ஐ ஆர் பீ கண்ணாடி துரும்பு | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2023 (கோப்பு எண் 01) | வாகன பொருட்கள் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2023 (கோப்பு எண் 02) | வாகனங்களுக்குள் பயன்படுத்தப்படும் தரைவிரிப்புகள், கவர்கள் மற்றும் துணிகள் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/33/ஆர்சி/2023 | நீர் சுத்திகரிப்பு நிலயங்களுக்காக பயன்படுத்தப்படும் பாகங்கள் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/34/ஆர்சி/2023 | சீமெந்து (50 கிலோ) | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/36/ஆர்சி/2023 | கருப்பு கற்கள் மற்றும் மணல் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/37/ஆர்சி/2023 | ஸ்மார்ட் அடையாள அட்டைகளுக்கான அச்சிடும் பொருட்கள் | 2022 அக்டோபர் 20, 1000 மணி |

03. ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகமைகளை பூர்த்தி செய்ய வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.)

i. அரச நிறுவனங்களுக்கு களஞ்சியப் பொருட்களை சிறப்பான முறையில் விநியோகித்தமை தொடர்பான 2 வருட அனுபவம்

ii. நிலையான மூலதன வசதிகள்.

iii. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை

iv. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல்)

v. போதுமான களஞ்சியசாலை வசதிகள்

vi. போதுமான தொழிலாளர் மற்றும் அலுவலக வசதிகள்

vii. போதுமான வகையில் போக்குவரத்து வாகன வசதிகள்

viii. வர்த்தக நிறுவனமாக பதிவு செய்து கொண்டுள்ள சான்றிதழ் அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 03 வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

04. விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

05. விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது கடித அட்டையின் இடது பக்கம் மேல் மூலையில் **“இலங்கை கடற்படைக்கு 2023 ஆம் ஆண்டுக்கான களஞ்சியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்”** (விடய விபரம்..........................) எஸ்எல்என்/எல்ஓஜி/..... /ஆர்சீ /2023 கேள்விப்பத்திரப் பெட்டியில் (டெண்டர்) விண்ணப்பங்கள் திறக்கும் திகதி / நேரம் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த கேள்விப்பத்திரப் பெட்டியில் (டெண்டர்) இட வேண்டும்.

தலைவர்,
திணைக்களக் கொள்வனவுக் குழு,
இலங்கை கடற்படை இலங்கை கடற்படை தலைமையகம்,
த.பெ. எண் 593, கொழும்பு 01.

06. குறித்த நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும். விண்ணப்பதாரிக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இந்த சந்தர்ப்பத்திற்கு சமூகமளிக்க முடியும்.

07. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைகோரல் ஆவணங்கள், உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபைச் தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது.

08. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படும்.

09. கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள் இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01. என்னும் இடத்தில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களுக்கு பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள் இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண். 593, கொழும்பு 01. பணிப்பாளர் வழங்கல் மற்றும் சேவைகள், தொலைபேசி **011-7192326** மூலம் தொடர்பு கொள்ளவும்.

11. இக்குறிப்பிட்ட ஒவ்வொரு வகையறாவுக்குமான விலைக்கோரல் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான **www.navy.lk** யிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
இலங்கை கடற்படை,
கொழும்பு 01.

# Web Lankan நிறுவனத்துக்கு Best Web Developer தங்கவிருது




Web Lankan (www.weblankan.com) நிறுவனம் BestWeb.lk இன் 12ஆவது விருது விழாவில் சிறந்த Web Developer பிரிவில் தங்க விருதை வென்றுள்ளது. இவ்விருது வழங்கும் விழா கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் அண்மையில் வெகு விமரிசையாக நடைபெற்றது. Web Lankan தமது சிறப்பான ஆற்றலை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்கான BestWeb.lk விருது விழாக்களிலும் பல்வேறு விருது வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. Web Lankan ISO சான்றிதழை வென்றுள்ள டிஜிட்டல் சந்தைப்படுத்தல் நிறுவனமாகத் திகழ்வதுடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் பெருமித அங்கத்துவ நிறுவனமாகவும் விளங்குகிறது. Google அங்கீகாரத்தை பெற்ற முகவர் நிறுவனமான Web Lankan 600 இற்கு மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு சேவை பெறுநர்களுக்கு தமது சேவையை வழங்குகிறது.

"எம்மீதும் எமது சேவைகள் மீதும் நம்பிக்கை வைத்த எமது பெருமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு இந்த நேரத்தில் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த விருதை வெல்வதற்கும் எமது வெற்றிக்கும் பிரதான தூண்டுதலாக விளங்கியது எமது வாடிக்கையாளர்களே என்பதில் எவ்வித

சந்தேகமும் இல்லை. நிறுவனத்தின் பணியாட்டொகுதியினருக்கும் குழுத் தலைவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். அவர்களின் ஒருங்கிணைந்த முயற்சி எமது வெற்றிக்கு அடித்தளமாக அமைந்துள்ளது." என Web Lankan www.weblankan.com இன்

ஸ்தாபகரும் தலைமை நிறைவேற்று அதிகாரியுமான ஹசான் துடுஹேனகே தெரிவித்தார்.

"LK Domain Registry நிறுவனங்கள் ஊக்குவிக்கின்றமை தொடர்பாக நான் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பயன்மிக்க இணையவழி சந்தைப்படுத்தல் தீர்வுகள் ஊடாக எமது வாடிக்கையாளர்களின் நன்மதிப்பை மேம்படுத்துவதற்கும் வர்த்தக நாமங்கள் தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்கும் விற்பனையை உயர்த்துவதற்கும் நாம் பங்களிப்பு செய்வோம்." ஹசான் துடுஹேனகே மேலும் தெரிவித்தார்.


## கல்வி அமைச்சு

### தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகம் (NIFS)

NIFS

ஹந்தானை வீதி, கண்டி, இலங்கை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல் மற்றும் நிறுவுதல்

### சர்வதேச போட்டி ரீதியிலான விலைக்கோரல் (ICB) மற்றும் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)

01. கண்டி, ஹந்தானை வீதி, தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகத்தின் திணைக்கப் பெறுகைக் குழுவின் (DPC) தலைவரினால் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆய்வுகூட உபகரணங்களை வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உருப்படிகளின் பெயர் | விலைக்கோரல் பிணை முறி | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|
| 01 | Simultaneous Thermal Analyzer | 240,000.00 | 2500.00 |

இலங்கை சந்தைக்கென முன்வைக்கப்பட்ட சாதனங்களைத் தயாரிப்பவர்களினால் ஏக நியமனம் பெற்ற பிரதிநிதியாக/ அங்கீகாரம்பெற்ற முகவராக உள்ளவர்கள் மட்டுமே இந்த விலை கூறலில் பங்குபற்றுவதற்கு தகுதியுடையவர்களாவர் மற்றும் 1987 - 6ஆம் பிரிவு 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழான விதிகளுக்கு இணங்குதல் வேண்டும்.

தகுதி வாய்ந்த விலைமனுதாரர், முகவர், பிரதிநிதி அல்லது விலைமனுதாரர் சார்பில் பெயர் குறிப்பிடப்பட்டவர் 2022-09-26ஆம் திகதி முதல் 2022-11-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வருவனவற்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விலைக்கோரல் விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

அ. கண்டி, ஹந்தானை வீதி, தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகத்தின் செயலாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பம்

ஆ. கண்டி, ஹந்தானை வீதி, தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகத்திற்கு ரொக்கப் பணமாக அல்லது காசுக் கட்டளையாக மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்துதல்

முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-11-08ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன்னர் தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு, தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகம் எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது பணிப்பாளர் சபை அறையில் வைக்கப்பட்டுள்ள 1ம் இலக்க கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் வழங்குநர்/ அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை தேஅகநி செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

திணைக்கப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர், திணைக்களப் பெறுகைக் குழு (DPC),**
**தேசிய அடிப்படைக் கல்வி நிறுவகம்,**
**ஹந்தானை வீதி,**
**கண்டி.**

**தொலைபேசி இல. 081-2232002**



### துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### இலங்கை, மட்டக்களப்பு விமான நிலையத்தில் விமானமோட்டல் பயிற்சி நிறுவனத்தை ஸ்தாபித்தல்

## ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு (EOI)

இலங்கையில் விமானமோட்டிகளைப் பயிற்றுவித்தல் மற்றும் ஏனைய விமான சேவை சார்ந்த தொழில்சார் விடயங்கள், நோக்கு மற்றும் விமான சேவை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக இலங்கை மட்டக்களப்பு விமான நிலையத்தை தளமாகக் கொண்டு ஓர் விமானமோட்டல் பயிற்சி நிலையத்தை அமைத்தல் மற்றும் இயக்குவதற்கு ஆர்வமுள்ள உள்ளூர் மற்றும் சர்வதேச தரப்புகளிடமிருந்து ஆ. வெளிப்படுத்தல் அழைப்பு விடுக்கப்படுகிறது.

உத்தேச விண்ணப்பதாரி (விண்ணப்பதாரிகள்) இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் (CAASL) இணையதளம் (https://www.caa.lk/en/public-notices-en/procurement-of-goods-and-services2) இல் பிரசுரிக்கப்பட்டுள்ள சம்பந்தப்பட்ட தேவைப்பாடுகளை திருப்திகரமாக பூர்த்தி செய்தல் வேண்டும்.

30 வருட காலத்திற்கு வர்த்தக விதிகளில், குத்தகை அடிப்படையில் விமானமோட்டல் பயிற்சி நிறுவனத்தினை அமைப்பதற்காக வழங்குவதற்கு காணி தேவைப்படுகின்றது.

விண்ணப்பதாரரின் சொந்தச் செலவில் விமானங்களை நிறுத்திவைத்தல், மற்றும் பயிற்சியளிப்பதற்கான வசதிகள், நிறுத்துமிடங்கள், கட்டுப்பாடில்லாத வாகன வழிகள் உள்ளடங்கலாக CAASL மேம்படுத்தல் தரத்தில் குறிப்பிடுமாறு சர்வதேச சிவில் விமான சேவைகள் அமைப்பு (ICAO) உடன் தேவைப்படும் வசதிகளை வழங்குவதற்கு விண்ணப்பதாரி (விண்ணப்பதாரிகள்) விரும்புதல் வேண்டும்.

CAASL இலிருந்து தேவைப்படும் அனுமதிப்பத்திரங்கள் மற்றும் அனுமதிகளால் பெற்றுக்கொள்வதுடன் மேற்படி செயற்பாட்டிற்காக CAASL மேம்படுத்தல் தரத்தின் பிரகாரம் விமானம் ஓட்டல் பயிற்சி நிறுவன செயற்பாடுகள் செயற்படல் வேண்டும்.

ஆர்வமுள்ள தரப்பினர் கொழும்பு 1, சைத்திய வீதி, இல. 19, துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு, அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சமரசக் கமிட்டி, தலைவருக்கு முகவரியிடப்பட்ட ஓர் பொறியிடப்பட்ட கடித உறையை 2022 நவம்பர் 08ம் திகதி 14.00 மணி அல்லது அதற்கு முன்பு ஆர்வவெளிப்பாடுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஆர்வவெளிப்பாடுகளை உள்ளடக்கிய கடித உறையின் வலது கைப்பக்க மூலையில் "இலங்கை மட்டக்களப்பில் விமானமோட்டல் பயிற்சி நிலையத்தை ஸ்தாபித்தல் என்று குறிப்பிடல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட சமரசக் கமிட்டி**
**துறைமுகங்கள் கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு,**
**இல. 19, சைத்திய வீதி, கொழும்பு-01,**
**இலங்கை.**

25.09.2022



### ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்

## வெற்றிடங்கள்

**நிர்வாகப் பணியாளர்கள் - நிரந்தர அடிப்படை**

**இரத்மலானை வளாகம் மற்றும் தெற்கு பல்கலைக்கழகம் - சூரியவெவ**

- உதவிப் பதிவாளர் பதவி

**தெற்கு பல்கலைக்கழகம் - சூரியவெவ**

- உதவிப் நிதியாளர் பதவி

**எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள்- ஒப்பந்த அடிப்படை**

**இரத்மலானை வளாகம்**

- முகாமைத்துவ உதவியாளர் பதவி தரம் III (ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில்)

**சம்பள அளவுத்திட்டம்**

01. உதவிப் பதிவாளர் பதவி மற்றும் உதவிப் நிதியாளர் பதவி :-
U-EX I (II) ரூ.50,625 – 3x1,125 – 54,000 (EB) 55,335; 12x1,335 - 71,355 p.m. + (45% MCA + அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்)

02. முகாமைத்துவ உதவியாளர் பதவி தரம் III (ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில்) :-
ரூ. 30,725 p.m. + (ரூ. 7,800 வாழ்க்கைச் செலவு + ரூ. 5,000 மாதாந்த கொடுப்பனவு)

**ஆட்சேர்ப்பு நடைமுறை**

உளச்சார்பு பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படும்.

**ஏனைய பிரதிபலன்கள்:**

**நிரந்தர அடிப்படை:**
EPF, ETF, பணிக்கொடை தொகை, இலவச சுகாதார காப்புறுதிகள், வருடாந்த ஊக்குவிப்புத் தொகை, பணியாளர்களது குழந்தைகளுக்கான புலமைப்பரிசில்கள், பல்கலைக்கழக வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் பொழுது முன்னுரிமை வழங்கல் மற்றும் மேலும் ஏனைய வரப்பிரசாதங்கள்.

**ஒப்பந்த அடிப்படை:**
EPF, ETF கொடுப்பனவுகள், வருடாந்த ஊக்குவிப்புத் தொகை, பல்கலைக்கழக மருத்துவமனையில் முன்னுரிமை அடிப்படையிலான சிகிச்சைகள் மற்றும் நலன்புரி போக்குவரத்து.

**பொது நிபந்தனைகள் – அனைத்து ஊழியர்கள்**

01. இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ ஆணைக்குழுவினால் ஒவ்வொரு பதவி / தரத்திற்கும் அங்கீகரிக்கப்பட்ட காலியிடங்களுக்குள் மட்டுமே விண்ணபத்தாரிகளை தெரிவு செய்தல் தேர்வுகள் இடம்பெறும்.
03. விண்ணப்பதாரிகளால் இணையத்தளத்தில் **(www.kdu.ac.lk)** இருந்து தரவிறக்கம் செய்த விண்ணப்பத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டு தொடர்புடைய சான்றிதழ்களின் நகல் பிரதியுடன் **2022.10.25** ஆம் திகதிக்கு முன்னர் பதிவாளர், ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம், இரத்மலானை எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது நேரடியாக கையளித்தல் வேண்டும்.
04. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வெற்றிடத்தை குறிப்பிட வேண்டும்.
05. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும்.
06. அரச திணைக்களங்கள் / கூட்டுத்தாபனங்கள் / கட்டுப்பாட்டு வாரியங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் சேவையாற்றும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை குறித்த நிறுவகத்தின் பிரதானி மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.
07. கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்துகொண்ட விண்ணப்பப்படிவத்தின் மூலமாக மாத்திரம் குறித்த பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது. பிந்திக்கிடைக்கும், பூரணப்படுத்தப்படாத அல்லது மேலே குறிப்பிடப்பட்ட நிபந்தனை இல 06 இற்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
08. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு இப்பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வளாகத்திலும் சேவையாற்றுவதற்கு மற்றும் பணியாற்றுவதற்கு ஆற்றல் இருத்தல் வேண்டும்.
09. தேவையான தகுதிகளை பூர்த்தி செய்யும் விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முக / செயன்முறை பரீட்சை மற்றும் தகுதித் தேர்வுக்கு அழைக்கப்படுவர்.
10. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் ஒவ்வொரு பதவிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறைகளின்படி மற்றும் செயன்முறை பரீட்சை / தகுதித் தேர்வு மற்றும் நேர்முக பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் தேர்வுகள் நடைபெறும்.
11. தகுதித் தேர்வு / நேர்முக பரீட்சைக்கு மட்டுப்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் உரிமையை பல்கலைக்கழகம் கொண்டுள்ளது.
12. நிரந்தர ஊழியர் வெற்றிடங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட சமீபத்திய சம்பளச் சுற்றறிக்கையின் படி சம்பளம் வழங்கப்படுவதுடன் சம்பளத்திற்கு மேலதிகமாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
13. ஒப்பந்த அடிப்படைக்காக 2018.12.03 திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவை திணைக்கள கடித இலக்கம் DMS/1823/Vol-III இன் படி சம்பளம் வழங்கப்படும்.

**பொது நிபந்தனைகள் - நிர்வாக ஊழியர்கள்**

01. பதவிக்கான தகைமைகளுக்காக ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளம், 2017.06.28 ஆம் திகதி பல்கலைக்கழக ஆணைக்குழு சுற்றுநிரூபம் இல.15/2017 மற்றும் அதுதொடர்பான திருத்தங்களை பார்க்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**பொது நிபந்தனைகள் - எழுதுவினைஞர் மற்றும் இணைந்த தரங்கள்**

01. பதவிக்கான தகைமைகளுக்காக ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக இணையத்தளம், 2018.07.16 ஆம் திகதி பல்கலைக்கழக ஆணைக்குழு சுற்றுநிரூபம் இல.06/2018 மற்றும் அதுதொடர்பான திருத்தங்களை பார்க்குமாறு விண்ணப்பதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி :**
**பதிவாளர்,**
**ஜெனரல் ஸ்ரீமத் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,**
**இரத்மலானை 10390**
**இலங்கை.**

**இறுதித் திகதி 2022.10.25**

மேலதிக விபரங்களுக்கு பிரவேசிக்கவும்
**www.kdu.ac.lk.**

# சிறுவர் உலகம்

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 30

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| | 06 | | | 07 | 08 |
| 09 | 10 | 11 | 12 | 13 | |
| 14 | | 15 | | | 16 |
| 17 | | 18 | 19 | | 20 |
| 21 | 22 | | 23 | 24 | 25 |

பெயர் ........................................................
வகுப்பு ........................................................
தொலைபேசி இல ........................................................
பாடசாலை பெயர் ........................................................
வதிவிட முகவரி ........................................................
........................................................

.............................. ..........................................
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) உலகில் மிக வேகமாக ஓடக் கூடிய மிருகம் இது. இலங்கைக் காடுகளிலும் வாழ்கின்றது. வேட்டையாடி இரை பிடிக்கும் கொடிய மிருகம்.
(7) வில்லில் இருந்து எய்யப்படுவது. அக்காலத்தில் மிருகங்களை வேட்டையாடவும், போர் புரியவும் பயன்படுத்திய ஆயுதம். (தலைகீழான சொல்)
(9) கடற்கரைப் பிரதேசத்தில் மணலில் படர்ந்து வளர்கின்ற, நலிவான தண்டுகள் கொண்ட கொடிவகைத் தாவரம் இது. 'ஒற்றுமையே பலம்' என்பதற்கான பழமொழியொன்றில் இத்தாவரம் உவமையாகக் குறிப்பிடப்படுகின்றது. (தலை கீழான சொல்)
(18) நீர், நிலம், காற்று ஆகிய எமது சுற்றாடல்களுக்கு ஏற்படுகின்ற கெடுதல்களை இவ்வாறு குறிப்பிடலாம்.
(21) அறுசுவைகளில் ஒன்று இது. மாங்காய் போன்றவற்றில் இச்சுவை உள்ளது.
(23) தென்னை, கமுகு ஆகியவற்றின் இளமைப் பருவத்துக்குரிய மரபுச்சொல். (தலைகீழான சொல்)

### மேலிருந்து கீழ்

(2) நாம் உணவுக்குப் பயன்படுத்துகின்ற தானியங்களில் இதுவும் ஒன்று. உழுந்து, சோயா, பருப்பு போன்று இதுவும் ஒரு தானியம். (தலைகீழான சொல்)
(5) மரங்கள், கொடிகள் எமக்குத் தருகின்ற இனிமையான உணவுப் பொருள். உயிர்ச்சத்துக்கள் நிறைந்தது. தினமும் உண்பது உடலுக்கு நல்லது. (தலைகீழான சொல்)
(7) குளத்தில் நீரைத் தேக்கி வைப்பதற்காக சுற்றிவர அமைக்கப்படுவது இது. உறுதியாக இல்லாவிடில் தண்ணீர் உடைப்பெடுத்து வெள்ளம் பரவி விடும். (தலைகீழான சொல்)
(9) பாடல்கள் இயற்றுபவன் இவன். (தலைகீழான சொல்)
(11) வருடத்தின் பன்னிரண்டிலொரு காலப்பகுதி. (தலைகீழான சொல்)
(16) இளைய சகோதரன் இவன்.
(19) மாம்பழத்தின் உள்ளீடு சதை என்பது போல, பலாப்பழத்தின் உள்ளீடு இது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 29

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. வரலாறு 08. வேலி 10. கிளி 12. கிவி
14. வனம் 19. பணம் 22 கர்வம்

**மேலிருந்து கீழ்**

01. வங்கி 03. பலா 05. வேர் 08. கிலி
11. வளி 12. விம்பம் 17. தம்பி 18 கலை

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 28

### பாராட்டு பெறுவோர்

**1. ஹரி லூசன் மேகவர்ணன்**
தரம் 07, சாஹிரா ஆண்கள் கல்லூரி,
கட்டுகஸ்தோட்டை,
இல. 2/27 A, வெலிகந்த, கண்டி.

**2. ஸீனத் தஹானி சாட்**
தரம் 10B, க/பதியுத்தீன், மகளிர் கல்லூரி
34/12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர, கண்டி.

**3. பஹ்மா**
தரம் 08 A, பென்ஹில் கல்லூரி, கம்பளை,
இல. 22/12, இளவத்துறை, கம்பளை.

**4. ரவீந்திரன்**
தரம் 05, மட்/பட். கனிஷ்ட வித்தியாலயம்,
குருமண்வெளி - கிழக்கு, களுவாஞ்சிகுடி.

**5. நவாப் பாத்திமா ரிப்தியா**
தரம் 05, அல் - அமான் மு.ம.ம.வித்தியாலயம்
கல்லொலுவ, மினுவாங்கொடை.

**6. பாத்திமா நிப்லா**
தரம் 13A, மதீனா தேசிய பாடசாலை,
இல.273, பொல்கஹயாய, நாரம்மல.

**7. சு. யகஸ்வினி**
தரம் 08 A, தி/ கலைமகள் மகா வித்தியாலயம்,
975, அன்புவழிபுரம், திருகோணமலை.

**8. மிக்தாத் அஹமத்**
தரம் 04, நாங்கல்ல மு.ம.வித்தியாலயம்,
ஹஸன் இஸ்தான், நாங்கல்ல, துல்ஹிரிய

குறுக்கெழுத்துப் போட்டி இல. 30
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



குறளமுதம் :

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**
**கடையரே கல்லா தவர்**

***தெளிவுரை :***
*செல்வர் முன் வறியவர் நிற்பது போல் (கற்றவர்முன்) ஏங்கித் தாழ்ந்து நின்றும் கல்விக் கற்றவரே உயர்ந்தவர், கல்லாதவர் இழிந்தவர்.*

## கரிக் குருவி புகட்டிய பாடம்



மாலைப் பொழுதில் நாய் ஒன்று கடற்கரை மணலில் விளையாடி மகிழ்ந்தது. அதனைக் கண்ணுற்ற நண்டு வேகமாக அருகில் சென்று ஒரு பார்வை பார்த்தது. அதனை அவதானித்த நாய் கவனியாதது போல விலக 'என்ன பயமா?' என வம்புக்கு இழுத்தது நண்டு. நண்டின் வார்த்தை நாய்க்கு வெறுப்பை ஊட்ட, கோபத்துடன், தனது காலைத் தூக்கியது. நண்டு; தனது முன்னங்கால்கள் இரண்டையும் தூக்கி போர் வீரன் போல நின்றது.

எல்லாவற்றையும் அவதானித்த கரிக் குருவி அவற்றுக்கு அருகில் இருந்த சிறிய மணற் கும்பியில் சென்று அமர்ந்தது. கரிக்குருவியைக் கண்டதும் நாய் தன் காலை நிலத்தில் வைத்தது. கரிக் குருவி புன்னகையுடன் நின்றது. நாயும் நண்டும் விலக குருவி தலை அசைத்து, 'என்ன சண்டை சமாதானம் ஆகிவிட்டதா?' எனக் கேள்வி எழுப்பியது, நண்டும் நாயும் நாணத்துடன் தலை குனிந்தன.

குருவி; அதே சிரிப்புடன் 'நீங்கள் அமைதியாக உங்கள் உங்கள் வேலைகளை கவனித்தால் ஏன் கோபம், வேதனைகள் வரப்போகின்றது? அதைவிடுத்து அழையா விருந்தாளியாக, சுனாமி மாதிரி, இன்னொருவரின் இடத்திற்குள் அத்துமீறிப் புகுந்து, தமது வீரத்தை, கோபத்தை காட்டி வேதனைப் படுத்துவது சரியா? என வினாத் தொடுத்தது.

நாய்; 'என்ன சுனாமியா?' என ஆச்சரியத்துடன் பார்க்க, 'சுனாமியை உங்களுக்கு தெரியாது..... இயற்கை அன்னை ஆக்ரோசத்துடன் அருகில் உள்ள இடங்களுக்குள் பிரவேசித்து கோரத்தாண்டவம் ஆடினாள்..... அந்த கொடூரத்தை, உக்கிரத்தை தாங்க முடியாது எத்தனையோ உயிரினங்கள் பெரிதும் வேதனைப்பட்டன. என சோகத்துடன் கூறி பெருமூச்சொன்றையும் உதிர்த்தது.

குருவியின் குரலில் தெரிந்த வேதனையை உணர்ந்ததாக, 'எது நாட்டுக்குள் புகுந்தது' என மெல்லிய குரலில் நண்டு கேட்டது. அதற்கு குருவி,

'இந்தக் கடல்நீர்தான், மிகுந்த கோபத்துடன் கொந்தளித்து பனைமர உயரத்திற்கு பொங்கி எழுந்து. ஊருக்குள் நுழைந்தது. அந்த வேகத்தை கூறமுடியாது. அகப்பட்ட உடமைகள் உயிரினங்கள் சொத்துக்கள் என அத்தனையையும் ஒரு நிமிடத்தில் உருட்டிப் புரட்டி சீரழித்துவிட்டது... பல உயிர்களையும் காவு கொண்டது.

அதேநேரம், கடல் தன் அழகையும், தனித்துவமான மென்மைத் தன்மையையும் இழந்தது. தன்னை நம்பி வாழ்ந்த அத்தனை கடல்வாழ் உயிர் இனங்களையும் துடிக்கவிட்டு வேடிக்கை பார்த்தது. இத்தனையும் கடல் கொண்ட கோபத்தினால் வந்த சீரழிவும் அவலங்களும் தான். அதே போல் மழை, காற்று என்பனவும் தனது நிலையில் மாறி கோபங் கொண்டால் வெள்ளப் பெருக்கு, மண்சரிவு, புயல் என மாறி பூமித்தாயை நாசப்படுத்தி விடும். 'கோபம்' மிகக் கொடுமையானது, என நீண்ட பெருமூச்சொன்றை உதிர்த்தது.

சற்று நேரம் அவ்விடத்தில் ஒருவிதமான அமைதி குடிகொண்டது. குருவி தொடர்ந்தது. நாயைப் பார்த்து, 'நண்டு உம்மோடு விளையாடத்தானே வந்தது. ஆனால் நீதான் அவசரப்பட்டு காலைத் தூக்கிப் போட்டாய். நல்ல காலம் நண்டு உன்னை கடிப்பதற்கு முன் நான் வந்துவிட்டேன். இல்லையென்றால் உங்களுக்கிடையில் பெரிய யுத்தம் நடந்து இருவருமே பாதிக்கப்பட்டிருப்பீர்கள். 'கோபம் பாவத்தை தேடும்' எனக் கூறி சிறகடித்துப் பறந்தது. நண்டும் நாயும் அதைப்பார்த்து மகிழ்வுடன் நின்றன.

**(திருமலை தேன்மொழி)**



# இவ்வார மழலை

**எமிஷா ஒமாயா**

**விஜயன் / சந்திரலதா,**
கொட்டாஞ்சேனை.






**றைஸா றிஸ்வான்**
அஹதிய்யாப் பாடசாலை,
துந்துவ - பெந்தோட்டை



**பாதிமா மர்வா நஸ்ரின்**
அஹதிய்யாப் பாடசாலை,
துந்துவ - பெந்தோட்டை



**மொஹமட் அஹ்னாப்**
அஹதிய்யாப் பாடசாலை,
துந்துவ - பெந்தோட்டை



**அம்னா இம்திகாப்**
அஹதிய்யாப் பாடசாலை,
துந்துவ - பெந்தோட்டை

## வண்ண நிலவே வா.....!

வட்ட நிலவே வா வா வா
வண்ண நிலவே வா வா வா – நீ
எட்ட இருந்து பார்க்காமல்
எனது அருகில் ஓடி வா...!
(வட்ட நிலவே...)

அழகிய நீல வானத்தில்
பயணம் போகும் வெண்ணிலவே
உன்னை நானும் அழைக்கின்றேன்
உடனே நீயும் வரவேண்டும்.
(வட்ட நிலவே...)

வளர்ந்து தேய்ந்து மீளவும் நீ
வளர்ந்து பூரணை நிலவாகி
ஒளிரும் காரணம் எதற்காக
ஒன்றும் எனக்குப் புரியவில்லை.
(வட்ட நிலவே...)

நட்சத்திரங்கள் பலசூழ
நடுவே அழகாய் சிரிக்கின்ற
இனிய நிலவே எப்பொழுது
எனது அருகே வருவாயோ?
(வட்ட நிலவே...)

**ஷெல்லிதாசன்**
திருகோணமலை

## இஞ்சி தின்ற குரங்கு போல!



இஞ்சியை போன்ற தோற்றமுள்ள காட்டு மஞ்சள் கிழங்கின் மீது, குரங்குக்கு மிகுந்த விருப்பம். இது, மாங்காய் இஞ்சியைப் போன்று காரமில்லாதது. சற்று இனிப்பும் அதில் இருக்கும். அதை ருசி கண்ட குரங்கு, அது போலவே தோன்றும் சாதாரண இஞ்சியைக் கண்டு ஏமாந்து, கடித்துச் சுவைத்து விடும். அப்போது ஏற்படும் அதன் முகபாவத்தையும் கோபத்தையும் குறிப்பது தான் இந்தப் பழமொழி.

## தண்டவாளங்களில் ஜல்லிக் கற்கள் எதற்கு?

ரயில் தண்டவாளங்களில் போடப்படும் கற்களுக்கு 'Track Ballast' என்று பெயர். 12 இன்சுக்கு மேல் இந்த கற்களை கொட்டி தளம் அமைப்பதன் மூலம், ரயில் ஓடும் போது ஏற்படும் அதிர்வுகளை தாங்கிக் கொள்ளும். முக்கியமாக தண்டவாளங்கள் அதன் இடத்தில் இருந்து விலகாமல் பார்த்துக் கொள்ளும்.

மழைக் காலங்களில் தண்டவாளங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக் கொள்வது இந்த கற்கள் தான். இது தண்டவாளங்களில் களைகள், செடிகள் வளராமல் தடுக்கும்.



## சிரிக்க... சிந்திக்க



வீட்டின் பின் வாசல் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்த இரண்டு திருடர்களில் ஒருவன், தூங்கிக் கொண்டிருந்த கணவனையும் மனைவியையும் கட்டிப் போட்டு விட்டு பக்கத்திலேயே கத்தியோடு காவல் இருந்தான்.

இன்னொரு திருடன் பீரோவைத் திறந்து பணத்தையும் நகைகளையும் மூட்டைக் கட்டினான். காவல் நின்ற அந்தத் திருடனிடம் அந்த வீட்டம்மா மெல்லிய குரலில்... எதிர்த்த வீட்டிலும் திருடிட்டு போங்கய்யா... அவ வீடெல்லாம் நிறைய நிறைய நகையா வச்சிருக்காய்யா. உங்களுக்குப் புண்ணியமா போகுமய்யா.. என்றாள். அந்தம்மா சொல்லி அனுப்பித் தான் இங்க திருட வந்திருக்கோம். சத்தம் போடாதே என்று அதட்டினான் அந்தத் திருடன்.

## நாம் முதல் தலைமுறை

*தந்தை + தாய்*
**- இரண்டாம் தலைமுறை**
*பாட்டன் + பாட்டி*
**- மூன்றாம் தலைமுறை**
*பூட்டன் + பூட்டி* **- நான்காம் தலைமுறை**
*ஓட்டன் + ஓட்டி* **- ஐந்தாம் தலைமுறை**
*சேயோன் + சேயோள்* **- ஆறாம் தலைமுறை**
*பரன்+ பரை* **- ஏழாம் தலைமுறை**
*பரன் + பரை -பரம்பரை*

*ஒரு தலைமுறை சராசரியாக 60 வருடங்கள் என்று கொண்டால், ஏழு தலைமுறை 480 வருடங்கள். ஈரேழு தலைமுறை 960 வருடங்கள். (கிட்டத்தட்ட ஆயிரடம் வருடங்கள்) ஆக, பரம்பரை பரம்பரையாக என்று சொல்வதன் பொருள் ஈரேழு, பதினான்கு தலைமுறையாக என்று பொருள் வரும். வேறெந்த மொழிகளிலும் இப்படி உறவு முறைகள் இல்லை. இதுவும் தமிழுக்கு ஒரு தனிச் சிறப்பு.*

## வைரம் எங்கிருந்து கிடைக்கிறது?

**பூமிக்கு அடியில் புதைந்துள்ள இறுகிப்போன நிலக்கரியில் இருந்து தான் இந்த அரிய வகை வைரம் நமக்கு கிடைக்கிறது. ஆனால், இது எந்த ஆழத்திலிருந்து கிடைக்கிறது என்பது எத்தனை பேருக்கு தெரியும்? இது பூமிக்கு அடியில் 2 மைல் தொலைவில் கிடைக்கும் என்று கருதுகிறார்கள். ஆனால், பூமிக்கு அடியில் 90 மைல் தொலைவில் தான் இந்த வைரம் இருக்கும். 2 மைல் தொலைவில் வெறும் நிலக்கரி மட்டும் தான் கிடைக்கும்.**





## அறிந்து கொள்வோம்

ஒரு சிறு துளி சாராயம் அல்லது மதுபானத்தை ஒரு தேளின் மேல் தெளித்தால், அதனால் தாங்க இயலாது. அந்த தேள் தன்னைத்தானே கொட்டிக் கொண்டு இறக்கும்.

# மஞ்சரி விளையாட்டு

# புவிதரனின் பாய்ச்சலும் இலங்கையின் எதிர்காலமும்

கொலுன்றிப் பாய்தல் பார்க்க அதிக சாகசமாக இருக்கலாம், ஆனால் ஆபத்தைத் தாண்டி அதற்கு ஒரு விலை இருக்கிறது. சுவரேறி குதிக்க மூங்கில் கம்பை பயன்படுத்த முடியும், விளையாட்டுக்கு சரிப்பட்டுவராது.

கோலூன்றிப் பாய்வதற்கு பயன்படுத்தும் கோல் ஒன்றின் விலை ஒரு இலட்சம் தொடக்கம் ஐந்து இலட்சம் வரை சந்தையில் போகும். எனவே திறமை இருக்கும் வீரராக இருந்தாலும் வறுமையில் இருந்தால் சாதிப்பது கஷ்டம் தான்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அருந்தவராச புவிதரனிடம் இருக்கும் கோலினால் 4.90 மீற்றர் உயரம் வரைதாவ முடியும். ஆனால் அவரது திறமைக்கு அது போதாது. புதிதாக கோலொன்றை வாங்கும் வசதியும் அவரிடம் இல்லை.

நல்லவேளை இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சக வீரர் சன்ன பெர்னாண்டோவின் கோல் இருந்தது. அதனைக் கொண்டு பயிற்சி செய்தார். அதனைக் கொண்டு தான் போட்டியிலும் பங்கேற்றார்.

தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் கடந்த வாரம் நடைபெற்ற தேசிய மெய்வல்லுனர் தகுதிகாண் போட்டியில் தேசிய சாதனையை முறியடித்த ஒரே வீரராக புவிதரன் முழு இலங்கையிலும் பேசப்படுவதற்கு அவர் எடுத்த முயற்சியை சாதாரணமாகக் கருதிவிட முடியாது.

இந்தப் போட்டியின் முதல் முயற்சியில் 4.70 மீற்றர் உயரம் பாய்ந்த புவிதரன் அடுத்தடுத்து 4.80, 4.90, 5.00 மீற்றர் வரை தனது முதல் முயற்சியிலேயே அநாயாசமாகத் தாண்டிவிட்டார்.

எனவே தேசிய சாதனையை முறியடிக்கும் வாய்ப்பு அதிகரித்தது. கோலூன்றிப் பாய்தலில் தேசிய சாதனை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் நிறுவப்பட்டது. அதனைச் செய்தவர் இலங்கை விமானப்படை வீரர் இஷார சந்தருவன். அவர் 2017 ஆம் ஆண்டு 5.11 மீற்றர் உயர் பாய்ந்ததே இலங்கை சாதனையாக இருந்தது.

இந்த சாதனையை முறியடிக்கும் முயற்சியில் இறங்கிய புவிதரன் 5.12 உயரத்தை தெரிவு செய்தார். அதனை முதல் முயற்சியிலேயே இலகுவாகத் தாண்டவும் செய்தார்.

தேசிய சாதனையை முறியடித்த அவர் அத்தோடு நிற்கவில்லை. தனக்கு கிடைத்த அடுத்த வாய்ப்பில் 5.15 மீற்றர் உயரத்தை தாவி அந்த சாதனையை புதுப்பித்துக் கொண்டார். எனவே, அந்தப் போட்டியில் முதலிடத்தை பெரிதாகப் போட்டி இன்றியே பெற்றுக்கொண்டார்.

22 வயதான புவிதரன் 5.15 மீற்றர் உயரத்தை வந்த உடன் தாவவில்லை அதற்கு எடுத்துக் கொண்ட ஆண்டுகள் பல. தேசிய சாதனையை முறியடிக்கும் முயற்சி அவர் கையால் இதற்கு முன்னர் மூன்று தடவைகள் நழுவிப்போனது.

2016 ஆம் ஆண்டு கண்டி போகம்பறை விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 32ஆவது அகில இலங்கை பாடசாலை விளையாட்டு அரங்கில் தங்கப்பதக்கம் வென்ற புவிதரன் தாவிய உயரம் 3.80 மீற்றர்.

2017 செப்டெம்பரில் தியகமவில் நடந்த விளையாட்டுப் போட்டியில் அவரது உயரம் 4.40 மீற்றராக அதிகரித்ததோடு 2018 ஆகும் போது அது 4.70 ஆக உயர்ந்தது.

இப்படி அவரது உயரும் அதிகரித்துக் கொண்டே போகும்போது அவர் மீதான அவதானமும் அதிகரித்தது. யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பாடசாலை கல்வியை நிறைவு செய்த பின் விளையாட்டுக்கு ஒத்துழைப்பு அளிக்கும் இலங்கை இராணுவ விளையாட்டுக் கழகத்தில் இணைந்தார்.

அண்மைக் காலத்தை பார்த்தால் பல வெற்றிகளைக் குவித்து வருகிறார். கடந்த ஆண்டு ஒக்டோபரில் சுகததாச விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 99ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் 5.00 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து தேசிய சம்பியனும் தேசிய சாதனைக்கு சொந்தக்காரருமான இஷார சந்தருவனை வீழ்த்தினார்.

தொடர்ந்து கடந்த மார்ச் மாதம் தியகம மஹிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் புவிதரனின் உயரம் மேலும் அதிகரித்தது. அப்போது 5.10 மீற்றர் உயரத்தைத் தாவிய அவர் இலங்கை சாதனையை முறியடிப்பது ஒரு சென்டி மீற்றரால் தவறிப்போனது. ஆனால் இஷார சந்தருவனை வீழ்த்தி முதலிடம் பெறுவது அவருக்கு இலகுவானது.

இலங்கை சாதனையை முறியடிக்கும் அவரது முயற்சி தொடர்ந்தது. கடந்த ஜூன் மாதம் கொழும்பு சுகததாச அரங்கில் நடைபெற்ற கனிஷ்ட தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் 5.00 மீற்றர் உயரத்தை தாவிய புவிதரனுக்கு மீண்டும் ஒருமுறை தேசிய சாதனையை முறியடிக்க முடியாமல் போனது.

எப்படியோ அவரது மூன்றாவது முயற்சியில் தேசிய சாதனையை முறியடித்திருக்கிறார். புவிதரனின் தேசிய சாதனை என்பது தெற்காசிய சாதனையையும் விஞ்சுகிறது. 2016இல் குவஹாத்தியில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் சந்தருவன் தாவிய 4.90 மீற்றர் உயரமே இன்றும் சாதனையாக இருக்கிறது.






**தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு அரங்கில் கடந்த வாரம் நடைபெற்ற தேசிய மெய்வல்லுனர் தகுதிகாண் போட்டியில் தேசிய சாதனையை முறியடித்த ஒரே வீரராக புவிதரன் முழு இலங்கையிலும் பேசப்படுவதற்கு அவர் எடுத்த முயற்சியை சாதாரணமாகக் கருதிவிட முடியாது.**

என்றாலும் அவர் ஆசிய மற்றும் உலக மட்டத்திற்கு செல்ல இன்னும் தூரம் போக வேண்டும். கோலுன்றிப் பாய்தலின் உலக சாதனை உயரம் 6.21 மீற்றர். சுவீடன் நாட்டின் ஆர்மன் டுப்லான்டிஸ் படைத்தது.

ஆசிய சாதனைக்குச் சொந்தக்காரர் பிலிப்பைன்ஸின் எர்னஸ்ட் ஜோன் ஒபினா. அவர் பாய்ந்த உயரம் 5.94 மீற்றர்.

இன்னும் இளம் வீரராக இருக்கும் புவிதரனுக்கு உற்சாகமும் ஆதரவும் வழங்கினால் அவர் இன்னும் உச்சம் போகும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.

பொதுவாக கோலூன்றி பாய்தலில் ஒப்பீட்டளவில் வடக்கு பக்கம் அதிக திறமைகள் இருப்பது தெரிகிறது. பாடசாலை மட்ட விளையாட்டுப் போட்டிகளில் வட மாகாண மாணவர்கள் இதில் பதக்கம் வென்று வருகிறார்கள்.

அண்மையில் நடைபெற்ற சேர். ஜோன் டார்பட் சிரேஷ்ட மெய்வல்லுனர் போட்டிகளில் 16 வயதின் கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சாவகச்சேரி இந்து கல்லூரியைச் சேர்ந்த பரந்தாமன் அபிலாஷினி 3.00 மீற்றர் உயரம் பாய்ந்து புதிய போட்டிச் சாதனையுடன் தங்கப் பதக்கத்தை வென்றிருந்தார்.



கடந்த வாரம் தியகமவுக்கு வந்த அவர் 3.30 மீற்றர் உயரம் தாவி மூன்றாவது இடத்தை பிடித்தார். 16 வயதான அவரின் சிறந்த திறமை இதுதான்.

கடந்த ஜூன் மாதம் கொழும்பில் நடந்த தேசிய கனிஷ்ட மெய்வல்லுனர் சம்பியன்சிப் தொடரில் 18 வயதின் கீழ் பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் புதிய கனிஷ்ட தேசிய சாதனையுடன் அவர் தங்கப்பதக்கம் வென்றிருந்தார்.

தொடர்ந்து தேசிய மட்டப் போட்டிகளில் வெற்றிகளைக் குவித்துவரும் அபிலாஷினி எதிர்காலத்தில் இலங்கைக்கு நல்லதொரு முதலீடாக இருக்கும்.

என்றாலும் தியகமவில் நடந்த தகுதிகாண் மெய்வல்லுனர் போட்டிகளில் புவிதரனைத் தவிர்த்து பெரிதாக சாதனைகளை பார்க்க முடியவில்லை.

அடுத்த ஆண்டு செப்டெம்பர் மற்றும் ஒக்டோபரில் சீனாவில் நடைபெறவிருக்கும் ஆசிய விளையாட்டுப் போட்டி மற்றும் ஜூலை மாதத்தில் தாய்லாந்தில் நடைபெறவிருக்கும் ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டிகள் முக்கியமானவை. இலங்கைக்கு ஒன்றிரண்டு பதக்கங்களை வெல்வதற்கு வாய்ப்பு உள்ள போட்டிகளாக இந்த இரண்டு போட்டிகளையும் காண முடியும்.

இந்தப் போட்டிகளுக்கான வீரர்களை தேர்வு செய்வதற்காகவே இந்தத் தகுதிகாண் மெய்வல்லுனர் போட்டி இடம்பெற்றது. வெற்றிகள், தோல்விகளை தவிர புதிய சாதனைகள் படைத்த எண்ணிக்கையை விரல்விட்டு எண்ணி விடலாம்.

ஒரே ஒரு தேசிய சாதனை மாத்திரம் முறியடிக்கப்பட்ட இந்தப் போட்டியில் புவிதரன் தவிர, மேலும் இரு போட்டிகளில் தான் குறிப்பிடத்தக்க சாதனைகள் முறியடிக்கப்பட்டிருந்தன.

ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் காலிங்க குமார 45.70 விநாடிகளில் போட்டியை முடிந்து தனது சிறந்த காலத்தை பதிவு செய்ததோடு பெண்களுக்கான ஈட்டி எறிதலில் 59.40 மீற்றர் தூரம் எறிந்து சிறந்த சொந்த சாதனை பதிவு செய்யப்பட்டது.

எனினும் ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப் போட்டியில் தேசிய சம்பியனான மலையகத்தைச் சேர்ந்த குமார் சண்முகேஸ்வரன் இரண்டாம் இடத்திற்கு பின்தங்கியதோடு, 200 மீற்றர் ஓட்டப்போட்டியில் சம்பியனான மொஹமட் சபான் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டிருந்தார்.

எனினும் பெண்களுக்கான 1500 மீற்றர் ஓட்டப்போட்டியில் தேசிய சம்பியன் கயன்திகா அபேரத்ன மற்றும் பெண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் லக்ஷிகா சுகந்தி தனது வழக்கமான திறமையை வெளிப்படுத்தினார்.

இதில் சம்பியன்களை தோற்கடித்து புதிய வீர, வீராங்கனைகள் வெற்றிகளைக் குவித்தபோதும் அது புதிய சாதனைகளாக மாறவில்லை. அதாவது சம்பியன் வீரர்களின் பின்னடைவே புதிய வீரர்களுக்கு வெற்றியை தந்திருக்கிறது. மற்றபடி புதிய வீரர்கள் புதுச் சாதனையை படைத்து சம்பியன்களை முறியடிக்கவில்லை என்பது ஆரோக்கியமான ஒன்றல்ல.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த வை.சி.எம் யோதசிங்க வெற்றி பெற்றார். அவர் 10.53 விநாடிகளில் போட்டியை முடித்திருந்தார். இந்தக் காலம் சர்வதேச மட்டத்திற்கு போதுமானதாக இல்லை.

என்றாலும் தற்போது சர்வதேச அளவில் பயிற்சி மற்றும் போட்டிகளில் பங்கேற்று வரும் யுபுன் அபேகோன் நம்பிக்கை தருபவராக இருந்து வருகிறார். பொதுநலவாயப் போட்டியில் வெண்கலப் பதக்கம் வென்ற அவர் அண்மையில் உலகத் தரவரிசையில் 20 ஆவது இடத்திற்கு முன்னேறி இருந்தார்.

இந்த ஆண்டில் அவர் பங்கேற்ற கடைசி போட்டிகளில் 2 தங்கப்பதக்கங்களை வென்றிருக்கிறார். கடந்த வாரம் நடந்த இத்தாலி கழக சம்பியன்சிப் போட்டியின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியை 10.35 விநாடிகளில் முடித்து தங்கம் வென்ற அவர் அஞ்சலோட்டப் போட்டியிலும் முதலிடம் பெற்றார்.

அவர் அடுத்த ஆண்டு இலங்கைக்கு பெரும் நம்பிக்கை தரும் வீரராக இருக்கிறார்.

தேசிய மெய்வல்லுநர் வீரர்களை தேர்வு செய்வதற்கான மேலும் இரு தேசிய மெய்வல்லுனர் தகுதிகாண் போட்டிகள் எதிர்வரும் பெப்ரவரி மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைபெறவிருக்கின்றன. இலங்கை சர்வதேச மட்டத்தில் பதக்க எதிர்பார்ப்பை அதிகரிக்க இந்தப் போட்டிகள் முக்கியமானதாக இருக்கும். இதற்கு புவிதரன் உட்பட வீரர்கள் தமது திறமையை மேலும் அதிகரிப்பது அவசியம்.

குறிப்பு

## மாறுகிறது கிரிக்கெட்

சர்வதேச கிரிக்கெட்டில் வரும் ஒக்டோபர் 1ஆம் திகதி தொடக்கம் சில முக்கிய மாற்றங்கள் நிகழவுள்ளன. அவுஸ்திரேலியாவில் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் டி20 உலகக் கிண்ணப் போட்டியில் இது அமுலுக்கு வரும். பிரதான மாற்றங்கள் பின்வருமாறு,

### எச்சிலுக்குத் தடை

கொரோனா பெருந்தொற்று காரணமாக 2020இல் பந்தை பளபளப்பூட்ட எச்சிலை பயன்படுத்துவதற்கு ஐ.சி.சி தடை விதித்தது. அந்தத் தடை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. தற்காலிகத் தடை இருந்த காலத்தில் வீரர்கள் வியர்வையையே இந்த வேலைக்கு பயன்படுத்தினார்கள். இனி அது நிரந்தரமாகிவிட்டது. பந்தை சுவிங் செய்ய ஒரு பக்கத்தை பளபளப்பூட்டுவது அவசியம்.

### புதிய துடுப்பாட்ட வீரருக்கு சவால்

துடுப்பாட்ட வீரர் ஒருவர் பிடியெடுத்து ஆட்டமிழக்கும்போது எதிர் முனையில் இருக்கும் துடுப்பாட்ட வீரர் மறுமுனை பக்கம் ஓடி இருந்தால் அவரே அடுத்த பந்துக்கு துடுப்பெடுத்தாடுவது வழக்கம். இனி இந்த வழக்கம் செல்லாது. புதிதாக துடுப்பெடுத்தாட வரும் வீரர் அடுத்த பந்துக்கு முகம்கொடுக்க வேண்டும்.




### 'மன்கட்' இனி கௌரவ குறைச்சலில்லை

துடுப்பெடுத்தாடாத முனையில் இருக்கும் வீரர் பந்து வீசும்போது கோட்டுக்கு வெளியே சென்றால் பந்துவீச்சாளர் ஆட்டமிழக்கச் செய்வது கிரிக்கெட்டில் ஒரு கௌரவக் குறைச்சலாக இருந்து வந்தது. சட்டப் புத்தகத்திலும் இதற்கு 'நியாயமற்ற ஆட்டம்' என்றே குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இப்போது அது வெறுமனே ரன் அவுட் என்று சாதாரணமாக்கப்பட்டிருக்கிறது. இதனால் மன்கட்டின் பெயருக்கு இருந்த இழுக்கு போய்விட்டது. 1948 சிட்னி டெஸ்டில் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் பில் பிரௌனை இந்திய பந்துவீச்சாளர் மன்கட் இந்த சர்ச்சைக்குரிய முறையில் ஆட்டமிழக்கச் செய்ததால் இந்த வழக்கத்தை மன்கட் என்று அழைக்கிறார்கள்.

### இனி சோம்பலுக்கு இடமில்லை

ஒருநாள் சர்வதேச போட்டி மற்றும் டெஸ்ட் போட்டிகளில் புதிய துடுப்பாட்ட வீரர் ஆடுகளம் வருவதற்கு மூன்று நிமிடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இப்போது அது ஒரு நிமிடத்தால் குறைக்கப்பட்டிருக்கிறது. அதுவே டி20இல் 90 விநாடிக்குள் ஆடுகளம் வந்து துடுப்பெடுத்தாட தயாராக வேண்டும்.

### குறும்பு செய்தால் தண்டனை

பந்துவீச்சாளர் பந்துவீச ஓடிவரும்போதும் களத்தடுப்பில் ஈடுபடும் வீரர்கள் சில நேரங்களில் எக்குத்தப்பான வேலைகளை செய்வதை சில சமயம் பார்க்க முடியும். இனி அவ்வாறான நேரத்தில் நியாயமற்ற நகர்வுகளில் ஈடுபட்டால் அந்த பந்து செல்லாமலாக்கப்படுவதோடு துடுப்பெடுத்தாடும் அணிக்கு ஐந்து தண்டனை ஓட்டங்கள் வழங்கப்படும்.

### ஆடுகளத்துக்குள் இருக்க வேண்டும்

துடுப்பெடுத்தாட வரையறுக்கப்பட்ட ஆடுகளத்திற்குள் (பிட்ச்) துடுப்பாட்ட வீரர் இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல் அடிக்கப்படும் பந்து செல்லாத பந்தாக அறிவிக்கப்படும். அதேபோன்று அவ்வாறு ஆடுகளத்திற்கு வெளியே வீசப்படும் பந்து நோ போலாக அறிவிக்கப்படுவதோடு, பிரீ ஹிட் வழங்கப்படும்.

### துடுப்பாட்ட வீரருக்கு பந்தை எறிய முடியாது

பந்துவீச்சாளர் பந்துவீச வரும்போது துடுப்பாட்ட வீரர் ஆடுகளத்தை (பிட்ச்) கடந்து முன்னோக்கி நகர்ந்து வருவதாகத் தெரிந்தால், பந்துவீச்சாளர் துடுப்பாட்ட வீரர் பக்கம் இருக்கும் விக்கெட்டை நோக்கி பந்தை எறிந்து ரன் அவுட் செய்யும் முறை ரத்து செய்யப்படுகிறது. இதுவரை அவ்வாறு செய்தால் அது 'டெட் போல்' என அறிவிக்கப்பட்டு வந்தது.

### நேரம் முக்கியம்

நிர்ணயிக்கப்பட்ட நேரத்துக்குள் பந்துவீச்சை நிறைவு செய்யவில்லை என்றால் 30 யார்ட் வட்டத்துக்கு வெளியே ஒரு களத்தடுப்பாளர் குறைவாக இருக்க வேண்டும் என்ற விதி டி20யில் மட்டும் இருந்த நிலையில், தற்போது அது ஒருநாள் போட்டிகளுக்கும் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# பன்நோக்கு பொழுதுபோக்கு நிலையத்தை அறிமுகம் செய்துள்ள SLT-MOBITEL

## சொத்துக்கள் பயன்பாட்டை முழுத்திறனுடன் பயன்படுத்துவதற்கான ஒரு படியாக அமைந்துள்ளது

ஊழியர்களை ஊக்குவித்து, ஈடுபாட்டைப் பேணும் நோக்குடன், தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLTMOBITEL, தனது பன்நோக்கு பொழுது போக்கு நிலையத்தை, கட்டான, பொத்தோடே பகுதியில் அண்மையில் நிறுவியுள்ளது.

SLTMOBITEL இன் உரிமையாண்மையின் கீழான பகுதியில் இந்த பொழுது போக்கு நிலையம் அமைந்துள்ளது. இரண்டு ஏக்கர் பகுதியில் அதிகாரிகளுக்கான தங்குமிடப்பகுதி மற்றும் 40 பேர்ச் பகுதியில் பரந்த விளையாட்டு மைதானம் ஆகிய இரு பகுதிகளை இந்த நிலையம் கொண்டுள்ளது. 1.75 ஏக்கர் பகுதியில் சிற்றூழியர்களுக்கான தங்குமிட வசதிகளையும் கொண்டுள்ளது. முன்னர் இந்தப் பகுதி, SLT அதிகாரிகளின் தங்குமிடமாக காணப்பட்டதுடன், தொற்றுப் பரவல்




காலப்பகுதியில் ஊழியர்களுக்கான கொவிட் சிகிச்சை நிலையமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இந்த நிலையத்தின் அறிமுக நிகழ்வில் குழும தவிசாளர் ரொஹான் பெர்னாண்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க (SLT), சந்திக விதாரென – பிரதம நிறைவேற்று அதிகாரி (மொபிடெல்) மற்றும் SLTMOBITEL இன் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

தரம் வாய்ந்த பொழுது போக்கு அம்சங்கள், அனுபவங்கள் மற்றும் வசதிகளை பெற்றுக் கொடுத்து, சமூகமாக வளர்ச்சியை எய்தும் நோக்கில் SLTMOBITEL, பன்நோக்கு பொழுது போக்கு நிலையத்தை ஊழியர்களுக்கு பரந்தளவு சேவைகளை உள்ளடக்கியதாக, எதிர்காலத்தில் மேலும் மேம்படுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

# "Smart Home" ஐ அறிமுகம் செய்து உங்கள் வாழ்க்கை தரத்தையே மேம்படுத்தும் Samsung



பண்டிகை மற்றும் திருவிழாக் காலங்கள் மிகவும் அண்மித்து விட்டன. இதன் நிமித்தம் Samsung அதன் சமீபத்திய நவீன உற்பத்தி சாதனங்களின் வரிசைகளை உங்களுக்கு வழங்குவதன் மூலம் உங்களுடைய இல்லத்தின் தரத்தினையே உயர்த்துகிறது. பண்டிகை மற்றும் திருவிழாக் காலங்களில் மட்டும் Samsung அதன் நவீன உற்பத்தி சாதனங்களால் உங்கள் இல்லத்தை அலங்கரிப்பது மட்டும் அல்லாமல் அதன் நவீன உற்பத்தி சாதனங்களானது உங்களுக்கு ஓர் புதிய வாழ்க்கை அனுபவத்தையே வழங்கப்போகிறது.

Samsung இன் சமீபத்திய நவீன உற்பத்தி சாதனங்கள் ஆவன நீங்கள் வசிக்கும் உங்கள் வீட்டை முன்னொருபோதும் இல்லாதவாறு மிகவும் Smart ஆக்கும்! அத்தோடு அவை உங்கள் வாழ்க்கைத் தரத்தினை அடுத்த கட்டத்திற்கே எடுத்துச்செல்லும்.

Neo QLED 8K Smart TV யூடாக கண்கவர் Premium cinematic காட்சி அனுபவம்

சக்திவாய்ந்த ultra slim frame pack உடனான நவீன புத்தாக்கங்களோடு கூடிய backlight dimming Quantum Matrix Technology மற்றும் உன்னத காட்சி அனுபவத்திற்காக Neo Quantum Processor Lite 8K ஆனது அதனுள் பொருத்தப்பட்டிருக்கிறது. கூறப்போனால், Samsung Neo QLED 8K Smart TV யின் காட்சி அனுபவமே தனிச்சிறப்பானது

பரந்த அளவிலான வர்ணங்களைக் கொண்ட மிகத் தெளிவான படங்களை உங்களுக்கு வழங்குவதோடு மட்டும் இன்றி மிகத் துல்லியமான படங்களையும் பரந்த அளவிலான வர்ண மாறுபாடுகள், wide viewing angle, autooptimized ஒலி மற்றும் அதன் 8K AI Upscaling technology யுடன். உங்களுக்குப் பிடித்த திரைப்படங்களை 8K தெளிவுத்திறன் மேம்பாட்டைக் கொண்டதாக வழங்குகிறது .

நவீன புத்தாக்கம் கொண்ட Curd Maestro மற்றும் SpaceMax'குளிர்சாதனப் பெட்டிகளுடன் எவ்வித சிரமமோ தொல்லையோ இல்லாத வாழ்க்கை

எமது இல்லங்களில் "Yoghurt" போன்ற உணவு வகைகளை எவ்வித சிரமங்களும் இன்றி store செய்து பாதுகாத்து வைப்பது என்பது மிகவும் அவசியமானதாகும்.

# ISO 45001:2018 சான்றிதழை பெற்றுள்ள DIMO






இலங்கையின் முன்னணியிலுள்ள பல்வகைப்படுத்தப்பட்ட கூட்டு நிறுவனமான DIMO சமீபத்தில் ISO 45001:2018 சான்றிதழைப் பெற்றுள்ளது. இந்த சான்றிதழானது, தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் உயர் தரத்தை உறுதிப்படுத்தியுள்ள DIMO நிறுவனத்தின் திறனை மேலும் உறுதிப்படுத்துவதோடு, அதற்கான அங்கீகாரமாகவும் விளங்குகிறது.

DIMO நிறுவனத்தின் தலைவரும் அதன் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரஞ்சித் பண்டிதகே, இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், "எமது வர்த்தகத்தின் மிகவும் பெறுமதியான சொத்தாகிய எமது பணியாளர்களின் உடல் மற்றும் மன நலனை மேம்படுத்துவதே எமது முதன்மையான நோக்கமாகும். தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ தொகுதியை (Occupational Health & Safety Management System OHSMS) செயற்படுத்துவது தொடர்பான எமது நிறுவனத்தின் மூலோபாய முடிவானது, பணியில் இருக்கும் எமது ஊழியர்களின் உடல் நலன் மற்றும் மன நலனை தொடர்ந்து மேம்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக எடுக்கப்பட்டதாகும். இது எமது ஊழியர்கள் பாதுகாப்பாகவும் ஆரோக்கியமாகவும் இருப்பதை உறுதிசெய்கிறது. நிறுவனம் தனது ஊழியர்கள் உள்ளிட்ட, தாம் சேவை செய்யும் சமூகங்களின் கனவுகள் மற்றும் அபிலாஷைகளை ஊக்குவிப்பதற்கு DIMO உறுதிபூண்டுள்ளது. இது ஒப்பிட முடியாத செயல்திறனுக்கு வழியேற்படுத்துகிறது. இந்தச் சான்றிதழானது, பணியாளர்கள் எப்பொழுதும் சிறப்பாக கவனிக்கப்படுவதை உறுதிசெய்வது தொடர்பான எமது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது." என்றார்.

ISO 45001:2018 சான்றிதழ் அங்கீகாரமானது, DIMO நிறுவனம் எதிர்கொள்ளக்கூடிய சாத்தியமான அபாயங்கள் மற்றும் அனர்த்தங்களை அடையாளம் காண உதவுவதோடு, அந்த அபாயங்கள் நிகழும் வாய்ப்புகளை நீக்கவும் உதவுகிறது. மேலும், அந்த அபாயங்கள் மற்றும் செயற்பாட்டு அபாயங்களின் சாத்தியமான விளைவுகள் மற்றும் தாக்கத்தை உயர்ந்த அளவில் குறைக்க நிறுவனத்திற்கு திறனை ஏற்படுத்துகிறது. இந்தச் சான்றிதழைப் பெறுவது, துறையில் முன்னணியில் இருக்கும் DIMO இன் சிறப்பை மேலும் உயர்த்துவதோடு, DIMO மீது வாடிக்கையாளர் நம்பிக்கையை மேலும் உருவாக்குகிறது.

DIMO நிறுவனத்தின் தர முகாமைத்துவ தொகுதியானது, 2001 முதல் ISO சான்றிதழைப் பெற்றுள்ளதுடன், தற்போது ISO 9001:2015 சான்றிதழையும் அது பெற்றுள்ளது. சூழல் முகாமைத்துவ தொகுதியானது முதன் முதலில் 2005 இல் ISO சான்றிதழை பெற்றது. தற்போது அது ISO 14001:2015 சான்றிதழைப் பெற்றுள்ளது.

OHSMS ஆனது 2021 இல் செயற்படுத்தப்பட்டதோடு, DIMO நிறுவனத்தின் பெறுமதியான ஊழியர்களுக்கு அது சிறந்த பணிச்சூழலையும் உறுதி செய்கிறது.

# நலிவுற்ற சமூகங்களுக்கு உதவுவதற்காக கைகோர்த்துள்ள Robin Hood Army




இலங்கையின் மிகவும் அபிமானம் பெற்ற உணவு மற்றும் பலசரக்குப் பொருட்களை விநியோகிக்கும் தளமான ஊபெர் ஈட்ஸ் மற்றும் முற்றிலும் தன்னார்வத் தொண்டு அடிப்படையில் இயங்கி வருகின்ற தன்னார்வத் தொண்டு அமைப்பான Robin Hood Army (RHA) இன் இலங்கை கிளை ஆகியன பொருளாதார நெருக்கடி காரணமாக நலிவுற்ற சமூகங்களுக்கு ஆதரவளிப்பதற்காக கைகோர்த்துள்ளன. கொழும்பு முழுவதும் மிகவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்படும் உலர் உணவு நன்கொடைகளை சேகரிக்க, அவர்கள் தமது தளம், பரிமாணம் மற்றும் அடைவு மட்டத்தைப் பயன்படுத்துவார்கள்.

செப்டெம்பர் முதல், வாடிக்கையாளர்கள் ஊபெர் ஈட்ஸ் செயலி மூலம் நேரடியாக நகரம் முழுவதும் உள்ள பிரத்தியேக RHA சேகரிப்பு மையங்களுக்கு ஆர்டர் செய்வதன் மூலம் உலர் உணவுப் பொதிகளை நன்கொடையாக வழங்கலாம். ஊபெர் ஈட்ஸ் தனது செயலியின் மூலமாக வழங்கப்படும் ஒவ்வொரு நன்கொடையின் மதிப்பிற்கும் ஈடாக சமமான அளவில் தனது பங்களிப்பையும் சேர்த்துக் கொள்ளும். 'Robins' என்று அழைக்கப்படும் RHA தன்னார்வத் தொண்டர்கள், இந்த நன்கொடைகளை ஒவ்வொரு நாளும் சேகரிப்பு மையங்களில் இருந்து சேகரித்து அவற்றை விநியோகிக்க உதவுவார்கள்.

ஊபெர் ஸ்ரீலங்காவின் பொது முகாமையாளரான பாவ்னா தத்லானி ஜெயவர்த்தன அவர்கள் இக்கூட்டாண்மை குறித்த தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொள்கையில், "இலங்கைக்கும் நாங்கள் சேவை செய்யும் சமூகங்களுக்கும் உதவுவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். இலங்கையில் Robin Hood Army உடன் இணைந்து கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைவதுடன், இந்த கடினமான நேரத்தில் மிகவும் தேவைப்படும் குடும்பங்களுக்கு ஆதரவளிக்க எண்ணியுள்ளோம். ஒரு பெருமைமிக்க இலங்கையர் என்ற வகையில், தாராள மனதுடன் நன்கொடை வழங்க முன்வருமாறு அனைவரையும் ஊக்குவிப்பதோடு, இந்த நெருக்கடியில் இருந்து நமது நாடு வலுவாக வெளிவருவதற்கு தங்களால் இயன்ற உதவிகளைச் செய்யுமாறும் நான் ஊக்குவிக்கிறேன்," என்று குறிப்பிட்டார்.

# டிஜிட்டல் இலங்கையை வடிவமைக்கும் கொமர்ஷல் வங்கியின் முயற்சியில் வெற்றி





கொமர்ஷல் வங்கி தனது சமூகப் பொறுப்புத் திட்டத்தின் பிரதான செயற்பாடான தகவல் தொழில்நுட்ப ஆய்வுகூடங்களின் அன்பளிப்புத் திட்டத்தின் கீழ் 250வது தகவல் தொழில்நுட்ப நிலையத்தை அண்மையில் மகரகமையில் உள்ள ஒரு பாடசாலைக்கு வழங்கி உள்ளது.

தேசிய அபிவிருத்தி இலக்குகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் டிஜிட்டல் அறிவை சமூகத்தின் அடிமட்டத்துக்கு கொண்டு செல்லும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தேசிய மட்டத்திலான இந்தத் திட்டத்தின் மூலம் கடைசியாகப் பயன் அடைந்துள்ள பாடசாலை 44 வருடங்கள் பழமையான ஸ்ரீ ஜயவர்தனபுர கல்வி வலயத்தின் கிழ் வரும் ஜனாதிபதி கல்லூரியாகும். இந்தப் பாடசாலை 3200 மாணவர்களைக் கொண்டுள்ளது.

முழு அளவிலான வசதிகள் மற்றும் தளபாடங்களுடன் கூடிய இந்த தகவல் தொழில்நுட்ப கூடம் கல்விப் பொதுத் தராதர உயர்தர பிரிவில் பொது தகவல் தொழில்நுட்பம்; மற்றும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் என்பனவற்றை ஒரு பாடமாக மேற்கொள்ளும் மாணவர்களுக்கும் அதேபோல் க.பொ.த சாதாரண தரத்தில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பாடமாகக் கற்கும் மாணவர்களுக்கும் பெரும் பயன் அளிப்பதாகும்.

கடைசியாக அன்பளிப்புச் செய்யப்பட்ட இந்த நிலையத்தின் மூலம் மொத்தமாக வழங்கப்பட்டுள்ள 250 தகவல் தொழில்நுட்ப கூடங்கள் வழியாக நன்மை அடைந்துள்ள மாணவர்களின் எண்ணிக்கை சுமார் 2,30,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்த நிலையங்களைப் பராமரிக்கவும், தரம் உயர்த்தவும் தேவைகள் ஏற்படும் போது இந்த நிலையங்களுக்கு அருகில் உள்ள சம்பந்தப்பட்ட தனது கிளைகள் ஊடாக அவற்றை செய்து வருகின்றது.

தொடர்ந்து வரும் மாணவ குழுக்களுக்கு நன்மைகள் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் இவை கையாளப்பட்டு வருகின்றன. இந்த 250வது மைல்கல் தகவல் தொழில்நுட்ப நிலையத்தை கொமர்ஷல் வங்கியின் தலைவர் பேராசிரியர் ஆனந்த ஜயவர்தன திறந்து வைத்தார்.

# செலான் வங்கியின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர

2022 செப்டெம்பர் 1ஆம் திகதி முதல் செலான் வங்யின் பிரதி பிரதம நிறைவேற்று அதிகாரியாக ரமேஷ் ஜயசேகர நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்துக்கு முன்னதாக பிரதம செயற்பாட்டு அதிகாரியாக செயலாற்றியிருந்த ஜயசேகர, 2021 நவம்பர் மாதம் முதல் செலான் டிவலப்மன்ட்ஸ் பிஎல்சியின் நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராகவும் திகழ்கின்றார்.

2011 ஆம் ஆண்டு பிரதம நிதி அதிகாரியாக செலான் வங்கியில் இணைந்து கொண்ட ஜயசேகர, 2016 ஆம் ஆண்டில், பிரதம இடர் அதிகாரி எனும் பொறுப்பை ஏற்றதுடன், 2018 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டாண்மை வங்கியியல்



– பிரதி பொது முகாமையாளராக பணியாற்றியிருந்தார். 2020 ஜனவரி மாதம், இவர் சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக பதவி உயர்வு செய்யப்பட்டு, 2021 ஆம் ஆண்டில், பிரதம செயற்பாட்டு அதிகாரி எனும் நிலைக்கு உயர்ந்திருந்தார்.

செலான் வங்கியுடன் இணைந்து கொள்ளும் முன்னதாக, பிரான்ஸ் வங்கியியல் முன்னோடியான BNP Paribas மத்திய கிழக்கு பிராந்தியத்தின் (பஹ்ரெய்ன், சவுதி அரேபியா, குவைட், கட்டார், துபாய், அபுதாபி மற்றும் சைப்பிரஸ்) பிரதி பிராந்திய நிதிக் கட்டுப்பாட்டாளராக பஹ்ரெய்னிலிருந்து இயங்கியிருந்தார். இலங்கை HSBC இல் இவர் நிதி மற்றும் திட்டமிடல் வதிவிட முகாமையாளராகவும், KPMG ஸ்ரீ லங்காவில் கணக்காய்வு முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார். உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் வங்கியியல், தந்திரோபாயத் திட்டமிடல், நிதி முகாமைத்துவம், இடர் மற்றும் கணக்காய்வு போன்றவற்றில் 20 வருடங்களுக்கு மேலான அனுபவத்தை இவர் கொண்டுள்ளார்.

# டொலர் மூலமான கொடுப்பனவை ஏற்றுக் கொள்ளும் லிற்ரோ

உள்நாட்டின் முன்னணி எரிவாயு வழங்குநரான லிற்ரோ கேஸ் லங்கா லிமிட்டட், வெளிநாட்டில் வசிப்பவர்கள் தமது உறவுகளுக்காக இங்கு எரிவாயுவை ஓடர் செய்வதற்கும், அதற்கான கொடுப்பனவை அமெரிக்க டொலரில் செலுத்துவதற்கும் ஏற்ற வகையிலும் தமது வீட்டு விநியோக செயலியில் புதிய அம்சத்தை அண்மையில் அறிமுகப்படுத்தியது. ஏற்கனவே வழங்கிவரும் தனது சேவைக்கு மேலதிகமாக இந்தப் புதிய அம்சம் இணைக்கப்பட்டிருப்பதுடன், இலங்கை எதிர்நோக்கியுள்ள டொலர் பிரச்சினைக்கு ஆற்றல்மிக்க தீர்வாகவும் இது அமையும்.

லிற்ரோ கேஸ் லங்கா நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், இந்தப் புதிய அம்சம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "உள்நாட்டில் உள்ள எரிவாயு சந்தையில் 80 சதவிகித பங்கைக் கொண்டிருக்கும் முன்னணி எரிவாயு வழங்குனர் என்ற ரீதியில் புதிய வழிகளின் ஊடாக எமது வாடிக்கையாளர்களின் சிறந்த அனுபவத்தை மென்மேலும் முன்னேற்றுவதில் தொடர்ச்சியாகக் கவனம் செலுத்தி வருகின்றோம்.

இதற்கமைய வெளிநாட்டில் உள்ளவர்கள் தமது பாசமான உறவுகளுக்குத் தேவையான எரிபொருளை வீட்டிற்கே விநியோகத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் ஓடர்களை வழங்க முடியும் என்பதுடன், நாட்டின் பொருளாதார மீட்சிக்கு அதிகம் தேவைப்படும் அமெரிக்க டொலர்களின் மூலம் இதற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் முடியும்" என்றார்.

"விஸ்தரிக்கப்பட்டுள்ள எமது விநியோக வலையமைப்பானது குறுகிய காலப் பகுதியில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளை உறுதிப்படுத்துகிறது.

இது வாடிக்கையாளர்கள் சிலிண்டர்களை எடுத்துக் கொண்டு பயணிப்பதால் ஏற்படுகின்ற செலவீனம் மற்றும் சிரமங்களைக் குறைத்து வாடிக்கையாளர்களுக்கு சௌகரியத்தை அளிக்கிறது" என்றார்.

நாட்டின் பொருளாதாரம் மூழ்கிச்செல்லாமல் இருப்பதற்குப் பங்காற்றிவரும் வெளிநாட்டவர்கள் / வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களைப் பாராட்டும் வகையில் இந்தப் புதிய அம்சம் அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதாகத் தலைவர் மேலும் தெரிவித்தார். வீட்டில் உள்ள தமது பாசமான உறவுகளின் வாழ்க்கையை எளிதாக்குவதற்காக மேற்கொண்டுவரும் அவர்களின் கடுமையான உழைப்பை மதிப்பதற்கான சிறிய தொரு அடையாளமாக இது அமையும் என்றார்.






## மேஷம்

உங்கள் ராசிக்கு 2 ,7 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன் புரட்டாசி 8ம் திகதி (25/09/2022) கன்னி ராசிக்கு சென்று அங்கு நீசம் பெற்றுள்ளார். சுக்ரன் வலுவிழப்பதால் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாது. கொள்கைப் பிடிப்போடு செயல்பட முடியாது. இந்த காலகட்டத்தில் விழிப்புணர்வு தேவை. உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் ஆதரவு குறைவாக இருக்கும். முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம். இருப்பினும் நீசம் பெற்ற சுக்கிரன் மீது மீனத்தில் வக்கிரம் பெற்று சஞ்சரிக்கும் குருவின் பார்வை பதிகிறது. எனவே கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடி விடும். குருவிற்கான பரிகாரங்களை செய்யுங்கள். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 30. அதிர்ஷ்ட நிறம் சிவப்பு.

## ரிஷபம்

புரட்டாசி 8ம் திகதி (25/09/2022)கன்னி ராசிக்கு செல்லும் சுக்கிரன் அங்கு நீசம் பெற்றுள்ளார். உங்கள் ராசிநாதனும் 6க்கு அதிபதியுமான சுக்கிரன் நீசம் பெறுவதால் ஆரோக்கிய குறைபாடு ஏற்படலாம். ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. தொழிலில் மந்தநிலை ஏற்படும். பங்குதாரர்கள் விலக நேரிடலாம். இல்லத்தில் இதுவரை தடைப்பட்டுவந்த சுபகாரியங்கள் நடைபெறும். உத்தியோகத்தில் ஒரு சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 30, அதிர்ஷ்ட நிறம் பச்சை.

## மிதுனம்

உங்கள் ராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன் அவர் புரட்டாசி 8ம் திகதி ( 25/09/2022)கன்னி ராசிக்கு பெயர்ச்சியாகி அங்கு நீசம் பெற்றுள்ளார். அது அவ்வளவு நல்லதல்ல. பூர்வபுண்ணிய ஸ்தானாதிபதி நீசம் பெறுவதால் காரியங்களில் தடைகள் வரலாம். நல்ல வாய்ப்புகள் வந்தாலும் அதை உபயோகித்துக் கொள்ள இயலாது. ஆதாயம் கிடைக்காது. பாகப்பிரிவினையில் இழுபறி நிலை ஏற்படும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 26, 27, அதிர்ஷ்ட நிறம் இளஞ்சிவப்பு .

## கடகம்

உங்கள் ராசிக்கு 4 ,11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன் புரட்டாசி 8ம் திகதி (25/09/2022) கன்னி ராசிக்கு சென்று அங்கு நீசம் பெற்றுள்ளார். இதனால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். பிரியமானவர்கள் உடன் இருந்த நட்பு பகைக்கலாம். வாகனங்களில் செல்லும் பொழுது மிகுந்த கவனம் தேவை. கண்டச் சனியின் ஆதிக்கம் இருப்பதாலும் சுக ஸ்தானத்தில் சுக்கிரன் நீசம் வருவதாலும் குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல் நலக் கோளாறு ஏற்படும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 29, 30 அதிர்ஷ்ட நிறம் நீலம் .

## சிம்மம்

புரட்டாசி 8ம் திகதி( 25/09/2022) கன்னி ராசிக்கு செல்லும் சுக்கிரன் அங்கு நீசம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் நீச்சம் பெறுவதால் ஒரு சில காரியங்களில் தாமதம் ஏற்படலாம். பிரச்சினைகளும் உடன்பிறப்புகளின் ஆதரவு குறையும். தொழில் செய்பவர்கள் யாரையும் நம்பி செயற்பட முடியாது. ஜீவன ஸ்தானத்தில் சனி வக்ரம் பெறுகிறார். எனவே இக்காலத்தில் உங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேற திசா புத்தி கேற்ற தெய்வங்களை தேர்ந்தெடுத்து வழிபடுங்கள். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 27, 30 அதிர்ஷ்ட நிறம் ஆரஞ்சு.

## கன்னி

புரட்டாசி 8ம் திகதி ( 25/09/2022) கன்னி ராசிக்கு வரும் சுக்கிரன் அங்கு நீசம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 2, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் நீசம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படும். கொடுக்கல் வாங்கல்கள் திருப்தியாக இருக்காது. பெற்றோர் வழியில் பிரச்சினைகள் ஏற்பட்டு அகலும். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்ள முன்வருவீர்கள். ஆனாலும் அது பாதியிலேயே நிற்கலாம். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 29, 30, அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்.

## துலாம்

புரட்டாசி 8ம் திகதி (25/09/2022) கன்னி ராசிக்கு செல்லும் சுக்கிரன் அங்கு நீசம் பெற்றுள்ளார். உங்கள் ராசிநாதன் நீசம் பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களின் ஒத்துழைப்பு குறையும். வீடு மாற்றங்களும் விரும்பத்தகாத விதத்தில் அமையும். அதே நேரத்தில் அட்டமாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் ஒரு சில காரியங்கள் எதிர்பாராத வகையில் நல்லவிதமாக முடியும். எதிர்மறை சிந்தனைகளை தவிர்ப்பது நல்லது. அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 30, அதிர்ஷ்ட நிறம் சாம்பல்.

## விருச்சிகம்

புரட்டாசி 8ம் திகதி (25/09/2022) கன்னி ராசிக்கு செல்லும் சுக்கிரன் அங்கு நீசம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 7, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். 12க்கு அதிபதி நீசம் பெறுவது நன்மைதான். விரயாதிபதி நீசம் பெறுவதால் விரயங்கள் குறையும். வீடு மாற்ற, நாடு மாற்ற அறிகுறி தென்படும். மேலதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வர். அதேநேரத்தில் சப்தமாதிபதியாகவும் சுக்ரன் விளங்குவதால் குடும்பத்திலுள்ளவர்களை அனுசரித்து செல்வது நல்லது. அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 26, 27, அதிர்ஷ்ட நிறம் இளம்சிவப்பு.

## தனுசு

புரட்டாசி 8ம் திகதி (25/09/2022)கன்னி ராசிக்கு செல்லும் சுக்கிரன் அங்கு நீசம் பெற்றுள்ளார் . உங்கள் ராசிநாதன் குருவிற்கு பகை கிரகமாக விளங்கும் சுக்கிரன் நீசம் பெறுவது யோகம்தான். எதிர்பாராத நல்ல திருப்பங்களை சந்திப்பீர்கள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். அக்கறை செலுத்தாத காரியங்களில் கூட ஆதாயம் உண்டு. பெண்வழி பிரச்சினைகள் அகலும். உத்தியோக மாற்றம் செய்யலாமா என்று சிந்தித்தவர்களுக்கு புதிய நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 29 30, அதிர்ஷ்ட நிறம் கருநீலம்.

## மகரம்

புரட்டாசி 8ம் திகதி (25/09/2022)கன்னி ராசிக்கு செல்லும் சுக்கிரன் அங்கு நீசம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்கிரன். அவர் மீது வக்கிர குருவின் பார்வை பதிவதால் இக்காலத்தில் சில நற் பலன்களும் நடைபெறும். திடீர் திடீரென வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். குடும்ப முன்னேற்றம் திருப்தி தரும். புதிய தொழில் தொடங்க முற்படுவீர்கள். பூர்வீக சொத்துக்களை பங்கீடு செய்வதில் குழப்பங்கள் ஏற்படும். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 26 27, அதிர்ஷ்ட நிறம் நீலம்.

## கும்பம்

புரட்டாசி 8ம் திகதி( 25/09/2022) கன்னி ராசிக்கு செல்லும் சுக்கிரன் அங்கு நீசம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் நீசம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். துணிவும் தன்னம்பிக்கையும் குறையும். விட்டுக்கொடுத்து செல்வது, இட மாற்றங்களை மேற்கொள்வதன் மூலம் நல்ல பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 29 30, அதிர்ஷ்ட நிறம் மஞ்சள்.

## மீனம்

புரட்டாசி 8ம் திகதி( 25/09/2022) கன்னி ராசிக்கு செல்லும் சுக்ரன் அங்கு நீசம் பெற்றுள்ளார். உங்கள் ராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்கிரன் நீசம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். உங்கள் ராசிநாதன் குருவிற்கு பகை கிரகமான சுக்ரன். எனவே எதிர்பாராத சில காரியங்கள் துரிதமாக நடைபெறும். உத்தியோகத்தில் கேட்ட இடத்திற்கு மாறுதல் கிடைக்கும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். அதிர்ஷ்ட திகதி செப்டம்பர் 30, அதிர்ஷ்ட நிறம் பச்சை.

# என். செல்வராஜாவின் 'நமக்கென்றொரு பெட்டகமும்' நூலகச் சிந்தனைகளும்

செல்வராஜா பெரும்பாலானவர்களுக்கு அறிமுகமானது போல எனக்கும் நூல் தேட்டம் செல்வராஜா என்றே அறிமுகமானவர். புலம்பெயர்ந்து கனடாவிற்கு வந்து நான் புத்தக வாசிப்பிற்கு மீண்டும் திரும்பிக்கொண்டிருந்த காலப்பகுதியில் இலங்கையில் இருந்து வெளிவந்துகொண்டிருக்கும் புத்தகங்களைப் பற்றி அறிந்துகொள்வது என்பதே மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. இப்பொழுது ரொரன்றோவில் தமிழ்ப் புத்தகக் கடையென்று ஒன்றுதான் இருக்கின்றது. ஆனால் அந்தக் காலப்பகுதியில் 5 புத்தகக் கடைகள் இருந்தன. இவற்றைத் தவிர தனிப்பட்ட முயற்சிகளால் புத்தகங்களை எடுத்து விற்பவர்களும் இருந்தனர். ஆனால், அப்படி இருந்தபோதும் இலங்கையில் இருந்து வெளிவருகின்ற புத்தகங்களைப் பெற்றுக்கொள்வது என்பது கடினமான ஒன்றாகவே இருந்தது.

நான் கனடாவிற்குப் புலம்பெயர்ந்து பன்னிரண்டு வருடங்களின் பின்னரே முதல்முறையாக இலங்கைக்குப் போனபோதுதான் அங்கே எத்தனை புத்தகங்கள் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கின்றன என்பதைப் பார்க்கமுடிந்தது.

அப்படி இருக்கின்றபோது இலங்கையில் இருந்து வெளிவந்த, வெளிவருகின்ற புத்தகங்களைப் பற்றிய அறிமுகத்தைப் பதிவாகவும் சாட்சியாகவும் வெளிப்படுத்திக்கொண்டிருந்தவை பெரியளவிலான நூல் தொகுதிகளாக வெளிவந்துகொண்டிருந்த நூல் தேட்டம் தொகுப்புகள். பின்னர் வலைப்பதிவுக் காலங்களில் வலைப்பதிவுகளூடாகவும் குழுமங்களூடாகவும் பல அறிமுகங்களும் உரையாடல்களும் நிகழ்ந்தன என்றாலும் முறையான பதிவுகளைச் செய்தது நூல்தேட்டமே!

நூல்தேட்டம் போன்ற வேலைத்திட்டங்கள் அமைப்பு ரீதியாக / நிறுவன ரீதியாக செய்யப்படவேண்டிய பெரிய வேலைத் திட்டங்கள். அப்படியான வேலைத்திட்டங்களை தனி நபர்கள் செய்வதை நான் பொதுவாக ஆரோக்கியமான ஒன்றாகப் பார்ப்பதில்லை. ஆனால் நூல் தேட்டம் என்பது செல்வராஜா என்கிற ஒருவரால் முன்னெடுக்கப்பட்ட மிகப் பிரமாண்டமான வேலைத்திட்டம். இங்கே நான் பிரமாண்டம் என்ற சொல்லை மிகவும் பிரக்ஞைபூர்வமாகவே சொல்கின்றேன், ஏனென்றால் பிரமாண்டத்தை பிரமாண்டம் என்றுதான் சொல்லமுடியும்.

அதன் 15 தொகுதிகளில் கிட்டத்தட்ட 15000 ஈழத்துநூல்கள் பட்டியலாக்கம் செய்யப்பட்டிருப்பதுடன் அவை குறித்த சுருக்கமான அறிமுகங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. நூல்தோட்டம் தொகுதிகளை எனது வீட்டு நூலகத்தில் சேர்க்கவேண்டும் என்கிற ஆர்வத்தில் ஒருமுறை செல்வராஜாவைத் தொடர்புகொண்டு நூல்தேட்டம் தொகுதிகளை எப்படி கனடாவில் பெற்றுக்கொள்வது என்று கேட்டிருந்தேன். அதற்கு அவர் சொன்னார் "ராசா, அதை நீங்கள் கனடாவுக்கு எடுக்கிறதென்றால் கனகாசு முடியும், நான் எல்லாத் தொகுதிகளையும் ஒன்லைனில் கொடுத்திருக்கிறேன் தானே, நீங்கள் அங்கேயே பார்த்துக்கொள்ளுங்கோ" என்று. இதை ஒரு முக்கியமான பண்பாக நான் பார்க்கின்றேன். புலமைச் சொத்து அனைவரிடமும், குறிப்பாக அந்தத் துறைகள் குறித்துச் செயற்படுபவர்களிடம் போய்ச்சேரவேண்டும் என்கிற அக்கறையாகவே அவர் எனக்குச் சொன்ன பதிலினை நான் பார்க்கின்றேன். அத்துடன், அந்தத் தொகுதிகளை வாங்க விரும்புவோருக்கு இருக்கக் கூடிய பொருளாதாரச் சுமைகள், வசதியீனங்கள் பற்றியும் அக்கறைகொண்டதோர் பண்பாக அதனை நான் வியக்கின்றேன்.

நூல்தேட்டம் செல்வராஜா என்று அறியப்பட்டு வந்த செல்வராஜாவைச் சுட்டுவதற்கான மிகப் பொருத்தமான சொல்லாக நூலியலாளர் என்பதையும் நூலியலாளர் என்ற சொல்லால் சுட்டப்படக்கூடிய பொருத்தமானவராக செல்வராஜாவையும் நான் இங்கே கூறிக்கொள்கின்றேன்.

உண்மையில் இதுகுறித்து மிக விரிவாக



எடுத்துரைத்தவர் நண்பர் சத்தியதேவன், அவரது கூர்மையான அந்தக் கணிப்பிற்கும் நன்றி கூறிக்கொள்கின்றேன். நூலகராகவும், ஈவ்லின் ரட்ணம் நூலகத்திற்கான உந்துசக்தியாக அமைந்த அவரது பங்களிப்புகள், நூலகவியல், நூலகங்கள் என்கிற கருத்தாக்கம், பட்டியலாக்கம் ஆகியவற்றிற்கான அவரது பங்களிப்புகளுக்கும் மேலாக பதிப்பாக்கம், நூலொன்றினைப் பதிப்பித்தல் தொடர்பால தொழினுட்ப ரீதியிலான வழிகாட்டல்கள், உள்ளூரில் புத்தகம் ஒன்றைப் பதிப்பிப்பதிலும் சந்தைப்படுத்துவதிலும் விற்பதிலும் இருக்கக் கூடிய சவால்கள், அவற்றை எதிர்கொள்வதற்கான பொறிமுறைகள், இந்திய நூல்களால் ஈழத்துப் பதிப்புச்சூழல் எப்படி நசுக்கப்படுகின்றது, இவற்றுக்கு இடையில் நிகழக்கூடிய அசமத்துவம், வாசிப்பினைப் பரவலாக்கல், கிராமிய நூலகங்கள் என்பதை ஒரு செயற்பாடாக்குதல் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து தொடர்ந்து எழுதியும் உரையாடியும் செயற்பட்டும் வருகின்ற செல்வராஜா நூலியலாளர் என்கிற சுட்டுதலுக்கு மிகப் பொருத்தமானவரே.

நமக்கென்றொரு பெட்டகம் : தமிழ்த்தேசிய நூலகச் சிந்தனைகள் என்கிற இந்தப் புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு கட்டுரைகளும் பேசுகின்ற விடயங்களைத் தனித்தனியே குறிப்பிடுவதைத் தவிர்த்து இந்தப் புத்தகத்தில் உள்ள கருத்தாக்கங்கள் குறித்து நான் கவனப்படுத்துகின்றேன்.

இந்நூல் ஆவணக்காப்பகம், நூலகம் ஆகிய இரண்டினதும் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதுடன் இவை இரண்டிற்குமான வேறுபாடுகளையும் எடுத்துரைக்கின்றது. ஒரு சமூகத்தின் வரலாற்றையும் பதிவுகளையும் சமகாலத்திலும் எதிர்காலத்திலும் வரக்கூடிய ஆய்வுத்தேவைகளுக்காக பேணிப் பாதுகாத்து வழங்கக்கூடிய இடமாக ஆவணக்காப்பகத்தை செல்வராஜா குறிப்பிடுகிறார். அதேநேரம் நூலகம் என்பது அனைத்துத் தரப்பினரது வாசிப்புத் தேவைகளையும் பூர்த்திசெய்யக்கூடியதாகவும் இலகுவில் அணுகக் கூடியதாகவும் இருக்கவேண்டும் என்பதை செல்வராஜா வலியுறுத்துகின்றார். பொதுவாக நாம் நூலகம் என்று யோசிக்கும்போது அங்கே இருக்கக் கூடிய கனமான விடயங்களை உள்ளடக்கிய "தீவிர இலக்கியம்" என்று சொல்லப்படக்கூடிய நூல்களையே நினைவில்கொள்வோம். ஆனால் செல்வராஜா நூலகங்கள் குறித்துப் பேசும்போதெல்லாம் சிறுவர் நூலகங்கள் குறித்தும் நூலகங்களை சிறுவர்களுக்கு அணுக்கமாக்குவது குறித்தும் விசேட அக்கறையுடன் இருப்பதை அவரது கட்டுரைகளூடாகத் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கின்றது. சிறுவர் நூலகங்கள் குறித்தும் அங்கே எப்படியான புத்தகங்கள் இருக்கவேண்டும் என்பது குறித்தும் சிறுவர் நூலகங்கள் எப்படி ஒழுங்கமைக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது குறித்தும் அந்தப் புத்தகங்களை சிறுவர்களிடமும் சிறுவர்களைப் புத்தகங்களிடமும் சேர்த்து வைப்பதற்கும் என்னவெல்லாம் செய்யவேண்டும் என்பது குறித்தும் அவர் கவனம் செலுத்துகின்றார்.

இந்தப் புத்தகத்தில் தீவகப் பிராந்திய நூலகம், புங்குடுதீவுப் பிராந்திய நூலகம் ஆகிய இரண்டு கட்டுரைகள் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இந்த நூல் வெளியீட்டிற்குப் பிற்பட்ட காலங்களிலும் மட்டக்களப்பிலிருந்து வெளிவந்துகொண்டிருக்கின்ற அரங்கம் என்கிற பத்திரிகையில் மட்டக்களப்பில் உருவாகிக்கொண்டிருக்கின்ற ஒரு நூலகத்தின் உள்ளடக்கம் குறித்தும் பொது நூலகங்களின் தன்மை குறித்தும் அவர் எழுதிக்கொண்டிருக்கின்ற கட்டுரைத் தொடர் மிகப்பெறுமதியானது. கிராமங்களில் நூலகங்கள் குறித்து அக்கறைப்படுகின்ற, விதை குழுமத்தினூடாக புத்தகக் குடில் போன்ற சிறு நூலக அமைப்புத் திட்டங்களை முன்னெடுத்துவருகின்ற எமக்கு எழக்கூடிய பல குழப்பங்களுக்கும் கேள்விகளுக்கும் தொழினுட்பரீதியில் பதிலளிக்கக்கூடியதாக இந்தத் தொடர் அமைகின்றது.

ஒரு லண்டன் கடிதம் என்கிற கட்டுரை கடிதவடிவில் மிகமுக்கியமான ஒருவிடயத்தைப் பேசுகின்றது. புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற முதல்தலைமுறை தமிழர்கள் புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற தமக்கு அடுத்த தலைமுறையினருடன் கொண்டிருக்கக் கூடிய உறவு குறித்தும் அவர்களுடன் கொண்டிருக்கவேண்டிய ஊடாட்டம் குறித்தும் இந்தக் கட்டுரையில் குறிப்பிடப்படுகின்றது. அதேநேரம், புலம்பெயர் நாடுகளில் இருப்போர் தாயகத்தில் இருப்போரின் நாளாந்த நடவடிக்கைகளையும் அரசியல் நடவடிக்கைகளையும் Remote Politics செய்வது குறித்து இந்தக் கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் மிகமுக்கியமானவை. இந்தப் புத்தகத்தின் சமர்ப்பணத்தை இங்கே ஒருமுறை வாசித்துக்காட்டுகின்றேன்,

"ஈழத்தமிழர்களின் அறிவியல் முதுசொத்தை தலைமுறை தலைமுறையாகப் பெட்டகங்களில் பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கையளித்து வந்த எமது மூதாதையினருக்கும் பெட்டகங்களையும் பெட்டகக் கலாசாரத்தையும் தொலைத்துநிற்கும் எமது தலைமுறையினரின் முதுசொத்தை அடுத்த தலைமுறைக்கு கடத்த வழிதேடி அலையும் இளைய தலைமுறையினருக்கும் இந்நூல் சமர்ப்பணம்"




இந்தச் சமர்ப்பணத்தின் விளக்கமாக அமைந்ததே ஒரு லண்டன் கடிதம் என்கிற கடித வடிவிலான கட்டுரை.

இந்நூலில் குறிப்பிடப்படுகின்ற தேசிய நூலகம் என்கிற கருத்தாக்கம் மிக முக்கியமான ஒன்று. தேசிய நூலகம் என்பது குறித்த தேசியத்தின் வரலாறு, பண்பாடு, அதன் நிலவியல், ஆளுமைகள், அந்த ஆளுமைகள் குறித்த பதிவுகள் ஆகியவற்றை எல்லாம் திரட்டிவைத்திருக்கின்ற ஓரிடமாக இருக்கவேண்டும் என்பதை செல்வராஜா வலியுறுத்துகின்றார்.

செல்வராஜா எழுதிய பல்வேறு கட்டுரைகளில் இலங்கையின் தேசிய நூலகங்கள் என்பவற்றுள் முறையாக உள்ளடக்கப்பட்டாத / வெளித்தள்ளப்படுபவர்களாக வடக்கு கிழக்கு / தமிழர்கள் சார்ந்த பதிவுகள் இருப்பதை அவர் ஆதாரபூர்வமாகவும் புள்ளிவிபரங்களூடாகவும் முன்வைத்து வருகின்றார்.

அப்படி வெளித்தள்ளப்பட்டு / உள்வாங்கப்படாதவர்கள் இலங்கை தேசியம் அல்லாத இன்னொரு தேசியர்களாக தம்மை உணர்கின்றனர் என்கிற விடயத்தையும் செல்வராஜாவின் எழுத்துகளினூடாக உணர முடிகின்றது. தமிழ், மலையக, முஸ்லிம் தேசிய இனங்களை இந்தக் கண்ணோட்டத்தில் அரசியல் ரீதியாகவும் புரிந்துகொள்ள முடிகின்றது. இவ்வாறு நூலகங்கள் எவற்றைத் தம்முள் கொண்டிருக்கவேண்டும் என்று பேசுகின்றபோது நூலகமொன்றிற்கு என்று பெரியதோர் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டதாகவும் அதற்குப் புத்தகங்கள் தேவையென்றும் வந்த அறிவிப்பொன்றைக் குறிப்பிடும் செல்வராஜா, பல்வேறு தனிநபர்களாலும் அமைப்புக்களாலும் ஏற்கனவே திரட்டப்பட்ட, சேகரித்து வைக்கப்பட்ட, ஆவணப்படுத்தி வைக்கப்பட்ட புத்தகங்களை ஒன்றிணைத்தே தேசிய நூலகங்களை உருவாக்கவேண்டும் என்று குறிப்பிடுகின்றார். நூலகம் என்பது கட்டப்பட்ட கட்டடத்தினை புத்தகங்களால் நிறைத்துவைப்பது அல்ல என்பதை செல்வராஜா ஆணித்தரமாக எடுத்தியம்புகின்றார்.

யாழ்ப்பாண பொதுசன நூலகம் உருவாக்கப்பட்டபோது அது பல்வேறு தனிநபர்களின் சேகரங்களினையும் ஒன்றிணைத்தே உருவாக்கப்பட்டது தொடர்பான விடயங்களை கமால்தீன், க.சி. குலரத்தினம் ஆகியோர் யாழ்ப்பாண பொதுசன நூலகம் பற்றி எழுதிய நூல்களில் இருந்து செல்வராஜா சுட்டிக்காட்டுகின்றார்.

நூலகங்களை உருவாக்குதல், ஆவணக் காப்பகங்களை உருவாக்குதல் என்பவற்றைப் போன்றே புத்தகச் சந்தைகள் குறித்து செல்வராஜா குறிப்பிடுகின்ற விடயங்களை இந்த இடத்தில் பேசுவது முக்கியமானது என்றே கருதுகின்றேன்.

இந்தியாவில் இருந்து வெளிவருகின்ற புத்தகங்களை குறிப்பாக அரசியல் நீக்கம் செய்யப்பட்ட அல்லது வலதுசாரி அரசியலைப் பேசுகின்ற புத்தகங்களைப் பெற்றுக்கொள்வது கனடாவில் இலகுவானதாகவே இருக்கின்றது.

ஆனந்த விகடன், குமுதம் போன்றவற்றை பெரும்பாலான பலசரக்குக் கடைகளில் கூடப் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவே இருக்கின்றது. அண்மைக்காலமாக பகவத் கீதையையும் பலசரக்குக் கடைகளில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் "எங்கட புத்தகங்களை"ப் பெற்றுக்கொள்வது என்பது சிரமமானதாகவே இருக்கின்றது.

இங்கே நான் "எங்கட புத்தகங்கள்" என்று சொல்வதை தெளிவாக வரையறை செய்ய விரும்புகின்றேன். **(தொடரும்)**

அருண்மொழிவர்மன்...

# பெருந்தோட்ட அமைச்சு
# இலங்கை தேயிலை சபை
## தேயிலை ஆணையாளர் பிரிவு

## அறிவித்தல்

**1975 இல 14 இலங்கை தேயிலைச் சபைச் சட்டம் மற்றும் 1986 இலங்கை தேயிலை சபை (தேயிலை பொதியாளர்களை பதிவு செய்தல்) ஆணையின் படி 2023 ஆம் ஆண்டிற்கான**

## உள்ளூர் நுகர்வுக்கான தேயிலை பொதியாளர்களை பதிவு செய்தல் / பதிவுகளை புதுப்பித்தல்

உள்ளூர் நுகர்வுக்காக சந்தையில் விற்பனையில் தேயிலையின் தரத்தை சிறந்த முறையில் பேணும் நோக்கில், உள்ளூர் மட்டத்தில் தேயிலை வியாபாரத்தை மேற்கொள்ளும் அனைத்து பொதியாளர்களையும் **2023 ஆம் ஆண்டிற்காக** பதிவு செய்தல் மற்றும் பதிவுகளை மீள்புதுப்பித்தலுக்காக இலங்கை தேயிலை சபை செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் படி **1986 ஜனவரி மாதம் 28 திகதி** இல 386/13, வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் **2021 ஒக்டோபர் 06** ஆம் திகதி இல 2248/36 அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மேல் குறிப்பிடப்பட்ட ஆணைகளின் படி அனைத்து உள்ளூர் தேயிலை பொதியாளர்களும் இலங்கை தேயிலைச்சபையில் பதிவு செய்தல் / மீள்புதுப்பித்தல் செய்ய வேண்டும் என இதன் மூலம் அறியத்தருகின்றோம். உள்ளூர் தேயிலை பொதியாளர்களை பதிவு செய்தல் / மீள் புதுப்பித்தல் பிரதான மூன்று பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அதற்கான பதிவுக்கட்டணம் மற்றும் பதிவுகளை மீள் புதுப்பிப்பதற்கான கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| மாதாந்த விற்பனை அளவு கி.கி | பதிவு கட்டணம் | பதிவை மீள்புதுப்பிப்பதற்கான கட்டணம் |
|---|---|---|
| 2500 கி.கி வரை | ரூ. 5,000.00 | ரூ. 2,500.00 |
| 2501 தொடக்கம் 5000 கி.கி வரை | ரூ. 10,000.00 | ரூ. 5,000.00 |
| 5001 கி.கி ற்கு மேல் | ரூ. 25,000.00 | ரூ. 10,000.00 |

*** மேல் குறிப்பிடப்பட்ட அனைத்து கட்டணங்களும் 15% வட் வரி இணைக்கப்படும்.**

இப் பதிவிற்கு மற்றும் பதிவுகளை மீள்புதுப்பிப்பதற்கு தேவையான விண்ணப்பங்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச காரியாலயங்களில் அல்லது பிரதான காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடிவதுடன், இலங்கை தேயிலை சபையின் அதிகாரபூர்வ இணையத்தளத்திலும் **(www.srilankateaboard.lk)** பெற்றுக் கொள்ளமுடியும்.

| இல. | பிரதேச காரியாலயங்களின் முகவரி | நிர்வாக மாவட்டம் மற்றும் வங்கிக்கணக்குகள் தொடர்பான தகவல்கள் |
|---|---|---|
| 01. | துணை தேயிலை ஆணையாளர்<br>இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆணையாளர் பிரிவு,<br>இல.140, அபகமுவ வீதி, கம்பளை.<br>தொலைபேசி இலக்கம் - 081 2352279 | கண்டி, மாத்தளை, குருநாகல், கேகாலை, கம்பளை -<br>இலங்கை வங்கி கிளை<br>கணக்கு இலக்கம் - 0002499151 |
| 02. | துணை தேயிலை ஆணையாளர்<br>இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆணையாளர் பிரிவு,<br>இல34, கங்காராம குறுக்கு வீதி, மாகால்ல, காலி<br>தொலைபேசி இலக்கம் - 091 2232052 | காலி<br>காலி - இலங்கை வங்கி<br>கணக்கு இலக்கம் - 0001585875 |
| 03. | துணை தேயிலை ஆணையாளர்<br>இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆணையாளர் பிரிவு,<br>61/1, புதிய நகரம், இரத்தினபுரி<br>தொலைபேசி இலக்கம் - 045 2222136 | இரத்தினபுரி<br>இரத்தினபுரி - இலங்கை வங்கி கிளை<br>கணக்கு இலக்கம் - 0001015630 |
| 04. | துணை தேயிலை ஆணையாளர்<br>இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆணையாளர் பிரிவு,<br>இல 23, அலுத் மாவத்தை, உடயன்வத்த, மாத்தறை<br>தொலைபேசி இலக்கம்: 041 2222636 | மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை<br>மாத்தறை - இலங்கை வங்கி கிளை<br>கணக்கு இலக்கம் – 0001659159 |
| 05. | துணை தேயிலை ஆணையாளர்<br>இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆணையாளர் பிரிவு,<br>விசாகா மாவத்தை, புதி பதுளை வீதி,பண்டாரவளை<br>தொலைபேசி இலக்கம் 057 2222812 | பதுளை மற்றும் மொனராகலை<br>பண்டாரவளை - இலங்கை வங்கி கிளை<br>கணக்கு இலக்கம் - 0002067239 |
| 06. | துணை தேயிலை ஆணையாளர்<br>இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆணையாளர் பிரிவு,<br>வெதுரான வீதி, பதுரலிய<br>தொலைபேசி இலக்கம் - 034 2247444 | காலி, களுத்துறை<br>(மதுகம / எல்பிடிய பி.செ)<br>மதுகம - இலங்கை வங்கி<br>கணக்கு இலக்கம் - 0005121673 |
| 07. | துணை தேயிலை ஆணையாளர்<br>இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆணையாளர் பிரிவு,<br>இல.140,அபகமுவ வீதி, கம்பளை.<br>இல.10, கெலேகால, நாகுய வீதி, நுவரெலியா<br>தொலைபேசி இலக்கம் - 0522234695 | நுவரெலியா, ஹங்குரங்கெத, அபகமுவ, கொத்மலே, நோர்வூட், வலப்பனே, ஹட்டன்<br>இலங்கை வங்கி கிளை – நுவரெலியா<br>கணக்கு இலக்கம் - 84323339 |
| 08. | பிரதி தேயிலை ஆணையாளர்<br>இலங்கை தேயிலை சபை, தேயிலை ஆணையாளர் பிரிவு,<br>இல 574, காலி வீதி, கொழும்பு- 03<br>தொலைபேசி இலக்கம்- 011 2504090 | கொழும்பு மற்றும் மற்றைய மாவட்டங்களுக்காக பிரதான காரியாலயத்தில் காசோலை மற்றும் காசாக கட்டணங்களை செலுத்த முடியும். |

பதிவுக்கட்டணம் மற்றும் மீள் புதுப்பித்தல் கட்டணத்தை காசாக அல்லது காசோலை மூலமாக செலுத்த முடியும். அனைத்து காசோலைகளும் **"இலங்கை தேயிலை சபை"** எனும் பெயரில் எழுதப்பட்டு முன்வைக்கப்பட வேண்டும். பதிவுக்காக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை குறித்த கட்டணத்துடன் தமது பிரதேசத்திற்கு உரித்தான இலங்கை தேயிலை சபையின் பிரதேச காரியாலயத்திற்கு அல்லது கொழும்பு பிரதான காரியாலயத்திற்கு கையளித்தல் வேண்டும்.

மேலும் நிகழ்நிலை **(online)** மூலம் தேயிலை ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் அலுவலகத்தில் மேற்கூறப்பட்ட நடைமுறையின்படி பதிவு செய்யப்படும்.

**தலைவர்**
**இலங்கைத் தேயிலை சபை**
**இல.574, காலி வீதி, கொழும்பு 3.**
**2022.09.25**

# பெருந்தோட்ட அமைச்சு
# இலங்கை தேயிலைச் சபை

## அறிவித்தல்

**1975 இல 14 இலங்கை தேயிலைச் சபைச் சட்டம் மற்றும் 1984 இலங்கை தேயிலைச் சபை (தேயிலை களஞ்சியப்படுத்தல்) ஆணையின் படி**

## 2023 ஆம் ஆண்டிற்கான தேயிலை களஞ்சியப்படுத்துவதற்காக உபயோகிக்கும் களஞ்சியசாலைகளை பதிவு செய்தல் / பதிவுகளை புதுப்பித்தல்

**1984 டிசம்பர் மாதம் 05** ஆம் திகதி மற்றும் இல 326/17 கீழ் அரசினால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 1984 ஆம் ஆண்டின் இலங்கை தேயிலை சபையின் (தேயிலை களஞ்சியப்படுத்தல்) ஆணைகளின் படி மற்றும் இல 418/11 மற்றும் **1986 செப்டெம்பர் மாதம் 10** ஆம் திகதி அரசினால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தப்பட்ட மற்றும் இல 1280/8 அத்துடன் **2003 மார்ச் மாதம் 20** ஆம் திகதி அரசினால் வெளியிடப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் மேலும் திருத்தப்பட்ட ஆணையின் படி ஒரேமுறையில் **1000 கி.கி** அல்லது அதற்கு மேற்பட்ட தேயிலை அளவை களஞ்சியப்படுத்தும் அனைத்து களஞ்சியசாலைகளும், இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்யப்பட வேண்டியதுடன், அப்பதிவுகள் ஒவ்வொரு ஆண்டினதும் **டிசம்பர் 31 ஆம்** திகதி அல்லது அதற்கு முன் மீள்புதுப்பிக்கப்பட வேண்டும்.

1. இவ்வாணையின் கீழ் பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவங்கள் மற்றும் அது தொடர்பான மேலதிக விபரங்களை இலங்கை தேயிலை சபையின், தேயிலை ஏற்றுமதி கிளையின் பிரதி தேயிலை ஆணையரின் மூலம் **(தெலைபேசி இலக்கம்-0112-504090)** அல்லது இலங்கை தேயிலை சபையின் அதிகாரபூர்வ இணையத்தளத்தின் **(www.srilankateaboard.lk)** மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.
2. இதன்படி, சரியான முறையில் பூரணப்படுத்தப்பட்ட **2023 ஆம்** ஆண்டிற்கான விண்ணப்பப்படிவங்களை, **2022 நவம்பர் 30** ஆம் திகதி அல்லது அதற்கு முன் பிரதி தேயிலை ஆணையர் (ஏற்றுமதி), இலங்கை தேயிலை சபை, தேயிலை ஏற்றுமதி கிளை, 574, காலி வீதி, கொழும்பு 03 எனும் விலாசத்திற்கு கிடைக்கப்பெறுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.
3. இவ் ஆணையில் 1957 இல 51 இன் கீழ் தேயிலை கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் உற்பத்தி செய்வதற்காக பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற்சாலைகள் தவிர தரகர்கள், உற்பத்தியாளர்கள், **வழங்குனர்கள், போக்குவரத்தாளர்கள், அனுப்புபவர்கள், விற்பனையாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களினால்** களஞ்சியப்படுத்தல் செயற்பாடுகளுக்காக உபயோகிக்கப்படும் எந்தவொரு கட்டிடமும் **"களஞ்சியசாலை"** எனப்பொருள்படும்.
4. இந்த விதிமுறைகளை மீறும் அல்லது இணங்கத் தவறிய அல்லது இலங்கை தேயிலை வாரியத்திற்குத் தவறான தகவல்களை வழங்கிய ஒவ்வொரு நபரும் இந்த ஒழுங்குமுறைகளின் அடிப்படையில் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தில் குற்றவாளியாவார்.
5. புதிய களஞ்சியசாலையை பதிவு செய்யும் கட்டணம் **ரூ.25,000/- ஆகும். (15% வரி இணைக்கப்பட்ட மொத்த கட்டணம் ரூ.28,750/-)** அனைத்து பதிவுகளும் அவ்வாண்டின் **டிசம்பர் 31** ஆம் திகதி அல்லது அதற்கு முன் புதுப்பிக்கப்படல் வேண்டும். பதிவுகளை புதுப்பிப்பதற்கான கட்டணம் ரூ.10,000/- ஆகும். (15% **வரி இணைக்கப்பட்ட மொத்த கட்டணம் ரூ.11,500/-**).
6. பதிவுக்கட்டணம் அல்லது பதிவை மீள்புதுப்பித்தலுக்கான கட்டணத்தை காசாக அல்லது காசோலையின் மூலம் மேற்கொள்ளமுடியும். அனைத்து காசோலைகளும் **"இலங்கை தேயிலை சபை"** எனும் பெயரில் எழுதப்பட்டு முன்வைக்கப்பட வேண்டும்.

**தலைவர்**
**இலங்கைத் தேயிலைச் சபை**
**இல.574, காலி வீதி, கொழும்பு 3.**
**2022.09.25**

# பெருந்தோட்ட அமைச்சு
# இலங்கை தேயிலை சபை

## அறிவித்தல்

## தேயிலை ஏற்றுமதியாளர்களை பதிவு செய்தல் / பதிவுகளை புதுப்பித்தல் - 2023

1975 இல 14 இலங்கை தேயிலைச் சபைச் சட்டம் மற்றும் 1959 இல 16 தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதி நிர்வாகம்) சட்டத்தின் விதிமுறைகளின் படி தேயிலை உற்பத்தி செய்யும் மற்றும் ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இலங்கை தேயிலை சபையில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

இதன் படி தேயிலை ஏற்றுமதியில் ஈடுபட்டிருக்கும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்கு உரித்தான விற்பனையாளர்கள் மற்றும் விற்பனை நிலையங்கள் இலங்கை தேயிலைச்சபையில் புதிதாக பதிவு செய்யும் நோக்கிலும், ஏற்கனவே பதிவு செய்திருக்கும் தேயிலை ஏற்றுமதியாளர்களின் பதிவுகள் **2023 ஆம் ஆண்டிற்காக** மீள்புதுப்பித்தலுக்காகவும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க் குறிப்பிடப்பட்ட பிரிவுகளுக்கு உரித்தான ஏற்றுமதியாளர்கள் முறையாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களுடன் குறித்த பதிவை மீள்புதுப்பித்தலுக்கான கட்டணத்துடன் கொழும்பு 03, காலி வீதி, இல.574 எனும் இடத்தில் அமைந்துள்ள இலங்கை தேயிலைச்சபையின் தேயிலை ஏற்றுமதி பிரிவின் **துணை தேயிலை ஆணையாளருக்கு 2022 நவம்பர் 30** ஆம் திகதி அல்லது அதற்கு முன் முன்வைக்கப்பட வேண்டும். பதிவு கட்டணத்திற்காக வழங்கப்படும் அனைத்து காசோலைகளும் **"இலங்கை தேயிலை சபை"** எனும் பெயரில் எழுதப்பட்டு சமர்ப்பிக்க வேண்டும்.

- வருடாந்த தேயிலை ஏற்றுமதி 1 மில்லியன் கிலோகிராம் தேயிலை அல்லது அதற்கு மேற்பட்ட ஏற்றுமதியாளர்கள் - பாரிய பிரிவு
- வருடாந்த தேயிலை ஏற்றுமதி ஒரு மில்லியன் கிலோகிராம் இற்கு குறைந்த தேயிலை - சிறு பிரிவு

பதிவுகளை மீள்புதுப்பிக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுமதியாளர்களுக்கு தபால் மூலம் கிடைக்கப்பெறுவதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும். மேலும் பதிவுகளை மீள்புதுப்பித்தல் / புதிதாக பதிவு செய்வதற்கான குறித்த விண்ணப்பங்களை இலங்கை தேயிலைச் சபையின் அதிகாரபூர்வ இணையத்தளத்தில் **(www.srilankateaboard.lk)** இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

புதிய விண்ணப்பதாரர்களின் பதிவு கட்டணம் மற்றும் பதிவு செய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களின் பதிவுகளை மீள்புதுப்பித்தலுக்கான கட்டணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- புதிய விண்ணப்பதாரர்கள் (ஏற்றுமதி மற்றும் பொதியிடல் கட்டணம்)........... ரூ.50,000/- + 15% VAT
- பாரிய பிரிவு பதிவுகளை மீள்புதுப்பித்தல் ........................................ ரூ.500,000/-+ 15% VAT
- சிறிய பிரிவு பதிவுகளை மீள்புதுப்பித்தல் ........................................ ரூ.50,000/- + 15% VAT

**அனைத்து பதிவுசெய்யப்பட்ட தேயிலை ஏற்றுமதியாளர்களும் தமது பதிவுகளை 2023 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன் புதுப்பித்தல் வேண்டும்.**

மேலும் நிகழ்நிலை **(online)** மூலம் தேயிலை ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் அலுவலகத்தில் மேற்கூறப்பட்ட நடைமுறையின்படி பதிவு செய்யப்படும்.

**தலைவர்**
**இலங்கைத் தேயிலை சபை**
**இல.574, காலி வீதி, கொழும்பு 03.**
**2022.09.25**

For classified advertisements and for replies
received in response to advertisements published under Lake House box numbers
Manager front office
+94 112429341
Hotline 1949

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz It's what you want
Classified
Call :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 500/-
(Additional each word Rs. 20/-)
BANK OF CEYLON Lake House Branch
Acc. No. 000000377

## தொழுநோயாளர்களை தனிமைப்படுத்திய மாந்தீவு;

# தொழுநோயைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை



### தொழுநோய் மருத்துவர் தமிழ்வண்ணனுடன் ஒரு சந்திப்பு

சந்தித்தவர் :
புளியந்தீவு தவபாலன்

தொழுநோய் ஒரு கொடிய நோய் என ஒரு காலத்தில் கருதப்பட்டது. தொழுநோய் கண்டவர்களை ஊருக்கு வெளியே தனிமையில் விட்டுவிடும் வழக்கம் உலகின் பல நாடுகளில் இருந்திருக்கிறது. அது ஒரு தொற்றநோய், அருவருக்கத்தக்க நோய், கைகால்களை முடக்கி விகாரப்படுத்தும் நோய் என்றெல்லாம் கருதப்பட்டது. நோய் கண்டவர்களை தனிமைப்படுத்துவது தான் அப்போதிருந்த ஒரே வழி. ஏனெனில் குணப்படுத்த மருந்து கிடையாது. பைபிள் புதிய ஏற்பாட்டில் தொழுநோயாளியை இயேசு கிறிஸ்து சுகப்படுத்துவதாக ஒரு தகவல் உள்ளது.

எம். ராதா நடித்து புகழ்பெற்ற இரத்தக் கண்ணீர் நாடகம் பின்னர் அவர் நடிப்பில் திரைப்படமாகவும் வெளியானது. பணக்கார மைனர் பேர்வழியான எம்.ஆர். ராதா பல பெண்களுடன் தொடர்பு வைத்திருப்பவர். அவருக்கு இறுதியில் தொழுநோய் ஏற்படுகிறது. படம் வெற்றி பெற்றாலும் தவறான ஒரு தகவலை அது சொல்லியிருந்தது. விபசாரி வீடுகளுக்கு செல்வர்களுக்கு தொழுநோய் வரும் என்பதுதான் அந்தச் செய்தி. மக்கள் அதை நம்பினார்கள். ஆனால் பல பெண் தொடர்புக்கும் தொழு நோய்க்கும் இடையே எந்தத் தொடர்பு இல்லை என்பதை நம்பும் வகையில் எடுத்துச் சொல்வதற்கு மருத்துவர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் நீண்ட காலம் எடுத்தது.

தொழுநோயாளர்களை சமூகத்தில் இருந்து அப்புறப்படுத்தி வைக்க வேண்டும் என்பதால் தான் மட்டக்களப்பு வாவியின் ஒரு பகுதியில் அதாவது மாந்தீவில் தொழுநோயாளர்களுக்கான ஒரு மருத்துவமனை அமைக்கப்பட்டது. தொழுநோயாளர்களை படகில் ஏற்றி இத் தீவில் உள்ள ஆஸ்பத்திரியில் விட்டு விடுவார்கள். அவர்கள் பெரும்பாலும் திரும்பி வருவது சாத்தியமில்லை. அங்கேயே தமது வாழ்வை முடித்துக்கொள்ள வேண்டியிருககும். எப்படியோ ஒரு வழியாக சுகமாகி திரும்பி வந்தாலும் குடுபத்தார் அவர்களை ஏற்றுக் கொள்வது அரிது.

இந்த மாந்தீவு இன்றைக்கும் வெளியார் செல்ல முடியாத இடமாகத் தான் உள்ளது. இத்தீவில் உள்ள வைத்திசாலை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கட்டுப்பாட்டின் கீழ் வைக்கப் பட்டுள்ளது. வைத்தியசாலையின் இயந்திரப்படகு மூலம் மருத்துவர்கள் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் மாந்தீவு வைத்தியசாலைக்கு சென்று வருகிறார்கள். வேறு எவரும் செல்வதற்கு அனுமதி இல்லை. இத் தீவு கடற்படையின் கண்காணிப்பின் கீழ் உள்ளது. மீனவர்களும் இத் தீவு பக்கமாக ஒதுங்குவதில்லை. கடற்படைக்கு பயந்தல்ல; நோய் தொற்றி விடுமோ என்ற குருட்டுப் பயம்தான் காரணம்.

மாந்தீவு சுமார் நூறு ஏக்கர் விஸ்தீரணம்



மாந்தீவு தொழுநோய் மருத்துவமனை ஆரம்பிக்பட்டு நூறு வருடங்களாகின்றன. இது பெரிய கட்டடங்களைக் கொண்ட ஒரு ஆஸ்பத்திரி அல்ல. ஆனால் முன்னர் விசாலமானதாக இருந்திருக்க வேண்டும். முன்னர் அதாவது எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் இங்கே நிறைய நோயாளர்கள் இருந்தனராம். அப்போதெல்லாம் நோயாளர்கள் நன்றாக அதாவது



கொண்டது. தொழுநோய் சிகிச்சைக்காக இலங்கையில் இரண்டு மருத்துவ மனைகளே உள்ளன. முதலாவது ஹெந்தளையில் அமைந்துள்ளது. 1708ம் ஆண்டு டச்சுக்காரர்களால் ஹெந்தளை மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டதாக அறிய முடிகிறது. மாந்தீவு மருத்துவமனை 1921இல் பிரித்தானியரால் ஆரம்பிக்கப்பட்டது. மட்டக்களப்பு போதான வைத்தியசாலையில் இருந்த இரண்டு கிலோ மீட்டர் படகு பயண தூரத்தல் மாந்தீவு உள்ளது. இதன் மேற்கு பக்கமாக படுவான்கரை உள்ளது. மாம்பழத்துக்கும் இத்தீவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஒரு காலத்தில் இங்கே மான்கள் வாழ்ந்திருக்கலாம் என்றும் அதனால் இத் தீவுக்கு மான் தீவு என்ற பெயர் வந்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. மாந்தீவில் நிறைய குரங்குகள் உள்ளன.

சரியான முறையில் கவனிக்கப்பட்டிருப்பார்கள் என்று கருத முடியாது. ஏனெனில் காச நோயாளரையும் தொழுநோயாளர்களையும் தீண்டத்தகாதவர்களாகத்தான் சமூகம் ஒதுக்கி வைத்திருந்தது. ஆங்கிலேயர்கள் 1901 ஆம் ஆண்டு தொழுநோய் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வந்திருந்தார்கள். பின்னர் 2018இல் கொண்டு வரப்பட்ட புதிய சட்டம் பழைய சட்டத்தை நீக்கி விட்டது. ஏனெயில் இப்போது இரு ஒரு மோசமான நோய் அல்ல. முற்றாகக் குணப்படுத்தக் கூடிய நோய்.

மாந்தீவில் தற்போது இரண்டே இரண்டு நோயாளர் மட்டுமே தங்கியிருக்கின்றனர். நீண்ட காலமாகவே இங்கேயே தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஒருவர் ஹக்மன வெலியத்தையை சேர்ந்தவர். மற்றவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். இவர்களில் ஒருவர் மாந்தீவு வரும்போது ஒன்பது வயது. இப்போது 65 வயதாகிறது இவருக்கு.

தொழுநோயாளர்களுக்கான ஒரு தீவாக மாந்தீவு இருக்கின்ற போதிலும் மாந்தீவு ஒரு பசுமைத் தீவு. சுத்தமான காற்று வீசும், மரங்கள் அடர்ந்த இத்தீவை எதிர் காலத்தில் உல்லாச பயணிகளுக்கான உல்லாச தீவாக மாற்றியமைக்க முடியும் என்ற எண்ணமே இத்தீவைப் பார்க்கும் போது எழுகிறது.

மாந்தீவு தொடர்பான தகவல்களை சேகரித்தபோது எமக்கு அறிமுகமானவரே மருத்துவ நிபுணர் தமிழ் வண்ணன். இவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் சரும நோய்களுக்கான மருத்துவ நிபுணர். பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த மருத்துவரை அணுகி சில விவரங்களை கேட்டுத் தெரிந்து கொண்டோம்.

"தொழு நோயை முற்றாகக் குணப்படுத்தலாம். நோய் வீரியத்தைப் பொறுத்ததாக ஆறு மாதம் முதல் 12 மாத காலத்தில் நோயைக் குணப்படுத்தலாம். 1983இல் தொழுநோய்க்கான மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு விட்டன. உயர் தரத்திலான மருந்துகள் இப்போது கிடைக்கின்றன" என்று எம்முடன் அவர் பேசத் தொடங்கினார்.

"இது ஒரு தொற்று நோய், இது நோயாளியின் மூக்கிலிருந்து வெளிவரும் கசிவினால் நோய் பரவ முடியும். இக்கசிவிலுள்ள சிறு துணிக்கைகளிலிருந்து நோய்க் கிருமிகள் காற்றில் பரவி சுகதேகிகளைப் பீடிக்கிறது.

இது பக்றீரியா கிருமியால் ஏற்படுகிறது. "MYCOBACTERIUM LEPRAE" என்பது அதன் பெயர். இது நோயாளரின் உடலை விகாரமடையச் செய்கிறது ஆனால் உயிரைப் பறிக்காது.

ஆரம்பத்தில் இதன் குணக்குறிகள் பாரதூரமானதாக இருக்கமாட்டாது. ஆரம்பத்திலேயே இந்தநோய் கண்டு பிடிக்கப்பட்டு அதற்கான சிகிச்சையை மேற்கொண்டால் முற்றிலுமாக சுகப்படுத்திவிட முடியும்.

காலம் பிந்தி மருத்துவரை நாடும்போது, அதனை சுகப்படுத்துவது சிரமமாகி அங்கங்கள் பழுதடைவதற்கு காரணமாகிவிடும். நோயின் ஆரம்பத்திலேயே மருத்துவரை நாடினால் அங்கவீனம் வராமல் தடுக்க முடியும்.

காலம் செல்லச்செல்ல இந்த நோயினால், நரம்பும், சருமமும் பாதிப்படையும். தோலில் தடிப்பும் திரட்சியும் ஏற்படும். நரம்பகள் உணர்வற்றுப் போகும். இந்த நிலையானது பாரதூரமானதொரு நிலையாகவே பார்க்கப்படுகிறது. ஆரம்பத்தில்

தோலில் நோவில்லாத காயங்கள் உருவாகும். தோல் உணர்ச்சி குறைந்த நிலையில் இருக்கும். தோல் நிறம் குறைந்தும் காணப்படலாம். நரம்புகள் பாதிக்கப்படுவதால்தான் நோவில்லாத காயங்கள் உருவாகின்றன. இந் நோய் கண்டவர் அதிலிருந்து முழுமையாக மீட்சி பெறுவது நோயின் வீரியத்தைப் பொறுத்தது. சராசரியாக கூறினால் 6 மாதம் முதல் 12 மாத காலத்துக்குள் நோயை சுகப்படுத்திவிட முடியும் என்றவரிடம் நோயாளர் குணமான பின்னர் திருமணம் செய்யலாமா? என்று கேட்டோம்.

இது பரம்பரை நோய் அல்ல என்பதால் தாராளமாகத் திருமணம் செய்யலாம் என்றவர் தற்போது நோயாளர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. என்ற நல்ல சேதியையும் சொன்னவர், இப்போது ஒரு வருடத்தில் 100 என்ற அளவிலேயே நோயாளர் எண்ணிக்கை காணப்படுவதாக கூறினார்.

மக்கள் மத்தியில் இந்த நோயைப்பற்றிய போதிய தெளிவில்லை. பயங்கர நோயாகவே இதைக் கருதுகிறார்கள். நோயின் தாக்கம். அது பரவும் வழிவகைகள், அது உடலைப்பாதிக்கும் தன்மைகள் என்பவைகளை மக்கள் புரிந்து வைத்திருந்தால். நோயின் ஆரம்ப கட்டத்திலேயே சிகிச்சையை ஆரம்பிக்க முடியும். பூரண சுகம் பெறவும் முடியும்.

தொழுநோய் பற்றிய அறிவை எமது மக்கள் போதிய அளவில் பெற்றிருக்கவில்லை என்பதே உண்மை.

இந்த நோயாளர்களுக்கு ஒவ்வாத உணவு என்று எதுவும் கிடையாது

தாராளமாக எதை வேண்டுமானாலும் சாப்பிடலாம். போசாக்கு நிறைந்த உணவுவகைளை உட்கொள்வது நல்லது. இது உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவும் என்று சொல்லி உரையாடலை முடித்துக் கொண்டார் மருத்துவர் தமிழ் வண்ணன்.

---

> ‘நோய்கள் அண்டாவண்ணமோ அல்லது, நோய்த்தாக்கத்தை தள்ளிப்போடும் வகையிலோ எம்மை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு எம்மிடமே உள்ளது’
>
> – டொக்டர் தர்சினி முருகுப்பிள்ளை

# சுண்ணாம்பு உற்பத்தி செய்வதென்பது இலகுவானதல்ல

### வாழ்வாதாரத்துக்காகவே அதைச் செய்கிறேன் சுண்ணாம்பு உற்பத்தியாளர் ரவீந்திரன் தர்மராணி

எனது கணவரிடம் பழகிய சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலே, தற்போது அவர் இல்லாதபோதிலும், எனது குடும்பத்தைக் காப்பாற்றக் கைகொடுத்து உதவுகின்றது என்கிறார் சுண்ணாம்பு உற்பத்தியாளர் தர்மராணி ரவீந்திரன்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஆரையம்பதி, கோவில்குளம் நான்காம் கட்டையைச் சேர்ந்த 54 வயதான தர்மராணி, கடந்த 27 வருடங்களாக சுண்ணாம்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றார்.

தனது சுண்ணாம்பு உற்பத்தித் தொழில் பற்றியும் அத்தொழிலின் உதவியுடன் தனது வாழ்வாதாரத்தைக் கொண்டு செல்வது பற்றியும் தினகரன் வாரமஞ்சரி வாசர்களோடு அவர் பகிர்ந்து கொள்கின்றார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலை வாழ்வாதாரத் தொழிலாக செய்துவந்த ஒருவரையே நான்



திருமணம் செய்துகொண்டேன். இந்நிலையில், சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலானது ஒரு கடினமான தொழிலாக இருந்தபோதிலும், அந்நாளில் எமது தொழிலை விருத்தி செய்ய வேண்டுமென்பதற்காகவும், எமது வருமானத்தை அதிகரிக்க வேண்டுமென்பதற்காகவும், சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலை கணவரிடமிருந்து நான் பழகியதோடு, கணவருடன் இணைந்து அத்தொழிலை செய்யவும் தொடங்கினேன்.

இவ்வாறு கணவரும் நானும் இணைந்து சுண்ணாம்பு உற்பத்தியைச் செய்து வருகையில், திடீரென எனது கணவர் ஆஸ்துமா நோய்வாய்ப்பட்டு இறந்து போனார். அவரது இறப்பைத் தொடர்ந்து, எனது பிள்ளைகளை பரிதவிக்கவிடாது, காப்பாற்ற வேண்டிய குடும்பச்சுமையை நான் பொறுப்பேற்க வேண்டி வந்தது. அவ்வேளையில் கணவரின் இழப்பு என்னை கவலையடையச் செய்தபோதிலும், அவரிடம் நான் பழகிய சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலானது, எனது குடும்பத்தைக் காப்பாற்ற முடியுமென்ற மன நம்பிக்கையை கொடுத்தது.

இந்நிலையில் கணவரின் இறப்பைத் தொடர்ந்து, கடந்த 13 வருடங்களாக நான் தனித்துநின்று சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலை செய்து, அதன் மூலம் வருமானத்தை ஈட்டி வருகின்றேன் என்கின்றார் அவர்.

ஆறுகளில் மட்டி பிடிக்கும் தொழிலைச் செய்வோர், மட்டிகளைப் பிடித்து அதனுள் இருக்கும் இறைச்சியை விற்பனை செய்துவிட்டு, மட்டிகளின் வெளிக்கோதை அதாவது, சிப்பிகளை, சுண்ணாம்பு உற்பத்தியில் ஈடுபட்டுவரும் என்னைப் போன்றவர்களிடம் விற்பனை செய்கின்றார்கள். அவர்களிடமிருந்து சிப்பிகளை நாம் குறிப்பிட்டதொரு விலைக்கு வாங்குவதோடு, விறகுக்கரியையும் நாம் விலைக்கு வாங்கி சுண்ணாம்பு உற்பத்தியில் ஈடுபடுகின்றோம்.

இந்நிலையில், எனது வீட்டு வளவில் சுண்ணாம்புச் சூளையொன்றை அமைத்து வைத்திருப்பதோடு, அச்சூளையினுள் சிப்பிகளையும் விறகுக்கரியையும் ஒன்றாகக் கலந்து இடுவதோடு, அச்சூளைக்கு தீ மூட்டி, ஒருநாள் இரவு முழுவதும் பதப்படுத்தும் வகையில் புகைய விடுகின்றேன்.

இவ்வாறு தீயில் வெந்த சிப்பிகளை, மறுநாள் காலையில் சுண்ணாம்புச் சூளையிலிருந்து வெளியில் எடுத்து, சுத்தமான தரையில் பரவுவதோடு, அதற்கு சிறிதளவு தண்ணீர் பனுக்குகின்றேன். இவ்வாறு தண்ணீர் பனுக்கும்போது, தீயில் வெந்த சிற்பிகள் சிறு, சிறு துகள்களாகி வெள்ளை நிறமான பவுடராகின்றன. அச்சிற்பி பவுடரை அரித்தெடுத்து, பைகளில் பொதி செய்து விற்பனைக்குத் தயார் செய்கின்றேன் என்கின்றார் அவர். வீட்டுக்கு வெள்ளை அடிப்பதற்கான சுண்ணாம்பு, வீட்டுக்கு பூசுவதற்கான சுண்ணாம்பு, வெற்றிலையுடன் உட்கொள்வதற்கான சுண்ணாம்பு என்று 3 வகைகளாக தரம் பிரித்து சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்படுகின்றது.

இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் சுண்ணாம்பானது, கொரோனாவுக்கு முன்னரான காலப்பகுதியில் சற்று மலிவான விலையில் விற்பனையாகியது. ஆனால், தற்போது எமது நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைத் தொடர்ந்து பொருட்களின் விலையேற்றம் காரணமாக சுண்ணாம்பின் விலையும் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றது என்கின்றார் அவர்.

சுண்ணாம்பு உற்பத்திக்கான சிப்பிகள் தற்போது 300 ரூபாய்வரை விற்பனை செய்யப்படுவதோடு, விறகுக்கரி 700 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகின்றது என்கின்றார் அவர். முன்னர் தாந்தாமலை, கொக்கட்டிச்சோலை ஆகிய பகுதிகளிலிருந்து கொண்டுவந்து விற்பனை செய்வோரிடமிருந்து விறகுக்கரியை நான் பெற்றுக்கொண்டேன். ஆனால், தற்போது அப்பகுதிகளில் விறகுக்கரிக்கு தட்டுப்பாடு நிலவுவதால், அப்பகுதிகளிலிருந்து விறகுக்கரி கொண்டு வந்து விற்பனை செய்யப்படுவதில்லை.

இவ்வாறான நிலையில் விறகுக்கரிக்கு பதிலாக, வெய்யிலில் நன்றாக காயவிடப்பட்ட பனம்பழ விதைகளை கரியாக்கி, சிப்பிகளுடன் ஒன்றாகக் கலந்து சுண்ணாம்பு உற்பத்தி செய்யப்படுகின்றது என்கின்றார் அவர்.

நான் வசிக்கும் பகுதியில் சுமார் 5 பேர் இவ்வாறு சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றார்கள்.

சிப்பிகள் கிடைக்கும் பட்சத்திலேயே சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட முடியுமென்பதால், இத்தொழிலானது எமக்கு நிரந்தர வருமானத்தை ஈட்டித்தரும் தொழிலாக இல்லையென்பதோடு, அதன் மூலம் போதியளவான வருமானமும் கிடைப்பதில்லை.



இதேவேளை, இவ்வாறு எம்மால் உற்பத்தி செய்யப்பட்ட சுண்ணாம்பை விலைக்கு வாங்குவதற்காக வாடிக்கையாளர்கள் எம்மைத் தேடி வரும்வரை நாம் காத்திருக்க வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. இவ்வாறே எமது வியாபாரம் இடம்பெறுகின்றது என்கின்றார் அவர்.

எனது குடும்பமானது 9 பிள்ளைகளைக் கொண்ட பெரியதொரு குடும்பமாகக் காணப்படுவதால், சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலின் மூலம் ஈட்டும் வருமானம் எமது செலவுக்கு போதுமானதாக இல்லை. இருந்தபோதிலும், எனக்குத் தெரிந்த இத்தொழிலை செய்து அவ்வப்போது கிடைக்கும் வருமானத்தின் உதவியுடன் என்னால் முடிந்தவரை குடும்பத்தைக் காப்பாற்றி வருகின்றேன்.

எனக்கு 4 ஆண் பிள்ளைகளும் 5 பெண் பிள்ளைகளும் இருக்கின்றார்கள். இவர்களில் 3 ஆண் பிள்ளைகள் திருமணம் முடித்துள்ளதோடு, ஏனைய 6 பிள்ளைகளும் தற்போது என்னுடன் இருக்கின்றார்கள். என்னுடன் இருக்கும் 16 வயதுடைய ஆண் பிள்ளை சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பெற்று வருகின்றார். எனது 5 பெண் பிள்ளைகளில் ஒருவர் ஆடைத்தொழிற்சாலையொன்றில் பணிக்கு இணைந்து, தற்போது சுமார் 9 மாதங்களாகின்றன. மற்றுமொரு மகள், சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலுக்கு ஒத்தாசையாக உள்ளார். ஏனைய 3 பெண் பிள்ளைகளும் பாடசாலைக் கல்வியை தொடர்கின்றார்கள் என்கின்றார்.

நானும் ஆஸ்துமா, கொலஸ்ரோல் உள்ளிட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வரும் நிலையில் கூட, எனது குடும்ப வருமானத்துக்காக சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றேன். ஏனெனில், எவரிடமும் கையேந்தாமல், எனது உழைப்பின் மூலம் எனது குடும்பம் முன்னேற வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

பாடசாலைக் கல்வி கற்கும் எனது 3 பெண் பிள்ளைகளை கல்வியின் மூலம் உயர்ந்த நிலைமைக்கு கொண்டுவர வேண்டுமென்பதோடு, 5 பெண் பிள்ளைகளையும் நல்ல முறையில் கரை சேர்க்க வேண்டுமென்பதே என் முன்னால் காணப்படும் பாரிய சாவலாகும் என்கின்றார் அவர்.

அதிகாலையில் எழுந்து எனது சமையல் உள்ளிட்ட வீட்டுக் கடமைகளைக் கவனிப்பதோடு மாத்திரமின்றி, கிடைக்கும் நேரத்தில் சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலைச் செய்து, எனது நேரத்தை பிரயோசனமுடையதாக மாற்றிக்கொள்கின்றேன். இவ்வாறு எனது நேரம் முழுவதையும் வீட்டுக் கடமைகளுக்கும் சுண்ணாம்பு உற்பத்தித் தொழிலுக்கும் பிரயோசனப்படுத்துவதால், வீண் கவலைகள் என் மனதை ஒட்டிக்கொள்வதில்லை. இதனால் நான் மிகுந்த மனோ தைரியத்துடனும் இருக்கின்றேன் என்கின்றார் அவர்.

எனது வாழ்க்கையானது, இவ்வாறு கஷ்டமானதொரு சூழ்நிலைக்கு மாறுமென்று நான் முன்னர் எண்ணியிருக்கவில்லை. ஆனால், அப்போது கணவருடன் பழகிய சுண்ணாம்பு உற்பத்தித் தொழில், என்னை தலைநிமிர்ந்து வாழ வைக்கின்றது என்கின்றார் அவர்.

பொதுவாக ஒவ்வொரு மனிதனினதும் உடல்வாசி, நிறமூகூர்த்தம், பரம்பரை, மரபணு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி உள்ளிட்டவற்றை அடிப்படையாக் கொண்டு தேக ஆரோக்கியம் கணிக்கப்படுவதோடு மட்டுமன்றி அவர்களின் அன்றாடப் பழக்கவழக்கம், உணவுப் பழக்கவழக்கம், அவர்கள் செய்யும் தொழில் உள்ளிட்டவற்றின் அடிப்படையிலும் மனிதனது தேக ஆரோக்கியம் தங்கியுள்ளதாகவும், மட்டக்களப்புக்கான பிராந்திய சுகாதார சேவைகள் பணியக சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரப் பிரிவுக்குரிய டொக்டர் தர்சினி முருகுப்பிள்ளை (Dr. Dharshini Murugupillai Environment, Occupational Health Unit, RDHS office, Batticaloa) தெரிவித்துள்ளார்.



ஆர்.சுகந்தினி ...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 செப்டெம்பர் 25 ஞாயிற்றுக்கிழமை
Model - SHERIN JOSE



# காதலால் அரியணை ஏறிய சார்ள்ஸ்







பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

73 வயது வரை இளவரசராக இருந்து விட்டு கடைசி காலத்தில் மன்னராகி இருக்கிறார் சார்ள்ஸ். இப்போது அவரை சார்ள்ஸ் என்று மொட்டையாகக் கூப்பிட முடியாது. மூன்றாவது சார்ள்ஸ் மன்னர் என்றே அழைக்க வேண்டும்.

உண்மையில் சார்ள்ஸ் மன்னராக வேண்டியவரல்ல. அதற்குக் காரணமே காதல்தான். உடனே, கமீலா, டயானா விவகாரம் என்று நினைத்துவிட வேண்டாம். அது ஒரு புளித்துப்போன கதை.

சார்ள்ஸின் பாட்டனாரான ஆறாம் ஜோர்ஜ் மன்னரானது பின்னர் தனது தாய் இரண்டாம் எலிசபெத் மகாராணியாக அரியணை ஏறியது எல்லாமே அதிர்ஷ்டம்தான். அதற்குப் பின்னால் அரண்மனைக் காதல் கதை ஒன்று இருக்கிறது. அது மும்தாஜ், சாஜஹான் கதையை விடவும் புனிதமானது. ஏனென்றால் சாஜஹான் காதலுக்காக முடி துறக்கவில்லை.

1936 ஆம் ஆண்டு ஐந்தாம் ஜோர்ஜ் மன்னர் மரணித்தபோது அடுத்து முடி சூடியவர் அவரது மூத்த மகன் எட்டாம் எட்வர்ட். 1936 ஜனவரி 20 ஆம் திகதி அவர் பிரிட்டிஷ் பேரரசின் மன்னராக முடிசூடினார். 41 வயதில் திருமணம் புரியாத நிலையில் மன்னரான எட்டாம் எட்வர்ட்டுக்கு அமெரிக்க பெண் ஒருவர் மீது காதல். அதுவும் முதல் கணவரை விவாகரத்துப் பெற்று இரண்டாவது கணவரை விவாகரத்து பெற காத்திருக்கும் ஒரு பெண்.

வில்லிஸ் சிம்சன் என்ற அந்தப் பெண்ணோடு உறவு வைத்திருப்பது ஊருக்கே தெரிந்த கதை. ஆனால் மன்னர் அவரை திருமணம் புரிய முடிவு செய்தது பிரிட்டன் அரச குடும்பத்திலும் பாராளுமன்றத்திலும் பேரிடியாக விழுந்தது. ஏற்கனவே பிரிட்டிஷ் பேரரசு ஆட்டம் கண்டுகொண்டிருந்த நேரத்தில் இந்தப் பிரச்சினை வேறு.

பிரிட்டிஷ் தேவாலயத்தின் தலைவராகவும் மன்னர் இருக்கும் நிலையில் அவர் விவாகரத்துப் பெற்ற பெண் ஒருவரை, அதுவும் விவாகரத்தான இரு கணவர்களும் உயிரோடு இருக்கும்போது திருமணம் புரிவது மரபுக்கு ஆகாது என்ற எதிர்ப்பு வலுத்தது. பிரச்சினையை தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளும் தோல்வி அடைந்தன.



கடைசியில் காதலா, அரியணையா என்று மன்னர் முடிவு செய்ய வேண்டியதாயிற்று.

1936 டிசம்பர் 10 ஆம் திகதி அரியணையை துறக்கும் கடிதத்தில் மன்னர் கையெழுத்திட்டார். அந்தக் கடிதம் பாராளுமன்றத்தில் வாசிக்கப்பட்டது. முழு நாட்டுக்கும் அறிவிக்கப்பட்டது. முடி துறந்த எட்வர்ட் நாட்டை விட்டே வெளியேறினார். கஷ்ட, நஷ்டங்களுக்கு மாத்திரம்தான் தாய் நாடு பக்கம் தலைகாட்டுபராக மாறிவிட்டார். அடுத்த ஆண்டு வில்லிஸ் சிம்சனை திருமணம் புரிந்தார்.

326 நாட்கள் மாத்திரமே பிரிட்டிஷ் மன்னராக இருந்த எட்வர்ட் அந்தப் பதவியை குறுகிய காலம் வகித்தவராகவும் வரலாற்றில் இடம்பெற்றார்.

எட்வர்ட் முடி துறந்ததால்தான் அவரது இளைய சகோதரர் ஆறாவது ஜோர்ஜ் அரியணை ஏறினார். அதாவது இரண்டாம் எலிசபெத்தின் தந்தை. பிரிட்டிஷ் அரச குடும்பத்தில் மன்னர் அல்லது மகாராணி பதவிக்குத் தகுதியானவரை தேர்வு செய்வதில் தலைமுறை வரிசையில் மூத்தவர்களுக்கே முன்னுரிமை உண்டு. அதாவது மன்னர் அல்லது மகாராணியின் மூத்த பிள்ளை, அவரது மூத்த பிள்ளை என்றுதான் அந்த வரிசை செல்லும்.

எட்வர்ட் முடி துறக்கும்போது அவருக்கு பிள்ளைகள் இருக்கவில்லை. அதனாலேயே ஆறாம் ஜோர்ஜுக்கு மன்னராக முடிந்தது. ஆறாம் ஜோர்ஜுக்கு ஆண் குழந்தைகள் இல்லை என்பதாலேயே மூத்த மகளான எலிசபெத்துக்கு மகாராணியாக முடிந்தது. அப்படி இரண்டாம் எலிசபெத் மகாராணியானதாலேயே சார்ள்ஸுக்கு இப்போது மன்னராக முடிந்திருக்கிறது.

உண்மையில் எட்வர்ட் முடி துறந்தது உலக அரசியலிலும் ஒரு திருப்பம். அவர் ஒரு அடொல்ப் ஹிட்லரின் அனுதாபி என்று பரவலாக நம்பப்படுகிறது. 1937ஆம் ஆண்டு கடைசிப் பகுதியில் எட்வர்ட் மற்றும் அவரது மனைவி ஜெர்மனிக்கு சென்று நாஜித் தலைவர் ஹிட்லரை சந்தித்தது அப்போது அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தது.

இதனால் பிரான்ஸில் பிரிட்டிஷ் நாட்டுக்கான இராணுவ பணியில் இருந்து வந்த எட்வர்ட் அந்தப் பதவியில் இருந்து வெளியேற்றப்பட்டு பஹாமாஸ் நாட்டுக்கான ஆளுநராக அனுப்பப்பட்டார்.

ஹிட்லர் கூட இது பற்றி கூறி இருக்கிறார். பிரிட்டனை தாம் கைப்பற்றினால் எட்வர்ட்டை மீண்டும் மன்னராக்குவேன் என்று ஹிட்லர் கூட கூறியிருந்தார். எனவே எட்வர்ட் முடி துறப்பதற்கு காதல் மாத்திரம் காரணம் இல்லை என்று கூறும் அரசியல் விமர்சகர்களும் இருக்கிறார்கள்.

# பேய்கள் உலாவும் உல்லாச உலகம்!

(கடந்த வாரத் தொடர்)

பொதுவாகத் தலைப் பிள்ளையே இப்படி செய்வதற்குத் தோதானதாக இருக்கும் என்பது நம்பிக்கை. மலேசியாவில் பல இடங்களில் இது போன்ற உருவங்களைப் புட்டிகளில் கைப்பற்றி உள்ளனர்.

ஜெங்லோட்களில் ஆண், பெண் என இருவகை உண்டு. பெண் போமோவால் மட்டுமே ஆண் ஜெங்லோட்டையும் ஆண் போமோவால் மட்டுமே பெண் ஜெங்லோட்டையும் பிடிக்க முடியுமாம். பார்ப்பதற்குச் சின்ன சைஸ் மம்மியைப் போல தோற்றமளிக்கும் ஜெங்லோட் என்பது காடுகளில் திரியும் அமானுஷ்ய சக்தியுடைய ஒரு வகை மிருகம் எனவும் சொல்லப்படுகிறது. பொதுவாக ஜெங்லோட்டை சிலர் தலைமுறை தலைமுறையாக உணவளித்துப் பாதுகாப்பார்கள் என கேள்விப்பட்டு இருக்கிறேன். இந்த ஜெங்லோட்கள் வீட்டில் இருந்தால் நிறைய வரவுகள் இருக்கும் எனவும் வீட்டிற்கு வரக்கூடிய தீயவற்றை இந்த ஜெங்லோட்கள் தூர தள்ளும் எனவும் சொல்லப்படுவது உண்டு.

நிறைய போமோக்கள் அதிர்ஷ்ட எண்களைப் பெறுவதற்காகவே ஜெங்லோட்களைப் பதப்படுத்தி வைத்திருக்கின்றனர். அதோடு ஒவ்வொரு முறையும் அது நம் கட்டளைக்கு ஏற்ப நடக்கும்போது அதற்கான பிரதி பலனை அது கேட்டு வாங்கிக் கொள்ளும். அந்தப் பிரதிபலன் கண்டிப்பாக இரத்தபலி சம்பந்தப்பட்டதாகவே இருக்கும்.

உதாரணமாக அதிர்ஷ்ட எண் கேட்டு ஒருவர் போமோவைப் பார்க்க போகிறார் என்றே வைத்துக் கொள்வோமே. மந்திரவாதி எண்ணெய் கொடுத்து விட்டார். அதன் பின், ஒரு கருப்பு சேவலோ அல்லது கருப்பு ஆடோ உயிர்ப்பலி வேண்டும் எனக் கேட்பார்.

அப்படி எண்ணெய் எடுத்தவர் மறந்து விட்டலோ அல்லது செய்யவில்லை என்றாலோ, அவர் வீட்டில் ஒரு சாவு நடக்கும். அதுவும் எதிர்பாராமல் குருதி ஒழுகிய சாவு தான் நடக்கும். எனவேதான் மலாய்க்காரர்கள் இவற்றையெல்லாம் ஷிரிக் (Syirik) என்றும் குறாஃபாட் (Kurafat) என்றும் சொல்லுவார்கள். அதாவது மத நம்பிக்கைக்குப் புறம்பானது, அபாயகரமானது என்று அர்த்தம்.

## ஹன்ந்து ராயா

ஹன்ந்து ராயா என்பது நமக்குத் தெரிந்தவர்கள் உருவில் வந்து நம்மை அழைக்குமாம். அச்சு அசல் அப்படியே மனிதனைப் போலவே இருக்குமாம். ஆனால் பேசவே பேசாதாம். இதற்கு எஜமானர் இருக்கும். ஒருவர் மேல் பகை என்றால் அவர்கள் மேல் இதை ஏவி விட்டு காரியத்தை சாதித்துக் கொள்வார்களாம். இதுவும் தலைமுறை தலைமுறையாக வளர்க்கப்படும். அப்படி வாரிசு இல்லையென்றால் அதன் எஜமானர் வயதாகியும் அமைதியாக இறப்பதற்கு முடியாதாம். உயிருள்ள பிண்டம் போல் ஆகிவிடுவார். ஹன்ந்து ராயா இன்னொரு விஷயமும் செய்யும். அதாவது தன்னை வளர்க்கும் தன் எஜமானன் போலவே பல இடங்களுக்குச் சென்று வரும். பல இடங்களில் ஒருவர் ஒரே நேரத்தில் இருக்கிறார் என்றால் அவர் கண்டிப்பாக இப்படி ஒரு ஹன்ந்து ராயாவை வளர்க்க வேண்டும். பேய் ஜின் வளர்ப்பதே தப்பு தான்.



எனவே பெரும்பாலும் தவறான காரண காரியங்கள் செய்வதற்கே ஹன்ந்து ராயா பயன்படுகிறது. உதாரணத்துக்கு ஒருத்தருக்குச் சின்ன வீடு இருக்கிறது என வைத்து கொள்வோமே. அவர் சின்ன வீட்டில் இருக்கும் போது அவர் வளர்க்கும் ஹன்ந்து ராயா பெரிய வீட்டில் மனைவியோடு இருக்கும். மனைவிக்கு சந்தேகமே வராமல் இந்த ஹன்ந்து ராயா பார்த்துக்கொள்ளும் (அவ்வளவு எஜமான விசுவாசம்!). இதற்காகவே நிறைய பணக்கார முதலாளிகள் ஹன்ந்து ராயாவை வளர்த்து வந்திருக்கிறார்கள்.

**மந்திரவாதி எண்ணெய்க் கொடுத்து விட்டால். அதன் பின், ஒரு கருப்பு சேவலோ அல்லது கருப்பு ஆடோ உயிர்ப்பலி வேண்டும் எனக் கேட்பார். அப்படி எண்ணெய் எடுத்தவர் மறந்து விட்டிலோ அல்லது செய்யவில்லை என்றாலோ, அவர் வீட்டில் ஒரு சாவு நடக்கும். அதுவும் எதிர்பாராமல் குருதி ஒழுகிய சாவு தான் நடக்கும்.**



ராயா என்றால் பெரியது என அர்த்தம். பல காரியங்கள் செய்வதற்குப் பயன்படுவதால் இதை ஹன்ந்து ராயா என அழைக்கிறார்கள். நவீன மருத்துவம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பு பிறந்த குழந்தைகள் இறந்து பிறந்தாலோ அல்லது பிறந்த உடனேயே சில நாட்களுக்குள் இறந்து விட்டாலோ அதற்கு முழுமுதற்காரணமாக இந்த ஹன்ந்து ராயாவை தான் சுட்டிக்காட்டுவார்கள்.

இரவானதும் வீட்டின் கதவுகளை மூன்று முறை தட்டித் தட்டி பார்க்கும் இந்த ஹன்ந்து ராயா. அதாவது முதலில் மூன்று முறை 'டொக் டொக் டொக்' என தட்டும். பிறகு சத்தமே இருக்காது.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு மீண்டும் இரண்டு தடவை அதே நேர இடைவெளியோடு அப்படியே தட்டும்.

ஏமாந்துபோய் கதவைத் திறந்து விட்டால் நாம் நம்மை மறந்து விடுவோம். என்ன நடந்தது என்றே தெரியாது. பின்னர் நம்மோடு அந்த ஹன்ந்து ராயாவும் ஒரு பகுதியாகி விடும்.

ஹன்ந்து ராயாவுக்கு சாப்பாடு ரொம்ப ரொம்ப முக்கியம். அதுவும் நேரா நேரத்துக்கு சரியாக சாப்பாடு கொடுத்து விட வேண்டும்.

அதன் சாப்பாடு பூலூட் கூனிங் எனப்படும் மஞ்சள் நிற கவுனி இனிப்பு சாதம், முட்டை, பொரித்த கோழி, கொஞ்சம் அவல் அதோடு ஒரு பொம்மை. முடிந்தால் பூலூட்டையே பொம்மை போல செய்து வைக்க வேண்டும்.

ஒவ்வொரு வருடமும் ஒரே நாளில் ஒரே நேரத்தில் இந்த சாப்பாட்டைப் போட வேண்டும். இல்லையென்றால் இந்தப் பேயால் பல அவதிகள் நேரிடும்.

இதற்காகவே யாரெல்லாம் இதை வளர்க்கிறார்களோ அவர்கள் மிகவும் கவனமாகச் செயல்படுவார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னால் 'ஜாங்நான் பண்டாங் பெலாக்காங்' (Jangan Pandang Belakang) என்று ஒரு மலாய் திரைப்படம் வந்திருந்தது. அந்தத் திரைப்படத்தில் ஹன்ந்து ராயா பற்றி நிறைய தெரிந்து கொள்ளலாம்.

(தொடரும்)

## செந்தூர மழலைச் செல்வங்கள்


Shahid Munsif, Shabir Munsif


Sabriya


Naqid


க.பிரின்சியா

## செந்தூரம் பிறந்தநாள் வாழ்த்து

நீங்கள், உங்கள் மழலைச் செல்வங்களின் பிறந்தநாள் வாழ்த்துக்களை இந்த செந்தூரம் இதழில் எந்தவித கட்டணமும் இன்றி இலவசமாக பிரசுரிக்க விரும்புகின்றீங்களா? அவ்வாறாயின் மழலையின் பெயர், முகவரி, பிறந்த திகதி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு 0773124543என்ற whats app க்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

## செல்ஃபி உலா

நீங்கள், உங்கள் Phone களில் விதவிதமாக எடுத்துப் பார்த்து ரசிக்கும் Selfie படங்களை இந்த செந்தூரம் இதழில் பிரசுரிக்க உங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை குறிப்பிட்டு என்ற 0773124543 whatsappக்கோ அல்லது senthuram2022@gmail.comக்கோ அனுப்பி வைக்கலாம்.

# 'இனிய நந்தவனம்' வெள்ளிவிழா மலர் அறிமுகம்




































"நான் உங்களை உற்சாகப்படுத்தி... ஊக்கப்படுத்தி... நல்வழிப்படுத்தி..."
"ரொம்பப் படுத்தாதீங்க தலைவரே!"






# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி

''ஏண்டா திடீர்னு சுடு காடு போறேன்னு சொல்றே?''
''ஆவி பிடிச்சா ஜலதோஷம் உடனே பறந்துடும்னு டாக்டர்தான் சொன்னாரு!''





''ஆஸ்பத்திரி திறப்பு விழாவுக்கு ஆன்மிகவாதியைக் கூப்பிட்டு, தலைமை தாங்க சொன்னது தப்பாப் போச்சு!''
''என்னாச்சு?''
''எல்லாரும் நோய்நொடி இல்லாமல் நீண்டகாலம் வாழணும்னு வாழ்த்திப் பேசிட்டாரே!''



''சர்வர், சப்பாத்தி ஏன் இவ்வளவு லேட்...''
''குருமால விழுந்த பல்லிய எடுக்குறதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடிச்சி சார்.''



"என்னதான் கதைக்கு அவசியம்னாலும் அவ்வளவு கேவலமா நடிக்க முடியாதுன்னு டைரக்டர்கிட்டே சண்டை போட்டீங்களே ஏன்... ஆடை இல்லாம நடிக்கச் சொல்றாரா?"
"ஊஹூம்... 'மேக்கப் இல்லாம' நடிக்கணுமாம்!"



[illegible]
'[illegible] 'Dog' டைம் சொல்லு!'

"என்னோட டிக்ஷனரில பயம்கிற வார்த்தையே கிடையாது."
"எஃப்-ல தேடிப் பாருங்க தலைவரே... ஃபியர்னு இருக்கும்."



''உண்மையிலேயே நீங்க 'தில்'லான ஆளுதான் தலைவரே...!''
''ஏன்யா அப்படிச் சொல்ற...?''
'''தனியா' போட்டி போடப் போறதா சொல்றீங்களே!''





''இப்பல்லாம் என் மாமியார் அடிக்கடி கொட்டாவி விடுறாங்க.''
''ஏண்டி அப்படி?''
''புதுசா மாட்டியிருக்கிற தங்கப்பல் தெரியணும்னுதான்டி!''



"உங்களுக்கும் உங்க மனைவிக்கும் ஒரே ப்ளட் குரூப்!"
"இருக்காதா! இருபது வருஷமா என் ரத்தத்தை உறிஞ்சிக்கிட்டு இருக்காளே!"



Model - Sherin Jose

# "அம்மா தலைக்கு ஒன்னுமே கொண்டு போகல என்று அக்கா சொன்னதை நினைத்து கவிதையாய் வடித்த போது கண்கள் அருவியாகின"



## கவிஞர் கிசோகுமார் உடனான நேர்காணல்

**உங்களைப் பற்றிய அறிமுகத்தை எமது வாசகர்களுக்காக மிகவும் சுருக்கமாகக் கூறுங்கள்?**

நான் கோவிந்தசாமி கிசோகுமார். மலையகத்தின் நுவரெலியா மாவட்டத்தில் கொட்டகலை எனும் நகரத்தை அண்டி அமைந்துள்ள பெரியமண்வெட்டியூர் (டிறைட்டன் என்று அழைப்பார்கள்) என்ற தோட்டத்தினை வசிப்பிடமாகக் கொண்டுள்ளேன். வீட்டில் அம்மா, அப்பா, மனைவி மற்றும் இவர்களுடன் வசிக்கும் எனக்கு ஒரே ஒரு மகள் இருக்கிறாள். அத்துடன் என் அக்காவும் தம்பியும் ஆசிரியர்களாக பணிபுரிகின்றார்கள். நானும் ஒரு அரசாங்கப் பாடசாலையில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் பாட ஆசிரியராக 10 வருடங்களுக்கும் மேலாகப் பணிபுரிந்து வருகின்றேன்.

**உங்கள் கல்லூரி வாழ்க்கை, தொழில் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளலாமே?**

நான் 2008 ஆம் ஆண்டு பத்தனை ஶ்ரீபாத கல்வியற் கல்லூரியில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் பாட கற்பித்தலில் டிப்ளோமா கற்கை நெறியில் இணைந்து கொண்டேன். அங்கு ஆங்கில மொழி மூலமான கற்றல் என்றாலும் தமிழ் கலாசார கலைத் துறைகளிலேயே என்னைப் பெரிதும் ஈடுபடுத்திக் கொண்டேன். சிறுவர், சமூக வரலாற்று நாடகங்களில் மிகுந்த ஆர்வமாக பங்கேற்ற நினைவுகளை இப்போது

நேர்கண்டவர்:
**வெலிகம ரிம்ஸா முஹம்மத்**



மீட்டிப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

அத்துடன் எனக்கு நாடகம், வில்லுபாட்டு, தாளலயம் போன்ற துறைகளில் அதிக நாட்டம் இருந்தது. அதன்பின்னர் 2011 ஆம் ஆண்டு தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் பாட ஆசிரியராக நியமனம் பெற்ற பிறகும். தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் பாடத்தினை கற்பித்தலோடு மட்டும் நிற்காமல் மாணவர்களின் நாடக ஆற்றுகை, கலைத்துறை, இலக்கியத் துறை சார்ந்த முயற்சிகளுக்கு என்னால் முடிந்த உதவிகளையும் வழங்கி அவர்களின் முயற்சிகளில் பங்கேற்பதுமாய் கடமையாற்றும் எனக்கு தொழில் வாழ்க்கை மிகவும் மகிழ்ச்சியாக ஓடிக் கொண்டிருக்கிறது.

**நீங்கள் எப்போது, எந்த வயதில் எழுத்துத் துறைக்குள் நுழைந்தீர்கள்?**



கல்லூரிக் காலத்தில் நூலகத்தில் நிறைய, நிறையக் கற்றலோடு தொடர்புபட்ட புத்தகங்கள் இருந்தபோதும் கவிஞர் வைரமுத்து கவிதை நூல்கள் மற்றும் எழுத்துக்களில் ஈர்க்கப்பட்டதன் காரணமாகவே வாசிக்க ஆரம்பித்தேன். தபுசங்கரின் காதல் கவிதையிலும் மயங்கியிருந்து மெல்ல மெல்ல எழுத ஆரம்பித்தேன். அவையே எனக்கு கவிதையாயின.

**நீங்கள் பல்வேறு வகையான ஆக்கங்களையும் எழுதத் தூண்டப்பட்ட சம்பவங்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**




ஆரம்பத்தில் நண்பர்களோடு சேர்ந்து நானும் விளையாட்டாகக் காதல் கவிதைகளை எழுத ஆரம்பித்திருந்தாலும். ஆசிரியராகி சமூகத்திற்குள் நுழைந்தபோது எம் சமூகத்தில் இலையோடும் அவலங்களே சமூகம் சார்ந்த கவிதைகளை வாசிக்கவும் எழுதவும் தூண்டின. அத்துடன் மலையக மக்கள் கடந்த 150 வருடங்களுக்கும் மேலாக இன்றுவரை எதிர்நோக்கும் இன்னல்கள், அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள், அவர்களின் அறியாமை மற்றும் அவர்களின் எதிர்மறையான சிந்தனைகள் போன்றவை என்னை அதிகமாக யோசிக்கவும் எழுதவும் நிர்ப்பந்தித்தன என்று சொல்லலாம்.

**எத்தனை ஆண்டுகளாகக் கவிதைகளை எழுதி வருகின்றீர்கள்? கவிதைகளை எப்படியான சந்தர்ப்பங்களில் எழுதுகின்றீர்கள்?**

பத்து வருட காலமாகத்தான் எழுதி வருகின்றேன். எப்போதாவது ஏதோ ஒரு நிகழ்வு, ஒரு சம்பவம் அல்லது ஒருவகையான சிந்தனை என்னைப் போட்டு சுழற்றிக்கொண்டும் ஏதேதோ எண்ண ஓட்டங்களை என்னுள் ஓடவிட்டுக் கொண்டும் இருக்கும். அதன் விளைவாக ஏதாவது ஒரு கவிதை அல்லது கவிதைக்கான அடி மனதில் வரைய ஆரம்பிக்கும். அதை மனதிலே வடித்துக் கொண்டே இருப்பேன். நான் திருப்தியடைவது போல் அதற்கான உருவம் கிடைத்தால் உடனே ஏட்டில் எழுதி வைத்து விடுவேன். அல்லது தற்காலங்களில் திறன்பேசியின் நோட்ஸ் எப்பில் குறித்துக் கொள்வேன்.



நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதனை வாசித்துவிட்டு ஏதேனும் மாற்றம் தோன்றினால் அதனையும் திருத்தம் செய்து கொள்வேன்.

**புதுக் கவிதைக்கும், நவீன கவிதைக்கும் இடையே என்ன வேறுபாட்டைக் காண்கின்றீர்கள்?**

மரபுக் கவிதைகளில் இருந்து அமைப்பு ரீதியாக தன்னை விடுவித்துக் கொண்டதுதான் புதுக் கவிதை என்று சொல்லலாம். ஆரம்ப நிலைக் கவிதை வாசகர்களுக்கு புதுக் கவிதைகள் மீதான வாசிப்பே அவர்களை ஈர்க்கச் செய்யும். பொதுவாக புதுக் கவிதைகள், எதுகை மோனைகளிலான மொழி அலங்காரங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகவும் வாசகர்கர்களோடு நெருக்கமான மொழி நடையிலும் இலகுத் தன்மையோடும் எழுதப் படுவதாகவே உணர்கிறேன்.

அதன் பின் வந்த நவீன கவிதைகள் புதுக் கவிதைகளை விட சற்று வேறுபட்டு உருவகங்கள், படிமங்கள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து பரவலாக எழுதப்படுவதாகவே அறிகின்றேன்.

நவீன கவிதைகள் அதி உணர்ச்சி மிக்கதாகவும் வீச்சு மிக்கதாகவும் எழுதப்படுகின்றன. ஆழமான வாசிப்பின் ஊடாகவே பின் வந்த நவீன கவிதைகளை ஒரு வாசகரால் இலகுவாக உள்வாங்கிக் கொள்ள முடியும் என்பது எனது கருத்தாகும்.

(தொடர் 7ஆம் பக்கம்)

**உங்கள் கவிதைகள் மூலம் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று திடமாக நம்புகின்றீர்களா?**

கவிதைகளால் எத்தனையோ மாற்றங்களும் புரட்சிகளும் நிகழ்ந்த இந்தப் பூமியில் நமது கவிதைகளும் என்றாவது ஒரு நாள் யாரிடமாவது ஏதாவது ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விடாதா என்றுதான் ஒவ்வொரு கவிஞனும் முயல்கின்றான். நானும் அதற்கு விதிவிலக்கானவன் அல்ல.

**உங்களைக் கவர்ந்த கவிஞர் யார்? அவரது எந்தப் படைப்பு உங்களை மிகவும் கவர்ந்தது?**

முதல் வாசிப்பில் வைரமுத்துவின் எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டு பின் நாட்களிலில் பாரதியின் கவிதைகள் வாசிப்பால் வியக்கப்பட்டு, பாதிக்கப்பட்டு கவிதை உலகத்திற்குள் நானும்







உள்வாங்கப்பட்டேன். பாரதியின் அத்தனை கவிதைகளும் எனக்கு மிகவும் பிடித்தமானவை. தவிர வைரமுத்துவின் இந்தப் பூக்கள் விற்பனைக்கல்ல, மு. மேத்தாவின் கண்ணீர்ப் பூக்கள் போன்ற நூல்கள் குறிப்பிட்டுக் கூறப்படக் கூடியன. மேலும் மனுஷபுத்திரன், நா. முத்துகுமார், கலீல் ஜிப்ரான், ஈழத்து கவிஞர்களில் சிவசேகரம் ஐயா ஆகியோரின் கவிதைகள் மிகவும் பிடித்தமானவை.

**கவிதைகள் எவ்வாறு படைக்கப்பட வேண்டும்? ஒரு சிறந்த கவிதை எவற்றைப் பிரதிபலிக்க வேண்டும்?**

என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் கவிதை என்பதை ஒரு புதினமான ஒரு அழகியலுடனான எண்ண வெளிப்பாடாகவே உணர்கிறேன். ஒரு சம்பவம், ஒரு தருணம், ஒரு உணர்வு, ஒரு அனுபவம் போன்றவை கவிதை ஒன்றை எமக்குக்குள் ஊற்றெடுக்க வைக்கும் போது அது வாசகர்களை ஈர்க்கச் செய்ய வேண்டும். ஒரு நுணுக்கமான மொழியாடலால் பிணைக்கப்பட்டு தேவை ஏற்படின் தேவையான அளவான படிமங்களோடு வாசிப்பவர் ஆர்வத்தைத் தூண்டும் விதமாக வடிக்கப்படும் கவிதைகளே சிறந்த கவிதைகளாக அறியப்படுகின்றன என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**கவிஞராக இருக்கும் நீங்கள் சக கவிஞர்களின் கவிதைகளை எப்படிப் பார்க்கின்றீர்கள்?**

சக கவிஞர்களின் கவிதைகளை எனக்கு உசாத்துணையாகவே எடுத்துக் கொள்கிறேன். அவர்களுடைய கற்பனை, பார்வை, தளம் பற்றி அறிந்து கொண்டு காலத்திற்க்கு ஏற்றாற் போல எனது எழுத்துக்களையும் சீர் செய்து கொள்கிறேன்.

**நீங்கள் இதுவரை எழுதியுள்ள கவிதைகளில் உங்களுக்குப் பிடித்தமான கவிதை எது? என்ன காரணம்?**

நான் எழுதிய பல கவிதைகளில் மழை பற்றிய கவிதை ஒன்றையே எனக்கு மிகவும் பிடித்தமான கவிதை ஒன்றாக முன்வைக்க விரும்புகின்றேன்.

### மழை!

*இடி கலந்த அடை மழை*
*அனுப்பி விட்டேன்*
*பிள்ளைகளை மழை ரசிக்க..*

*ஒரு பிள்ளை மட்டும்*
*தனிப் பிள்ளையாய்*
*ஏதோ கலக்கத்தில்*
*ஒதுங்கி நிற்க..*

*விழித்தேன்..*
*விரைந்தேன்..*
*வினவினேன்..*

*விடை கிடைத்ததும்*
*என் கண்கள் இரண்டிலுமே*
*கண்ணீர்..*

*"அம்மா தலைக்கு*
*ஒன்னுமே கொண்டு*
*போகல சேர்..'*

மலையகப் பிரதேசங்களில் தேயிலை கொழுந்து பறிக்கச் செல்லும் எம் அம்மாக்களுக்கு மழை, வெயில், காற்று, வெள்ளம் என எந்த தயவு தாட்சணையும் கிடையாது. வேலைக்குச் சென்றே ஆக வேண்டும். மழைக் காலங்களில் ஈரம், குளிர் வாடையில் இருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள பொலிதீன் விரிப்புகளை உடலில் சுற்றிகொண்டும், தலைக்கு போர்த்திக் கொண்டும் வேலைக்குச் செல்ல வேண்டும். அப்படி ஒரு மழைக் காலத்தில் சின்ன வயதில் என்னுடைய அக்கா சொன்னார். "அம்மா தலைக்கு ஒன்னுமே கொண்டு போகல" என்று. அதனை கவிதையாகப் பதிவு செய்யும் போதும் நினைக்கும் போதும் எனது கண்கள் ஈரமாகும்.

**இலக்கிய இரசனையுள்ளவர்கள் நூல்களை வெளியிடுவது வழமை. அந்தவகையில் நீங்கள் இதுவரை வெளியிட்டுள்ள நூல் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

"மூங்கில் கூடை' என்ற மகுடத்தில் அமைந்த ஒரே ஒரு கவிதை நூலைத்தான் நான் இதுவரை வெளியிட்டிருக்கிறேன். இந்தக் கவிதை நூல் 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்த நூலுக்கான அணிந்துரையை மூத்த எழுத்தாளர் கல்வியியலாளர் மொழிவரதன் அவர்கள் எழுதியுள்ளார்கள். வாழ்த்துக் கவிதையை தலவாக்கலை தமிழ்ச் சங்கத் தலைவர் சு. சுரேஷ் அவர்கள் வழங்கியுள்ளார். 78 பக்கங்களில் அமைந்துள்ள இந்தக் கவிதை நூலில் 59 சிறியதும் பெரியதுமான கவிதைகள் இடம்பிடித்துள்ளன.

**நீங்கள் எழுதிய முதலாவது நூலை வெளியிடும் போது உங்களுக்கு ஏற்பட்ட மன உணர்வு எப்படி இருந்தது? உங்கள் நூல் வெளியீடுகளுக்கு உந்து சக்தியாக இருந்தவர்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

கவிதை எழுத ஆரம்பித்ததுமே நூலொன்றாக வெளியிட வேண்டும் என்று மனதில் நினைத்துக் கொண்டே இருப்பேன். அதன்படி ஒரு பெரிய பிரயத்தனத்தோடு என் கவிதைகள் ஷஷமூங்கில் கூடை' என்ற கவிதை நூலானது. அதற்குப் பக்க பலமாக மலையக கல்வி அபிவிருத்தி மன்றம் மற்றும் தலவாக்கலை தமிழ் சங்கத்தினர் பெறும் துணை நின்றார்கள்.

**உங்கள் மூங்கில் கூடை' கவிதை நூலில் உள்ளடங்கியுள்ள கருப்பொருட்கள் பற்றிக் குறிப்பிடுங்கள்?**

கருப்பொருட்கள் என்று பார்த்தால் எம் மலையக மண் சார்ந்த அவலங்களைத்தான் மூங்கில் கூடை' கவிதை நூலில் பரவலாக கவிதையாக்கி வாசகர்களுக்கு முன்வைத்துள்ளேன். இன்னும் ஒரு வகையில் கூறுவதாயின் எம் மண்ணின் மீதும் மண்ணின் மைந்தர்கள் மீதும் கொண்ட அதீத அன்பே எனது கவிதைகளின் பாடு பொருள்களாகியது என்றும் சொல்லலாம்.

**உங்கள் நூலினூடாக இலக்கிய உலகுக்கு குறிப்பாகக் குறிப்பிட விரும்புவது என்ன?**

அப்படி ஒன்றும் பெரிதாக நினைத்து எழுதவில்லை. எனக்குள் தோன்றும் கற்பனை அலைகளை எனக்கு வருவது போல் சுதந்திரமாகவே எழுதியுள்ளேன்.

**நீங்கள் எழுதியுள்ள சிறுகதைகள் பற்றியும் சொல்லாமே? சிறுகதைகளுக்கான கருப்பொருட்களை எப்படிப் பெற்றுக்கொள்கின்றீர்கள்?**

எனக்கு சிறுகதை வாசிப்பதில் அதீத ஆர்வம் எப்போதுமே உண்டு. கவிதையினால் சொல்லி முடிக்க முடியாத சிந்தனைகளை எனக்கு தெரிந்த மொழி நடைகளைப் பயன்படுத்தி அதற்கொரு கதை வடிவம் கொடுக்க முயல்கின்றேன் என்று சொல்லலாம். அது ஒரு முழுமையான சிறுகதைக் கட்டமைப்பைக் கொண்டு நகர்கிறதா என்ற ஐயம் எனக்குள் அடிக்கடி தோன்றும். ஆனாலும் வாசகர்கள் ஏதாவது ஒரு சட்டகத்தினைப் பொருத்தி அதனை ஏற்றுக்கொள்வார்கள் என்ற நம்பிகையுடனே தொடர்ந்தும் எழுதுகின்றேன்.

சிறுகதைகளுக்கான கருப்பொருட்கள் அனைத்துமே நமது அன்றாட வாழ்கை ஓட்டத்தில் எதிர்படுகின்ற, கடந்து போகின்ற சம்பவங்களில் இருந்தே உருவி எடுத்து தேவைக்கு ஏற்ற கற்பனைகளோடு சொல்ல நினைக்கின்றேன்.

**சஞ்சிகைகளில் உங்களது படைப்புகளின் பங்களிப்புக்கள் எப்படி இருக்கிறது?**

முன்பு ஒரு சில சஞ்சிகைகளில் தொடர்ந்து எழுதி வந்தேன். தற்போது முகநூல் போன்ற டிஜிட்டல் தளங்களின் மேலான ஈர்ப்பு வாசகர்கள் மத்தியில் பிரபல்யமடைந்திருப்பதால் அவ்வாறான தளங்களிலேயே என்னுடை எழுத்துகளைப் பதிவேற்றுவதை வழக்கமாகக் கொண்டுவிட்டேன்.

**கவிதை, சிறுகதைத் துறை தவிர வேறு எந்தத் துறைகளில் ஆர்வம் காட்டி வருகிறீர்கள்?**

மேடை நாடங்களில் எனக்கு அதிக ஈடுபாடு உண்டு. மலையகத்தின் முதன்மையான நாடக கலைஞர் திரு. மு.காளிதாஸ் அவர்களின் களரி அரங்க நிதியத்துடன் இனணந்து அவருடைய ஆற்றுகைகளின் அவ்வப்போது இணைந்துகொள்வேன். கடந்த ஐந்து வருடங்களுக்கும் மேலாக அவரின் பல்வேறு மேடை நாடகங்களில் பங்காற்றி இருக்கிறேன்.

**உங்கள் நூல்களுக்கு எவ்வகையான விமர்சனத்தை வாசகர்கள் முன்வைத்தார்கள்?**

வளர்ந்து வரும் கவிஞராக என்னை வாசகர்கள் ஏற்றுக்கொண்டார்கள் என்று நம்புகிறேன். அத்துடன் என் கதைகளுக்கும் கூட ஓரளவு அங்கிகாரத்தினை வழங்கி இருக்கிறார்கள் என்று அவர்கள் வழங்கிய கவிதை பற்றிய கருத்துப் பகிர்வுகள் வாயிலாக அறிந்துகொண்டேன்.

**ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களிடையே காணப்படும் வாசிப்பு ஆர்வம் எந்த நிலையில் உள்ளதாக நினைக்கிறீர்கள்?**

தற்கால மாணவர்களிடையே இலக்கிய வாசிப்பானது மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகிறது என்ற துர்ப்;பாக்கிய நிலையை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். மாணவர்களிடையே பாட நூல் வாசிப்பில் கூட மந்த நிலைதான் காணப்படுகிறது. இதற்கு நவீன ஊடகங்களின் செல்வாக்கே பிரதான காரணியாகும். பரீட்சைக்கான படிப்பு என்று அவர்களின் தேடலும் மட்டுப்படுத்தப்படுவதால் அவர்களின் பரந்துபட்ட வாசிப்புக்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே காணப்படுகிறது. அதனை மாற்றி அமைப்பதற்கான முயற்சியில் ஆசிரியர்களின் பங்களிப்பே இன்று அதிகம் தேவையான ஒன்றாக அமைந்துள்ளது.

**உங்களுக்கு அல்லது உங்களது கவிதைகளுக்கு கிடைத்த ஆதரவுகள் அல்லது வரவேற்புகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

நான் ஏற்கனவே கூறியது போல சமூக வலைதளங்களையே என்னுடைய எழுத்துக்கான தளமாக மாற்றி எழுதிக் கொண்டிருப்பதால் அங்கு பல்வேறு வகையான வாசகர் மட்டங்களில் இருந்து உடனுக்குடன் ஆரோக்கியமான பின்னூட்டல்கள், ஆதரவுகள், வரவேற்புகள் என்ற வகையிலான பதிவுகள் அவ்வப்போது கிடைக்கும். ஒரு சிலர் நேரிலோ அல்லது தொலைபேசியில் அழைத்தோ கருத்துக்களையும் வாழ்த்துகளையும் தெரிவிப்பார்கள். அவை மேலும் இயங்குவதற்கான பிரயத்தனத்தினை எனக்குள் ஏற்படுத்தும்.

**நிறைவாக என்ன கூற விரும்புகிறீர்கள்?**

வாசிப்பு இன்றிய எழுத்துக்கள் ஒரு போதும் அனைவராலும் வாசிக்கப்பட மாட்டாது. முதலில் ஆழமான வாசகனாக என்னை உருவாக்கிக்கொள்ளவே விரும்புகிறேன். நிறைவாக என்னைப் போன்ற புதிய இலக்கிய முயற்சியாளர்களை இணங்கண்டு அவர்களுக்கு இவ்வாறானதொரு செவ்வியின் ஊடாக களம் தந்து அடையாளப்படுத்தும் உங்களின் பணி மிக்க வரவேற்கத் தக்கது. இந்த நேர்காணலைப் பிரசுரிக்கும் தினகரன் பத்திரிகையின் செந்தூரம் இதழுக்கும் உங்களுக்கும் மிக்க நன்றிகள்!!!

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

எஸ்.பார்த்தசாரதி, வவுனியா.

**கேள்வி:** மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்.அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது ஒரு படத்தில் நடித்து அந்த படத்திற்கு இளையராஜா இசை அமைத்தாராமே... உண்மையா..மொழி.?

**பதில்:** அப்படி ஒரு ஏற்பாடு செய்யப்பட்டது உண்மைதான். ஒருநாள் தனது நெருங்கிய நண்பரான குஞ்சப்பனை அழைத்து "நான் மீண்டும் படம் நடிக்கப் போகிறேன். வாலியிடம் போய் கதையை எழுதச் சொல்"என்றார். நம்ப முடியாதவராக கவிஞர் வாலியிடம் ஓடிச் சென்ற குஞ்சப்பன்,விசயத்தை அவரிடம் சொன்னார் .

வாலியால் இதை நம்பமுடியவில்லை.ஒரு மாநிலத்தின் முதல் அமைச்சர் ஒருவர் திரைப்படத்தில் நடிப்பதா!.

"என்ன குஞ்சப்பன் உண்மையா தான் சொல்றீங்களா..."என்றார் வாலி.

"ஆமாங்க...நான் சொல்றது பொய்ன்னா அண்ணன் கிட்டேயே கேட்டுப்பாருங்களேன்!"என்றார். உடனே எம். ஜி.ஆருக்கு போன் செய்தார் வாலி.

"அண்ணே... குஞ்சப்பன் நீங்க படத்துல நடிக்கப்போறதா ..சொல்றாரே...!"

"ஆமா..அது உண்மைதான்.. நான் படத்துல நடிக்கிறதுல எந்த பிரச்சினையும் இல்லேன்னு மத்திய அரசு சொல்லியிருக்கு...பிரதமர்கிட்ட இருந்து இதற்கான அனுமதியை நான் பெற்றுக் கொள்கிறேன்." எம்.ஜி.ஆர். மகிழ்ச்சியடைந்த வாலி கதையை எழுத ஆரம்பித்தார். பத்து நாளில் கதையை எழுதி முடித்துவிட்டார் கவிஞர் வாலி.

கதையைக் கேட்ட எம்.ஜி.ஆருக்கு அது ரெம்பவும் பிடித்து போய்விட்டது" கதைக்கு என்ன பேர் வச்சிருக்கீங்க கவிஞரே?" என்று எம்.ஜி.ஆர்.கேட்டபோது,

"உன்னை விட மாட்டேன்" என்று பேர் வச்சிருக்கேன் அண்ணே" என்றார் வாலி.

இதைக் கேட்டதும் எம்.ஜி.ஆர். முகத்தில் மகிழ்ச்சிப் புன்னகை அரும்பியது. அன்றைய அரசியல் சூழ்நிலையில் அது பொருத்தமான பெயராகவே இருந்தது.

படத்தின் தயாரிப்பாளர் தர்மராஜுடன் அமர்ந்து எம்.ஜி .ஆரும் வாலியும் இசை அமைப்பாளராக யாரை போடலாம் என்று கலந்துரையாடினார்கள்.

"புதிதாக வந்திருக்கும் அந்த பையனையே ஜி போடலாமே" என்றார் எம்.ஜி.ஆர்..

"யார் அண்ணே இளையராஜாவை தானே சொல்றீங்க?" என்று வாலி கேட்டார்.

"ஆமாம்"என்றார். எம். ஜி.ஆர்.

இளையராஜா ஒப்பந்தம் செய்யப் பட்டார். முதலில் ஒரு பாடலுக்கு இசை அமைக்கப்பட்டு அதை இளையராஜா பாடிகாட்டினார்.எம்.ஜி.ஆருக்கு அந்த பாடல் ரொம்பவும் பிடித்து விட்டது.

டி.எம்.எஸ். குரலில் அந்தப் பாடல் ஒலிப்பதிவு செய்யப்பட்டு எம்.ஜி.ஆருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆனாலும் டி.எம்.எஸ். பாடியவிதம் எம்.ஜி.ஆருக்கு பிடிக்க வில்லை. மீண்டும் ஒலிப் பதிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டது. அதுவும் அவருக்கு பிடிக்க வில்லை. பிறகு மலேசியா வாசுதேவனைப் பாடவைத்து ஒலிப்பதிவு செய்தார்கள். அதுவும் எம்.ஜி.ஆருக்கு பிடிக்கவில்லை. இறுதியில் இளையராஜாவையே எம்.ஜி.ஆர் பாடச் சொன்னார்.

படத்திற்கு ஆரம்ப விழா எல்லாம் பிரமாதமாக நடந்தது. ஆனாலும் என்ன காரணமோ தெரிய வில்லை படம் பாதியிலேயே நின்றுவிட்டது.

எஸ்.கே.மோசஸ், மன்னார்.

**கேள்வி:** சிவாஜி கணேசனுடன் அதிகப் படங்களில் ஜோடி சேர்ந்து நடித்த நடிகை யார் என்று சொல்லுங்களேன்.

**பதில்:** Sriபிரியா.

**சினி பஜார் கேள்வி பதில்,**
தினகரன் வார மஞ்சரி,
லேக் ஹவுஸ், கொழும்பு-10.



# சிம்புவுக்கு சித்தி இன்னானியின் காதல் ரோஜா

**வெந்து** தணிந்தது காடு' படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக நடித்திருப்பவர் சித்தி இட்னானி. இவர் சமீபத்திய அளித்த பேட்டியில் சிம்பு குறித்து பேசியுள்ளார். கவுதம் மேனன் இயக்கத்தில் சிம்பு நடித்து நேற்று வெளியான 'வெந்து தணிந்தது காடு' படத்தில் அவருக்கு ஜோடியாக குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த நடிகை சித்தி இட்னானி நடித்துள்ளார். சிம்புவுக்கு அம்மாவாக ராதிகா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். சித்தி இட்னானி சமீபத்தில் ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவரிடம், "காதல் ரோஜாக்களை பரிசளிக்க வேண்டுமென்றால் யாருக்கு கொடுப்பீர்கள்?" என்று கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த சித்தி இட்னானி, "அனைவருக்குமே தெரியும். தமிழகத்தின் தகுதியான 'பேச்சிலர்' சிம்புதான் என்று. எனவே காதல் ரோஜாக்களை அவரிடம்தான் கொடுப்பேன்" என்றார். மேலும் அவர் கூறுகையில், "சிம்பு விரைவில் திருமண பந்தத்தில் இணைய வேண்டும்.

அவருக்கான ஜோடி விரைவில் வந்து அவருடன் இணைய இறைவனை வேண்டுகிறேன்" என்று குறிப்பிட்டார்.

# தமிழ் திரை உலகில் கன்னட நடிகை



**க**ன்னட திரைஉலகில் பிரபல நடிகையாக இருந்து வருபவர் சர்மிளா மாந்த்ரே. இவர் கன்னடத்தில் 'காலிபாடா2', 'சஜனி', 'தச்ரா' உள்பட ஏராளமான படங்களில் கதாநாயகியாக நடித்துள்ளார். இவர் நடித்த படங்களில் பல படங்கள் மாபெரும் வெற்றி அடைந்துள்ளன. இந்த நிலையில் இவர் தமிழ் திரைஉலகில் கால் பதித்துள்ளார். இயக்குனர் பாலாஜி மோகன் இயக்கத்தில் 'காதல் கொஞ்சம் தூக்கல்' என்ற படத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தில் நடிகை அமலா பால் முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு லண்டனில் நடந்து வருகிறது. இந்த நிலையில் நடிகை சர்மிளா மாந்த்ரேவின் கவர்ச்சி படங்கள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகின்றன. அதைப்பார்த்த நடிகை சர்மிளா மாந்த்ரேவின் ரசிகர்கள் பலரும் அவரது வசீகர அழகை புகழ்ந்து வருகிறார்கள்.

# சர்ச்சையில் அமலாபால்



**தெ**லுங்கு சினிமாவை விமர்சித்து அமலாபால் பேசிய பேச்சுக்கு கண்டனங்கள் வலுத்து வருகின்றன. சமீபகாலமாக அமலா பாலை சுற்றி சர்ச்சைகள் வலுத்து வருகின்றன. அவர் 2வது திருமணம் செய்து கொண்டதாகவும் தகவல்கள் வெளியானது. தற்போது மீண்டும் ஒரு சர்ச்சையில் அவர் சிக்கி இருக்கிறார். சமீபத்தில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அமலாபால் அங்கு பல்வேறு கருத்துகளை பகிர்ந்து கொண்டார். அப்போது தெலுங்கு சினிமா குறித்தும் சில கருத்துகளை அவர் முன் வைத்து பேசினார்.

அதில், "தெலுங்கு திரையுலகுக்கு நான் சென்ற போது, அங்கு கமர்ஷியல் படங்களே ஆட்சி செய்வதை அறிந்தேன். பாடல் மற்றும் காதல் காட்சிகளுக்கு மட்டுமே கதாநாயகிகளின் தேவை இருக்கிறது.

மேலும் அவர்கள் எடுத்து வரும் திரைப்படங்கள் மிகவும் வித்தியாசமாக இருந்தன. எப்போதும் 2 கதாநாயகிகள், காதல் காட்சிகள், பாடல்கள் என எல்லாமே கவர்ச்சியாக இருந்தது. எனவே அந்த திரையுலகில் என்னை இணைத்து கொள்ள விரும்பவில்லை.

அதனால்தான் தெலுங்கில் நான் மிகவும் குறைவான படங்களிலேயே நடித்தேன். தற்போது நீண்ட காலமாக தெலுங்கு சினிமாவை விட்டு விலகி இருக்கிறேன்" என்று பேசியிருந்தார். தெலுங்கு சினிமாவை விமர்சித்து அமலாபால் பேசிய பேச்சுக்கு கண்டனங்கள் வலுத்து வருகின்றன.

# சமந்தா போல 'இடுப்பழகி' இலியானா



**ச**மந்தா போல இலியானாவும் வெப் தொடரில் நடிக்கிறார். இந்திய சினிமாவின் 'இடுப்பழகி' என்று வர்ணிக்கப்படும் இலியானாவுக்கு ரசிகர்கள் ஏராளம். தமிழில் 'கேடி', 'நண்பன்' படங்களில் நடித்திருந்தார். தமிழ், தெலுங்கு படங்களில் மட்டும் நடித்து வந்த இலியானா 2012ம் ஆண்டுக்கு பிறகு இந்தி படங்களில் மட்டுமே நடித்து வருகிறார். இலியானா நடிப்பில் 2 இந்தி படங்கள் வெளி வர தயாராக இருக்கின்றன. இதற்கிடையில் வெப் தொடரில் நடிக்க இலியானா சம்மதம் தெரிவித்திருக்கிறார். சமந்தா வெப் தொடரில் நடித்துதான், தற்போது 'பான் இந்தியா ஸ்டார்' ஆக வலம் வருகிறார். அவரது இந்த அசுர வளர்ச்சியை பார்த்து முன்னணி நடிகைகள் வியந்து வருகிறார்கள். அந்த வகையில் சமந்தா போல இலியானாவும் வெப் தொடரில் நடிக்கிறார். பெண்களை மையப்படுத்தி உருவாகும் இந்த தொடரை கரிஷ்மா கோலி இயக்குகிறார். இலியானாவை தொடர்ந்து முன்னணி இந்தி நடிகைகளும் வெப் தொடரில் நடிப்பது குறித்து தீவிரமாக யோசித்து வருகிறார்களாம்.

# சிகிச்சைக்கு பணம் இன்றி தவிக்கும் பழம்பெரும் நடிகை ஜெய்குமாரி

**சி**கிச்சைக்கு பணம் இன்றி தவிப்பதாக பழம்பெரும் நடிகை ஜெய்குமாரி தெரிவித்துள்ளார். பழம்பெரும் கவர்ச்சி நடிகை ஜெய்குமாரி (வயது 72). 1966ம் ஆண்டு வெளியான எம்.ஜி.ஆர். நடித்த நாடோடி திரைப்படத்தில் வில்லன் நடிகர் நம்பியாருக்கு கண் தெரியாத தங்கையாக நடித்து திரை உலகில் அறிமுகம் ஆகி உள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி மொழிகளில் 400க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ள ஜெய்குமாரி தற்போது சென்னை வேளச்சேரியில் வாடகை வீட்டில் வசித்து வருகிறார். கடந்த ஒரு மாத காலமாக வயிற்று வலியால் அவதிப்பட்டு நங்கநல்லூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த ஜெய்குமாரிக்கு 2 சிறுநீரகங்களிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது தெரிய வந்துள்ளதுடன் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற டாக்டர் அறிவுறுத்தி உள்ளார். ஆனால், சிகிச்சைக்கு தேவையான பணம் இல்லாத காரணத்தால் ஜெய்குமாரி ஆஸ்பத்திரியில் உள்நோயாளியாக சேராமல் சமாளித்து வந்துள்ளார். இந்த நிலையில் வயிற்றுவலி அதிகமானதால், சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

தற்போது அவருக்கு வலிநிவாரண மருந்துகள் வழங்கப்பட்டு வருவதாகவும், திங்கட்கிழமை (நாளை) ஸ்கேன் முடிவு தெரியவரும் என்றும், அதன் பிறகு நோயின் தாக்கத்திற்கு ஏற்ப உரிய மருத்துவ சிகிச்சை வழங்கப்படும் என்று டாக்டர்கள் தெரிவித்தனர். இவருக்கு ஒரு மகன், 2 மகள்கள் இருந்தும் இதுவரை ஆஸ்பத்திரியில் வந்து யாரும் கவனிக்கவில்லை. இந்தநிலையில் நடிகை ஜெய்குமாரி அளித்த பேட்டியில் கூறியதாவது: என்னை எனது மகன் நன்கு கவனித்த போதிலும், குடும்ப சூழல் காரணமாக தனியாக வசித்து வருகிறேன். அன்றாட செலவுகள் கழிந்தாலும், இது போன்ற நோய்களுக்கு தனியார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் அளவிற்கு பணம் என்னிடம் இல்லாத காரணத்தால் உயர் சிகிச்சைக்காக இங்கு வந்து சேர்ந்துள்ளேன். முன்னாள் முதல்அமைச்சர் கருணாநிதிக்கு என்னை நன்கு தெரியும். தற்போது அவரது மகன் மு.க.ஸ்டாலின் முதல் அமைச்சராக உள்ளார்.

அவர் எனக்கு உயர்தர சிகிச்சை அளிக்க உதவி செய்தால் நன்றாக இருக்கும். அதையும், அவரிடம் கேட்க என் மனம் அஞ்சுகிறது. அவரின் கருணை பார்வை என் மீது பட்டால் போதும் என அவர் கூறினார்.





# ஆண்கள் சட்டையில் வலது பக்கமும், பெண்கள் சட்டையில் இடது பக்கமும் பட்டன் எதற்கு?

தினமும் சட்டை போட்டுக் கொள்ளும் நாம் பெண்கள் சட்டையில் இடது பக்கமும், ஆண்கள் சட்டையில் வலது பக்கமும் ஏன் பட்டன் வைக்கப்பட்டு இருக்கிறது என்று யோசித்து இருக்கிறோமா?

விக்டோரியா மகாராணி காலத்தில் சட்டை போட்டுக் கொள்வது என்பதும், அதில் பட்டன் வைத்துக் கொள்வது என்பதெல்லாம் பெஷனாகவும், பணக்காரர்களுக்கான ஒன்றாகவும் பார்க்கப்பட்டது. அந்தக் காலத்தில் பணக்காரர்கள் மட்டுமே சட்டை போன்ற நாகரீக ஆடைகளை அணிந்து வந்தனர். அவர்களுக்கு ஆடை உடுத்தி விடுவதற்கு பணிப் பெண்கள் பணியாற்றி வந்தனர்.

பொதுவாக இந்தப் பணிப் பெண்கள் அனைவரும் வலது கைப் பழக்கம் உடையவர்கள். சட்டை மாட்டி விடும்போது, வலது பக்கம் பட்டன் இருந்தால் இவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதால், வலது கை பக்கம் பெண்கள் சட்டையில் பட்டன் வைக்கும் பழக்கம் ஏற்பட்டது. இவ்வளவுதான். இதில் பெரிய தந்திரம் எதுவும் இல்லை.

ஆண்கள் தாங்களாகவே பட்டன் மாட்டிக் கொள்வார்கள் என்பதால், அவர்களுக்கு ஏற்ப வலது கை பக்கம் பட்டன் வைக்கப்பட்டுள்ளது. ஆக, வசதிக்கு ஏற்பத்தான் சட்டையில் பட்டன் வைக்கப்பட்டுள்ளது. இதில் எந்த மர்மமும் இல்லை, ரகசியமும் இல்லை.

# அழகுக்கு அழகு சேர்க்கும் பால்

பால் நாம் அன்றாடம் பயன்படுத்தும் பொருளாகும், இவற்றில் இருக்கும் ஊட்டச்சத்துக்கள் நம் உடலுக்கு அதிக ஆரோக்கியத்தை அளிக்கக்கூடியவை என்று அனைவருக்குமே தெரியும்.

தினமும் பால் குடித்து வந்தால் எலும்புகள் வலுவாகும் என்று அனைவருக்கும் தெரியும் ஆனால் பாலை தினமும் முகத்தில் தடவி வந்தால் முகமும் அதிக அழகு பெரும் என்று யாருக்காவது தெரியுமா.

அட ஆமாங்க பாலை தினமும் முகத்தில் தடவி சிலநேரம் மசாஜ் செய்தோம் என்றால் முகம் மிகவும் அழகாகவும், பொலிவுடனும், முகம் மிகவும் மென்மையாகவும் இருக்கும்.



அதுமட்டும் இன்றி முகத்தில் ஏற்படும் கரும்புள்ளிகள், தேமல்கள், அலர்ஜி, வறண்ட சருமம், முகத்தில் தோன்றும் பருக்கள் மற்றும் முக சுருக்கங்கள் ஆகிய பிரச்சினைகளை குணப்படுத்த பால் மிகவும் உதவுகிறது.

சருமத்தை என்றும் இளமையாக வைத்துக்கொள்ள (azhagu kurippu) தினமும் பாலை முகத்தில் தடவிவர வேண்டும்.

இதன் மூலம் முகத்தில் தோன்றும் இறந்த செல்களை வெளியேற்றி, புதிய செல்களை பிறக்க வைப்பதுடன் முகத்தையும் பளபளக்க செய்யும்.

முகத்தில் தோன்றும் சுருக்கங்களை அகற்றி முகத்தை என்றும் இளமையாக வைத்துக்கொள்கிறது.

வாரத்தில் இரு முறையாவது உடல் முழுக்க பாலை தடவி அல்லது குளிக்கும் நீரில் பாலை கலந்து குளித்து வரலாம். இதன் மூலம் முகத்தில் தோன்றும் எண்ணெய் பசை மற்றும் இறந்த செல்கள் முற்றிலும் அகன்று, முகம் பொலிவுடன் காணப்படும்.

மேலும் உடல் ஆரோக்கியத்திற்கு மிகவும் நல்லது.

# கர்ப்பிணிகள் கண்ணுறங்க வேண்டிய முறை

கர்ப்ப காலத்தில் கர்ப்பிணி பெண்கள் தூங்கும் நிலை (*Sleeping Position During Pregnancy*) மற்றும் எல்லா செயல்களையும் கருவுற்ற நாள் முதல் பிரசவக்காலம் வரை எதை செய்தாலும் அது வயிற்றில் இருக்கும் குழந்தையை பாதிக்காதவாறு செய்ய வேண்டும். உணவு முறை, வாழ்க்கை முறை என ஒவ்வொன்றிலும் அதி கவனமாக இருக்க வேண்டும்.

உடல் ஆரோக்கியத்துக்கு ஒய்வு அவசியம். கர்ப்பகாலத்தில் தூக்கமின்மை பிரச்சனை இருந்தாலும் தூக்கம் அவசியம். அதே நேரம் கர்ப்பிணிகள் தூங்கும் முறையை வீட்டில் இருப்பவர்களும் மருத்துவர்களும் பரிந்துரைப்பார்கள்.

கர்ப்பிணி பெண்கள் இடதுபக்கத்தில் படுக்கும் போது அது சிறப்பான ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்று சொல்லப்படுகிறது

உடலின் இடது பக்கத்தில் படுக்கும் போது ரத்த ஓட்டம் தடையில்லாமல் செல்கிறது. நமது முதுகெலும்புக்கு இணையாக இயங்கும் பெரிய நரம்பு இது. இடது பக்கம் படுப்பதால் இதயத்துக்கு ரத்தம் தடையில்லாமல் கிடைக்கும். குழந்தைக்கும் போதுமான ரத்தம் கிடைக்கும். குழந்தைக்கு ஊட்டச்சத்து அளவையும் அதிகரிக்க செய்யும்.

அதேநேரம் இடது பக்கத்தில் தூங்குவது கல்லீரல் மற்றும் சிறுநீரகங்களின் மீது அழுத்தம் கொடுக்கும். வெகு அரிதாக கைகள், கணுக்கால் மற்றும் கால்களில் வீக்கத்தையும் கொடுக்க கூடும். இது வெகு அரிதாக என்பதால் பயம் கொள்ள தேவையில்லை.

இடதுபக்கம் சிறப்பாக இருப்பதால் இடது பக்கம் தான் தூங்க வேண்டும் வலது பக்கத்தை தவிர்க்க வேண்டும் என்பது கிடையாது. ஏனெனில் 2019 ஆம் ஆண்டு இடது மற்றும் வலது பக்கங்களில் தூங்குவதன் மூலம் அவை பாதுகாப்பையே காட்டியது. வலது பக்கம் தூங்கும் போது ஜவிசி உடனான சிக்கல்கள் குறையக்கூடும். இது வசதியாகவும் இருக்கும்.



கருவுற்ற முதல் ட்ரைமெஸ்டரில் நீங்கள் தூங்கும் போது பெரும்பாலும் தூக்கத்தால் அசௌகரியம் உண்டாகாது. மசக்கையால் தான் அசௌகரியத்தை சந்திப்பீர்கள்.

அதேநேரம் குப்புறப்படுத்து தூங்கும் பழக்கம் உள்ள பெண்களுக்கு கர்ப்பகாலம் பயனளிக்காது. சற்று கவனம் சிதறியும் கூட இப்படி படுக்க கூடாது. தூங்கும் போது அசௌகரியம் உணர்ந்தால் நீங்கள் இரண்டு கால்களுக்கு இடையே தலையணையை வைக்க முயற்சிக்கலாம்.

# பருக்கள் பக்கம் வராமல் தடுக்க



முகத்தில் பருக்கள் இருந்தால் அது முகத்தின் பொலிவையே கெடுத்துவிடும். அப்படி முக அழகைக் கெடுக்கும் பருக்களை இருந்த இடம் தெரியாமல் விரட்ட நம்முடைய குசினியில் உள்ள சின்ன சின்ன பொருட்களே போதும். அவற்றை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று மட்டும் தெரிந்தால் போதும்.

பருக்கள் உண்டாகப் பல காரணங்கள் இருக்கின்றன. சருமத்தின் அடியில் சீபம் என்னும் ஒயில் சுரக்கிறது. அந்த சீபம் வெளிவர முடியாமல் தேங்கி நிற்கும். அந்த சருமத் துளைகளில் பக்டீரியா போன்ற கிருமிகளால் சருமத்தில் பருக்கள் தோன்றும்.

அதேபோல தலையில் பொடுகுத் தொல்லை அதிகமாக இருந்தாலும் அதன் வெளிப்பாடாக முகத்தில் பருக்கள் தோன்றும்.

வெளியில் இருந்து தூசுக்கள், மாசுக்கள் சருமத் துளைகளுக்குள் செல்வதனாலும் பருக்கள் உண்டாகும். இவற்றை வீட்டு வைத்திய முறைகள் மூலமாகவே எளிதாக நீக்க முடியும்.

நல்லெண்ணெயில் 5 மிளகைத் தட்டிப் போட்டு ஊறவைத்து, அந்த எண்ணெயைப் பருக்களின் மேல் தடவி வாருங்கள். பருக்கள் மறையத் தொடங்கும்.

எள் எண்ணெயில் சிறிது கற்பூரத்தைத் தட்டிப் போட்டு, நன்கு குழைத்து அதை பருக்கள் உள்ள இடத்தில் வைத்தால் பருக்கள் அமுங்கி, அந்த பரு இருந்த தழும்பு தெரியாமல் அழியும். முகத்தில் பருக்கள் உண்டாக வெறும் எண்ணெய்ப் பசை, சரும அழுக்குகள் மட்டுமே காரணமல்ல. தலையில் பொடுகு இருந்தாலும் முகத்தில் பருக்கள் உண்டாகும்.

தேங்காய் எண்ணெயில் கரிசலாங்கண்ணி இலைச் சாறைச் சேர்த்து அடுப்பில் வைத்து சூடாக்கி, வெதுவெதுப்பான நிலையில் இருக்கும்போது உச்சந்தலையில் நன்கு தேய்த்து குளித்து வந்தால் தலையில் உள்ள பொடுகும் காணாமல் போகும், அதனால் ஏற்படும் பருக்களும் காணாமல் போகும்.

# செல்ஃபி உலா


Kiskanthamuthaly Muthaly


Mrs. Saman Dharshini


கலைஞர் பொன் பத்மநாதன்


கலைஞர் சனாதனன் சனா


M. R. Fayas Ahmed


Aiyyakkuddy Govindanathan


கலைஞர் எம். நசார்


Denesh Jack


Dilip Ratnapura


சமன் குமார்

## நிறம் தீட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்



## 05வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## கூட்டுங்கள்

| | |
|---|---|
| 2 + 2= ☐ | 1 + 8 = ☐ |
| 4 + 3 = ☐ | 7 + 2 = ☐ |
| 1 + 1 = ☐ | 2 + 5 = ☐ |
| 9 + 1 = ☐ | 3 + 0 = ☐ |
| 6 + 3 = ☐ | 5 + 5 = ☐ |
| 2 + 4 = ☐ | 0 + 2 = ☐ |



## தொடர்புபடுத்துங்கள்



4:15

12:30

7:15

1:45

நான் ரொம்ப பிஸி...

# காட்டுக்குள் சென்று உயிரைப்பணயம் வைத்து விலங்குகளை படம் எடுப்பதில் அலாதி திருப்தி

**இளம் Wild Life Photographer முஹம்மட் ரசீம்**

கைபேசி வைத்திருக்கும் அனைவரும் தங்களை புகைப்படப்பிடிப்பாளராக நினைத்துக் கொண்டாலும் புகைப்படப்பிடிப்பொன்றும் அவ்வளவு சாதரணமானதல்ல. அதிலும் வனவிவங்குளை புகைப்படம் பிடிப்பதொன்றும் இலகுவான விடயமல்ல. வனவிலங்குகளை புகைப்படம் பிடிப்பதில் ஆர்வமுள்ள இளம் புகைப்படப்பிடிப்பாளர் தான் நான் மூதூரை சேந்த வளர்ந்துவரும் இளம் Wild Life Photographer முஹம்மட் ரசீம் .நான் ரொம்ப பிஸி பகுதிக்காக இவரை சந்தித்தேன். அவருடனான நேர்காணல்.



◆ **உங்களைப்பற்றிய ஓர் சிறிய அறிமுகத்தை தரமுடியுமா?**

எனது பெயர் ரசீம். நான் மூதூரை பிறப்பிடமாக கொண்டவன். தற்பொழுது NGO ஒன்றில் Video Production Officer ஆக வேலை செய்து வருகிறேன். எனது வேலை நேரம் தவிர மிகுதியான நேரத்தில் பெரும்பாலான பகுதியினை புகைப்படங்கள் எடுப்பதற்கே செலவழித்து வருகின்றேன்.

◆ **புகைப்பட துறை யில் நீங்கள் உள்வாங்கப்படுவதற்கான காரணம் என்ன?**

இயற்கை மற்றும் வனவாழ் விலங்குகள் குறித்து எனக்கு சிறுவயதிலிருந்தே ஆர்வம் இருந்துவந்தது. 2013 ஆண்டு நான் A/L எழுதிவிட்டு வீட்டில் இருந்த சந்தர்ப்பத்தில் எனது கைத்தொலைபேசியினை பயன்படுத்தி பல புகைப்படங்களை எடுத்து, எனது முகநூலில் பதிவேற்ற ஆரம்பித்தேன். எனது ஊரில் இருக்கின்ற குருவிகள், சிறிய மிருகங்கள், இயற்கை காட்சிகள் என்பவற்றையே அதிகம் படம் பிடித்து பதிவேற்றி வந்தேன். அப்படி ஒரு நாள் நான் பதிவேற்றிய குளத்தில் நின்றபடி இருந்த ஒரு குருவியின் புகைப்படம் முக நூலில் வைரலாகியதொடு பத்திரிகை ஒன்றிலும் பிரசுரமாகியிருந்தது. அதைப் பார்த்ததும் எனக்குள் இருந்த புகைப்பட துறை சார்ந்த ஆசை அதிகரித்து மேலும் பல வித்தியாசமான புகைப்படங்களை எடுக்க வேண்டும் என்ற அவா என்னில் எழுந்தது. பின்னர் கெமரா ஒன்றை வாங்கி அதனூடாக புகைப்படங்களை எடுத்து முகநூலில் பதிவேற்ற ஆரம்பித்தேன்.

◆ **இந்த துறையில் நீங்கள் எதிர்கொண்ட சவால்கள் பற்றி சொல்ல முடியுமா?**

ஆரம்ப காலங்களில் நான் போட்டோக்கள் எடுக்க ஆரம்பித்தபோது எனது பிரதேசத்தில் இருக்கும் பலர் என்னை ஒரு வகையாகவே பார்த்தார்கள். கிண்டல் அடிக்கவும் செய்தார்கள். குறிப்பாக நான் wild life Photography இல் ஈடுபடும்போது என்னை ஏளனமாக பார்த்தார்கள். தொடர்ச்சியாக காட்டுக்குள் இருப்பதாகவும், காட்டில் வாழ்ந்து வருகிறேன் என்றும் பல வகையில் பேசினார்கள், அவமானப்படுத்தினார்கள். ஆனால் இன்று அந்த கதைகள் மறைந்து போய் அவர்களே என்னை பாராட்டுகின்றார்கள். அதேபோல நான் எதிர்நோக்கிய முக்கிய சவால்களில் ஒன்று தான் பொருளாதார பிரச்சினை. ஆரம்ப காலங்களில் என்னிடம் சரியானதொரு கேமரா இருக்கவில்லை. மூன்று வருடங்கள் நான் உழைத்து சேமித்த சேமிப்பிலிருந்து தான் wild life photography இற்கு பொருத்தமான கெமரா மற்றும் அதற்கான “லென்ஸ்” இனை வாங்கினேன். அதேபோல போக்குவரத்து சிரமம், அதற்கு ஆகும் செலவுகள் என்பன எனக்கு பெரிதும் சவாலாக இருந்தது. எனது வருமானத்தில் நான்கில் மூன்று பகுதியை இவற்றுக்காக செலவளித்தேன். அதேபோல மொழிப்பிரச்சினையும் எனக்கு இருந்தது. சிங்கள பிரதேசங்களில் புகைப்படம் எடுக்க செல்லும்போது மொழில் தெரியாமல் பல சிரமங்களை எதிர்நோக்கியிருக்கின்றேன். தற்பொழுது மொழியினையும் சற்று கற்றிருக்கின்றேன்.

◆ **எப்படியான புகைப்படங்களை எடுப்பதில் நீங்கள் அதிக ஆர்வம் செலுத்துகின்றீர்கள்?**

வித்தியாசமான மிருகங்கள், வித்தியாசமான பறவைகளை தேடி தேடி புகைப்படம் எடுப்பதில் தான் நான் அதிகம் ஆர்வம் செலுத்தி வருகிறேன். அதிலும் குறிப்பாக பறவைகள். பறவைகளின் செயற்பாடுகளை அவதானித்து புகைப்படங்களை எடுப்பதில் நான் அதிகம் கவனம் செலுத்துகிறேன். இலங்கைக்கு ஒரு பருவத்திற்கு மட்டும் இந்தியாவிலிருந்து வருகை தரும் “பிளமிங் கோஸ்” எனப்படும் ஒரு பறவையை பற்றி கேள்விப்பட்டேன். அது ஜனவரி தொடக்கம் மார்ச் வரையிலான காலப்பகுதியில் மாத்திரமே இலங்கையில் இருக்கும். இவ்வருடம் குறித்த பறவை இலங்கை வருகை தந்திருந்த நேரம் மன்னார் பகுதிக்கு சென்று அவற்றை புகைப்படம் எடுத்தேன். பறவைகள் மீதான எனக்குள்ள காதலை அப்புகைப்படங்கள் உணர்த்தும்.

◆ **Wild Life Photography இல் ஏதேனும் மறக்க முடியாத அனுபவங்கள், சம்பவங்கள் உண்டா?**

ஒரு முறை யானைகளை படம் பிடிப்பதற்காக காட்டுக்குள் சென்ற வேலை என்னையும் எனது நண்பர் ஒருவரையும் யானை துரத்தியது மறக்க முடியாத ஒரு சம்பவம். யானையை நேருக்கு நேராக நின்று படம் எடுத்துக்கொண்டிருக்கையில் கோபமடைந்த யானை எங்களை துரத்த ஆரம்பித்துவிட்டது. கடுமையான பயத்துடன் அன்று தப்பி வந்தோம். அதேபோல மன்னார் பிரதேசத்தில் “பிளமிங் கோஸ்” பறவையினை படமெடுக்க சென்ற சந்தர்ப்பத்தில், குறித்த தினத்தன்று காலை 7 மணிமுதல் 9 மணிவரை குளத்திற்குள் நெஞ்சுப்பகுதிவரை நீர் மட்டம் நிரம்பியிருக்க எந்தவொரு அசைவுமில்லாமல் நின்று குறித்த பறவையினை படம் எடுத்து விட்டு வரும்போது என்னைக் கண்ட அந்த ஊர் மக்கள் ஆச்சரியப்பட்டார்கள். அவர்கள் ஆச்சரியத்திற்கு காரணம் என்று அவர்களை கேட்டபோது அவர்கள் சொன்ன பதிலில் நான் ஆச்சரியப்பட்டுப்போனேன்! அவர்கள் சொன்ன பதில், மனிதர்களை வேட்டையாடும் முதலைகள் அக்குளத்தில் இருப்பதாகவும் இதற்கு முன்னர் பலரை வேட்டையாடி இருப்பதாகவும் கூறினார்கள். இந்த குளத்திலா இரண்டு மணித்தியாலங்கள் இறங்கி நின்றேன் என எண்ணிய போது குலைநடுங்கிப்போனது.

◆ **இந்த துறையில் உங்கள் வருமானம் எப்படி? திருப்திகரமான வருமானம் கிடைக்கின்றதா?**

Wild Life Photography யினை பொறுத்த வரையில் வெளிநாடுகளில் அதிக வருமானங்களை ஈட்டக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தாலும் கூட அது இலங்கையை பொறுத்தவரையில் எந்தளவு சாத்தியமானது என்று எனக்கு தெரியவில்லை. எனது புகைப்படங்களையும் நான் விற்க முயற்சிகள் பல எடுத்துள்ளேன். ஆனால் அவற்றுக்கான வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஒரு போட்டியில் எனது wild life புகைப்படம் ஒன்று தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக 10,000/ பணப்பரிசு கிடைக்கப்பெற்றது. அவ்வளவுதான். வருமானத்திற்கு அப்பால் இந்த Wild Life Photography இல் எனக்கு கிடைக்கும் திருப்தியானது அளப்பெரியது. புதிய விலங்குகளை காணக்கிடைப்பது, அவற்றின் செயற்பாடுகளை அவதானிக்க முடிவது, காடுகளுக்குள் பயணிப்பது போன்றன எனது மனதுக்கு புதுவகையனதொரு திருப்தியினையும் புத்துணர்ச்சியையும் தருகின்றது.

◆ **இந்த துறையில் நீங்கள் ஏதேனும் சாதித்துள்ளீர்களா? உங்களுக்கான ஏதேனும் அங்கீகாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளனவா?**

இலங்கை வன ஜீவராசிகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஒரு போட்டியில் எனது புகைப்படம் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடத்தினை பெற்றுக்கொண்டது. அதேபோல தனியார் அமைப்புகளால் நடத்தப்படுகின்ற புகைப்பட போட்டிகளில் தேசிய மட்டத்தில், பிராந்திய மட்டத்தில் என 3 ஆம் இடத்தை பெற்றுக்கொண்ட இரண்டு சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. அத்தோடு தனியார் நிறுவனம் ஒன்றினால் கலண்டர் அச்சிடுவதற்காக புகைப்படங்களை தெரிவு செய்யும் போட்டி ஒன்று நடைபெற்றது. அதில் எனது புகைப்படம் தெரிவு செய்யப்பட்டு அந்த நிறுவனத்தினால் அச்சிடப்படும் கலண்டரில் எனது புகைப்படமும் அச்சிடப்பட்டது. அதற்காக 10,000/ பணமும் எனக்கு கிடைக்கப்பெற்றது. அதேபோல TIk Tok, Facebook, Instagrame போன்ற சமூக ஊடகங்களில் எனது புகைப்படங்களை பார்ப்பதற்கென்றே அதிகளவானோர் என்னை பின் தொடர்கின்றார்கள். இவை எனது முயசிக்கு கிடைத்த வெற்றிகள் என கருதுகின்றேன்.





◆ **இறுதியாக வளர்ந்து வரும் Wild Life Photographer களுக்கு நீங்கள் கூற விரும்புவது என்ன?**

Wild Life Photography யினை பொறுத்தவரையில் எமக்கு நிறைய அனுபவங்கள் இருக்க வேண்டும். ஆகவே தாம் வசிக்கும் சூழலில் இருந்துகொண்டே எமது கண்களுக்கு படுபவற்றை, உதாரணமாக சொல்வதென்றால் வீட்டுத்தோட்டத்திற்கு வருகை தரும் அணில்கள், சிறு குருவிகள் போன்றவற்றை ஆரம்பத்தில் போட்டோ எடுத்து தமது திறமையினை வளர்த்துக்கொளுங்கள். அதுவே Wild Life Photography யின் ஆரம்பம். இலங்கையினை பொறுத்த வரையில் Wild Life Photography துறைக்குள் பிரவேசிப்பதென்றால் சற்று செலவுகள் ஏற்படும்.

அதற்கான ஆயத்தங்களையும் செய்துகொள்ளுங்கள். முக்கியமான விடயம் என்னவென்றால் Wild Life Photography இல் புகைப்படம் எடுப்பது மட்டும் எமது நோக்கமாக இல்லாமல் இயற்கையின் சமநிலையினை பேணுவதிலும் நாம் அக்கறையுடன் செயல்படவேண்டும். இத்துறை தொடர்பான அறிவுரைகள், புதிய கேமாரக்களை கொள்வனவு செய்யும்போது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயங்கள் மற்றும் Photography சம்மந்தமான Tips & Tricks களை எனது சமூக ஊடக வலைத்தள பக்கங்களில் பகிருந்தும் வருகின்றேன். ஆர்வம் உள்ளவர்கள் அவற்றின் ஊடாக என்னை தொடர்புகொண்டு உங்களுக்கான இலவச அறிவுரைகளையும் பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# அகம்பத்து 04

முல்லை நிலத் திணையில் சங்கத் தோழியின் தேற்றுதல் ஆற்றல் ஓர் ஆற்றுப்படை அழகு. பிரிவாற்றாத் தலைவி மீது அமையும் அன்பின் வெளிப்பாடு. 'முல்லை வைந் நுனை தோன்ற'' எனத் தொடங்கும் முல்லைப் பா அகவுணர்வுகளின் திரட்சி. காத்திருக்கும் தலைவியிடத்து 'ஆய் தொடி அரிவை!'' என விளிக்கிறாள் பாங்கி.

முல்லைப் பூக்களில் கூரிய மேன்மை கொண்ட அரும்புகள் தோன்றி விட்டனளூ தேற்றா மரத்தின் மொட்டுக்கள் அவிழ்ந்தன; பசிய கொன்றை மரத்தின் முகைகளும் நெகிழ்ந்து விரிந்தன; இரும்பை முறுக்கி விட்டது போன்ற கருத்த, பெருத்த கொம்புடைய கலைமான்கள் பரற் கற்களுடைய பள்ளங்களில் துள்ளிக்குதித்தன. அகன்ற இந் நிலத்திலே நீரில்லை எனும் துயரும் நீங்கிற்று என்னுமாறு மேகம் பொழியத் தொடங்குகிற கார்ப் பருவமிது.

தோழி, பருவங்காட்டித் தலைவியைத் தேற்றுகிறாள்;, நியாயங் காட்டி நிரூபிக்கிறாள்.

முல்லையின் சோலைகள் பூக்கும் கார் காலத்தில்தான் தொழில் நிமித்தம் பிரிந்த தலைமகன் இருப்பிடம் திரும்புவதாகக் கூறிச் செல்கிறான். கார் காலத்திற்காகக் காத்திருக்கிறாள் தலைமகள். கார்காலம் தொடங்கியதும் தலைவன் வந்து சேரவில்லை என்கிற ஆற்றாமைத் துயர் காத்திருப்பின் பெருந்துயர்.

தலைவியைத் தேற்றுகிற தோழி முதலில் பருவக் காட்டி பேசுகிறாள். 'இப்போதுதான் கார்காலம் தொடங்குகிறது'' என நிறுவுகிறாள். 'முல்லை வைந்நுனை...'' இப்போதுதான் முல்லை அரும்பியது என்று சான்று காட்டுகிறாள் சொல்வன்மைத்தோழி.

அவள் தொடர்கிறாள்.... பருவங்காட்டியவள் இனி தலைமகனின் குணம் காட்டுகிறாள். மலைகளுடைய நாட்டின் தலைவன், வருகிறபோது ஆரவாரமான ஓசை மிகுந்த விழாக்கள் நிறைந்த உறையூரின் மலைச்சாரலிடத்து மலர்ந்த காந்தள் பூக்களைக் காணுகையில் மலரென மணக்கும் உன் மீ அழகினை மறவாது நினைந்து கொள்பவன் அவன், என்கிறாள் தோழி.

தலைவன் அருள் உள்ளம் கொண்டவன் என்பதை அவள் சொல்லும் விதம் அற்புதம். மெல்லுணர்வின் பண்பாட்டு விழுமியம்.

'குரங்கு உளைப் பொலிந்த....'' வரிகளில் வளைந்த தலையாட்டமும், மயிர் கொய்த பிடரியுமுடைய குதிரைகள் கடிவாளம் நெகிழ விரைந்தோடுகின்றன. அவன் வரும் சோலை வழியிடத்தில் தன் பெடையோடு தங்கியுள்ள யாழ் போல் ஒலியெழுப்பும் வண்டுகள் குதிரையின் விரைவொலி கேட்டு அஞ்சிடுமே என்று இரங்கி குதிரையில் கட்டிய மணிகள் ஒலியெழுப்பாது இருப்பதற்காக அவற்றின் நாவை இழுத்து கட்டிய மாண்புமனமுடையவன்;. தேர் செலுத்துவதில் மாட்சிமை மிகுந்தவன் தலைவன். தோழி அவன் நலன் பேசுகிறாள்; தலைவியைத் தேற்றுகிறாள்;பிரிவின் இடைவெளி அகற்றுகிறாள்.

தோழியின் சொல்வன்மை மிகுந்து நிற்கிறது குறுங்குடி மருதனாரின் முல்லைப் பாவில் தோழி, முதலில் முல்லை நிலத் திணையின் கார் காலத்தைக் காட்சிப் படுத்துகிறாள். பின்பு தலைவியின் அழகை காந்தளென்கிறாள். காந்தளைக் காணும் தலைவனின் மனநலம் கூறுகிறாள். வண்டுகளின் இணை பிரிவைக் கூடப் பொறுத்திராத மெல்மனம் மிகுந்தவன் தலைவன்;. தேர் வீரங் கொண்டவன். ஆயினும் இரக்க மனமுடையவன். அவன், தலைவியை எப்படிப் பிரிவான். அவள் உணர்த்தும் உணர்வு பூர்வமான உள்ளக் காட்சி இது.

குறுங்குடி மருதனார், இந்தச் செய்யுளில் நோக்கு எனும் உறுப்பைக் கையாள்கிறார். முல்லை அரும்பியது இப்போது, இதுவரை வெம்மை இருந்ததென்பது இரும்பு முறுக்கிய கொம்பென்பது, மான் துள்ளுவது, மேகம் நீர்த்துளி சிதறுவது, கார்ப் பருவ அழகு தோன்றிற்றென்பது எல்லாமே கார்காலம் இதோ தோன்றிற்று. எனவே தலைவன் திரும்புவதாகக் கூறிய காலம் இப்போதுதான் தொடங்குகிறது. எனவே அவன் விரைவாக வந்து விடுவான். தலைவியே, நீ கலங்காதே என பருவங்காட்டித் தேற்றுகிறாள் தோழி.

சங்கத் தோழியின் நல்லெண்ணத்தின் வெளிப்பாடு முல்லையின் கவின் பெறு கானம்.



## பேதுறல்

பூவரசம் பூ நிறத்தில் மலர்ந்த முகம்
முகையவிழக் கனக்கும் மழையொரு துளி
இடி, மின்னல், காற்று
நேற்றுவரை பெருக்கெடுக்கும்
காத்திருப்பின் கனா
பரி வண்ணத்தெழும் விரைவொரு தருணம்
இருப்பின் பிணைவெனக் காலம்
சிலிர்க்க நிற்பாள்

நிற்பவள் மீது காந்தள் மலர்த்தி
நினைவுகளிலிலூறி
மேலுமொரு துளி, இடி, மின்னல், காற்று
நேற்றும் போல் நிற்பாள்
தேர் கால் விரைந்த
கார் பொழுதொன்றில்
உறையும் இரு முகம்

இருத்தலொரு
இரத்தல்

## மருலால்

முல்லை முஸ்ரிபா

## நூல் வனம்

வெள்ளாப்பு வெளி வாசிப்பு மாதத் தினை முன்னிறுத்தி நூல்வனம் செயற்றிட்டத்தை இம்முறையும் முன்னெடுக்கின்றது. பாடசாலை நூலகங்களை வலுவூட்டுவதனூடாக வாசிப்புச் செல்நெறியை மாணவரிடையே வளர்த்தெடுக்க ஆவல் கொள்கிறது.

நூல் வனத்தில் நூலாசிரியர்கள் தங்கள் நூல்களோடு மாணவர்களைச் சந்தித்து உரையாடி வாசிப்பு மற்றும் எழுத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் இலக்கியப் பொழுதொன்றை 'ஹிக்மா இலக்கியக் கழகத்துடன்'' இணைந்து முன்னெடுக்க வுள்ளது. வரும் ஒக்டோபரில் ஒருநாள் பாடசாலை நூலகத்தில் மாணவர்களோடு கைகோர்க்க எதிர்பார்ப்புடைய எழுத்தாளர்களை நூல் வனத்துக்கு வெள்ளாப்பு வெளி அழைக்கிறது. உங்கள் நூல்களோடு தயாராகுங்கள். மாணவச் செல்வங்களைச் சந்திப்போம். இது நூலாசிரியர்களின் அனுபவங்களை மாணவர்களோடு பகிர்ந்து கொள்வதற்கான இலக்கிய பொழுதாகும். எழுத்தாளர்களுக்கான கௌரவமாகும்.

## ஔவன் கவிதை



### கனவை நிரப்புதல்

நிறமுமற்ற சாக்கடையில்
எனது ரத்தத்துளிகளைக் கரைத்தனர்
நிலவுமற்ற கடும் ராத்திரியில்
எனது ஆத்மாவைப் புதைத்தனர்
நிலமுமற்ற அந்தர வெளியொன்றில்
எனது சிறகுகளை ஒடித்து வீசினர்

யாவற்றிலும்
நான் விழித்திருந்தேன்

எனது உயிர்ப்பின் கனவுகளை
ஒடித்து வீச இயலாது தோற்றனர்

சாக்கடையின் சாம்பல் நிறத்துப் பூவில்
என் இரத்தத்தின் துளி
அரும்பிற்று
அந்தரவெளியில்
ஆயிரம் சிறகுடைய வெண்புறா எழுந்திற்று
சாம்பல் நிறப்பூவில் அமரும் தருணங்கள்
எனது கனவுகளை மீள் நிரப்பும்

## காலம், வீடு, மனம்



புனைவிலிருந்து வெளியேறிச் செல்லும் சொற்களைப் பொறுக்கிக் குவித்து வைத்திருக்கிறான் மாயக்கிழவன். அவனொரு மாயப் புனைவுகாரன்.

புனைவு ஒரு வீடு என்றால் அதன் அத்திவாரத்தை வெட்டியபோது வெளியெடுத்த மண் திட்டு, கலவையின் போது கொட்டுண்ட சீமெந்து, மண் மற்றும் கல்துண்டுகள், தூசுகள், மரக்கழிவுகள், நிறக் கலவைகளென கொட்டுண்டவற்றின் கலவை மீது மாயக்கிழவனின் கை இயங்கியது.

புனைவு ஒரு மரமென்றால், அதன் சருகிலைகள், கொட்டுண்ட பிஞ்சுகள், முறிந்து வீழ்ந்த கிளை, கழன்ற பட்டை மற்றும் அதன் நிழல், மரத்திலுறங்கிய பட்சிகளின் எச்சம், குருவிக்கூடொன்றின் சிதைவு, காகத்தின் சிறகுத் துண்டுமென மாயக்கிழவனின் சேகரம் கனதியானதுதான்.

பிரதி ஒரு காலமெனில், அதிலிருந்து உதிர்ந்த இறந்த காலம், காலத்தின் வலி, மனிதத் தொடர்பிலறுந்த உறவு, ஆக்கிரமிப்பு, அநியாயம், அட்டூழியம், அதிகாரம், மொழிச்சாயமென சேகரங்களின் பெருந்துயர் அனுபவம், மாயக்கிழவனின் முன் கவிந்து கிடந்தன.

அவனது முன்னைய பிரதிகள் காலம் கடந்தவையென காலமே சொன்னது. காலம் மங்கத் தொடங்கிற்று. வீடு உலகமயமானது அல்லது சுவருடைந்ததொரு வெட்டை வெளியானது. சிலபோது பாழடைந்திற்று. மரம் கனன்று வேரோடு வீழ்ந்தது. காலத்தை... வீட்டை... மரத்தை... படித்தவர்களின் ஞானம் என்னமோ ஆனது.

புனைவு வேறொரு வடிவங் கொண்டது மாயப்புனைவென மாயக்கிழவன் வனையத் தொடங்கினான். அவனது கழிவுகளின் கலவைகளில் புத்தாக்கம் மிதப்பதாய் கனவுகள் பெருத்தன.

மாயக்கிழவனின் புனைவைத் தலைகீழாக வாசித்தான் ஒரு தேர்ந்த வாசகன். பின்புறமிருந்து வாசிக்கத் தொடங்கினான் தொடரறா வாசிப்பாளனொருவன். பதினைந்தாம் பக்கத்தில் தொடங்கி முப்பதாம் பக்கத்தில் நிறுத்தி வரண்ட நாவை தேனீர் துளியால் நனைத்து விட்டு பிறகு முதற் பக்கத்திலிருந்து வாசித்து இடையில் அறுபதாம் பக்கம் போய் சினத்தை அடக்கிக்கொண்டு மீண்டும் ஒரு மிடரு தண்ணீர் குடித்துவிட்டு கடைசிக் காட்சியை இன்னொரு வாசகன் வாசித்தான். அந்த வாசிப்பில் முனைவு வேறோரு வடிவத்தைக் காட்டியது. மாயப்புனைவின் அர்த்தங்கள் பெருகின. வீடென்பது வீடில்லாதிருத்தல், மரமென்பது வெறும் பாழ் வெளியாயிருத்தல் எனப் பொருள் தொடங்கியது.

புத்தாயிரத்தில் வீடு உடைந்து சிதறிற்று. அம்மா வேறு, அப்பா வேறு, பிள்ளைகள் வேறுவேறு திசைகளில் செல்போன் செல்லரித்துப் போட்டிருந்தது. வீடென்பது வீடில்லாது போதல் என்பதாக மாயக்கிழவன் புனைந்தான்.

காலத்தை மனிதன் தின்றான், களனியழித்தான், மழையற்றான், கோடை கொண்டான். மரமென்பது மரமற்ற வெளியானது. மாயக்கிழவனின் புனைவு மீது பறந்தமர்ந்த ஒரு சிட்டுக் குருவியின் குரலில் பாடியது காலம்.

கூரிய இறகொன்றில் வரையப்படுகிறது வானம். வானத்திலிருந்து உதிர்கின்றது ஆயிரம் இறகுகள் மழையென மாயக் கிழவன் பிறிதொரு புனைவில் எழுதினான்.

**பொன்மீரா**

# பழம்பெரும் நடிகர் எஸ் வி. ரங்காராவ் பற்றி அறிந்தவை...



எஸ் . வி . ரங்க ராவ் (சாமர்லா வெங்கட ரங்கா ராவ் (03.07.1918) ஆந்திர மாநிலத்தில் பிறந்த தென்னிந்திய திரைப்பட குணச்சித்திர நடிகராவார். நடிகராக மட்டுமல்லாது திரைப்படவுலகில் இயக்குனராகவும், தயாரிப்பாளராகவும் பங்காற்றியவர்.

இவர் தற்போதைய ஆந்திரப்பிரதேசத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள, நுஸ்வித் நகரில் 1918 ஜூலை 3 ஆம் நாள் பிறந்தார். சென்னை இந்துக் கல்லூரியில் இளங் கலை அறிவியல் பட்டம் பெற்றார். இவர் 1949 ஆம் ஆண்டு மன தேசம் என்ற தெலுங்கு படத்தில் சிறுவேடத்தில் அறிமுகமானார். 1951 இல் இவர் மந்திரவாதியாக பாதாள பைரவி படத்தில் நடித்தபிறகு புகழ் பெற்ற நடிகராக ஆனார்.

தன் 25 ஆண்டு திரை வாழ்க்கையில் 53 தமிழ்ப் படங்கள், 109 தெலுங்குப் படங்கள் என அவர் 163 படங்களில் நடித்துள்ளார். இந்திய அரசு எஸ். வி. ரங்காராவை கௌரவப் படுத்தும் விதத்தில் அவரது அஞ்சல் தலையை 2013 இல் வெளியிட்டது.

**இவர் பெற்ற விருதுகள்:**

சிறந்த நடிகர் விருது 1963 ஆம் ஆண்டு ஜகார்த்தாவில் நடந்த இந்தோனேசியன் திரைப்பட விழாவில் ரங்கராவுக்கு வழங்கப் பட்டது.ஆஜானுபாகுவான, கம்பீரமான,உயரமான தோற்றமுடன் சினிமா உலகை வலம் வந்தவர் ரங்காராவ். தமிழ்,தெலுங்கு படங்களில் நடித்த நடிகர்களில் மிக முக்கியமான கலைஞர் ரங்காராவ். இராவணன்,கடோட்கஜன்,இரண்யன்,எமன், தந்தை, குணச்சித்திரம்,வில்லன் போன்ற வேடங்களில் நடிப்பதில் இவருக்கு நிகர் இவரே. மாயாபஜார் படத்தில் கடோட்கஜனாக இவர் புரிந்த அட்டகாசம் சினிமா உலகில் சரித்திரம்.



அப்படத்தில் இடம்பெற்ற கல்யாண சமையல் சாதம் பாடலுக்கு ரங்காராவ் நடித்த நடிப்பு அபாரம். இதேபோல் ஆதிபராசக்தியில் தட்சன், சம்பூர்ண ராமாயணத்தில் இராவணன், பக்த பிரகலாதாவில் இரண்யன், சமூகப் படங்களில் தந்தை,பாதாள பைரவியில் மந்திரவாதி,செல்வம் படத்தில் எமன் போன்ற வேடங்கள் இவருக்கு மிகப்பொருத்தாக அமைந்தன.

இந்திய சினிமா வரலாற்றில் எஸ்.வி.ரங்காராவின் இடம் தனிச்சிறப்பு மிக்கது. தமிழ் படங்களில் கூட வேஷ்டிக்குப் பதிலாக(ஆந்திர கலாசார உடை) பஞ்சகச்சம் தான் கட்டி நடிப்பார். ஆங்கிலத்தை சரளமாக பேசக்கூடிய நடிகர்களில் ரங்காராவ் கெட்டிக்காரர்.

படிக்காத மேதை படத்தில் இவருக்கும் சிவாஜிக்கும் இடையிலான காட்சிகள் சினிமா வரலாற்றில் இன்றியமையாத காவியமாகும்.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...
கம்பளை

# ரோபோட்டிக்ஸ் கல்வி கற்று பல்வேறு உபகரணங்களை உருவாக்கியுள்ள ஆகிப்



ரோபோட்டிகஸ் கல்வியை கற்ற ஆகிப் மதனி என்பவர், பல்வேறு உபகரணங்களை உருவாக்கியுள்ளார். பேருவளை நகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆகிப் மதனி (Aakif madany) 2007.07.31ம் திகதி பிறந்தார். எம்.எம்.எம்.மதனி (M.M.M.Madany), எம்.எம்.எப்.பஸ்லா (M.M.F.Fasla) தம்பதிகளின் மூத்த புதல்வரான இவர், களு அல் ஹுமைஸரா தேசிய பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார். தரம் 9 இல் ரோபோட்டிகஸ் கல்வியை கற்ற இவர், அத்துறையில் ஆர்வம் காட்டியதால் பல உபகரணங்களை உருவாக்கியுள்ளார்.

2023ம் ஆண்டில் சாதாரண தர பரீட்சைக்கு தயாராகும் இவர் எதிர்காலத்தில் ரோபொடிக் இன்ஜினியர் ஆக விரும்புகிறார்.



இவர் அக்கல்வியை கற்றதன் விளைவாக தானியங்கி குப்பைத்தொட்டி (Automatic dustbin), இரவில் தானாக ஒளிரும் மின்குமிழ் (automatic light), பொருட்களில் மோதாமல் செல்லும் கார் (Obstacle Avoidance), கோட்டை பின்தொடரும் கார் (Line follower) ஆகியவற்றை உருவாக்கியுள்ளார்.

தற்பொழுது 2D எழுதுகருவியை (2D printer உருவாக்கிக் கொண்டிருக்கிறார். இவர் தான் கற்றால் மட்டும் போதாது இத்துறையில் ஆர்வம் காட்டும் அனைவரும் இக்கல்வியை கற்று பயன் பெற வேண்டும் என்ற நோக்குடன் Akku Robotics என்று ஒரு யூடியூப் (Youtube Channel ) பக்கமொன்றை துவங்கியுள்ளார். அதில் அவர் தான் செய்த கருவிகளை எப்படி உருவாக்குவது என அடிப்படை முதல் கூறுகிறார். பலர் இப் பக்கத்தை பார்த்து பயனடைந்துள்ளனர்.

இச்செயற்பாட்டைக்கண்ட பாடசாலை ஆசிரியர்களும் இவர் செல்லும் வகுப்பின் ஆசிரியர்களும், ஆர்.ஜே.மீடியா அங்கத்தவர்களும் இவரை பாராட்டியுள்ளனர்.

# வட்டங்கள்

வளர்பருவ கலப்பில் முகிழ்ந்தலையும் சுழற்சிகளின் சாட்சியங்கள்
கிளைபெருத்து மேலீர்ந்த வேரடியில் செங்கனியின் புதுமுகங்கள்
வியப்பூட்டும் பருந்துகளின் கால்களில் களைப்பேறிய இரப்பைகள்
ஈர்த்துப் பிடிக்கும் மயில்தோகை விரிசலில் காலிடறும் வானவில்

சக்கரவர்த்தி அறங்களூடு மாயவித்தைகொண்டெழுந்த
மனுக்குலத்தார் மேல் தழுவும் ஆற்றடி மதகின்கீழ் வால்முறுக்கி
வியந்தெழும் கடினமோ, தொட்டழிக்கும் நிர்ப்பந்தமோ அற்றுப்போய்
புரளுகின்ற இரையின் வன்குரலோடு வாய்நிமிரும் பெருமுதலை.

இயங்குதற்கு மேலெழுந்து வரப்பரிக்கும் நத்தைக் கூட்டம்
நீர்விறைக்கும் விளைநிலத்தில் வியப்படையும் அருவியாறு
தரை கிளறும் கனத்தோடு பிளிறியெழும் சங்கிலி யானை.
நடமாடும் அசைவுகளின் ஒதுங்குதளத்தில் பூநாரை

இரவை முதுகில் சுமந்தபடி மழையை கோரும் தவளை
ராக்கூத்து மந்தைகளின் கூர் தீட்டப்படும் கத்தி
இதனுள் கனதூரம் நடந்தும் கனத்து விழுகிறது பிந்திய நிழல்கள்.

காலம் பிந்திதுமித்து நூல் கலையும் ஒதுக்கங்களின் கலையழகில்
தனித்தோடி வெளிகண்ட தன்பெயர் மறக்கும் மனிதனில்
தவறும் சூத்திரத்திலிருந்து தோற்றங்கள் மாறுகிறது சிலநேரம்
சோளகத்தின் சாரலிலும் தன் இரையை தேடுகிறது பல்லி
இருப்பிடம் கற்களானாலும் இழுக்க பழகிவிடுகிறது எறும்பு

அவர் அவர் எல்லைகளை சொல்லிச்சொல்லி குரைக்கிறது நாய்
மதகடியில் கால்வைத்து தலைநிமிர்ந்து பார்க்கிறது எருது
வழிதவறிய ஈசல்கள் வெருட்டிகளில் மொய்க்கிறது இப்போதும்
மீண்டும் மீண்டும் அதற்குரிய இடத்துக்காக சினம்கொள்கிறது ஆட்காட்டிக்குஞ்சு

முறுவலிக்கும் தன்மூக்கை காட்டி ஆமையாகி அசைகிறது வாழ்வு.
மனிதன் தோற்றத்தை பார்க்கிறான், தோற்றம் வேறாகிப் போக
கண்ணீர் கண்ணைத்தேடுகிறது.
வட்டம் உலகைத் தேடுகிறது, உள்ளம் இருளில் கிடக்கிறது

உவைஸ் கனி, தில்லையடி, புத்தளம்

# மன்வானை அல் முபாரக் தேசிய கல்லூரி சாரணர் குழு வீரர்கள்



மன்வானை அல் முபாரக் தேசிய கல்லூரியின், சாரணர் குழுவின் "ஸ்கவுட் அவார்ட் பேஜ்" சாரணர் பாசறை கல்லூரி அதிபர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட சாரணர் வீரர்களையும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 செப்டெம்பர் மாதம் 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.